
இலங்கையின்

# தகவல் அறியும் உரிமைச் சட்டம்

வழிகாட்டி நூல்

கலாநிதி இரா. ரமேஷ்



குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டம்

வழிகாட்டி நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின்
# தகவல் அறியும் உரிமைச் சட்டம்

## வழிகாட்டி நூல்

**கலாநிதி இரா. ரமேஷ்**
அரசியல் விஞ்ஞானத்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

**குமரன் புத்தக இல்லம்**
**கொழும்பு - சென்னை**
2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் : வழிகாட்டி நூல்
எழுதியது இரா. ரமேஷ்©
முதற்பதிப்பு : 2021
குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 0112 364550, மி. அஞ்சல்: kumbhlk @gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026
குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

The Right to Information Act of Sri Lanka : A Guide Book
by R. Ramesh©
First edition : 2021
Published by Kumaran Book House
39, 36th Lane, Colombo -6, Tel. - 0112 364550, E.mail : kumbhlk@gmail.com
3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026
Printed by Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo -6
வெளியீட்டு எண்: # 903
ISBN 978 - 955 - 659 - 715- 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

''பொது நிர்வாகத்துறை ஊழலாகக் காணப்படின் பிரசைகளின் நலனைப் பாதுகாக்க முடியாது'' பூட்ரோஸ் பூட்ரோஸ் - காலி: ஐ.நா. செயலாளர் நாயகம் (Boutros Boutros - Ghali, 6th Secretary - General of United Nations - 1992 - 1996).

1946ஆம் ஆண்டு கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் முதல் அமர்வு ''தகவலுக்கான சுதந்திரம் அடிப்படை மனித உரிமையாகும் என்பதுடன் அது அனைத்து சுதந்திரங்களுக்கும் அடிப்படையானது'' எனும் தீர்மானத்தை மேற்கொண்டது. ஆனால், 1996ஆம் ஆண்டு வரை தகவலுக்கான சுதந்திரம் உலக நாடுகளில் வெறும் பேசு பொருளாகவே இருந்தது. 1996ஆம் ஆண்டு ஐ.நா.சபையின் ''பொது நிர்வாகமும் அபிவிருத்தியும்'' பற்றிய 50ஆவது அமர்வில் உரையாற்றிய ஐ.நா. செயலாளர் நாயகம் பூட்ரோஸ் பூட்ரோஸ் - காலி, தகவல் அறியும் உரிமை பற்றி மீள வலியுறுத்தியதுடன், நல்லாட்சி பிரஜைக்கு தகவல் அறியும் சுதந்திரத்தைச் சட்ட ரீதியாக உத்தரவாதம் செய்வது இன்றியமையாதது எனக்குறிப்பிட்டுள்ளார். இதன் பின்னர் ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் நாடுகள் பல தத்தமது நாடுகளில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை உருவாக்கியுள்ளன. இது வரை 85 இற்கும் மேற்பட்ட நாடுகளில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வரிசையில் இலங்கை 2016ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை அறிமுகப்படுத்தியது. ஏனைய நாடுகளது தகவல் அறியும் உரிமைச் சட்டத்துடன் ஒப்பிடுகையில் இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மிகப் பலம் வாய்ந்தது என ஐ.நா.சபை புகழாரம் சூட்டியுள்ளது.

ஏனைய நாடுகளைப் போன்று இலங்கையின் பொதுநிர்வாகத் துறை ஒரு திறந்த தன்மை கொண்டிராத, அரசியல் தலையீடுமிக்க, பக்கச்சார்பான மற்றும் ஊழல் மலிந்ததாகவே காணப்படுகின்றது. அரசாங்க அதிகாரிகள் மக்கள் சேவகனாக செயற்படாது பிரஜைகளை கட்டுப்படுத்தும் அதிகாரிகளாக செயற்படுவதைக் காணக்கூடியதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றது. பிரஜைகள் (மக்கள்) தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக அரச அதிகாரிகளிடம் கேள்வி கேட்க முடியாதிருக்கின்றனர். இப்பின்புலத்திலேயே மக்கள் தகவலை அறிந்து கொள்ளும் வகையில் 2016ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் கொண்டுவரப்பட்ட சில நாட்களுக்குள் கற்றறிந்த சமூகத்தினர் அரசாங்கம் முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக பல தகவல்களை அறிந்து கொண்டுள்ளதுடன் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் நீதியைப் பெற்றுக்கொண்டுள்ளனர். இச்சட்டத்தினைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத் தில் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் பலியான இரு இளைஞர்களது பெற்றோர் தம் பிள்ளைகளின் கொலை தொடர்பான உண்மைத் தகவலை அறிந்து கொண்டுள்ளனர். இவ்வகையில் இலங்கையின் தகவலறியும் உரிமைச் சட்டம் அரசியலமைப்பிற்கு அடுத்து பலம் வாய்ந்த சட்டமாகக் காணப்படுகின்றது. இது இலங்கை பிரஜைகள் பெற்றுள்ள அரிய சட்டமாகும்.

இச்சட்டம் சிறுபான்மை மக்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக அமையும். காரணம் அவர்கள் அபிவிருத்திக்கான உரிமைப் பற்றி அறியாமையின் காரணமாகவும், மொழிப் பிரச்சினை காரணமாகவும், இனப் பாரபட்சம் காரணமாகவும் தம் உரிமைகளை கேட்க துணிவதில்லை. இதன் விளைவாக அரசாங்க அபிவிருத்தித் திட்டங்கள் இம்மக்களை முழுமையாக சென்றடைவதில்லை. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சாதாரண மக்கள் தமது அபிவிருத்தி உரிமைகள் என்ன என்பதை அறிந்தவர்களாக இல்லை. இப்பின்புலத்திலேயே இலங்கை அரசாங்கம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை முழு நாட்டு மக்களும் பயன்பெறும் வகையில் கொண்டுவந்துள்ளது.

பொது மக்கள் இச்சட்டம் தொடர்பாக தெளிவு பெற்றால் பிரஜை என்ற ரீதியில் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு உள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு சமூக அபிவிருத்தி நிறுவகம் தமது களப் பணியாளர்கள் மத்தியில் இச்சட்டம் பற்றிய புரிதலை உருவாக்கி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பற்றிய பரப்புரையை மேற்கொள்ளும் முயற்சியில் ஈடுப்பட் டுள்ளது. இம்முயற்சிக்கு வலுச்சேர்க்கும் வகையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பற்றிய கைந்நூல் ஒன்றினை தயாரிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியில் ஈடுபட்டது. இம்முயற்சியின் வெளிப்பாடே தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றிய இக் கைநூல். இக் கைநூலினை தயாரிக்கும் பொறுப்பினை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசியற் துறை விரிவுரையாளரான கலாநிதி ஆர். ரமேஷ் அவர்களிடம் ஒப்படைத்தது. கலாநிதி ரமேஷ் அவர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை எந்தளவு துல்லியமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பது பற்றிய தகவலை இக்கைநூலில் வெளிக்கொணர்ந்துள்ளார்.

தகவல் அறியும் சட்டத்தைப் பற்றிய இக்கைநூலை தயாரிக் கையில் கலாநிதி ரமேஷ் அவர்கள் தகவல் அறியும் உரிமையினை மனித உரிமைக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்துள்ளதுடன், அதனை முழுமையாகப் பயன்படுத்துவதில் பிரஜைகளின் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் வகிபங்கு குறித்தும் விரிவாக ஆராய்ந்துள்ளார். மேலும், இந்நூலை சாதாரண பிரஜை ஒருவரும் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் எழுதுவதில் கவனம் செலுத்தியுள்ளார். இதனால் களப் பணியாளர்கள் மக்கள் மத்தியில் மிக இலகுவாகப் பரப்புரை செய்யக்கூடியாதாக அமையும். மேலும், இக்கைநூலை களப் பணியாளர்கள் மட்டுமல்லாது ஓரளவு கற்ற இளைஞர், யுவதிகள் முதல் முதியவர்கள் வரை பயன்படுத்தி தனிப்பட்ட ரீதியில் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கேட்க முடிவதுடன், தமது சமூகத்தினருக்கும் நீதி பெற்றுக்கொடுக்க முடியும். அவ்வகையில் இக்கைநூலை களப்பணியாளர்கள் மட்டுமல்லாது படித்த, சாதாரண மக்களும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் கலாநிதி ரமேஷ் தயாரித்துள்ளமை பாராட்டுக்குரியது.

*பெ. முத்துலிங்கம்*
நிறைவேற்று இயக்குனர்
சமூக அபிவிருத்தி நிறுவகம், கண்டி.

Institute of Social Development - ISD
246/4, Ranawana Road
Katugastota 20800.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

தகவல் அறியும் உரிமை தொடர்பான இவ்வழிகாட்டி நூலினை தயாரிக்கும் மற்றும் வெளியிடும் பணியில் பலரும் பங்களிப்பு செய்துள்ளார்கள். இது கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நல்லாட்சி மற்றும் பிரஜைகளின் பங்கேற்பு தொடர்பான செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாகும். அந்தவகையில் இத்தகைய ஒரு பணியை என்னிடம் ஒப்படைத்த சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.பெ. முத்துலிங்கம் அவர் களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைப் பதிவு செய்ய விரும்பு கின்றேன். அதேபோல், நல்லாட்சி செயற்றிட்டத்தின் முகாமையாளர் களான செல்வி கி. யோகேஸ்வரி மற்றும் திரு.கி. மோகன்ராஜ் ஆகியோருக்கு பெரிதும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். அவர்களின் ஒத்துழைப்பும் தொடர்ச்சியான அழுத்தமும் இன்றி இந்நூலினை வெளியிட்டிருக்க முடியாது. மேலும், இந்நூல் உருவாக்கத்தின் போது எனக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கி, போதிய தகவல்களுடன் நூலின் சில அத்தியாயங்களுக்கு அவசியமான உள்ளீடுகளை வழங்கிய, தட்டச்சுப்பணியில் உதவிய நுவரெலியா பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தரும் சிவில் சமூக செயற்பாட்டாளருமாகிய நண்பர் ஏ.சி.ஆர்.ஜோன் அவர்களுக்கு விசேட நன்றியைப் பதிவு செய்ய விரும்புகின்றேன். அத்துடன், இந்நூலுக்கு அவசியமான படங்களை தேடித்தந்து உதவிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தொடர்பாடல் அதிகாரி செல்வி மு. கவித்யா அவர்களுக்கும், எழுத்துப் பிழைகளை சரிபார்த்துத் தந்த பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழத் துறையின் உதவி விரிவுரையாளர் செல்வி த.அருள்விழி மற்றும் விஞ்ஞானப் பீட மாணவன் எஸ். ஸ்ரீகாந்த், எம்.கோபிதா, எஸ்.சரண்யா, T.திலிப்குமார் ஆகியோர்களுக்கும், இந்நூலை சிறப்பாக அச்சிட்டு வெளியிடும் குமரன் புத்தக இல்லத்தினருக்கும் எனது நன்றிகள். இந்நூலின் பயன் ஆர்வமுள்ள அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

*நூலாசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

தகவல் அறியும் உரிமை என்பது உயிர்த் துடிப்புள்ள ஜனநாயக நாடுகளில் பிரஜைகளுக்கு இருக்க வேண்டிய அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. அரசாங்கத்தின் பல செயற்பாடுகள் பிரஜைகளின் வரிப்பணத்திலேயே இடம் பெறு கின்றன. ஆகவே, அரசாங்கத்திற்கு வரிப்பணம் செலுத்துபவர்கள் என்ற வகையில் பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகள், சேவைகள், சட்டதிட்டங்கள், கொள்கைகள் மற்றும் அதன் நிறுவனங்கள் தொடர்பாக அறிந்துகொள்வதற்கு உரிமையுண்டு. இச்சட்டம் ஊழலுக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கு, அரசின் நடவடிக்கைகளில் முழுமையாக பங்கேற்க பிரஜைகளை வலுப்படுத்து வதற்கு, வினைத்திறன் உள்ள வகையில் பொதுச் சேவை வழங்கலை, அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள அரசாங்கத்தைத் தூண்டு வதற்கு, பிரஜைகள் அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதற்கு சிறந்த கருவியாக பல நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றது. தகவல் அறியும் உரிமை ஏனைய ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அவசியமானதென இன்று சர்வதேச ரீதியில் உணரப்பட்டுள்ளது. சுருங்கக்கூறின், பங்கேற்பு ஜனநாயகக் கட்டமைப்பில் பொது நிறுவனங்களின் பொறுப்புக் கூறலையும் வெளிப்படைத் தன்மையையும் உறுதிப்படுத்த இச்சட்டம் வழி சமைக்கின்றது. இச்சட்டமானது பல நோக்கங்களைக் கொண்டிருந்தாலும், இதன் பிரதான எதிர்ப்பார்ப்பு பொதுச் சேவையினை வினைத்திறன் மிக்க வகையில் வழங்குதல், அதன் தரத்தை மேம்படுத்தல், பொதுச் சேவை வழங்கலில் காணப்படும் குறைபாடுகளைக் களைதல், அரச நிறுவனங்களின் செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மையினையும், பொறுப்புக்கூறுதலையும் உறுதி செய்தல் என்பன முக்கிய இடம் பெறுகின்றன. அந்தவகையில், இச்சட்டம் இலங்கைக்கு எந்தளவுக்கு அவசியமானது என்பதனை விளங்கிக் கொள்வதற்கு இலங்கையில் பொதுச்சேவை வழங்கல் தொடர்பாகவும் அதில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாகவும் இங்கு ஒரு சில விடயங்களைக் குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசின் நிர்வாக நிறுவனங்களை மக்களுக்கு அண்மித்த வகையில் தாபித்து, அதன் மூலம் பொதுச்சேவையினை இலகு படுத்தல், அவற்றை மக்களிடம் கொண்டு செல்லல் போன்ற நடைமுறைகள் இலங்கையில் நீண்ட காலமாகக் காணப்பட்டு வருகின்றன. உதாரணமாக, கச்சேரி முறை, கிராமியக் குழுக்கள், கிராமிய சபை, பட்டின சபை, நகர சபை, மாநகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகியவற்றினைக் குறிப்பிடலாம். அரசியல் மற்றும் நிர்வாக நிறுவனங்கள் பிரஜைகளின் வேறுபட்ட சமூகத் தேவைகளை நிறைவேற்றி வந்துள்ளன. இதன் மூலம் மிக இலகுவாக கிராமிய மக்களுக்கு அரசாங்க சேவைகளையும், அபிவிருத்திசார் தேவைகளையும் அடையும் வாய்ப்புக் கிட்டியது. பொது நிர்வாக சேவைகள் மனித நல்வாழ்வினை ஏற்படுத்துவதில் சமூக உரிமை களை அனுபவிப்பதற்கான சட்டத்தினை உருவாக்குவதில் பெரிதும் பங்களிப்பு செய்து வருகின்றன என்பது பல ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து மாறி மாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் பொதுச்சேவை வழங்கலில் ஏகபோக உரிமையினைப் பேணி வந்துள்ளன. பிரஜைகளின் சேமநலனையும், தேர்தல் அரசியலையும் நோக்காகக் கொண்டு பொதுச்சேவையை வழங்கி வந்தாலும், அவற்றின் தரம், சேவை வழங்கும் நிறுவனங்களின் தரம், சேவைகளை அணுகுதல், சமத்துவம், பக்கச்சார்பின்மை, வினைத் திறன், விளைதிறன் ஆகியன குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்து உள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. அரச நிறுவனங்களின் தரம் மற்றும் அவற்றின் சேவைத் தரம் உயரும்போது பிரஜைகளின் நம்பிக்கையும் உயரும் என்பது பல அனுபவ ரீதியான ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன. பொது நிறுவனங்கள் நவீன ஜனநாயகத் தின் தூண்களாகக் காணப்படுகின்றன. அவை அரச கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் அமுல்படுத்துவதற்கு பிரஜைகளின் நம்பிக்கை பெரிதும் அவசியமாகும்.

உலக வங்கியின் உலகளாவிய ஆட்சிமுறை தொடர்பான குறிகாட்டிகளின் (Worldwide Governance Indicators, 2016) மதிப் பெண்களைப் பார்க்கும் போது இலங்கை கீழ் மட்டத்திலேயே காணப்படுகின்றது. இதற்கு ஊழல் மோசடி, ஆட்சிமுறையில் காணப்படும் வினைத்திறனின்மை, உறுதியற்ற, குறுகிய நலன்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண்ட கொள்கைகள், பொது நிறுவனங்களை அரசியல் மயமாக்குதல், அரச நிறுவனங்கள் மீதான பொதுமக்களின் நம்பிக்கை இழப்பு, அரச நிறுவனங்களின் செயற்பாடுகளில் வெளிப் படைத்தன்மையின்மை, பிரஜைகளுக்கு அவசியமான தகவல்களை வழங்க மறுத்தல் போன்ற காரணிகள் காரணமாயிற்று. மறுபுறமாக, இந்நாட்டில் அரச நிறுவனங்கள் உயர் குழாத்தினரின் ஆதிக்கத்துக்கு (Elite Capture) உட்பட்டிருப்பதுடன், அரச அதிகாரிகள் தனிப்பட்ட நலன்களுக்காக அரச அதிகாரத்தையும் பதவிகளையும் பயன்படுத்தும் நிலையையும் பொதுவாகவே அவதானிக்க முடியும். இதன் காரணமாக, பெரும் எண்ணிக்கையிலான மக்கள், குறிப்பாக, அரச சேவைகளை வேண்டி நிற்கும் பிரஜைகள், சமூகத்தில் பின்தங்கிய நிலையில் வாழும் மக்கள் அரச நிறுவனங்களில் வேறுபட்ட வடிவங்களிலான பாகுபாடுகளுக்கும், புறக்கணிப்புகளுக்கும் உள்ளாவதனைக் காணக்கூடியதாக உள்ளது. விசேடமாக, சமூக குடியுரிமையினை அனுபவிப்பதில் சட்ட கொள்கை மற்றும் நிறுவன ரீதியான கட் டுப்பாடுகள், கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதில் பாகுபாடுகள், கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின், அதிகாரிகளின் பாகுபாடான செயற்பாடுகள் இதில் பெரிதும் பங்களிப்புச் செலுத்தும் காரணிகளாகக் காணப்படுகின்றன. இந்நிலை இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையக மக்களுக்கும் பொருந்தும். அவர்கள் இன்னும் சமூகப் பிரஜாவுரிமையின் முழுமையான பயன்களை அனுபவிக்க முடியாதவர்களாகவே உள்ளனர் என்பது பொதுவான வாதமாகும்.

அரச நிறுவனங்கள் மீதும், அதிகாரிகள் மீதும் பிரஜைகள் நம்பிக்கையினை இழப்பதற்குக் காரணம் அவர்கள் தமது கடமைப் பொறுப்புகளை, அதிகாரங்களைப் பிரயோகிக்கும்போது தனிப்பட்ட நலன்கள், இனத்துவக் காரணிகள், சமூகக் காரணிகள், பால்நிலை, அரசியல் போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கியதாகும். இதன்போது, அரச அதிகாரிகளிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்ற அடிப்படைத் தத்துவங்களான பக்கச்சார்பின்மை, நியாயமாகக் கவனித்தல், நடுநிலைத்தன்மை, அனைவரையும் சட்டத்தின் அடிப் படையில் நடத்துதல், பொறுப்புக்கூறுதல், வெளிப்படைத் தன்மை என்பன மறுதலிக்கப்படுகின்றன. அரச அதிகாரிகள் மற்றும் பொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்கள் அதிகாரத்தைப் பிரயோகிக்கும்போது, பிரஜைகளின் சமூக பொருளாதார, அரசியல், பால், இன, மத, மொழி போன்ற எத்தகைய விடயங்களையும் கவனத்தில் எடுக்கக்கூடாது எனவும், அவர்கள் தமது அதிகாரத்தைப் பக்கச்சார்பின்றி நியாயமாகப் பிரயோ கிக்க வேண்டும் எனவும் பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தத்துவங்கள் அரச நிறுவனங்கள் மீது பிரஜைகளின் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புதவதற்குப் பெரிதும் அவசியம் எனவும் வாதிடுகின்றனர். அந்தவகையில், தகவல் அறியும் உரிமைச் சட்டம் இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் என எதிர்பார்க்கப் படுகின்றது. பக்கச்சார்பின்மை என்ற எண்ணக்கருவானது இரு அர்த்தங்களைக் கொண்டுள்ளது. ஒன்று, பிரஜைகள் அரச நிர்வாகச் செயற்பாடுகளில் பக்கச்சார்பின்றி கவனிக்கப்பட வேண்டும். குறிப்பாக, அரச நிர்வாக சேவை வழங்கலின் போது, இரண்டாவது, அரச அதிகாரிகள் எந்த ஒரு அரசியல் கட்சிக்கோ ஆளும் அரசாங்கத் திற்கோ அரசியல் நலன்களை நிறைவேற்றும் வகையில் செயற்படக் கூடாது என்பதாகும். மேலும், பிரஜைகள் அரசாங்கத்திற்கு வரிப்பணம் செலுத்துவதனால் அரச நிறுவனங்கள் நடுநிலையாகவும், பக்கச் சார்பின்றியும், வினைத்திறனுடனும், பொறுப்புக் கூறலுடனும், வெளிப்படைத் தன்மையாகவும், சட்டத்தின் அடிப்படையில் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். ஆயினும், நடைமுறையில் அரச அதிகாரிகளும் நிறுவனங்களும் செயற்படுகின்ற விதமானது மேற்கூறிய தத்துவங்களை வெளிப்படையாகவே மறுதலிக்கின்றன. இவை சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள, அரச சேவைகளில் பெரிதும் தங்கியிருக்கும் பிரஜைகளை அதிகளவில் பாதித்து விடுகின்றன. அத்துடன், அவர்களை ஆட்சிமுறைக் கட்டமைப்பில் இருந்து புறந்தள்ளிவிடுகின்றது. இது பெருந்தோட்டத் துறையில் அரச நிறுவனங்களின் செயற்பாட்டை விளக்க உதவுகின்றது. பொதுவாகவே, அரச நிறுவனங்களானவை கட்டமைக்கப்பட்ட ஏற்பாடுகளையும் ஒழுங்கு விதிகளையும், வேறுபட்ட வகிபங்குகளையும், பணிப் பொறுப்புக்களையும், நியமங்களையும் கொண்டவையாகும்.

அரச அதிகாரிகள் இத்தகைய ஒழுங்கு விதிகளை, சட்ட திட் டங்களை நியாயமாக அர்த்தமுள்ள வகையில் வியாக்கியானம் செய்து அவற்றை நடைமுறைப்படுத்துவர் என்பது பொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான எதிர்பார்ப்பாகும். இந்த எதிர்பார்ப்பின் அடிப்படையில் பிரஜைகள் வேறுபட்ட தேவைகளுக்காக அரச நிறுவனங்களுடனும் அதிகாரிகளுடனும் தொடர்பு கொள்வதுடன், அவை செயற்படுகின்ற விதத்தை அடிப்படையாகக் கொண்டு அந்நிறுவனங்களை மதிப்பீடு செய்கின்றார்கள். இதில் அரச அதிகாரிகள் கடமைப் பொறுப்புகளை நடைமுறைப்படுத்தும் விதம், அதிகாரத்தைப் பிரயோகிக்கும் விதம் என்பனவும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இது செயற்பாட்டு முறை சார்ந்த நம்பிக்கையினை (Procedural Trust) ஏற்படுத்துவதுடன், பிரஜைகள் மத்தியில் அரச நிறுவனங்கள் சட்ட ஒழுங்குமுறைகளுக்குட்பட்டு தொழில் மனப்பாங்குடன் செயற்படுகின்றன என்ற எண்ணத்தினை ஏற்படுத்துகின்றது.

மேலும், பொது நிறுவனங்கள் பிரஜைகளின் தேவைகளுக்கு அல்லது வேண்டுகோள்களுக்கு எந்தளவுக்குச் செவிசாய்க்கின்றன என்பதன் அடிப்படையிலும் பிரஜைகளின் நம்பிக்கை தீர்மானிக்கப் படுகின்றது. உதாரணமாக, இலகுவில் அணுகக்கூடியதாக இருத்தல், உதவி செய்தல், நட்பு, இரக்கம் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. உண்மையில், அரச நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்ட நியமங்களை முழுமையாகப் பின்பற்றி செயற்படும்போது, தனிப்பட்ட விருப்பு களை மறந்து செயற்படும்போது நம்பிக்கை அதிகரிப்பதாகக் குறிப் பிடப்படுகின்றது. வேறுவகையில் கூறுவதாயின், செயற்பாட்டு நியாயம் (Procedural Fairness), வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறன் என்பன நிறுவனங்கள் மீதான நம்பிக்கையினை ஏற்படுத்துவதாக வாதிடப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை பொதுச்சேவை வழங்கலான ஆதரவாளன்-கட்சிக்காரன் (Patron-Client) என்ற உறவின் அடிப்படையில் இடம்பெறுகின்றது. இதன்போது அரச நிறுவனங்கள் கொண்டிருக்க வேண்டிய செயற்பாட்டு நீதி என்ற தத்துவம் மறுதலிக்கப்பட்டு தனிபட்ட நலனை அடிப்படையாகக் கொண்டு சேவைகள் வழங்கப்படுகின்றன. இதில் அரசியல் தலையீடு மேலோங்கிக் காணப்படுவது குறிப்பிடத்தக்க தாகும். இந்த உறவானது இலங்கையில் சட்டத்தின் ஆட்சி ஏன் ஓரளவு நிலையற்றுக் காணப்படுகின்றது என்பதனை விளக்குகின்றது. அரச சேவை வழங்கலில் பின்பற்றப்படுகின்ற ஆதரவாளன்- கட்சிக்காரன் என்ற அணுகுமுறை அல்லது உறவானது அபிவிருத்தியடைந்து வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் பொதுத்துறை நிறுவனங்களை, அவற்றின் செயல்திறனை, நம்பகத்தன்மையினைப் பெரிதும் சீரழிப்பதாகக் காணப்படுகின்றது.

இத்தகைய பின்புலத்திலேயே 1996ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் அரச உத்தியோகத்தர்களுக்கான சர்வதேச நடத்தைக் கோவை ஒன்று வெளியிடப்பட்டது. அதில் அரச பதவிகள், அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் என்பன பொதுமக்களின் மேம்பாடு, நல்வாழ்விற்காகப் பிரயோகிக்கப்பட வேண்டும் எனவும், வினைத்திறன் மிக்க வகையில் வளப் பயன்பாட்டை மேற்கொண்டு பாரபட்சமற்ற அரசாங்க சேவை வழங்கலை உறுதி செய்ய வேண்டும் எனவும், அரசாங்கத்தின்மீது மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டுமாயின் அதன் சேவைகள் நீதியான, துஷ்பிரயோகமற்ற வகையில் நடுநிலையானதாக அமைய வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பின்புலத்திலேயே இலங்கையிலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் 1990ஆம் ஆண்டுகளின் இறுதிப்பகுதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டு 2016ஆம் ஆண்டு அம்முயற்சி வெற்றி பெற்றது. இச்சட்டமானது, பொதுச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பிரஜைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை ஓரளவேனும் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பாக அமையும் என்பது பொதுவான நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே இந்நூலும் எழுதப்பட்டுள்ளது. இதன் பிரதான நோக்கம் பெருந்தோட்ட மக்கள் மத்தியில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தல் மற்றும் அதன் பயனைப் பெற்றுக்கொள்வதற்கு இம்மக்களைத் தயார்படுத்தலாகும்.

இக்கைந்நூலில் மொத்தமாக ஏழு அத்தியாயங்கள் காணப்படு கின்றன. முதலாவது அத்தியாயமானது, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் முக்கியத்துவம், பெருந்தோட்ட மக்கள் பொதுச் சேவையை பெறுவதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மலையக மக்களுக்கு இச்சட்டம் ஏன் முக்கியமானது, தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கும் சிவில் சமூகத்திற்கும், நல்லாட்சிக்கும் இடையிலான தொடர்புகள், பிரஜை என்போர் யார், அவர்களின் கடமைப் பொறுப்புகள் என்ன மற்றும் இந்நூலை எவ்வாறு பயன்படுத்துவது போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. இரண்டாவது அத்தியாயத் தில், சர்வதேச மனித உரிமை சட்டங்களில் தகவல் அறியும் உரிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக வலியுறுத்தப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் என்பனவும், இலங்கையின் தற்போதைய அரசியல் திட்டத்தில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள தகவல் அறிவதற்கான உரிமை தொடர்பாகவும், மூன்றாவது அத்தியாயத்தில் 2016ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான அறிமுகம், அதன் உள்ளடக்கம், சட்டத்தின் நடைமுறை, தகவல் அறியும் ஆணைக்குழு, பொது நிறுவனங்கள், தகவலைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள், அரச அதிகாரிகளின் மற்றும் பிரஜைகளின் கடமைகள் போன்ற இச்சட்டத்துடன் தொடர்புடைய பல விடயங்கள் எளிமையான மொழி நடையில் கலந்துரையாடப்பட்டுள்ளன. இவ்வத்தியாயம் இந்நூலின் பிரதான பகுதியாக விளங்குகின்றது.

நான்காவது அத்தியாயம், இச்சட்டத்தைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம், பொது நிறுவனங்கள் மற்றும் பிரஜைகளுக்குள்ள கடமைப் பொறுப்புகள் தொடர்பாக ஆராய்கின்றது. நிறுவன ரீதியாக, சமூக ரீதியாக செய்யக்கூடிய விடயங்கள் தொடர்பாக, பின்பற்ற வேண்டிய உபாயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. ஐந்தாவது அத்தியாயம், சிவில் சமூக அமைப்புகள் தொடர்பானதாகும். குறிப்பாக, இச்சட்டம் இயற்றப்படுவதற்கு சிவில் சமூக அமைப்புகளின் தொடர்ச்சியான பரப்புரைகளும் நியாயமான பிரசாரங்களும் பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளன. அந்தவகையில், இவ்வத்தியாயத்தில், இச்சட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு சிவில் அமைப்புகள் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள், அவற்றின் பொறுப்புகள், சிவில் சமூகத்தின் முக்கியத்துவம் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. ஆறாவது அத்தியாயம், இச்சட்டத்தினைப் பயன்படுத்தி எவ்வாறு பொதுச்சேவை வழங்கலை மற்றும் அதன் தரத்தினை மேம்படுத்த முடியும், பொதுச்சேவைகள், அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான செலவுகளை, தரத்தை எவ்வாறு கணக்காய்வு செய்வது என்பது தொடர்பான விடயங்களை சமூகக் கணக்காய்வு என்ற தலைப்பின் கீழ் ஆராய்கின்றது. ஏழாவது அத்தியாயம், பொது மக்களுக்கு இச்சட்டம் தொடர்பான விழிப்புணர்வினை எவ்வாறு ஏற்படுத்துவது, மக்களுக்கு இச்சட்டம் எவ்வாறு பயனளிக்கும், அதன் பயன்களை இம்மக்கள் எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடுகின்றது. இந்நூலில் பல பின்னிணைப்புகளும் காணப்படுகின்றன. அவை முறையே பின்வருமாறு: தகவல் அறியும் உரிமைச்சட்டம் (தமிழ் வடிவம்), தகவல்களைப் பெறுவதற்கான மற்றும் முறைப்பாடுகளை செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினால் கிடைக்கப்பெற்ற நன்மைகள் தொடர்பான சம்பவக் கற்கைகள், மற்றும் சுற்றுநிருபங்கள், அமைச்சரவைத் தீர்மானங்கள் என்பனவாகும்.

*இரா. ரமேஷ்*
அரசியல் விஞ்ஞானத்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# An Overview of the Guide Book on Right to Information

'Right to Information' (RTI) refers to the right of every citizen to access information held by or under the control of public authorities. Information is crucial for good governance as it reflects and captures government activities and processes. It is said that information is the oxygen of democracy -if people do not know what is happening in their society or government, and if the actions of those who rule them are hidden, then they cannot take a meaningful part in the affairs of the governance. Access to information not only promotes openness, transparency and accountability in administration, but also facilitates active participation of people in the democratic governance.

In fact, in the case of Sri Lanka, the discussion on RTI act commenced in the mid 1990s and the efforts made by then government to enact the act became futile owing to lack of political willingness and supports. However, the long-standing struggle of enacting RTI became reality in 2016 under the so-called good governance regime with the enactment of the 19th Amendment to the Constitution and it has now being implemented amidst limited institutional arrangements. Shortly after the enactment of the Act, many civil society organizations have started of creating awareness on the very Act and its applications and significance. In this context, the Institute of Social Development (ISD) embarked a project in this very theme with a view to creating greater degree of awareness among estate and rural communities to reap the benefits of the Act and also to enabling them to access and enjoy public service as rightful citizens of the country. It is expected that educating general public on this Act would enable them to access various forms to information that are relevant for their everyday life. Thus, the guide book on Right to information (RTI) is also a part of the project on 'Good Governance and Citizen Participation' of the Institute of Social Development (ISD).

Currently, the ISD has been conducting various training programs on RTI in and around the plantations and it is deemed that developing a guide book in this nature would enable and empower

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

citizens' of the country to gain access to information on variety of public services, information on public and political institutions, and their decisions, policies and programs. Thus, the book covers seven chapters as follows; first chapter provides an overall introduction to RTI and application of this manual, and the second chapter focuses on RTI from the human rights perspective, the third chapters gives detail discussion on Sri Lanka's RTI, its content and applications, and the fourth and fifth chapters discuss on role of government, public institutions, citizens and civil society in implementing RTI, the sixth chapter provides an account on how to conduct social auditing on public services and development projects using RTI, and the final chapter sheds more light on implementing RTI at the community level, necessary strategies, challenges and prospects. The guide book also entails relevant RTI application forms in the annexure.

Thus, we firmly believe that the guide book would be beneficial for the general public and can be used to train and educate community members on RTI with the view to improving access to public services and information from relevant public institutions. Each chapter of the book provides adequate information in a simplified manner so as to make ordinary people understand the essence of the act. Very importantly, the book entails many success case studies in regard to RTI that were documented since its implementation – they are more likely to provide us with insights and usefulness of the act. Citizens can learn lessons on how to use the act to address day-to-day issues and problems in regard to obtaining public services. We strongly believe that the continual education and training on RTI act would improve access to public services and make public institutions accountable and transparent. It turn, it would increase citizens' participation in governance and thier trust in them.


**Dr.R.Ramesh**
Department of Political Science
University of Peradeniya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | v |
| நன்றியுரை | viii |
| அறிமுகம் | ix |
| An Overview of the Guide Book on Right to Information | xvii |
| 1. தகவல் அறியும் உரிமைச் சட்டம் : ஓர் அறிமுகம் | 1 |
| 2. தகவல் அறியும் உரிமையும் மனித உரிமைகளும் | 34 |
| 3. இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் | 44 |
| 4. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைச் சிறந்த முறையில் அமுல்படுத்தல் : அரசாங்கம், பொது நிறுவனங்கள் மற்றும் பிரஜைகளின் வகிபங்கு | 95 |
| 5. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை வினைத்திறன் மிக்க வகையில் நடைமுறைப்படுத்தல்: சிவில் அமைப்புக்களின் வகிபங்கு | 113 |
| 6. தகவல் அறியும் உரிமைச் சட்டமும் பொதுச்சேவை வழங்கலில் சமூகக் கணக்காய்வும் | 131 |
| 7. பிரஜைகள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தல் : சில ஆலோசனைகள் | 150 |
| 8. முடிவுரை | 173 |
| பின்னிணைப்புகள் | 179 |
| i. முக்கிய விண்ணப்பப் படிவங்கள் | |
| ii. மாதிரி வினாக்கள் | |
| உசாத்துணை நூல்கள் | 208 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையின் ஆட்சிமுறைக் கட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் – 1

# தகவல் அறியும் உரிமைச் சட்டம்: ஓர் அறிமுகம்

## Right to Information : An Indtroduction

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான பொதுவான அறிமுகம், அதன் முக்கியத்துவம், சிவில் சமூகம், நல்லாட்சி மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு, பெருந்தோட்டப் பகுதிகளில் பொதுச் சேவை வழங்கலில் இச் சட்டம் செலுத்தக் கூடிய தாக்கம், மற்றும் பிரஜைகளின் கடமைப் பொறுப்புகள் என்பன தொடர்பாகக் கலந்துரையாடுவதுடன், இறுதியாக, இக்கைந்நூலினைப் பயிற்சியாளர்கள், பொது மக்கள், சிவில் அமைப்புகள் எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பது தொடர்பான ஆலோசனைகளையும் முன்வைப்பதே இவ் அத்தியாயத்தின் நோக்கமாகும். இந்நூலின் பல இடங்களில் அரசாங்க நிறுவனங்களைக் குறிப்பதற்குப் பொது அதிகார சபைகள், பொது நிறுவனங்கள், அரசாங்க அல்லது அரச பொது நிறுவனங்கள் போன்ற சொற்பதங்கள் மாறி மாறி பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை யாவும் ஒரே அர்த்தத்தினையே குறித்து நிற்கின்றன என்பதனை வாசகர்கள் புரிந்துகொள்வது அவசியமாகும்.

தகவல் அறியும் உரிமை என்பது அரச நிறுவனங்களின் கட்டுப் பாட்டில் உள்ள தகவல்களைப் பிரஜைகள் பெற்றுக் கொள்வதற்குள்ள உரிமையாகும். பிரஜைகளின் நல்வாழ்விற்கு தகவல்கள் மிகவும் அடிப்படையானதாகும். காரணம், அவை அரசாங்கத்தின் செயற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகள், சட்டதிட்டங்கள், கொள்கைகள், அதன் செல்வழி என்பன வற்றை பிரஜைகள் அறிந்துகொள்வதற்கான பரந்த சட்டகத்தை வழங்கு கின்றது. உண்மையில், தகவல் என்பது ''ஜனநாயகத்தின் ஒட்சிசன்'' என பொதுவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தமது நாட்டில் என்ன நடக்கின்றது, யார் தம்மை ஆளுகின்றார்கள், எவ்வகையான சட்டத் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன, அரசாங்கமும் அதன் நிறுவனங் களும் செயற்படும் விதம் தொடர்பான தகவல்கள் ஒரு நாட்டில் வாழும் பிரஜைகளுக்கு மறைக்கப்படுமானால் அல்லது பெற்றுக் கொள்வதற்கான, கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லாவிடின் பிரஜைகளால் ஆட்சி முறையில், அரசாங்கத்தின் செயற்பாடுகளில் அர்த்தமுள்ள வகையில் பங்குபற்ற முடியாது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

எல்லாவற்றுக்கும் அப்பால், பிரஜைகள் தமது கடமைப் பொறுப் புக்களை சரிவர நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தொடர்பான தகவல்கள் அவசியமாகும். தகவல் அறியும் உரிமை ஒரு நாட்டில் வெறுமனே வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் என்பவற்றை மாத்திரமின்றி, ஜனநாயக ஆட்சிமுறையில் மக்கள் பங்கேற்பினை இலகுபடுத்துகின்றது.

நோபல் பரிசு பெற்ற இந்திய நாட்டைச் சேர்ந்த மிக புகழ் பெற்ற பொருளியலாளரும் ஹாவாட் (Harward) பல்கலைக்கழகத் தின் பொருளியல் பேராசிரியருமான அமர்த்யா சென் (Amartya Sen, 1999) அபிவிருத்திக்கு அவசியமான ஐந்து முக்கிய சுதந்திரங்களை அடையாளம் கண்டுள்ளார்.[1] அவையாவன :-

- அரசியல் சுதந்திரம்
- பொருளாதார வாய்ப்புக்கள் அல்லது வசதிகள்
- சமூக வாய்ப்புக்கள்
- வெளிப்படைத்தன்மை
- பாதுகாப்பு

1. Amartya Sen, (2001), Development as Freedom, London: Oxford University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு அவர் கூறும் வெளிப்படைத்தன்மை என்பது மக்கள் அரசாங் கத்திடம் இருந்து எதிர்பார்க்கும் ஒரு பண்பாகும். தகவலை வெளிப் படுத்துவதற்கான உறுதிப்பாடு, தகவல்களை அணுகுதல் என்பனவாகும். இந்த நம்பிக்கை சீர்குலைக்கப்படும் போது மக்களின் வாழ்க்கை மிக மோசமாகப் பாதிக்கப்படும். அத்துடன், குறைந்தளவிலான வெளிப் படைத்தன்மை அல்லது திறந்த தன்மையானது அரசாங்கம், அதன் நிறுவனங்கள், சட்டங்கள் மற்றும் கொள்கைகள், தீர்மானங்கள் மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையினை மிக மோசமாகப் பாதிக்கும். அபிவிருத்திக்கான சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு தகவல்களை அறிந்து கொள்வதற்குள்ள சுதந்திரம் மிக அடிப்படையானது. இதன் மூலம் அபிவிருத்திச் செயற்பாடுகளில் காட்டப்படும் பாகுபாடுகள், அநீதிகள், ஊழல் மோசடிகள், துஷ்பிரயோகங்கள் என்பவற்றை வெளிக்கொண்டு வரவும், தடுக்கவும் முடியும். மிக முக்கியமாக, பின் தங்கிய மக்கள் மற்றும் சமூகங்கள் இதன் மூலம் பயனடைய முடியும். ஏனென்றால், அபிவிருத்திச் செயற்பாடுகளில் அவர்கள் ஒதுக்கப்படுதல் அல்லது புறக்கணிக்கப்படுதல் இலங்கை உட்பட பல நாடுகளில் ஒரு பொதுவான பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

## சாதாரண பிரஜைகளுக்குத் தகவல்கள் ஏன் அவசியம்?

ஆட்சியில் மக்களின் பங்கேற்புக்கு முக்கியத்துவம் வழங்குவதற்கும், பங்கேற்பு தீர்மானங்களை மேற்கொள்வதற்கும், அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கும், சமத்துவம், சம நீதி என்பவற்றை நிலைநாட்டவும் தடையற்ற தகவல் பரிமாற்றம் மற்றும் தகவல் கிடைப்பனவு அவசியமாகும். தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா அவர்கள் இச்சட்டத்திற்கு அதி முக்கியத்துவம் வழங்கியதுடன், அரசியல் அமைப்பிலும் இவ்வுரிமை யினை உள்ளடக்கினார். போதுமான தகவல்கள் மற்றும் அறிவு மக்களுக்கு இல்லாதபோது அல்லது அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லாத போது நாட்டில் உள்ள நடைமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பன சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகளுக்கு வாய்ப்பளிக்கும் என்பது அவரின் ஆழமான நம்பிக்கையாகக் காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரசாங்கத்தின் அக்கறை

காலத்துக்குக் காலம் இடம்பெறும் தேர்தலில் தமது வாக்குகளைப் பயன்படுத்தி மக்கள் தெரிவு செய்யும் அரசியல் பிரதிநிதிகளைக் கொண்டு உருவாக்கப்படும் அமைப்பினையே அரசாங்கம் என அழைக்கின்றோம். இலங்கையில் இதனை மூன்று வகையாக அடையாளப்படுத்த முடியும். ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம் (சபை) மற்றும் உள்ளூராட்சி அரசாங்கமாகும். அரசாங்கத்தினை உருவாக்குதல், மாற்றுதல் என்பன பிரஜைகள் கொண்டுள்ள மிக உயர்ந்த அதிகாரத்தின் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றன என்பதனை நாம் எப்போதும் நினைவில் கொள்வது அவசியமாகும். அந்தவகையில், அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக பிரஜைகள் அறிவுறுத்தப் பட்டவர்களாக இருத்தல் வேண்டும். காரணம், ஊழல் என்ற அரக்கன் பலம்மிக்க நிர்வாகத்தின் நன்மைகளை, செயறிறனை விழுங்கி விடுவதன் விளைவாக நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சி பின்னோக்கி செல்லும் நிலை அதிகரிக்கின்றது. பிரஜைகள் விழிப்புணர்வுள்ளவர்களாக இருப்பதன் மூலமே இத்தகைய பிரச்சினைகளைக் கட்டுப்படுத்த முடியும். அடங்கி வாழும் பண்பாட் டினைக் கொண்டுள்ள சமூகங்களில் அல்லது அடக்கு முறை, கட்டுப்பாடுகள் காணப்படும் சமூகங்களில் உரிமைக்காக குரல் கொடுக்கின்ற நிலையினை ஏற்படுத்துவது இலகுவான காரியமல்ல. எனவே, தகவல் அறியும் சட்டம் மற்றும் அது தொடர்பான தெளிவு, உரிமைகளைக் கோருவதற்கும் அவற்றை அனுபவிப்பதற்கும் முதலாவது படியாகக் காணப்படுகின்றது.

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் நாட்டின் பொருளாதாரத்தினை முன்னேற்றுவது, அரசியல் அமைப்பினை மறுசீரமைப்பது, பொது நிர்வாக முறையினை நவீனப்படுத்துவது, ஊழலை ஒழிப்பது, பொது மக்களின் நலனை மேம்படுத்தல் போன்ற நோக்கங்களை பொதுவில் கொண்டிருந்தாலும், அவற்றை அடைந்து கொள்வது நடைமுறையில் சவாலாகவே உள்ளது. இத்தகைய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு பல நாடுகள் தகவல் அறியும் சட்டத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றன. குறிப்பாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கப் பதிவுகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆவண காப்பக முறை யினைக் கட்டியெழுப்புவதன் மூலம் உண்மையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கொள்கைகளை உருவாக்க, வினைத் திறன் மிக்க சேவைகளை வழங்க, ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க, சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ள இச்சட்டம் வாய்ப்பாக அமையும். எல்லாவற்றுக்கும் மேலாக, வெளிப்படைத்தன்மை மற்றும் அரசாங்கத் திற்கும் பிரஜைகளுக்கும் இடையிலான நம்பிக்கையினை மீள்கட்டி யெழுப்ப உதவுகின்றது.

தகவல் அறியும் உரிமை அல்லது சுதந்திரம் அடிப்படை மனித உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சர்வதேச மனித உரிமை சாசனத்தின் 19ஆவது உறுப்புரை தகவல் அறியும் உரிமையினை உறுதிப்படுத்தியுள்ளது. பல நாடுகள் தமது அரசியல் அமைப்பில் தகவல் அறியும் உரிமையினை உறுதிப்படுத்தியுள்ளன. முதலாவதாக 1766ஆம் ஆண்டு சுவீடன் நாட்டிலேயே தகவல் அறியும் உரிமைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்பு 1966ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவிலும், அதனைத் தொடர்ந்து பிரான்ஸ், நெதர்லாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா, டென்மார்க், கிரீஸ், ஒஸ்திரியா, இத்தாலி போன்ற நாடுகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டன. 2010ஆம் ஆண்டு தரவுகளின்படி 85இற்கும் மேற்பட்ட நாடுகள் இச்சட்டத் தினை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துகின்றன. ஆசியாவில் 20க்கு மேற்பட்ட நாடுகள் உள்நாட்டு சட்ட ஏற்பாடுகளில் இதனை உள்வாங்கி உள்ளன.

தகவல் அறியும் உரிமையினை வினைத்திறனுடன் நடை முறைப் படுத்துவதற்கு ஒரு பூரணமான சட்ட ஏற்பாடு மிக அவசியமானதாகும். குறிப்பாக, தகவல்களுக்காக விண்ணப்பித்தல், தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக முறையான பொறிமுறையினைச் சட்டங்கள் உறுதிப்படுத்த வேண்டும். எனவே, இச்சட்டத்தின் பயனை பிரஜைகள் முழுமையாக அனுபவிப்பதற்கு சட்டத்தின் வழிகாட்டல்கள், அதனை அமுல்படுத்தல், அதற்கான பொறிமுறைகள் அல்லது நிர்வாக கட்டமைப்பு போன்றன மிகவும் அவசியமாகும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினைத் தாக்கமுள்ள வகையில் அமுல்படுத்துவதற்கு அரசாங்கமும் சிவில் சமூகமும் இணைந்த பொறுப்பினைக் கொண் டுள்ளன. அரசாங்கமானது சட்டங்களை இயற்றி அதனை நடைமுறைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவதற்கான பொறிமுறைகளை வகுக்கும். மறுபுறமாக, சிவில் சமூகங்கள் சட்டத்தைச் சீராக நடைமுறைப்படுத்த உதவுதல், அதன் மூலம் பயனடைதல், அரசாங்கத்தின் நடவடிக்கைகளை கண்காணித்தல் ஆகிய பொறுப்பினைக் கொண்டுள்ளன.

நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர ரீதியான இரகசியங்களைப் பேணுதல், தனி மனிதர்களின் உரிமைகளை, இரகசியங்களைப் பாதுகாத்தல் போன்ற காரணங்களுக்காக சில சமயங்களில் தகவல்களை வெளிப்படுத்த முடியாத சூழ்நிலைகள் காணப்படுகின்றன. இச்சந்தர்ப்பங்களில் அரசாங்கம் தகவல் அறியும் உரிமை மீது சில கட்டுப்பாடுகளை விதிக்கின்றது.

**பொதுவாக பதிவுகள், ஆவணங்கள், குறிப்புக்கள், அறிக்கைகள், மின்னஞ்சல், கடிதம், கருத்துகள், கூற்றுகள், மசோதாக்கள், சட்டங்கள், அரசாங்கக் கொள்கைகள், ஆலோசனைகள், ஊடக அறிக்கை, சுற்றுமடல், கட்டளைகள், குறிப்பு புத்தகம், ஒப்பந்தங்கள், குறியீடுகள் அல்லது சின்னங்கள், மாதிரிகள், ஒழுங்கு விதிகள், வீடியோ, ஒலி நாடா, சித்திரங்கள், குறுஞ்செய்திகள், தீர்மானங்கள், தாபனக் கோவைகள் போன்றவற்றை தகவல் என எளிமையாக வரையறை செய்யலாம்.**

**தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் முக்கியத்துவம்**

1. அரசாங்கத்தின் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை ஏற்படுத்துவதற்கு அவசியமாகும்.

2. வெளிப்படைத்தன்மை கொண்ட அரசியல் சமூகத்தினைக் கட்டியெழுப்புவதற்கு உதவும்.

3. நாட்டின் அபிவிருத்தியின் பயன்களைச் சகல பிரஜைகளும் அனுபவிப்பதற்கு வழிவகுக்கும்.

4. நல்லாட்சி மற்றும் ஜனநாயகப் பண்புகளை வளர்த்தெடுப்பதற்கும், பின்பற்றுவதற்கும் உறுதிசெய்வதற்கும் இன்றியமையாதது.

5. மனித உரிமை மற்றும் சுதந்திரங்களை அனுபவிப்பதற்கு உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நிலையான அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு, தனி மனித வலுவூட்டலுக்கான முக்கியமானதொரு பொறிமுறையாகும்.

7. தீர்மானம் எடுத்தலில், ஆட்சிமுறைக் கட்டமைப்புகளில் மக்களின் பங்கேற்பை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அதன் மூலம் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் உதவும்.

8. நிர்வாகத்தில் மற்றும் பொது வாழ்வில் வெளிப்படைத் தன்மையினைக் பொறுப்புக்கூறலை கொண்டுவருவதற்கான அடிப்படையாகும்.

9. பிரஜைகள் தமது கடமைப் பொறுப்புகளை உணர்ந்து செயற்படுவதற்கு உதவும்.

10. தகவலை வழங்கும் மற்றும் பெற்றுக்கொள்ளும் கலாசாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமாகும்.

11. அரசாங்கத்தினதும் அதன் நிறுவனங்களினதும் மற்றும் அரசியல் வாதிகளினதும் சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகள், ஊழல் மோசடிகள் மற்றும் ஒழுக்கத்திற்குப் புறம்பான செயற்பாடுகளை வெளிக்கொண்டுவருவதற்கு அவசியமாகும்.

12. சட்டத்தின் ஆட்சி மற்றும் ஊடக சுதந்திரம் என்பவற்றை உறுதி செய்வது அவசியமாகும்.

## தகவல் அறியும் உரிமைச் சட்டமும் சிவில் சமூகமும் : சிவில் சமூகம் என்பது எதனைக் குறிக்கின்றது?

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை சமூக மட்டத்தில் கொண்டு செல்வதில், அது தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதில், சீரான முறையில் இச்சட்டத்தினை அமுல்படுத்துவதில், அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதில் சிவில் சமூக அமைப்புகளின் பங்களிப்பு பெரிதும் அவசியமாகும். ஆகவே, சிவில் சமூக அமைப்பு தொடர்பாகவும் பயிற்சியாளர்கள், பிரஜைகள் மற்றும் பயிற்சியில் பங்குபற்றுவோர் தொடர்பான புரிந்துணர்வினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும். அரசாங்கத்தின் பணிகளுக்கு அப்பால் மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநலன் கருதிச் செயற்படுகின்ற குழுக்கள் அல்லது அமைப்புக்களே சிவில் சமூகம் எனப்படுகின்றது. குறிப்பாக, அரச சார்பற்ற நிறுவனங்கள், தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், மத அமைப்புகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஒரு சமூகத்தின் முன்னோக்கிய செயற்பாடுகளுக்கு சிவில் சமூகத்தின் பங்கு மிகவும் அவசியமாகும். சிவில் சமூகங்கள் அரசாங்கத்தின் கொள்கை வகுப்பு, தீர்மானங்கள் எடுக்கும் செயன்முறைகளில் நேரடியாகப் பங்கு பெறாவிட்டாலும், அவை மக்கள் சார்பான தீர்மானங்களைக் கொண்டு வருவதற்கு பங்களிப்புச் செய்ய முடியும்.

அபிவிருத்தி என்பது மக்கள் நலனையும் அவர்களின் முழுமையான பங்களிப்பினையும் அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும். வெளிச் சக்திகளால், வெளியாட்களால் அது திட்டமிடப் படுகின்ற போதும், அபிவிருத்தியின் பயனாளிகளை ஒதுக்கி வைத்து விட்டு திட்டங்கள் முன்வைக்கப்படும் போதும், அவற்றின் வெற்றி சந்தேகத்திற்குரிய ஒன்றாகவே அமையும். அபிவிருத்தியின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் அடையப்பட வேண்டுமாயின் பிரஜைகள் கொள்கைத்திட்ட வகுப்பிலும் அமுலாக்கத்திலும் ஈடுபட வேண்டும் என்ற வாதம் இன்று அதிகமாகவே இடம்பெற்று வருகின்றது. இன்று இந்தியா போன்ற நாடுகளில் சிவில் சமூகத்தின் பங்கேற்பு அபிவிருத்திச் செயற்பாடுகளில் அதிகரித்து வருவதினைக் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக, சிவில் அமைப்புக்களின் தொடர்ச்சியான அழுத்தம் மற்றும் பிரச்சாரங்களின் காரணமாக மக்கள் நலனுக்குப் பாதகமான அபிவிருத்தித் திட்டங்கள் அரசாங்கத்தினால் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. சமூக பொருளாதார அபிவிருத்தியின் பயன்களை நீண்ட கால அடிப்படையில் பெற்றுக் கொள்ள சிவில் சமூகத்தின் ஈடுபாடு அவசியம் என்பது பொதுவில் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நல்லாட்சி என்ற தத்துவமானது அரசாங்கம், தனியாள், சிவில் அமைப்புகள் என்பன ஒன்றிணைந்து செயற்படும் போதே சமூக அபிவிருத்தியை மேம்படுத்தி, சமத்துவத்தை அடைய முடியும் என்பதனை வலியுறுத்துகின்றது. ஆட்சிமுறையில் சிவில் சமூகம் பிரதான பாத்திரமாகக் காணப்படுகின்றது. துடிப்பான சிவில் சமூகம் நல்லாட்சியை அடைவதற்கு அவசியமாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத்தில் சிவில் சமூக அமைப்புக்கள் சமூக நிலை மாற்றம், சமூக அணி திரட்டல், கொள்கைப் பரப்புரை (Advocacy) மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பனவற்றில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. அவை ஆற்றல் அபிவிருத்தி, குடியியல் கல்வியை வழங்குதல், சமூகத்தின் பொதுப் பிரச்சினைகளுக்காகத் தம்மை பிரதிநிதித்துவப்படுத்துதல், வினைத்திறன் மிக்க தரமான பொது சேவைக்காக நியாயமான பிரசாரம் மற்றும் பரப்புரைகளை மேற் கொள்ளல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. இன்று அபிவிருத்திச் செயன்முறைகளில் சிவில் சமூக அமைப்புகளுக்கு பிரத்தியேக இடமுண்டு என்பதில் ஐயமில்லை. சிவில் சமூக அமைப் புக்கள் பொது மக்களின் கோரிக்கைகள் மற்றும் அபிப்பிராயங்களை ஒன்று திரட்டி அதனை வசதிப்படுத்தி அதன் மூலம் சமூகத்தின் நன்மைக்காக நிலையான சமூக பொருளாதாரப் பயன்களை அடைந்துகொள்ள வழி செய்கின்றன. மக்களின் கோரிக்கைகளை அடைந்துகொள்வதற்கான வழிமுறையாக, அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து அதன் மூலம் பிரஜைகளின் உரிமைகளை வென்றெடுக்கின்ற முக்கிய கருவியாக சிவில் சமூக அமைப்புகள் காணப்படுகின்றன. சிவில் சமூக அமைப்புக்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கான பரந்த கட்டமைப்பொன்று அவசியமாகும். அது பொதுமக்களின் கோரிக்கைகளை முன்வைக்க, அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுக்க சாதகமான சூழ்நிலையை உருவாக்கும்.

அரசாங்கம் சிவில் அமைப்புகளின்மீது பெரியளவிலான அழுத்தம் கொடுப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது. அரசாங்கத்தின் எண்ணப்பாங்கு, ஒழுங்குவிதிகள், சட்டங்கள், கொள்கைகள் என்பன சிவில் சமூக அமைப்புகளின் வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்கின்றன என்பதனையும் நாம் மனங்கொள்ள வேண்டும். உண்மையில், சிவில் சமூக அமைப்புக்கள் அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களின் மீது செல்வாக்குச் செலுத்தும் போது, அரசாங்க செயற்பாடுகளில் தொடர்ச்சியான ஈடுபாடு காட்டும் போது அரசுக்கும் - சிவில் அமைப்புகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு ஏற்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவில் சமூகமும் நல்லாட்சியும்**

ஆட்சிமுறை என்பது அரசியல், சமூக, பொருளாதார அம்சங்களை உள்ளடக்கியிருப்பதுடன், அது தனிப்பட்டவர்கள், குடும்பங்கள், கிராமம், தோட்டங்கள், சமயம் மற்றும் ஒட்டுமொத்த நாட்டின் மீதும் பாதிப்புச் செலுத்துகின்றது. உலக வங்கியின் புகழ்பெற்ற ஆய்வாளரும் உலக ஆட்சிமுறை குறிகாட்டிகளை (Wolrd Governance Indicators) வடிவமைத்தவருமான கலாநிதி டேனியல் கௌப்மன் (Daniel Kaufman, 2005) ஆட்சிமுறையினைப் பின்வருமாறு விளக்குகின்றார்:

ஆட்சிமுறை என்பது ஒரு நாட்டின் ஆட்சி அதிகாரம் பிரயோகிக் கப்படும் முறைமை என்கின்றார். அதில் பின்வரும் விடயங்கள் அடங்குகின்றன.

- அரசாங்கம் தெரிவு செய்யப்படும் செயன்முறை, அதனைப் பொறுப்புக் கூறலுடன் செயற்பட வைத்தல், கண்காணித்தல் மற்றும் அரசாங்கத்தை மாற்றுதல்.
- உறுதியானகொள்கைகளை உருவாக்க, அமுலாக்க, கட்டுப் படுத்த,வளங்களைமுகாமைத்துவம் செய்ய,வினைத்திறன் மிக்க பொதுச்சேவைகளை வழங்க அரசாங்கம் கொண்டிருக்கும் கொள்திறன் அல்லது திராணி.
- சமூக பொருளாதாரச் செயற்பாடுகளை மேற்கொள்ளும், அவற்றைக் கையாளும் நிறுவனங்கள் மீது மரியாதையினையும் தொடர்புகளையும் பேணுதல்.

ஆட்சிமுறைக்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் வழங்கப்படுவது போன்று நல்லாட்சிக்கும் வேறுபட்ட வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் ''நிலைத்து நீடித்த மனித அபிவிருத்திக்கான ஆட்சிமுறையே'' நல்லாட்சி என்று ஐக்கிய நாடுகள் சபையின் அவிருத்தி திட்டம் வரையறுக்கின்றது (UNDP கொள்கை ஆவணம், 1997)

மேலும், ''ஒரு நாட்டில் உள்ள எல்லா மட்டத்திலுமான நடவடிக் கைகளை முகாமை செய்வதற்கான பொருளாதார, அரசியல், நிர்வாகம் தொடர்பான அரச நிறுவனங்களின் செயற்பாடுகளில் ஆட்சி முறையினைக் காண முடியும்'' என குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில், வினைத்திறன்மிக்க ஆட்சிமுறையானது நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளைச் சிறந்த முறையில் கையாளும் திராணியைக் கொண்டிருக்கும். ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் கொபி அனான் ''வறுமையினை ஒழிப்பதற்கும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் அவசியமான முக்கிய காரணி நல்லாட்சி'' என்றார். தீர்மானம் எடுத்தல், அவற்றை அமுல்படுத்தல், வள முகாமைத்துவம் போன்ற செயன்முறைகளின் பிரதான பங்காளர்களான அரசாங்கம், சிவில் சமூகம் மற்றும் சந்தை என்பன தமது கடமை, பொறுப்புக்களை வினைத்திறன் மிக்க வகையில் நிறைவேற்றும் போது ஆட்சிமுறை முன்னேற்றம் அடைகின்றது.

**நல்லாட்சி என்பது**

- பிரஜை நேயம் கொண்டது.
- பிரஜைகளின் நலன்களை அடிப்படையாகக் கொண்டது.
- சமூகசேவை நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது.
- அபிவிருத்தியை மையமாகக் கொண்டது.
- பங்கேற்பு மற்றும் பிரஜைகளின் வாழ்க்கைத்தர முன்னேற்றத்தினை இலக்காகக் கொண்ட பொறுப்புடன் கூடிய பொது முகாமைத்துவமாகும்.
- பொது சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் யாவருக்கும் சமவாய்ப்பு வழங்குதல்.
- பிரஜைகளுக்கு ஆட்சிமுறை, அரசாங்கம் சேவை வழங்கல் தொடர்பான முழுத் தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

**நல்லாட்சியின் பண்புகள்**

1. **சட்டத்தின் ஆட்சி:** முறையாகத் தயாரிக்கப்பட்ட, அதிகார மளிக்கப்பட்ட சட்டங்களைப் பின்பற்றியே பல நாடுகளிலும் ஆட்சி நடக்கின்றன. எனவே, இச்சட்டங்கள் மக்கள் நலன் சார்ந்ததாகவும், பாதுகாப்பளிப்பதாகவும் இருக்க வேண்டும். மேலும், இவை உரிய நிறுவனங்களால் முறையாக மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளை உரிய நேரத்தில் நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் அமுல்படுத்தப்பட வேண்டும்.

2. **வெளிப்படைத் தன்மை:** அரசாங்கத்தின் கொள்கை உருவாக்கங்கள், நிதிச் செயற்பாடுகள், தீர்மானங்கள், செயற்றிட்ட அமுலாக்கம் என்பன வெளிப்படைத் தன்மை உள்ளவையாக இருக்க வேண்டும். குறிப்பாக, மக்களுக்கு எளிதாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தகவல்களை சுதந்திரமாகவும், நேரடியாகவும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் இருக்க வேண்டும்.

3. **கடமைப் பொறுப்புகள் மற்றும் வகைகூறல் :** நாட்டின் நிலையான அபிவிருத்தியை இலக்காக் கொண்டு அனைத்து பங்குதாரர்களும் செயற்பட வேண்டும். அரசாங்கம் மக்களின் கருத்துக்களுக்குச் செவிமடுப்பது இச்செயற்பாட்டிற்கு மிக அவசியமானதாகும். பொதுமக்கள் சார்பாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் நடைமுறைகள் தொடர்பாக எழுப்பப்படும் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கும், விபரிப்பதற்கும், அறிகையிடுவதற்கும் அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. குறிப்பாக, உயர் அதிகாரிகள், நிறுவனங்கள், நபர்கள் வகைகூறக் கடமைப்பட்டுள்ளனர். தங்களது கடமையினைப் புரிகின்ற போது இடம்பெறுகின்ற விடயங்களினால் யாரேனும் பாதிக்கப்படுகின்ற போது அது தொடர்பில் பொறுப்பு வாய்ந்தவர்கள் வகைகூற வேண்டும். இவ்வகைக்கூறலானது, அரச துறையினைச் சார்ந்தவர்களுக்கு மாத்திரம் உரியதல்ல, மாறாக அரச சார்பற்ற துறையினரும் தமது செயற்பாடுகளிற்குப் பொறுப்புக்கூற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

4. **நீதித்துறைச் சுதந்திரம் :** ஓர் அரசின் பிரதான மூன்று துறைகளாக சட்டத்துறை, நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை என்பன காணப்படுகின்றன. இதில் நீதித்துறைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய தேவைப்பாடு இயல்பாகவே எழுகின்றது. காரணம், மக்கள் இறுதியாக நம்பிச் செல்கின்ற இடமாக இத்துறை காணப்படுவதனாலாகும். நீதிபதிகள் எந்தவித முறைகேடான ஆதிக்கத்திற்கும் உட்படாவண்ணம், தமது தீர்ப்பை வழங்கக் கூடியதாகவிருக்கும் ஒரு நிலைப்பாட்டை அல்லது சூழ்நிலையினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதித்துறைச் சுதந்திரம் என அடையாளப்படுத்தலாம். அரசியலமைப்பில் வழங்கப்படுகின்ற உரிமைகளும், சுதந்திரங்களும் மற்றும் சட்ட ஏற்பாடுகளும் யதார்த்த பூர்வமானவையாக அமைய வேண்டுமானால், நீதித்துறைச் சுதந்திரமானதும் கோட்பாட்டு ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் ஏற்கப்பட வேண்டியது அவசியமானதாகும். நீதித்துறை சுதந்திரமற்றதாக, சார்புடையதாக இருத்தல், அதிகாரமில்லாது சக்தியற்று இருத்தல் என்பன நீதியின் நேர்மையைக் குன்றச் செய்யும்.

5. **பயனுறுதிமிக்க மற்றும் வினைத்திறன் மிக்க செயற்பாடுகள்:** அமுல்படுத்தும் நிறுவனங்கள் செலவுகளைப் பயனுறுதி மற்றும் வினைத்திறன் மிக்க வகையில் முகாமை செய்வதன் மூலம் மக்களின் தேவைகளை நிறைவு செய்வது நல்லாட்சியின் மிக முக்கிய பண்பாகவும், பௌதிக, மனித வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தல், தொழிநுட்பம், நிதி முகாமை, சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளைக் கருத்தில் கொள்வது மிக அவசியமாகும். சில சமயங்களில் விரைவான தீர்மானங்களை மேற்கொண்டு கிடைக்கின்ற வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி மக்களுக்கு வினைத்திறன் மிக்க சேவைகளை வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு.

6. **பதிலுறுத்தல் :** பதிலுறுத்தல் மூலம் வேண்டப்படுவது யாதெனில், ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் (வேண்டுமென்றே கால தாமதப்படுத்தாமல்) மக்களுக்கும், சிவில் அமைப்புக்களுக்கும் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் பதிலளிக்கும் தன்மை கொண்டதாக ஆட்சி இடம்பெற வேண்டும் என்பதாகும். வேறு வார்த்தையில் கூறின், மக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் போன்றவற்றின் தேவைகள், கோரிக்கைகள், பிரச்சினைகள் மற்றும் சந்தேகங்களிற்கு ஆட்சியாளர்கள் உடனடியாக பதிலுறுப்போராக (பதில் அளிப்போராக) இருத்தல் வேண்டும்.

7. **மனித உரிமைகளை மதித்தலும் பேணுதலும் :** மனிதனின் நல்வாழ்வுக்கு மனித உரிமைகளே அடிப்படையாகின்றன. இத்தகைய மனித உரிமையின் முக்கியத்துவம் இன்றைய காலக் கட்டத்தில் பலமாக வலியுறுத்தப்படுவதுடன் நல்லாட்சியினைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணுவதற்கான அடிப்படைகளில் ஒன்றாகவும் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. மனித உரிமைகளினை சட்டரீதியாக அங்கீகரிக்கின்ற போது அவை அடிப்படை உரிமைகள் என்ற அந்தஸ்தினைப் பெறுகின்றன. மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பேணுவதும் பாதுகாப்பதும், அவை மீறப்படுகின்ற போது அதற்கான நிவாரணத்தினை மீறப்பட்டவருக்குப் பெற்றுக்கொடுப்பதும் அரசின் கடமைகளாக வலியுறுத்தப்படுகின்றன.

8. **பங்கேற்பு :** ஒரு நாட்டில் நல்லாட்சி நீடிக்க வேண்டுமாயின் மக்களின் பங்கேற்பு அவசியமாகும். முக்கியமாக சிறந்த மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதன் மூலம் உறுதியான, நிலையான அரசாங்கத்தினை ஏற்படுத்துவது பிரஜைகளின் முழுமையான பங்கேற்பின் மூலமே சாத்தியமாகும். மேலும், அரசாங்கத்தின் முன்னோக்கிய செயற்பாடுகளுக்கு ஆதரவாகவும் மற்றும் மோசடி களுக்கு எதிராகவும் சமூகத்தினை அணித்திரட்டுதல் மற்றும் தகவல்களைப் பரப்புதல் என்பவற்றினை மக்களின் துடிப்பான பங்கேற்புடனேயே மேற்கொள்ள முடியும்.

ஆட்சி முறையின் முக்கிய பங்குதாரர்களை உருப்படம் 1 காட்டு கின்றது.

**உருப்படம் 1: ஆட்சியியல் அல்லது ஆட்சி முறை**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லாட்சியைக் கட்டியெழுப்புவதற்கு சிவில் சமூக அமைப்புகள் வழங்கக்கூடிய பங்களிப்பு:-**

மேற்கூறிய நல்லாட்சிப் பண்புகளை வளர்த்தெடுப்பதில், ஊக்குவிப்பதில் சிவில் சமூக அமைப்புகள் பல வழிகளிலும் துணைபுரிகின்றன. அந்தவகையில், பின்வரும் பகுதியானது நல்லாட்சிக்கு சிவில் சமூக அமைப்புகள் செய்யக்கூடியவை எவை என்பது தொடர்பாக ஆராய்கின்றது.

I. ***குடியுரிமையினை விருத்தி செய்தல் மற்றும் குடியியல் கல்வியினைப் புகட்டல்:***

நல்லாட்சியினைச் சக்திப்படுத்துகின்ற செயற்பாடுகளில் பிரஜைகளின் பங்கேற்பை அதிகரிக்க, பொதுச் செயற்பாடுகளில் உயிர்த் துடிப்புடன் செயற்பட அவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். அவர்களின் சிவில் திறன்கள், பண்புகள், ஈடுபாடு என்பன விருத்தி செய்யப்பட வேண்டும். சகல விடயங்கள் தொடர்பாகவும் அறிவுறுத்தப்பட வேண்டும். விழிப்புணர்வை ஏற்படுத்தல், தமது உரிமைகளை வளந்தோர் கல்வி மூலம் வழங்குதல், ஆற்றல்களை விருத்தி செய்தல் என்பன சிவில் சமூகம் குடியுரிமையின் பண்புகளை வளர்ப்பதற்கு/விருத்தி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய பிரதான செயற்பாடுகளாகக் காணப்படுகின்றன.

II. ***கொள்கை உருவாக்கம் மற்றும் ஆதரித்து பிரசாரம் செய்தல் அல்லது நியாயப் பிரசாரம்:***

சட்டத்துறையின் மீதும், தீர்மானங்களின் மீதும் அழுத்தம் கொடுத்தல், அதற்கு ஆதரவாக அல்லது எதிராகப் பிரசாரம் செய்தல், வாதிடல் போன்றவை சிவில் சமூக அமைப்புக்கள் மேற்கொள்ளும் பிரதான செயற்பாடுகளாக காணப்படுகின்றன. அதேபோல, அரசாங்கத்தின் கொள்கைகள், தீர்மானங்கள் தொடர்பாக பொதுமக்களின் அபிப்பிராயங்களைத் திரட்டுதல், அரசாங்கத்தின் சட்டதிட்டங்கள், கொள்கைகள் மீது அழுத்தம் கொடுக்க துடிப்பான அமைப்புகளைக் கட்டியெழுப்புதல், அதன் மூலம் பிரஜைகளுக்குக் கொள்கையாக்கச் செயன்முறையில் நேரடிக் கட்டுப்பாட்டினை வழங்குதல் என்பன, ஆட்சிமுறைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயன்முறையில் சிவில் அமைப்புக்கள் மேற்கொள்ளக் கூடிய பிரதான பணிகளாகும்.

III. *காவல் நாய்களாக* (Watch Dogs) *செயற்படுதல்:*
சிவில் சமூகம் அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதில் பிரதான பங்கினைக் கொண்டுள்ளது. இவை கொள்கைகள், சட்டதிட்டங்கள் எந்தளவுக்கு நியாயமாக, பக்கச்சார்பின்றி இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்துகின்றன என்பதை மதிப்பிட உதவும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினைப் பொறுத்தவரையில், சிவில் அமைப்புக்கள் பிரஜைகளின் தகவல் அறியும் உரிமையினை உத்தரவாதம் செய்யுமாறும், அரசாங்கத் தகவல்களை முழுமையாகப் பெற்று அனுபவிப்பதற்கான வெளிப்படைத் தன்மையினை மற்றும் பொறுப்புக் கூறலை பேணுமாறும் அழுத்தம் கொடுக்க முடியும். மேலும், இந்தச் சட்டத்தின் அமுலாக்கம், அதன் பிரயோகம், சவால்கள், தடைகள் தொடர்பாகக் கண்காணிக்க முடியும். இதனை நாம் ''காவல் நாய்'' வகிபங்கு என அழைக்கின்றோம். இப்பணியினை ஏனைய சட்டதிட்டங்கள் தொடர்பாகவும் மேற்கொள்ள முடியும். சிவில் அமைப்புக்கள், மக்கள் இயக்கங்கள், சமூக மட்ட அமைப்புக்கள் போன்றவற்றின் தொடர்ச்சியான அழுத்தம், கண்காணிப்பு என்பன தகவல் அறியும் உரிமைச் சட்டம் மக்களுக்குப் பயனுடையதாக அமையப் பெரிதும் துணைபுரியும். இத்தகைய செயற்பாடுகளை மலையகத்தில் தொழிற்படும் சிவில் அமைப்புகளும் தொடர்ச்சியாக மேற்கொள்வதன் மூலம் பெருந்தோட்ட மக்களுக்கு நீண்ட காலமாக மறுதலிக்கப்பட்ட பல உரிமைகளை அனுபவிக்க பரந்தளவிலான வாய்ப்புக்கள் ஏற்படும்.

IV. *பொது நல சேவை வழங்கலை மேம்படுத்த அழுத்தம் கொடுத்தல்:*
சிவில் அமைப்புக்கள் பொதுச் சேவை வழங்கலைச் சீரான முறையில் மேற்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு பல்வேறு வழிகளிலும் துணை புரிகின்றன. குறிப்பாக, அரசாங்கம் பொதுச் சேவைகளை சகல பிரஜைகளுக்கும் வழங்குவதில் பல கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன (மனித, பௌதிக மற்றும் நிதிக் கட்டுப்பாடுகள்). அதன் காரணமாக, சிவில் அமைப்புகளின், அரச சார்பற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களின், பிரஜைகள் குழுக்களின், தனியார் மற்றும் அரச பங்குடைமைகளின் ஒத்துழைப்பு அரசாங்கத்திற்கு அவசியமாக உள்ளது. குறிப்பாக, வறுமைக் கோட்டின்கீழ் வாழுகின்ற மக்களுக்கு, சமூக, பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் வாழும் மக்களுக்குப் பொதுச் சேவை வழங்கலை மேம்படுத்தவும், அடிப்படை சேவைகளின் தரத்தினை மேம்படுத்தவும், மக்கள் மைய அல்லது சமூக மைய அமைப்புக்கள், உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்கள் பெரிதும் பங்களிப்புச் செய்து வருகின்றன. அரச சேவைகளையே நம்பி வாழும் மக்களுக்கு அவற்றைச் சரியாக, முழுமையாக, வினைத்திறன் மிக்க வகையில், பாகுபாடுகள் இன்றி, நியாயமாக வழங்குவதற்குச் சிவில் அமைப்புக்கள் பங்களிப்புச் செய்கின்றன. அரச சேவைகள் மீதான தொடர்ச்சியான கண்காணிப்பு, அழுத்தம், சமூக ஈடுபாடு, கொள்கைப் பரப்புரைகள் என்பவற்றின் மூலம் சிவில் அமைப்புகள் மேற்கூறிய நோக்கத்தினை அடைய முற்படுகின்றன.

இந்தியா போன்ற நாடுகளில் சிவில் அமைப்புக்கள் அரசாங்கத்தின் சேவைகளைக் கண்காணித்து வருவதுடன், அவற்றின் திருப்தி நிலையினை பிரஜைகள் அறிக்கை அட்டை (Citizen Report Card), சமூக அறிக்கை அட்டை (Community Report Card) என்ற பெயரில் வெளியிட்டு வருகின்றன. ஒவ்வொரு பொது நல சேவையினையும் சிவில் அமைப்புக்கள் மேற்பார்வை செய்து அறிக்கையிடுகின்றன. இதன் காரணமாக உள்ளூராட்சி அமைப்புக்களின் செயற்பாடுகளில் கணிசமானளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக பல ஆய்வுகளின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்தகைய நடைமுறைகளை இலங்கையிலும் மேற்கொள்ள முடியும். இதன் மூலம் பின்தங்கிய நிலையில் வாழும் மக்களுக்கு அரச சேவையினைக் கொண்டு செல்வதற்கு உதவியாக அமையும். பிரஜைகள் குழுக்களை அமைத்து அதன் மூலம் அரசாங்கத்தின் சேவை வழங்கலைக் கண்காணித்தல் ஒரு புதிய நடைமுறையாகக் காணப்படுகின்றது. அந்தவகையில், இன்று நாம் அரசாங்கத்தின் பொதுச்சேவைகள் தொடர்பான தகவல்களை புதிய தகவல் அறியும் சட்டத்தின் மூலம் பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் தரத்தினை, குறைபாடுகளை, பிரஜைகளின் திருப்தி நிலையினை மதிப்பிட முடியும்.

V. ***தேர்தல் அரசியல் மீது தாக்கம் அல்லது பாதிப்புச் செலுத்துதல்:*** இலங்கை போன்ற ஜனநாயக நாடுகளில் காலத்துக்குக் காலம் தேர்தல் இடம்பெறுகின்றன. தேர்தல் காலங்களில் சிவில் அமைப்புக்கள் நல்லாட்சி, ஊழலற்ற அரசாங்கம், நேர்மையான அரசியல் தலைவர்களை உருவாக்குதல், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. இதற்காக வாக்காளர்களை அறிவூட்டல் மற்றும் அணித்திரட்டல் என்ற இரு பிரதான செயற்பாடுகளைச் சகல மட்டங்களிலும் மேற்கொள்கின்றன. இவை தேர்தலில், தேர்தல் பெறுபேறுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. படித்த மற்றும் பாமர மக்கள் மத்தியில் சிந்தனை மாற்றத்தினை ஏற்படுத்த, அவர்களை அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடச் செய்வதில், வாக்காளர் நடத்தையினை மாற்றுவதில் இத்தகைய செயற்பாடுகள் ஓரளவு தாக்கம் செலுத்துகின்றன. இதற்குச் சிறந்த உதாரணமாக 2015ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தினைக் குறிப்பிடலாம்.

ஊழல் மோசடிகளை, குடும்ப ஆட்சியினை முடிவுக்குக் கொண்டு வருவதில் சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றிணைந்த செயற்பாடு பெரியளவிலான தாக்கத்தினை ஏற்படுத்தியது என்பதனைக் குறிப்பிட முடியும். இத்தகைய அரசியல் மாற்றங்களைத் தேசிய மட்டத்தில் மாத்திரமன்றி, சமூக மட்டத்தில் ஏற்படுத்துவதிலும் சிவில் அமைப்புக்கள் பங்களிப்பு செய்கின்றன. இதனை வடக்கு கிழக்கில், முஸ்லிம் சமூகத்தில் மற்றும் மலையகத்தில் கடந்த காலங்களில் காண முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

உண்மையில், உலகின் பல ஜனநாயக நாடுகளில் தேர்தல் அரசியல் மற்றும் அதன் பெறுபேறுகளில் சிவில் அமைப்புக்கள் தாக்கம் செலுத்தியுள்ளன. இவை தொழிற்சங்கங்கள், ஊடகங்கள், தொடர்பாடல் அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்கள், சமூக மட்ட அமைப்புகள், சிவில் உரிமைக் குழுக்கள், ஆதரவுக் குழுக்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுத்தாபனங்கள், வர்த்தக அமைப்புக்கள் என்பனவற்றை அணித்திரட்டி அதன் மூலம் தேர்தல் அரசியலில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

VI. *மறுசீரமைப்பு மற்றும் மாற்றம்*:

சிவில் சமூக அமைப்புக்கள் மாற்றங்களை, மறுசீரமைப்புகளை மேற்கொள்வதில் பங்களிப்புச் செய்கின்றன. சிவில் உரிமைகள் இயக்கங்கள், அரசியல் இயக்கங்கள், தொழிற்சங்கங்கள், தொழிற் சார் அமைப்புக்கள், ஊடகங்கள் போன்ற சிவில் அமைப்புக்கள் இந்த விடயத்தில் பங்களிப்புச் செய்ய முடியும். இதில் அரசாங்கத் தினை மாற்றுதல், அரசாங்கத்தின் கொள்கைகள், சட்டங்கள் என்பவற்றை மாற்றுதல், மறுசீரமைத்தல், நிறுவன ரீதியான மறுசீரமைப்புகளைக் கொண்டு வருதல் என்பவற்றுக்குப் பங்களிப்புச் செய்ய முடியும்.

பிறிதொரு வகையில் கூறுவதாயின், ஆட்சிமுறை என்பது சட்ட திட்டங்களை, கொள்கை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப் படுத்தல் போன்ற மரபு ரீதியான கடமைகளுக்கு அப்பால் சென்று, இன்று பிரஜைகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பங்களிப்பினைப் பெற்றுச் செயற்பட வேண்டிய நிலை உருவாகி யுள்ளது. அவ்வாறு செயற்படும் போதுதான் பொதுச்சேவைகள் மற்றும் அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களை வினைத்திறன் மிக்க வகையில் நடைமுறைப்படுத்த முடியும். மேலும், சிவில் அமைப்புகள் கூட்டாக இணைந்து தரமான, வினைத்திறன் மிக்க பொதுச்சேவைகளுக்கான கோரிக்கைகளை முன்வைக்க முடியும். அதன் மூலம் மக்களின் கோரிக்கைகளுக்கு, தேவைகளுக்கு அரசாங்கத்தினைச் செவிமடுக்க செய்ய முடியும். மக்களின் குரல்களை கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளும் இடங்களில் ஒலிக்கச் செய்ய முடியும். அபிவிருத்தித் திட்டங்களைத் தீட் டுவதிலும், திட்டமிடுவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் மக்கள் இயக்கங்கள் ஓரங்கட் டப்படும் போது அதன் முழுமையான பயன்கள் சமூகத்தைச் சென்றடைவதில்லை என்பதனை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமூகத்தின் வளர்ச்சியை உறுதிசெய்ய, யாவருக்கும் அபிவிருத்தியின் பயன்களைச் சமமாக பகிர சிவில் சமூக அமைப்புக்கள் உயிர்த் துடிப்புடன் செயற்பட வேண்டும் என்பதனை இது வரை கலந்துரையாடிய விடயங்களின் மூலம் புரிந்துக்கொள்ள முடியும். உண்மையில், அவை அரசாங்கத்தின் செயற்பாடுகள், தீர்மானங்கள் தொடர்பாக முழுமையாக அறிவுறுத்தப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். சிவில் சமூக அமைப்புக்கள் அரசாங்கத்தின் அபிவிருத்தி மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பாகப் பூரண தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் போது தான் வினைத்திறன் மிக்க பங்களிப்பினை வழங்கமுடியும். அத்தகைய வாய்ப்பினை புதிய தகவல் அறியும் உரிமைச் சட்டம் வழங்கியுள்ளது. ஆகையால், இச்சட்டத்தினைப் பலரும் ஒரு வரப்பிரசாதமாகக் குறிப்பிடுகின்றார்கள்.

## தகவல் அறியும் உரிமையும் நல்லாட்சியும்

சர்வதேச ரீதியாக நல்லாட்சி தொடர்பான பிரசாரங்களானவை, தகவல் அறிவதற்கான உரிமையினைப் பிரதான கூறாக அடை யாளம் கண்டுள்ளன. இது நல்லாட்சிக்கும் தகவல் அறியும் உரிமைக்குமிடையில் நேரடித் தொடர்பு காணப்படுவதனைக் காட்டுகின்றது. ஒரு நாட்டில் நல்லாட்சி நிலவும்போது அல்லது நல்லாட்சிப் பண்புகள் பின்பற்றப்படுகின்ற போது பிரஜைகளால் தகவல் அறியும் உரிமையினை அனுபவிக்க முடியும். இது அரசாங்கம் மக்களுக்காக எதனை செய்கின்றது, எதற்காக செய்கின்றது, எவ்வாறு செய்கின்றது தொடர்பாக பொது மக்கள் அறிந்து கொள்வதற்கான பரந்த வாய்ப்பினை வழங்குகின்றது. இலங்கையில் கூட இச்சட்டம் கொண்டுவரப்படுவதற்கு நல்லாட்சி என்ற பெயரில் 2015ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தேசிய அரசாங்கம் முக்கிய காரணமாகும்.


## சிவில் சமூகமும் தகவல் அறியும் உரிமையும்

2003ஆம் ஆண்டு ஜெனிவாவில் இடம்பெற்ற மாநாட்டில் சிவில் சமூக அமைப்புகளின் பிரகடனமொன்று வெளியிடப் பட்டது. அதில் தகவல் சமூகம் என்ற தலைப்பில் பின்வரும் விடயம் குறிப்பிடப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளது. ''நாங்கள் சமத்துவம், நியாயம், யாவரையும் உள்வாங்குதல் ஆகிய நோக்கங்களைக் கொண்ட தகவல் தொடர்பாடல் சமூகத்தைக் கட்டியெழுப்ப அர்ப்பணிக்கின்றோம். அதில் ஒவ்வொருவரும் சுதந்திரமாக தகவல்களைப் பெற, அணுக, அறிவினை மேம்படுத்த, அனுபவிப்பதற்கு, பகிர்ந்துகொள்வதற்கு, பரப்புவதற்கு முடியும். அதன் மூலம் தனிப்பட்டவர்கள், சமூகங்கள், பொது மக்கள் தமது வாழ்கைத் தரத்தை மேம்படுத்தவும் தேவைகளை அடைந்துகொள்ளவும் முடியும்'' (UNDP, 2005). தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் இருந்து எவரும் புறக்கணிக்கப்படக் கூடாது. ஜனநாயக சமூகமொன்றில் பிரஜைகளுக்குத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமை பெரிதும் அவசியமானது. அது பிரஜைகளுக்கு விழிப்புணர்வை வழங்குவது டன் வாய்ப்புக்களையும் மாற்றுவழிகளையும் வழங்குகின்றது. அந்தவகையில் இலங்கையில் 2016ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டமானது சிவில் சமூக அமைப்புகளுக்கு, பிரஜைகளுக்கு ஆட்சிமுறை செயற்பாடுகளில் பங்கேற்பதற்கான பரந்த வாய்ப்பினை வழங்கியுள்ளது. இது அரசாங்கத்தின் செயற்பாடுகளை, கொள்கைகளை, திட்டங்களை, தீர்மானங்களைக் கண்காணிப்பதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

**உருப்படம் 02: தரமான பொதுச்சேவை**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுச்சேவையின் முக்கியத்துவம்**

இலங்கையைப் பொறுத்தவரையில் அரச நிறுவனங்கள் மீதான நம்பிக்கையினைச் சீர்குலைப்பதில் இலஞ்சம் மற்றும் ஊழல் மிக முக்கிய செல்வாக்கினைச் செலுத்துவதைப் பல ஆய்வுகள் வெளிக் காட்டியுள்ளன (Transparency International, 2014). அது பெருந்தோட்டத் துறைக்கு விதிவிலக்கல்ல. சட்டப்படி உரித்தான சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குக்கூட மேலதிக பணம் கொடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. அதனை வழங்கத் தவறும் அல்லது மறுக்கும்போது, பிரஜைகள் அலைக்கப்படுவதுடன், நீண்ட காலதாமதம் நிலவுவதும் தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றது. இங்கு பண ரீதியான ஊக்குவிப்புகள் பொதுச் சேவை வழங்கலைத் துரிதப்படுத்துகின்றன. அரச சேவைகளையே நம்பியிருக்கும் ஏழை மக்களின் வாழ்க்கையில் மற்றும் விளிம்பு நிலையில் வாழும் மக்களின் வாழ்க்கையில் இலஞ்சம், ஊழல் ஆகியன ஒரு பகுதியாகவே மாறிவிடுகின்றன. பொது நிறுவனங் களுடனான குறைந்த தொடர்பு மற்றும் மொழித் தடை காரணமாக தரகர்கள் ஊடாக அரச சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை நீண்ட காலமாகவே பெருந்தோட்டங்களில் காணப்படுகின்றன. இதன் போது அரச அதிகாரிகளுக்கு மாத்திரமன்றி, தரகர்களுக்கும் பணம் வழங்குவது பொதுவான நடைமுறையாகும். இது பொதுத்துறை நிறுவனங்கள் அல்லது அரச நிறுவனங்களின் அடிப்படைத் தத்து வங்களை மீறும் செயற்பாடாகும்.

பொதுத்துறை நிர்வாகம் என்பது சமூக நோக்கத்தை நிறை வேற்றும் பொருட்டு பொதுச் சேவைகளை வழங்குகின்றது. இப்பணியினை தனியார் அமைப்புகளாலோ அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட சிவில் சமூக அமைப்புகளாலோ நிர்வகிப்பது கடினமான காரியமாகும். குறிப்பாக, பொது நிர்வாகமானது பிரஜைகளின் தேவைகளுக்கு வினைத்திறன் மிக்க வகையிலும் பொறுப்புடனும் சேவை வழங்குவதனைக் குறித்து நிற்கின்றது. இங்கு சமத்துவம், பாகுபாடின்மை, பக்கச்சார் பின்மை, நேர்மைத்தன்மை, நியாயமாக நிர்வாக ஒழுங்கு விதிகளைக் கையாளுதல் மற்றும் யாவரையும் உள்வாங்கிச் செயற்படுதல் ஆகியன மிக முக்கிய தத்துவங்களாக எதிர்பார்க்கப்படுகின்றன. ஆயினும், நடைமுறையில் அரச நிறுவனங்களும் அதிகாரிகளும் பணிப் பொறுப் புகளை நிறைவேற்றும் போது தனிப்பட்ட விருப்பங்கள், இன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத, மொழி, பிரதேசம், அரசியல், சாதி போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை வழங்க வருவதனால் அவர்கள் மேற்கூறிய அடிப்படைத் தத்துவங்களை அலட்சியம் செய்யும் நிலையினை நாளாந்த நிர்வாகச் செயற்பாடுளில் இருந்து அவதானிக்க முடிகின்றது. இது முடிவில் பல் மட்ட பாகுபாடுகள், விசேட கவனிப்புகள், ஊழல் போன்ற பல விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்திவிடுகின்றது.

ஒரு நாட்டில் வாழும் சகல பிரஜைகளும் அந்நாட்டு அரசின் பொதுச் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையினைப் பெற்றுள்ளனர். அது ஓர் அகில ரீதியான மனித உரிமையாக 1948ஆம் ஆண்டு அனைத் துலக மனித உரிமைப் பிரகடனத்தின் 21ஆம் உறுப்புரையின் மூலம் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இவ் வுறுப்புரையானது ஒவ்வொருவருக்கும் தத்தமது நாட்டின் ஆட்சியியல் நடவடிக்கைகளில், நிர்வாகச் செயற்பாடுகளில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமாகவோ தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமோ பங்கு பற்றுவதற்கு உரிமையுண்டு எனக் குறிப்பிடுகின்றது. இப்பிரகடனத்தின் 25ஆம் உறுப்புரையானது ஒவ்வொருவரும் போதிய உணவு, உடை, வீட்டு வசதி, சுகாதார வசதிகள், சமூக சேவைகள் மற்றும் தமது நல்வாழ்வுக்கு அவசியமான சேவைகளைப் பெற உரித்துடையவர்கள் எனவும் வேலையின்மை, முதுமை, இயலாமை போன்ற சூழ்நிலைகளில் அரசாங்கத்தின் சமூக பாதுகாப்புக்கு உரித்துடையவர் எனக் குறிப்பிடு கின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக, இலங்கையின் அரசியல் திட்டத்தின் 14ஆவது உறுப்புரை சகல பிரஜைகளுக்கும் எத்தகைய பாகுபாடுகளு மின்றி (இன, மத, மொழி, அரசியல், பால்நிலை, சாதி) அரச பொதுச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையுண்டு எனக் குறிப்பிடு கின்றது. இது பொதுச் சேவைகள் மனித அபிவிருத்தியில் எத்தகைய தாக்கம் செலுத்துகின்றது என்பதனைக் காட்டுகின்றது. கல்வி, சுகாதாரம், தொழில், சிவில் ஆவணங்களைப் பெறுதல், வீடமைப்பு வசதிகள், சமூகப் பாதுகாப்பு கொடுப்பனவுகள், அரச மானியம், தபால் சேவை, போக்குவரத்து, மின்சாரம், தொடர்பாடல், நீதி, வங்கிச்சேவை என பொதுச் சேவைகளை அட்டவணைப்படுத்தலாம். மேற்கூறிய பொதுச் சேவைகளைப் சகலரும் பெற்றுக் கொள்வதற்கு உரிமையுண்டு. அதனை நாட்டின் மிக உயர்ந்த சட்டமான அரசியல் திட்டமும், இலங்கை ஏற்றுக்கொண்டுள்ள சர்வதேசச் சட்டங்களிலும் உத்தர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வுரிமைகளை அனுபவிப்பதற்கு இன்று தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஒரு வாய்ப்பினை வழங்கியுள்ளது.

**பிரஜைகள் என்போர் யார்?**

ஒரு நாட்டின் சட்ட பூர்வமான குடியுரிமையைப் பெற்றவர்கள் அனைவரும் பிரஜைகள் ஆவர். பிரஜைகள் அரசியல் அமைப்பின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவர்கள் ஆவர். எல்லாப் பிரஜைகளுக்கும் சமூக, பொருளாதார, அரசியல், சிவில் உரிமைகள் உண்டு. மலையக மக்களைப் பொறுத்தவரை அவர்கள் அனைவரும் இந்த நாட்டின் முழுமையான பிரஜைகள் ஆவர். எனவே, மேலே குறிப்பிட்டுள்ள சகல உரிமைகளையும் அனுபவிக்க உரித்துடையவர்கள் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. பிரஜைகள் உரிமைகளை அனுபவிக்கும் போது தங்களது கடமைப் பொறுப்புக்கள் குறித்தும் அவதானமாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு உரிமைகளுக்குப் பின்னாலும் ஒரு கடமையுண்டு என்பதினை மனங்கொள்ள வேண்டும். ஜனநாயக நாட்டில் பிரஜைகள் சமூக பொருளாதார அரசியல் செயற்பாடுகளில் செயலூக்கத்துடன் பங்கேற்க வேண்டும். அரசாங்கத்தினையும், அதன் நிறுவனங்களையும் வினைத்திறனாக, பொறுப்புடன் செயற்படச் செய்வதில் பிரஜைகளுக்கு முக்கிய பங்குண்டு என்பதனை நாம் மீண்டும் மீண்டும் மனதில் கொள்வது அவசியமாகும்.

பிரஜைகளின் கடமைகளில் சிலவற்றைப் பின்வருமாறு வரையறுக்கலாம்:

- வாக்களித்தல்
- சட்டதிட்டங்களுக்கு மதிப்பளித்தல்
- வரிப்பணம் செலுத்துதல்
- மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல்
- அரசாங்கம் தவறான பாதையில் செல்லும் போது அதனை எதிர்த்தல், விமர்சித்தல்
- அரச நிறுவனங்களின் ஊழல் மோசடிகளை வெளிக் கொணர்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அரசாங்கத்தின் சட்டத்திற்குப் புறம்பான செயற்பாடுகளைக் கண்டித்தல்
- அரசாங்க நிறுவனங்களின் ஒழுங்கு விதிகளை சரியாகப் பின்பற்றி பொதுச்சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல்
- அரசாங்கத்தின், அதன் நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்காணித்தல், அது தொடர்பாக விழிப்புணர்வுடன் இருத்தல் பிரஜைகளின் கடமைகள் ஆகும்.
- இவற்றுடன், தாம் வாழும் சமூகத்தில் சமூக மட்டத் தலைவர் களைக் கட்டியெழுப்புதல் அதன் மூலம் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்குக் குரல் கொடுத்தல், மற்றும் அழுத்தக் குழுவாக செயற்பட பங்களிப்புச் செய்தல் என்பனவும் இதில் அடங்கும்.

இந்தியாவில் இச்சட்டத்தின் மூலம் சாதாரண மக்கள் பல்வேறு நன்மைகளை அடைந்துள்ளார்கள். அரச சேவைகளைப் பெறுதல், அரச மானியம், கல்வி, சுகாதாரம், வீட்டுரிமை, காணியுரிமை, தொழில் வாய்ப்பு, விவசாய உதவிகள் என எண்ணற்ற நன்மைகளைப் பெறுகின்றார்கள். இச்சட்டம் நடைமுறையில் உள்ள பல நாடுகளில் பிரஜைகளுக்கு நன்மையளித்து வருகின்றது. ஆகவே, பிரஜைகள் எந்தளவுக்கு இச்சட்டத்தைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதிலேயே இதன் பயன்கள் தங்கியுள்ளன. பிரதேச சபைகள், மாகாண சபைகள், அமைச்சுக்கள் மூலமாக தாம் வாழும் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களைக் கண்காணிக்க, அதன் தரத்தினை உறுதி செய்ய வழிசெய்கின்றது.

வீதியொன்றை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடும் சந்தர்ப்பம் முதல் அதனை நிர்மாணித்தல், பராமரித்தல் என சகல செயற்பாடுகளிலும் மக்கள் பங்குபெற முடியும். தோட்ட வீதிகளைப் புனரமைக்கும் போது மக்கள் மிகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும். காரணம், அது நாளாந்த வாழ்வில் முக்கிய பாதையாகப் பயன்படுத்தப் படுவதாகும். வீதிப்புனரமைப்பினை பிரதேசசபை அல்லது மாகாணசபை மேற்கொள்ளுமாயின் அவை மக்களின் ஒத்துழைப்பினை உறுதி செய்ய வேண்டும். மக்கள் பங்குபற்றுவதன் மூலம் வீதியின் உறுதித்தன்மையும் அதன் தரமும் அதிகரிக்கும். அத்துடன், செலவினை ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் குறைக்க முடியும். அதன் மூலம் வீதியின் நீளத்தை சற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்க முடியும். எல்லாவற்றுக்கும் அப்பால், இது எமது பாதை, அதனைப் பாதுகாக்க வேண்டும் என்ற உரித்து உணர்வினை மக்கள் மத்தியில் ஏற்படுத்த உதவும்.

உதாரணமாக, கொங்றீட் பாதை ஒன்று உங்கள் பிரதேசத்தில் அமைக்கப்படும்போது நீங்கள் பின்வரும் விடயங்கள் தொடர்பாக அக்கறையுடன் இருக்க வேண்டும்:

1. உத்தேசத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கலவையினைப் பயன்படுத்துதல்.

2. கொங்றீட் கலவையை 45 நிமிடங்களுக்குள் பயன்படுத்த வேண்டும்.

3. அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேலதிகமாக நீர் பயன்படுத்தப்படக் கூடாது.

4. கொங்றீட் இடப்பட்டு 14 நாட்களுக்குத் தவறாது நீர் தெளித்து வரல் வேண்டும்.

5. கம்பிகளைப் பயன்படுத்தும் போது கொங்றீட்டினை உத்தேசத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவு பயன்படுத்த வேண்டும்.

எந்த ஒரு அபிவிருத்தித் திட்டம் உங்கள் பிரதேசத்தில் இடம் பெற்றாலும் அதற்கான உத்தேசத் திட்டமும் அளவீடுகளும் காணப்படும். அது பிரதேச சபை, செயலகம், அமைச்சு, மாகாண சபை அனுமதித்த ஒன்றாகக் காணப்படும். அதன் அடிப்படையில் குறித்த அபிவிருத்தித் திட்டம் இடம்பெறுகின்றதா என்பதனைப் பிரஜைகள் கண்காணிக்க முடியும். அது தொடர்பாக தகவல்களை உத்தேசித்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கலவை அளவுகள் தொடர்பான விபரங்களையும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். இது அபிவிருத்தித் திட்டங்களின் தரத்தை உறுதி செய்ய, மக்களின் பொறுப்பை உணரச் செய்ய, வளங்களை சரியான முறையில் அபிவிருத் தித் திட்டங்களில் பயன்படுத்த, நிதி மோசடிகளைத் தவிர்க்க பெரிதும் உதவும்.

எந்த ஒரு அபிவிருத்தி திட்டமாயினும் அதில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் தரத்தை இச்சட்டத்தின் மூலம் அறிந்துகொள்ள முடியும் (சீமெந்து, ஆற்று மணல், செங்கல், கம்பிகள், கருங்கல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்றீட், புலக் கற்கள், தார்). இவற்றை நன்கு உணர்ந்து பொறுப்புடன் அவதானமாகச் செயற்படுவது சகல பிரஜைகளினதும் பொறுப்பாகும். அதன் மூலம் இச்சட்டத்தின் உண்மையான இலக்கினை அடைய முடியும். இத்தகைய நடைமுறைகளை மலையகத்தில் பின்பற்றுவது ஆரம்பத்தில் கடினமான காரியமாக அமையலாம். ஏனெனில், இம்மக்கள் பல தசாப்தங்களாகத் தமது அனைத்து அபிவிருத்தி தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்வதற்குத் தோட்ட முகாமைத்துவத்தை மற்றும் தமது தொழிற்சங்க அரசியல் தலைவர்களைத் தங்கி நிற்கும் சார்பு நிலை மனோவியாதிக்கு அல்லது மனோநிலைக்கு (Dependeny Syndrome) ஆளாகியுள்ளமையே இதற்கான பிரதான காரணமாகும்.

இத்தகைய சமூகத்தை அபிவிருத்தியை நோக்கிக் கொண்டு செல்ல, உரிமைகளைக் கோரச் செய்வதற்கு, சொந்தக் காலில் நிற்கச் செய்வதற்கு அவர்களை வலுப்படுத்த வேண்டும் (Empowerment), மற்றும் அவர்களுடைய ஆற்றலை (Capability) விருத்தி செய்ய வேண்டும். இவ்விலக்கினை அடைவதற்குச் சிறந்த உபாயமாக மக்கள் பங்கேற்பு பரிந்துரைக்கப்படுகின்றது. இதன் மூலம் மக்கள் மத்தியில் சமூகப் பொறுப்பினை, உணர்வினை ஏற்படுத்த முடியும். உரிமைகள், கடமைகள் பற்றிய சிந்தனையைத் தூண்ட முடியும். பிரஜைகளின் பொறுப்பு என்ன என்பதனை உணரச்செய்ய முடியும். இதன் மூலம் சமூக மூலதனத்தினை (Social Capital) விருத்தி செய்ய முடியும்.

## இவ்வழிகாட்டி நூலை எவ்வாறு பயன்படுத்துவது

இக்கைந்நூலானது பெருந்தோட்ட மக்கள் மத்தியில் தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தல், இச் சட்டத்தின் மூலம் அரச நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற பொதுச் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை அதிகரித்தல், பெருந்தோட்டப் பகுதிகளில் செயற்படும் அரச நிறுவனங்களைப் பொறுப்புடன், வெளிப்படைத் தன்மையுடன் செயற்படச் செய்தல், பெருந்தோட்ட மக்களின் தகவல் அறியும் உரிமையினை உறுதி செய்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இக்கைந்நூலை சிவில் சமூக அமைப்புக்கள், பெருந்தோட்டப் பகுதியில் செயற்படும் சமூக மட்ட அமைப்புக்கள், பாடசாலை ஆசிரியர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தர வகுப்பு மாணவர்கள், அரச அதிகாரிகள், இளைஞர், யுவதிகள் ஆகியோர் பயன்படுத்த முடியும். மலையகத்தில் எண்ணற்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இவை அமைச்சுக்களின் நிதி, பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி, மாகாண சபை, பிரதேச சபை உறுப்பினர்களின் நிதி என்பவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, அரசநிதியின் மூலம் இடம்பெறும் அபிவிருத்தித் திட்டங்களைக் கண்காணிக்க, அதன் தரத்தை உறுதி செய்ய இச்சட்டத்தை மலையக மக்கள் பயன்படுத்த முடியும்.

இந்த கைந்நூலைப் பயன்படுத்தி கருத்தரங்குகள், விழிப்புணர்வு கூட்டங்களை நடாத்தும்போது இந்நூலின் கருப்பொருளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இதில் ஏழு அத்தியாயங்கள் காணப்படுகின்றன. சாதாரண மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் விழிப்புணர்வு வழங்கும் போது இச்சட்டத்தின் முக்கியத்துவம், அதன் நன்மைகள், பெருந்தோட்ட மக்கள் இச்சட்டத்தின் மூலம் அடையக்கூடிய நன்மைகள், இச்சட்டத்தைப் பயன்படுத்தும் வழிமுறைகள் என்பன தொடர்பான விழிப்புணர்வை வழங்க வேண்டும். அந்தவகையில், பின்வரும் பகுதியானது இக்கைந்நூலைப் பயன்படுத்துவது தொடர்பான விடயங்களை விளக்கமாக முன்வைக்கின்றது.

- பாடசாலை ஆசிரியர்கள், உயர்தர வகுப்பு மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சி வழங்கும் போது இச் சட்டத்தின் உள்ளடக்கம் தொடர்பாகவும், இதன் மூலம் சமூகக் கணக்காய்வினை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பது தொடர்பான தெளிவினை வழங்க வேண்டும்.
- எல்லாப் பயிற்சிகளுக்கும் ஆண், பெண் இருபாலாரையும் சமமாக உள்வாங்க வேண்டும். பங்குபற்றுனர்களின் பின்புலம், கல்வித் தரம், எதிர்ப்பார்ப்பு, நோக்கம் என்பவற்றை அறிந்து கொண்டு அதற்கேற்ப இக்கைந்நூலைப் பயன்படுத்தி பயிற்சி வழங்க வேண்டும்.
- ஒரு பயிற்சிக்கு 20-30 பங்குபற்றுனர்கள் உள்வாங்குவது சிறந்ததாகும். இதன் மூலம் பங்குபற்றுனர்களுக்கு சகல உறுப்பினர்களுடனும் இணைந்து செயற்பட முடியும். அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் இச்சட்டம் தொடர்பான கலந்துரையாடல்களை ஏற்படுத்த, அதனை சமூகத்திற்குக் கொண்டுச்செல்ல உதவும்.

- பங்குபற்றுனர்களைத் தெரிவு செய்யும் போது ஒரே மாதிரியான பின்புலத்தைக் கொண்டவர்களை (தொழில், வயது, கல்வித்தரம் அடிப்படையில்) தெரிவு செய்ய வேண்டும். இதன் மூலம் பங்குபற்றுனர்கள் சுயமாகச் சிந்திப்பதற்கு, பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படும். காரணம், சில பயிற்சி நெறிகளில் ஒரு சிலர் ஆதிக்கம் செலுத்தும் நிலையும் ஏனையோர் அமைதியாக இருப்பதையும் காண முடியும். சிலர் தமக்கு அறிமுகமில்லாதவர்கள் மத்தியில் பேசுவதற்கு, சந்தேகங்களை எழுப்புவதற்கு விரும்புவதில்லை. இதனை பெருந்தோட்ட மக்கள் மத்தியில் அதிகம் காணலாம். ஆகவே, இத்தகைய காரணங்களை இனங்கண்டு பயிற்சி நெறிகளை ஒழுங்குப்படுத்த வேண்டும்.
- பயிற்சியின் போது இக்கைந்நூலில் உள்ள எல்லா அத்தியாயங் களையும் கலந்துரையாட முடியாது. நேரக்கட்டுப்பாடு இதற்கு காரணமாக அமையலாம். ஆகவே, ஒரு சில அத்தியாயங்களை மையப்படுத்தி குழு வேலைகளை வழங்க முடியும். அதன் மூலம் பங்குபற்றுனர்கள் தங்களது சுய கருத்துக்களை முன்வைப்பதற்கு, கேள்விகளைக் கேட்பதற்கு வாய்ப்பேற்படும்.
- குழு வேலையின் போது பயிற்சியாளர் அல்லது இலகுபடுத்துனர் குழுவேலையில் ஈடுபட்டுள்ளவர்களைச் சரியாக நெறிப்படுத்த வேண்டும். அன்றில், ஒரு சிலர் மாத்திரம் ஒட்டுமொத்தக் குழு வேலைகளிலும் ஆதிக்கம் செலுத்தும் நிலை ஏற்படும்.
- குழுக் கலந்துரையாடலின் போது அதனை இலகுபடுத்த ஒருவ ரையும், அறிக்கையிடுவதற்கு ஒருவரையும், சமர்ப்பிப்பதற்கு ஒருவரையும் தெரிவு செய்ய வேண்டும். இதன் மூலம் யாவ ருக்கும் வாய்ப்புக் கிடைக்கும்.
- இந்நூலின் பின்னிணைப்பில் ஒரு சில வெற்றிக் கதைகள் இணைக் கப்பட்டுள்ளன. அவற்றைப் பயிற்சியாளர் வாசித்துக் காட்டலாம். அது தொடர்பான கலந்துரையாடல்களை ஏற்படுத்தலாம். அது இச்சட்டம் தொடர்பான நம்பிக்கையினை, முக்கியத்துவத்தினைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவுபடுத்த உதவும்.

- சமூக மட்டத்தில் நடைபெறும் பயிற்சியாயின் 2-3 மணித்தியாலங்களைச் செலவிடலாம். பெருந்தோட்டத் துறையைப் பொறுத்தவரை கிழமை நாட்களில் மாலை நேரங்களிலும், வார இறுதி நாட்களிலும் காலை நேரங்களிலும் இத்தகைய கூட்டங்களை ஏற்பாடு செய்ய முடியும்.
- தோட்டத் தொழிலாளர்களுக்கு, மாணவர்களுக்கு, சமூக மட்ட அமைப்பின் (கோவில் கமிட்டி, மரண கமிட்டி, கிராமிய அபிவிருத்திச் சங்கம், இளைஞர் கழகம், பெண்கள் அமைப்பு) உறுப்பினர்களுக்கு நீண்ட நேர கூட்டங்களை நடத்துவதாயின் அவற்றைச் சரியாக ஒழுங்குபடுத்த வேண்டும். எல்லா விழிப்புணர்வுக் கூட்டங்களிலும் யாவருக்கும் கதைப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும்.
- ஒரு நாள் செயலமர்வு நடத்தப்படுமாயின் தொடர்ச்சியாக விரிவுரைகளை நடத்தாமல் குழு வேலைகள், குழு விளையாட்டுக்கள், வீடியோ காட்சிகள், நடித்துக் காட்டல், சித்திரம் மற்றும் கார்ட்டூன்கள் என்பவற்றைப் பயன்படுத்தி பங்குபற்றுனர்களின் ஆர்வத்தினை உறுதி செய்ய வேண்டும். 1 மணித்தியாலத்திற்கு ஒருமுறை 5-10 நிமிடங்கள் ஓய்வு வழங்குவது சிறந்தது.
- RTI தொடர்பான வீடியோ, புகைப்படங்கள், குழு வேலை களை முன்கூட்டியே தயார்படுத்த வேண்டும். குழு வேலைகள் வழங்கும் போது பங்குபற்றுனர்களின் தொழில், வயது, கல்விப் பின்புலத்தைக் கருத்திற் கொள்ள வேண்டும்.
- ஒட்டுமொத்தப் பயிற்சியிலும், பயிற்சியில் கடைபிடிக்கப்படும் நடைமுறைகளிலும் ஆண், பெண் சமத்துவத்தினை உறுதி செய்ய வேண்டும். பயிற்சிக்குப் பொருத்தமான இடத்தை தெரிவு செய்ய வேண்டும். குறிப்பாக, கழிவறை வசதிகள், குடிநீர், போதிய காற்றோட்டம், இருக்கைகள், சுதந்திரமாகப் பேசக்கூடிய சூழல், வெளிப்புற இடையூறுகள் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு பயிற்சி இடத்தைத் தெரிவு செய்ய வேண்டும்.
- தகவல் அறியும் உரிமை தொடர்பான பயிற்சிக்கு வளவாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தெரிவு செய்யும் போது, இவ்விடயம் தொடர்பான அறிவு மற்றும் அனுபவம் கொண்டவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். வெறுமனே சட்டம் தொடர்பான அறிவு மாத்திரமன்றி, அதன் நடைமுறைப் பிரயோகம், அதில் காணப்படும் பிரச்சி னைகள், சவால்கள் தொடர்பான அறிவினைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

- பயிற்சியினை ஆரம்பிக்கும் முன்னர் இச்சட்டம் தொடர்பாக பங்குபற்றுனர்களின் அறிவு மட்டத்தினை மற்றும் விழிப்புணர்வு மட்டத்தினை அறிய வேண்டும். அதற்கென சில வினாக்களைத் தயாரித்து அவர்களின் சிந்தனையைத் தூண்ட வேண்டும். அது பயிற்சியின் நோக்கத்தினைச் சரியாக வரையறை செய்ய உதவும், பங்குபற்றுனர்களின் அவதானத்தைப் பேணுவதற்கு உதவும். இதற்கு வீடியோ காட்சிகள், புகைப்படங்கள், சம்பவக் கற்கை களையும் பயன்படுத்த முடியும்.
- பயிற்சிக்கு முன்பு வளவாளர் அல்லது சமூக அணித்திரட் டுனர், நிறுவன உத்தியோத்தர்கள் இக்கைந்நூலை நன்கு வாசித்து, முழுமையான தெளிவுடன் பயிற்சிகளுக்குச் செல்ல வேண்டும். பங்குபற்றுனர்கள் இச்சட்டம் தொடர்பாக எத்தகைய கேள்விகளைக் கேட்டாலும் அதற்குப் பதிலளிக்கும் நம்பிக்கை இருக்க வேண்டும். ஒவ்வொரு அத்தியாயத்தின் அடிப்படை நோக்கத்தினை நன்கு புரிந்து கொண்டு பயிற்சியை நடாத்த வேண்டும்.
- பயிற்சியின் முடிவில் இச்சட்டம் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட சுருக்கக் கையேட்டினை பங்கேற்பாளர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்க வேண்டும். அதனை வாசிக்குமாறும், அதில் ஏதேனும் சந்தேகம் இருப்பின் அது தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும்.
- கலந்துரையாடல் மற்றும் உரையாடல் என்பன பயிற்சியின் பிரதான கருப்பொருளுடன் அல்லது நோக்கத்துடன் தொடர்பு டையதாக இருத்தல் வேண்டும்.
- பயிற்சியாளர் சிறந்த தொடர்பாடல் திறன் கொண்டவராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தல் வேண்டும். தாம் பகிர்ந்துகொள்ளும் விடயங்கள் பங்கு பற்றுனர்களைச் சென்றடைகின்றதா? என்பதை உறுதி செய்ய வேண்டும். பங்குபற்றுனர்களின் இயலுமை, தகைமையினை அறிந்து இக்கைந்நூலைப் பயன்படுத்த வேண்டும்.

- இக்கைந்நூலில் பல இடங்களில் சாதாரண மக்களால் புரிந்து கொள்ள முடியாத சொற்பிரயோகங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. அவற்றின் சரியான அர்த்தத்தைப் பயிற்சியாளர் புரிந்துகொண்டு சாதாரண மக்களுக்கு விளங்கக்கூடிய வகையில் தெளிவுபடுத்த வேண்டும்.
- பயிற்சியை ஆரம்பிக்கும் போது பயிற்சியாளர் அல்லது வளவாளர் இக்கைந்நூலின் நோக்கம், பயிற்சியை நடத்தும் நிறுவனத்தின் எதிர்பார்ப்பு என்பவற்றைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். இது பயிற்சியின் முடிவில் பங்குபற்றுனர்களின் அபிப்பிராயத்தினைப் பெற்றுக்கொள்வதற்குப் பெரிதும் உதவும். மறுபுறமாக, எந்தளவுக்குப் பயிற்சியின் உள்ளடக்கம், சட்டம் தொடர்பான விடயங்கள், பங்கு பற்றுனர்களைச் சென்றடைந் துள்ளது என்பதினை மதிப்பீடு செய்யவும் உதவும்.
- பயிற்சியாளர் நன்கு செவிமடுக்கும் திறன் கொண்டவராக இருத்தல் வேண்டும். பங்குபற்றுனரின் கருத்துக்கு மதிப்பளித்தல், அதனை செவிமடுத்தல் மாற்றுக் கருத்துக்களை உள்வாங்குதல் அவசியமாகும்.
- வைட்போட், டிமைன் காகிதம், பிலிப்சாட் என்பவற்றைப் பயன்படுத்தும் போது தெளிவாக வாசிக்கக் கூடிய வகையில் எழுத வேண்டும்.
- பயிற்சியாளர் இச்சட்டத்துடன் தொடர்புடைய அண்மைய உதாரணங்களை வாசித்து அதனைப் பகிர்ந்து கொள்ளுதல் பங்குபற்றுனர்களை ஊக்கப்படுத்த துணைபுரியும்.
- இச்சட்டம் தொடர்பாக பயிற்சி வழங்கும் போது பங்குபற்று னர்கள் பல கேள்விகளை முன்வைப்பர். அவற்றிற்கு அப்போது பதிலளிக்க முடியாவிடின் அவற்றைக் குறித்து வைத்து பயிற்சியின் முடிவில் பதில் வழங்க வேண்டும்.
- இக்கைந்நூலின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் ஆரம்பிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அதன் நோக்கத்தைத் தெளிவுபடுத்த வேண்டும். ஒவ்வொரு அத்தியாயமும் முடிந்த பின்னர் அதில் ஏதேனும் கேள்விகள் உள்ளனவா என கேட்கவும், பங்கு பற்றுனர்கள் கருத்துக்களை முன்வைக்க தயங்குவார்களாயின் தமது கருத்துக்களை ஒரு தாளில் எழுதி வாசிக்குமாறு கேட்கலாம். இதன் மூலம் யாவருக்கும் பேசுவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

- பயிற்சியாளர் பங்குபற்றுனர்களின் பெயர் விபரங்களை அறிந்து கொள்ள வேண்டும். அதேபோல் பங்குபற்றுனர்கள் பயிற்சியை ஒழுங்கு செய்துள்ள நிறுவனத்தின் பெயர் மற்றும் நோக்கத்தை தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.
- பயிற்சி முடிந்தவுடன் இச்சட்டம் தொடர்பான மேலதிக தக வல்களை எங்கு பெறமுடியும், அதற்கான மூலங்கள் என்ன என்பது பற்றி விளக்க வேண்டும்.
- பயிற்சியாளர் சில சமயங்களில் பங்குபற்றுனராகவும் இருத்தல் வேண்டும். அதன் மூலம் பங்குபற்றுனர்களின் அனுபவத்தினை பகிர்ந்து கொள்ள முடியும்.
- சில சமயங்களில் நீண்ட விரிவுரைகளை நடத்துவது பயனற்றதாக அமையலாம். வளர்ந்தோர்களுக்குப் பயிற்சி வழங்குவதில் உள்ள பிரதான சவால் இதுவாகும். அத்தகைய, சந்தர்ப்பங்களில் சிந்தனையைத் தூண்டும் கலந்துரையாடல்களை ஏற்படுத்தல், கற்கைச் சம்பவங்கள், கதைகளைக் கூறல், நடித்துக் காட்டல், வீடியோ, கார்ட்டூன்கள், பாடல்கள், விளையாட்டு, வீதி நாடகங்கள், சுவரொட்டி என்பவற்றைப் பயன்படுத்தி பங்குபற்றுனர்கள் மத்தியில் பயிற்சி தொடர்பான ஆர்வத்தினை ஏற்படுத்த வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் – 2

# தகவல் அறியும் உரிமையும் மனித உரிமைகளும்
# Right to Information and Human Rights

## தகவல் அறியும் உரிமையும் மனித உரிமைகளும்

இவ்வத்தியாயமானது பிரஜைகளின் தகவலறியும் உரிமை தொடர்பாக வலியுறுத்தும் சர்வதேச மற்றும் தேசிய மனித உரிமை சட்டங்கள் மற்றும் அதன் உள்ளடக்கத்தினைச் சுருக்கமாக ஆராய்கின்றது. தகவல் அறியும் உரிமையினை அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றாக நாம் உணர வேண்டும் என்பதனை வலியுறுத்துவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும். அந்தவகையில் பின்வரும் பகுதியானது ஒவ்வொரு மனித உரிமைகள் பிரகடனம், சமவாயம் மற்றும் ஆவணங்கள் தொடர்பான விளக்கத்தினை வழங்குவதாக அமைகின்றது. இவ்வத்தியாயத்தில் கலந்துரையாடப்படும் விடயங்களில் பல 2016ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை நிறுவனம் வெளியிட்ட தகவல் அறியும் உரிமை தொடர்பான நூலில் இருந்தும் தகவல் அறியும் சட்டத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டவையாகும்.

தகவலறியும் உரிமை தொடர்பான எண்ணக்கரு 18ஆம், 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் மற்றும் அறிவியல் மறுமலர்ச்சியின் விளைவாக எழுச்சிபெற்ற ஒன்றாகும். 1766ஆம் ஆண்டு சுவீடன் முதன் முதலாக தகவல் அறியும் உரிமை சட்டத்தினை அறிமுகம் செய்தது. இன்று 110 நாடுகளில் இச்சட்டம் நடைமுறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதாக கனடா நாட்டை மையமாகக் கொண்டு இயங்கும் சட்டம் மற்றும் ஜனநாயகத்துக்கான நிலையம் குறிப்பிடுகின்றது. அவற்றில் அதிகமான நாடுகளில் தகவலறியும் உரிமைச் சட்டம் என்ற பெயரிலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. வேறுவகையில் கூறுவதாயின், உலக சனத்தொகையில் 88 வீதமான மக்கள் RTI சட்டத்தினை அல்லது கொள்கையினைக் கொண்டுள்ள நாடுகளிலேயே வாழுகின்றார்கள் எனலாம். அதில் 70 நாடுகள் திறந்த அரசாங்க பங்குடைமையில் இணைந்துள்ளன. 2015ஆம் ஆண்டு யுனெஸ்கோவின் தலையீட்டினால் செப்டெம்பர் 28ஆம் திகதி சர்வதேச தகவல் அறியும் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையினால் இத்தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**1948ஆம் ஆண்டு அனைத்துலக மனித உரிமைப் பிரகடனம்**

**உறுப்புரை - 16**

ஒவ்வொருவரும் தமக்குரிய கருத்துக்களைக் கொண்டிருப்பதற்கும் அவற்றை வெளிப் படுத்துவதற்கும் உரிமையுண்டு. இது தடைகளின்றி அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பதற்கும் தகவல்கள் கிடைக்கக் கூடிய வழிமுறைகள் ஊடாக அரச நிறுவனங்களைத் தேடுவதற்கு/ பெற்றுக்கொள்வதற்கு/வழங்குவதற்கு உரிமையுண்டு.

**1966ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை**

**உறுப்புரை - 19(2)**

ஒவ்வொரு பிரஜைக்கும் கருத்து வெளிப்படுத்துவதற்கான உரிமை யுண்டு எனவும், இது தகவல்களை வாய் மூலமாகவோ, எழுத்து வடிவிலோ அல்லது அச்சு வடிவிலோ, கலை வடிவிலோ அல்லது வேறு ஊடகங்களிலோ தேடுவதற்கு, பெற்றுக்கொள்வற்கு, வழங்குவதற்கு உரிமையுண்டு எனக் குறிப்பிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1978ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பின் மனித உரிமையினை மேம்படுத்தல் மற்றும் இன வெறியைத் தடுத்தல் தொடர்பான பிரகடனம்**

**உறுப்புரை - 2**

கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை அனுபவித்தல், கருத்தினை வெளிப்படுத்தல் மற்றும் தகவல்கள் என்பன மனித உரிமைகளினதும் அடிப்படை சுதந்திரத்தினதும் பிரிக்க முடியாத பகுதியாகக் காணப் படுகின்றது.

**2003ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் கொண்டு வரப்பட்ட ஊழலுக்கெதிரான சமவாயம்**

**உறுப்புரை - 13**

1. பொதுமக்கள் வினைத்திறன் மிக்க வகையில் தகவல்களை அனுபவித்தல்.
2. ஊழலை முற்றாக ஒழிக்கும் வகையில் பிரஜைகளுக்கு தகவல் களை வழங்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
3. ஊழல் தொடர்பான தகவல்களைத் தேடுதல், பெற்றுக்கொள்ளல், வெளியிடல் மற்றும் பரப்புதல் என்பவற்றுக்கு பிரஜைகளுக்கு உள்ள உரிமைகளை, சுதந்திரத்தை மதித்தல் மற்றும் ஊக்கப்படுத்தல் வேண்டும்.

**உறுப்புரை - 10**

ஊழலை ஒழிப்பதற்கு ஒவ்வொரு அரசும் தனது நாட்டில் உள்ள உள்நாட்டு சட்டதிட்டங்களுக்கிணங்க பொது நிர்வாக நிறுவனங்களில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தல் வேண்டும். குறிப்பாக, அதன் ஒழுங்கமைப்பில், செயற்பாட்டில் மற்றும் தீர்மானம் எடுத்தல் செயன் முறையில் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், அதற்கு;

a) பிரஜைகள் அரச நிறுவனங்களில் இருந்து அவசியமான தக வல்களைப் பெற்றுக்கொள்வற்கு ஒழுங்குவிதிகளை உருவாக்க வேண்டும். இங்கு தகவல் பாதுகாப்பு மற்றும் அந்தரங்கம், அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான சட்டங்கள் போன்ற விடயங்களுக்கு மதிப்பளித்து பிரஜைகள் தகவல்களைப் பெறவேண்டும்.

b) பிரஜைகளைத் தீர்மானம் எடுக்கும் நிறுவனங்களை அணுகுவதற்கு வசதியளிக்கும் வகையில் நிர்வாக ஒழுங்கு விதிகளை எளிமைப் படுத்த வேண்டும்.

c) பொது நிறுவனங்களில் காணப்படுகின்ற ஊழல் தொடர்பான தக வல்களை வெளியிடல், அறிக்கைகளை வெளியிடல் வேண்டும்.

**பிராந்திய மனித உரிமைப் பிரகடனங்கள்**

எல்லாவற்றுக்கும் மேலாக, தகவல்களைப் பெற்றுக்கொள்வற்கான உரிமை மற்றும் சுதந்திரத்தை அடிப்படை மனித உரிமையாக பிராந்திய மனித உரிமை சமவாயங்களான ஐரோப்பிய மனித உரிமை சமவாயம் (1950), ஆபிரிக்க மனித உரிமைப் பட்டயம் (1981), கருத்து வெளிப் படுத்துவதற்கான அமெரிக்கப் பிரகடனம் (2000) என்பன பெரியளவில் வலியுறுத்துகின்றன.

- 2002ஆம் ஆண்டு ஐரோப்பிய அமைச்சர்கள் சபை, அங்கத்துவ நாடுகள் பிரஜைகளின் வேண்டுகோளுக்கிணங்க உத்தியோகபூர்வ தகவல்களை அல்லது ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியளிக்க வேண்டும் எனவும், இவ்வுரிமை எந்த வேறுபாடு களுமின்றி யாவருக்கும் சமமாக வழங்கப்பட வேண்டும் என்கின்றது.
- 1993ஆம் ஆண்டு வியன்னாவில் (ஒஸ்திரியா நாட்டில்) இடம் பெற்ற உலக மனித உரிமை மாநாட்டில் அபிவிருத்திக்கான உரிமை பிரிக்க முடியாத அடிப்படை மனித உரிமையாக அங்கீகரிக்கப்பட்டது. இதில் கருத்து வெளியீட்டு உரிமை அபிவிருத்தியுடன் நெருங்கியத் தொடர்பு கொண்டிருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. தகவல்களைப் பெறுதல், வழங்கல், என்பன அடிப்படை மனித உரிமை மாத்திரமன்றி, ஜனநாயகத்தின் வெற்றிக்கு அவசியமான ஒன்றாகக் காணப்படுவதாக இம் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1986ஆம் ஆண்டு ஐக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள் சபை அபிவிருத்திக்கான உரிமைத் தொடர்பான பிரகடனத்தினை வெளியிட்டமைக் குறிப்பிடத்தக்கதாகும்.

- ஜனநாயக சமூகங்கள் செழுமை பெறுவதற்கு தகவல்களுக்கான உரிமைகள், வாய்ப்புக்கள் பெரிதும் அவசியமாகும் என இங்கு வலியுறுத்தப்பட்டது. உண்மையில், தகவல்களைப் பெறுவதற்கான உரிமை கிடைக்கும் போது, அபிவிருத்திக்கான உரிமையினை உணர்வதற்கு வாய்ப்பளிக்கின்றது.

**கருத்து வெளியீட்டுக்கான சுதந்திரமும் தகவல் அறியும் உரிமையும் ஜனநாயக சமூகங்களுக்கு அவசியமானது என்பது சர்வதேச ரீதியாக பின்வருமாறு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.**

- கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் என்பது தனிநபரின் ஆளுமை விருத்திக்கு அவசியமாகும். கருத்து வெளிப்படுத்தும் உரிமை மற்றும் தொடர்பு கொள்ளுதல் என்பன சுய அபிவிருத்திக்கு மனிதன் என்ற வகையில் திறன்களை உணர்வதற்கு அவசிய மாகும். ஆகவே, பிரஜைகளை அணுகுவதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதானது பிரஜைகளின் தனிப்பட்ட கௌரவம், நேர்மை மற்றும் வளர்ச்சியினை மிக மோசமாகப் பாதிக்கும்.
- பிரஜைகள் அபிவிருத்தியை உணர வேண்டுமாயின், அறிவுறுத் தப்பட்ட அல்லது பூரண தெளிவு கொண்ட பிரஜைகளாக பொது வாழ்வில் பங்கேற்பதற்கான சுதந்திரம் அவசியம். தமது கருத் துக்களை, கோரிக்கைகளை அச்சமின்றி, பாகுபாடின்றி தமது அரசாங்கம் பாதுகாத்து வழங்கும் என்ற எண்ணமும் நம்பிக்கையும் பிரஜைகள் மத்தியில் ஏற்பட வேண்டும்.
- அறிவு என்பது சக்தியாகும், ஆகவே அவற்றினை மேம்படுத்து வதற்கு தகவல்களுக்கான சுதந்திரம் பெரிதும் அவசியமாகும்.
- நியாயமான பக்கச்சார்பற்ற தீர்ப்பினை வழங்க, தீர்மானத் தினை எடுக்க ஒருவருக்கு சகல மூலங்களிலும் இருக்கின்ற தக வல்களையும் கருத்துக்களையும் பெறும் வாய்ப்பு அவசியமாகும். அது வாதப் பிரதிவாதங்களை, சார்பான மற்றும் எதிரான கருத்துக் களைப் பகுப்பாய்ந்து முடிவிற்கு வருவதற்கு வழிசெய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நிலையான மானிட அபிவிருத்திக்கு, குறிப்பாக வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களுக்கு போதிய தகவல்களுக்கான கிடைப்பனவு இருத்தல் வேண்டும். குறிப்பாக, சுற்றாடல் பாதுகாப்பு, இயற்கை வளங்கள், அபிவிருத்தி ஒழுங்கு விதிகள் தொடர்பான தகவல்களை வழங்கும் போது அவர்கள் அபிவிருத்தி தொடர்பாக சுய தீர்மானங்களைத் தாமாகவே மேற்கொள்ள உதவுவதுடன், அபிவிருத்திக்கான உரிமையினை அனுபவிக்க முடியும்.
- அரசாங்கத்தின் கொள்கைகள், திட்டங்கள், நிகழ்ச்சிகள், தீர்மானங்கள், ஒழுங்கு விதிகள், செயன்முறைகள், தொடர்பாக போதிய தகவல்களுக்கான கிடைப்பனவின்மையானது ஊழல், மோசடிகள் தலைதூக்க வழிசெய்யும். மேலும், தகவலுக்கான பரந்த கட்டுப்பாடுகள் காணப்படுமாயின், அது பொதுமக்களின் நலன்களுக்காக, மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட பணம், வளங்கள், ஆட்சியாளர்களின், நிர்வாகிகளின் தனிப்பட்ட தேவைகளுக்காக பயன்படுத்துவதை அறிவதற்கு, அவற்றைத் தடுப்பதற்காக வாய்ப்புகளை, அதற்கான கூட்டிணைந்த முயற்சி களை பெரியளவில் மட்டுப்படுத்தி விடுகின்றது. அது இறுதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களைப் பெரிதும் பாதிப்ப துடன், அரசாங்க சேவைகளையே நம்பி வாழும் மக்களின் நாளாந்த வாழ்க்கை, எதிர்பார்ப்பு என்பவற்றைப் பாதிக்கின்றது. இறுதியில் அம்மக்களின் நாளாந்த வாழ்க்கையினை அசாதாரண நிலைக்குள் தள்ளிவிடுகின்றது.

மேலும், மேற்கூறிய சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகள் அரச சேவை வழங்கலில் நீடித்த கால தாமதம், சேவைகளின் தரம் குன்றல், வீண்விரயம், வினைத்திறனின்மை, செயற்திறனின்மை போன்ற பிரச்சினைகளையும் ஏற்படுத்தும். ஆகவே, ஊழலை, அதிகார துஷ்பிரயோகத்தை, தனிப்பட்ட நலன்களுக்காக பொதுக் காரியாலயத்தை, அரச அதிகாரத்தைப் பயன்படுத்தல் போன்றவற்றைத் தடுப்பதற்கு சிறந்த ஆயுதமாக தகவல் அறியும் உரிமைச் சட்டம் காணப்படுகின்றது. ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி நன்கு முதிர்ச்சி பெற்றுள்ள ஸ்கன்டினேவிய நாடுகளில் (நோர்வே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்லாந்து, டென்மார்க், சுவீடன்) இச்சட்டமானது பொது நிறுவனங்களின் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மையினை மற்றும் பொறுப்புக்கூறலை ஏற்படுத்துவதில் பெரியளவிலான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

- தகவல் அறிவதற்கான சுதந்திரம் அரசாங்கத்தின் கொள்கைகளை நிர்ணயிப்பதற்கு மாத்திரமின்றி, அரசாங்கம் தமது கொள்கைகளை எந்தளவுக்கு நடைமுறைப்படுத்துகின்றது என்பதனை கண்காணிப் பதற்கும் அவசியமானதாகும்.
- தகவல் அறிவதற்கான சுதந்திரம் ஜனநாயக அரசியலில் அவசியமான பகுதியாகும். ஜனநாயக அரசியல் முறைமையில் சகல அதிகாரங்களும் கொண்ட மக்களுக்கு சேவை செய்யும் சேவகனாக அரசாங்கம் காணப்படுகின்றது. மக்கள் தமது இறைமை அதிகாரத்தைக் கொண்டு தமது கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டுமாயின், அரசாங்கத்தை வழிநடத்த, கண்காணிக்க வேண்டுமாயின், மக்களுக்கு தகவல்கள் மற்றும் ஆவணங்கள் என்பனவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும். ஆகவே, ஜனநாயகம் என்பது வாக்குரிமை, வாக்குச்சீட்டு, வாக்குப் பெட்டி, வாக்களித்தல், தேர்தல், கட்சி அரசியல் என்பவற்றுக்கு அப்பால் விஸ்தரிக்கப்பட வேண்டும். குறிப்பாக, இது சமூக குடியுரிமை, பங்கேற்பு ஜனநாயகம், யாவரையும் உள்வாங்கும் ஜனநாயகம் மற்றும் பிரஜைகளின் ஆட்சி என்ற கருத்தியல்களின் அடிப்படையில் ஆழமாக்கப்பட வேண்டும்.
- தகவல் அறிவதற்கான உரிமை சமாதானப் பாங்கிலான சமூக மாற்றத்திற்கு அடிப்படையானதாகும். அது ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கு நமது கருத்துக்களை/ தகவல்களை சரிபார்ப்பதற்கு உதவுகின்றது. பிழையான முடிவுகள்/ தீர்மானங்கள் எடுப்பதற்கான வாய்ப்பினைக் குறைப்பதற்கு உதவுகின்றது. அத்துடன், தீர்மா னங்கள் தொடர்பான சட்டத்தன்மையினை அடைந்துகொள்வதற்கு, சச்சரவுகள் இல்லாமல் கருத்தொருமைப்பாட்டுடன் தீர்மானங்களை எடுப்பதற்கு வழிசெய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இப்பின்புலத்திலேயே, தகவல்களின் முக்கியத்துவம், அதனைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகள், சுதந்திரம் என்பவற்றின் அவசியம், தகவல் வழங்கல், பெறுதல், கருத்து வெளிப்பாடு, பேச்சு சுதந்திரம் என்பவற்றை மனதில் கொண்டு பல நாடுகள் பல ஆண்டுகளுக்கு முன்னரே தகவல் அறியும் உரிமைச்சட்டத்தினை அல்லது தகவல் அறியும் சுதந்திரச் சட்டத்தினை இயற்றியுள்ளன. அதற்கு சுவீடன், அமெரிக்கா, டென்மார்க், நோர்வே, பின்லாந்து, நெதர்லாந்து, இங்கிலாந்து அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் முன்னோடிகளாகக் காணப் படுகின்றன.

இன்று இலங்கை உட்பட பல நாடுகளில் இச்சட்டம் நடைமுறையில் இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இவற்றின் நோக்கம் யாதெனின் அரசாங்கத்தின் செயற்பாடுகள் நியாயமானதாக, வெளிப்படைத் தன்மைக் கொண்டதாகக் காணப்பட வேண்டும் என்பதாகும். இந்த சட்டங்கள் தேசிய பாதுகாப்பு, தேசிய நலன்கள், சர்வதேச பாதுகாப்பு உடன்படிக்கைகள், அணுசக்தி போன்ற தகவல்களுக்கு, அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றனவே தவிர, ஏனைய சகல அரசாங்க செயற்பாடுகளிலும் சட்டத் திட்டங்களிலும் ஒழிவு மறைவு இருக்கக் கூடாது என்பதனை உறுதி செய்கின்றது. பொதுமக்களைப் பாதிக்கின்ற தீர்மானங்கள், தேசிய சொத்துக்களை விற்பனை செய்தல், அபிவிருத்தித் திட்டங்களுக்கான உடன்படிக்கைகள், நிதி ஒதுக்கீடு என்பனவற்றில் அரசாங்கம் வெளிப்படையாக செயற்பட வேண்டும் என்பதையே இச்சட்டங்கள் வலியுறுத்துகின்றன. மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக ஏதேனும் தகவல்களை பிரஜைகள் பெற முற்படுகின்ற போது அதில் கட்டுப்பாடுகள் இருக்கக் கூடாது. அவற்றைப் பெறும் உரிமை பிரஜைகளுக்கு உண்டு என்பதை வலியுறுத் துகின்றன. தகவல் அறியும் சட்டத்தின் உள்ளடக்கம், அதன் நடைமுறைப் பிரயோகங்கள் நாடுகளுக்கிடையில் வேறுபடுகின்றன. ஆயினும், பொதுவில் அவை அரசாங்கத்தின் செயற்பாடுகளில் பெரியளவிலான வெளிப்படைத் தன்மையினை வேண்டி நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தென்னாபிரிக்க உதாரணம்

தென்னாபிரிக்காவில் 2000ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் உருவாக்கப்பட்டப் பின்னர், அப்போதைய எதிர்க்கட்சி இச் சட்டத்தைப் பயன்படுத்தி நைஜீரியாவுடன் மேற்கொள்ளப்பட்ட சர்ச்சைக்குரிய எண்ணெய் உடன்படிக்கை தொடர்பான தகவல்களை வெளிக்கொண்டு வந்தது. அத்துடன், இவ்வுடன்படிக்கையின் பயன்கள் நைஜீரிய பொதுமக்களுக்கு செல்லாது தனியார் கம்பனி ஒன்றிற்குச் செல்வது வெளிக்கொண்டுவரப்பட்டது. இவ்வாறு உலகில் பல நாடுகளில் இச்சட்டத்தினைப் பயன்படுத்தி பல ஊழல், மோசடிகள், சட்டத்திற்கு புறம்பான செயற்பாடுகள், அதிகார துஷ்பிரயோகங்கள், அபிவிருத்தி மோசடிகள், ஏமாற்றுச் செயல்கள் வெளிக் கொண்டுவரப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். இதன் மூலம் நாம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்ள முடியும்.

### இந்திய உதாரணம்

இந்தியாவில் தகவல் உரிமைச்சட்டம் இயற்றப்பட்டு 13 ஆண்டுகளாகிவிட்டது. அதன் முக்கியத்துவமும் விளைவுகளும் பரந்தளவில் உணரப்பட்டுள்ளது. இதற்கு சிறந்ததொரு உதாரணம் 2G மோசடியாகும். இது 2011ஆம் ஆண்டில் இடம்பெற்ற மிகப்பெரிய தொலைத்தொடர்பு மோசடியாகும். ஆண்டிமுத்து ராஜா தலைமையிலான தொலைத்தொடர்பு அமைச்சு கைத்தொலைபேசிகளுக்கான அலைவரிசை ஒதுக்கீட்டு உரிமங்களை இலஞ்சம் வாங்கி வழங்கியமையால் இந்திய அரசாங்கத்திற்கு சுமார் ரூபா 1,76, 645 கோடி நட்டம் ஏற்பட்டது. இந்த மோசடியினை அம்பலப்படுத்துவதில் தகவல் உரிமைச்சட்டமானது ஒரு முக்கிய பங்காற்றியுள்ளது. குறிப்பாக, காங்கிரஸ் கட்சி தலைமையிலான அரசாங்கத்தில் எந்தளவுக்கு மோசடி பரவியுள்ளது என்பதனை வெளிக்காட்ட இது உதவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை - 01

**தென்னாசிய நாடுகளில் தகவலறியும் உரிமைச் சட்டம்**

| நாடுகள் | சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு |
|---|---|
| இந்தியா | 2005 |
| வங்காளதேசம் | 2009 |
| நேபாளம் | 2007 |
| பூட்டான் | 2014 |
| மாலைதீவு | 2014 |
| பாகிஸ்தான் | 2002 |
| ஆப்கானிஸ்தான் | 2014 |
| இலங்கை | 2016 |

ஆதாரம்: இலங்கை தகவல் உரிமை ஆணைக்குழு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் – 3

# இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டம்

# Right to Information Act of Sri Lanka 2016

## இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் - 2016

இவ்வத்தியாயமானது 2016ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தகவலறியும் உரிமைச் சட்டத்தின் உள்ளடக்கத்தினை, நடைமுறை பிரயோகத்தினை, பயன்களை, தகவல்களுக்கு விண்ணப்பிக்கும் முறை, முறைப்பாட்டு செயன்முறை என்பவற்றை எளிமையான மொழி நடையில் பொதுமக்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் முன்வைக்கின்றது. இதன் நோக்கம் இச்சட்டம் தொடர்பான விழிப்புணர்வினை, இதனை பயன்படுத்தும் முறையினை தெளிவுப்படுத்துவதாகும். இப்பகுதியில் கலந்துரையாடப்படும் விடயங்கள் தொடர்பான மேலதிக விடயங்களைப் பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ள சட்டத்தினை வாசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

## சட்டத்தின் முகவாசகம்

தகவல்களை அணுகுவதற்கான உரிமையினை வழங்குவதன் மூலம் பொது நிறுவனங்களில் அல்லது பொது அதிகார சபைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் கலாசாரத்தினை வளர்க்க வேண்டிய தேவை காணப்படுவதுடன், அதன்மூலம் இலங்கை மக்கள் ஊழலை எதிர்த்தல், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லாட்சியை ஊக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விப்பதன் ஊடாக முழுமையாக பொது வாழ்க்கையில் பங்கேற்கக்கூடிய ஒரு சமூகத்தினை உருவாக்குதல்.

### இலங்கையில் தகவல் அறியும் சட்டம்: சுருக்க வரலாறு

இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கான பயணமானது கடினமான வரலாற்றைக் கொண்டது. 1995ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கம் சட்டத்தரணி திரு.R.K.W.குணசேகர தலைமையில் ஊடகச் சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் என்பவற்றினைப் பாதிக்கும் சட்டங்களை மறுசீரமைக்குமாறு ஒரு குழுவினை நியமித்தது. இக்குழு தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தினைப் பரிந்துரை செய்தது. இக்குழுவின் அறிக்கையினைத் தொடர்ந்து இலங்கை சட்ட ஆணைக்குழுவின் நீதிபதி அமரசிங்க தலைமையில் 1996ஆம் ஆண்டு தகவல் அறிவதற்கான சட்ட மசோதாவினை தயாரித்தது. அத்துடன், 2000ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நகல் அரசியல் திட்டத்தில் தகவல் அறிவதற்கான உரிமை அடிப்படை மனித உரிமையாக அங்கீகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆயினும், அது நிறைவேற்றப்படாமை துரதிர்ஷ்டவசமாகும். அதேவேளை, இலங்கையின் அச்சு ஊடக அமைப்புகள் தகவல் அறியும் சட்டத்தினை மீளக் கொண்டு வருவதற்கு தீவிரப் பிரசாரங்களை மேற்கொண்டன. குறிப்பாக, 1998களில் மேற்கொள்ளப்பட்ட ஊடக சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்பு தொடர்பான கொழும்பு பிரகடனம், 2008ஆம் ஆண்டு அது மறுசீரமைக்கப்பட்டமை, சுதந்திர ஊடக அமைப்பு, இலங்கை பத்திரிகைச் சமூகம் மற்றும் பல ஊடக, சிவில் அமைப்புகள் இச்சட்டத்தின் தேவையினை வலியுறுத்தி தொடர்ந்தும் பிரசாரம் செய்து வந்தன.

அதனை தொடர்ந்து 2004ஆம் ஆண்டு அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க காலத்தில் பிரதமர் நியமித்த குழு இச் சட்டத்திற்கான மசோதாவினைத் தயாரித்தது. அது அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டு பின் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆயினும், பாராளுமன்றம் ஆயுள் காலம் முடியும் முன்பே கலைக்கப் பட்டமையால் இச்சட்ட மசோதா பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. இச்சட்டத்திற்கான மசோதா 2010ஆம் ஆண்டு அப்போதைய நிதியமைச்சர் மிலிந்த மொரகொட தலைமையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுசீரமைக்கப்பட்டது. ஆயினும், பொதுத் தேர்தல் அண்மித்தமையால் அது பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. பின்னர் 2011ஆம் ஆண்டு எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த (சபாநாயகர்) கரு ஜயசூரிய 2004ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் வரைபினை மீண்டும் தனிநபர் பிரேரணையாக பாராளுமன்றத்திற்குக் கொண்டு வந்தார். இதுவும் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதன் பின்னர் 2011ஆம் ஆண்டு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீள் நல்லிணக்க ஆணைக்குழு தமது இறுதி அறிக்கையில் அரசாங்கம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை அறிமுகம் செய்ய வேண்டும் என்பதனைப் பரிந்துரை செய்ததுடன், அது 2013ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீள் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் அமுலாக்கச் செயற்பாட்டுத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

இப்பின்புலத்திலேயே, 2016ஆம் ஆண்டு ஜீன் 23ஆம் திகதி நீண்ட போராட்டம் வெற்றிக்கு வந்ததுடன், அது தகவல் அறிந்து கொள்வதற்கான பிரஜைகளின் அடிப்படை உரிமைகளுக்கு உயிர் கொடுத்தது. இச்சட்டம் அரசியல் அமைப்பில் உத்தரவாதப்படுத்தப் பட்டுள்ள தகவலுக்கான உரிமையினை அனுபவிப்பதற்கான வாய்ப் பினை வழங்கியுள்ளது என்பதனையே நாம் மனங்கொள்ள வேண்டும். இதற்கு மிக முக்கியமான காரணமாக அமைந்தது இலங்கையின் அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட 19ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தமாகும். இப்புதிய தகவல் அறியும் சட்டமானது 2004ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட சட்ட வரைபினை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடக அமைச்சினால் நியமிக்கப் பட்ட ஒரு குழுவினால் உருவாக்கப்பட்டது. ஊடகத்துறைக்கு பொறுப்பான அமைச்சுக்கு இச்சட்டத்தினை அமுல் செய்யும் முழு பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது.

## சட்டத்தின் முக்கியத்துவம்

மக்கள் ஆட்சி நடக்கின்ற ஒரு நாட்டில் பிரஜைகள் பகிரங்க அரச நிறுவனங்களிடம் இருந்து தகவல்களைப் பெறுவதற்கான உரிமையுடைய வர்களாக இருக்கின்றனர். இதனை இலங்கை அரசின் அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பின் 14ஆவது உறுப்புரை உறுதிப்படுத்துகின்றது. எனவே, பிரஜைகள் அவசியமான மற்றும் பொதுநலன் கருதிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதன் மூலமும் பொது அதிகார சபைகளின் வெளிப் படைத்தன்மை, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதன் மூலமும் நாட்டின் ஊழலற்ற நல்லாட்சியினை ஏற்படுத்த வழிவகுக்கின்றது. பிரஜைகள் மீது தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய அரச பொது நிறுவனங் களின் தீர்மானங்களை அறிந்துகொள்ளவும் பங்கேற்கவும் உரிமையு டையவர்களாக இருக்கின்றனர்.

இது தொடர்பான தகவல்களை இச்சட்டத்தின் மூலம் பெற முடியும்?

- அரச நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள்.
- அரச ஒழுங்கமைப்புகள், கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள் தொடர்பான தகவல்கள்.
- அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பான தகவல்கள்.
- பொதுச் சேவைகள் தொடர்பான தகவல்கள் (கல்வி, சுகாதாரம், விவசாயம், குடிநீர்..)
- பொதுக்கொள்கைகள், சட்டங்கள், மசோதாக்கள், ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான தகவல்கள்.
- பொதுமக்கள் பங்கேற்பு.
- அரச நிறுவனங்களின் கொள்முதல் மற்றும் மானியங்கள் தொடர்பான தகவல்கள்.
- அரசாங்கத்தின், அரச நிறுவனங்களின், பாராளுமன்றம், மாகாண, பிரதேச சபைகளின், அமைச்சுக்களின் வரவுகள், செலவுகள் மற்றும் நிதி தொடர்பானதகவல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிக் கதை 1

### புஞ்சிபண்டா : சீனிபுறக் கிராமத்தினை சேர்ந்த விவசாயி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினைப் பயன்படுத்தி சமூகத்திற்கு நன்மையினைப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

சீனிபுறக் கிராமமானது திருகோணமலை மாவட்டத்திற்குட்பட்ட கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளது. இக்கிராமம் ஏறக்குறைய 46000 மக்கள் தொகையினைக் கொண்டுள்ளது. புஞ்சி பண்டா என்ற விவசாயி அப்பிரதேசத்தில் இயங்கும் தேசிய ஒன்றி ணைந்த அபிவிருத்தி மன்றத்தின் தலைவராக இருந்து வருவதுடன், தகவல் அறியும் சட்டத்தினைப் பற்றியும் அறிந்து கொண்டார். இவர் இச்சட்டத்தினைப் பயன்படுத்தி அப்பிரதேசத்தில் காணப்படும் பிரச்சினைகளுக்கு நிலை யான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார். குறிப்பாக, அரசாங்க சேவை வழங்கலில் காணப்படும் குறைப்பாடுகளை தீர்ப்பதற்கு முன்வந்தார். உதாரணமாக, தபால் விநியோகத்தில் காணப்படும் குறைபாடுகளைக் கூறலாம். ஒன்றரை வருடகாலமாக அங்கு வாழும் 30 குடும்பங்களுக்கு தபால் விநியோகம் இடம்பெறவில்லை. திரு.புஞ்சிபண்டா இது தொடர்பாக தகவல் அறியும் சட்டத்தின் கீழ் வேண்டுகோள் ஒன்றினை திருகோணமலை தபால் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்திருந்தார். இந்த விண்ணப்பத்திற்கு குறிக்கப்பட்ட இரண்டு கிழமைகளில் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. ஆயினும், வேண்டுகோள் வழங்கப்பட்டு ஒரு சில நாட்களில் உடனடி யாகவே தபால் விநியோகம் மீண்டும் வழமைக்குத் திரும்பியது. அத்தோடு, மக்கள் தொடர்ச்சியாக, தங்கு தடையற்ற சேவைகளை அனுபவிக்கும் நிலைமை ஏற்பட்டது. இப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப் பட்டிருந்தாலும், புஞ்சிபண்டாவின் தகவல் அறியும் வேண்டுகோளுக்கு உத்தியோகபூர்வமான பதில் கிடைக்காமை தொடர்பான விசாரணைகள் ஏதும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பயனை அறிந்து கொண்ட புஞ்சிபண்டா இன்னுமொரு வேண்டுகோளையும் விடுப்பதற்கு எத்தனித்தார். சீனிபுறக் கிராமத்தினை இலங்கையின் வரைபடத்தில் அடையாளப்படுத்துவது சற்று சிரமான காரியமாக இருந்தாலும், கந்தளாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனித் தொழிற்சாலையின் அமைவிடம் காரணமாக இக் கிராமம் பரவலாக அறியப்பட்ட இடமாகக் காணப்படுகின்றது. இந்த சீனிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தவிசாளர் 12 ஏக்கர் நிலத்தினை (அதில் 1 ஏக்கர் பொது மயானத்திற்காக ஒதுக்கப்பட்டது) பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கத் தீர்மானித்திருந்தார். பின்பு இது அமைச் சரவை அங்கீகாரத்திற்கமைய உறுதிசெய்யப்பட்டது. ஆயினும் இத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப் படவில்லை. இக்கிராமத்து மக்கள் சம்பிரதாய பூர்வமான மரண சடங்கு களைச் செய்ய வசதி இல்லாமையினால் கடந்த சில வருடங்களாக 200-250 பேர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். புஞ்சிபண்டா அவர்கள், கிராமத்தின் தகவல் அறியும் குழுவின் தலைவர் என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பதிவுகள் தொடர்பான தகவல் கோரிக்கையினை கந்தளாய் சீனிக் கூட்டுத்தாபனத்திடம் முன்வைத்தார். 20 நாட்களுக்குள் நில அளவையாளரின் வரைபடம், அமைச்சரவைத் தீர்மான பத்திரம் உள்ளடங்கலான ஆவணங்கள் கிடைக்கப்பெற்றன. அதன் பின்னர் இக்காணிகள் சீனிக் கூட்டுத்தாபனத்தினால் பொது மக்களுக்கு கையளிக்கப்பட்டதுடன், மயான பூமியும் மக்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் மாற்றியமைக்கப்பட்டது.

**இச்சட்டத்தின் நான்கு அடிப்படைக் கோட்பாடுகள்**

- இச்சட்டமானது சில அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண் டுள்ளது. அதில் அதிகபட்ச வெளிப்படுத்துதல் கோட்பாடானது இயன்றளவு சாத்தியமான தகவல்களை வெளிப் படுத்துமாறு அரசாங்கத்தை வேண்டுகின்றது. இதன் அர்த்தம் யாதெனில் இயன்றளவு வெளிப்படைத் தன்மையினைப் பேணுவதாகும்.
- உரிய நிறுவனங்களின் உடைமையில், கட்டுக்கோப்பில் (Custody) அல்லது கட்டுப்பாட்டில் இருக்கும் தகவல்களை பொதுமக்களுக்கு அவசியமான மற்றும் பொதுநலன் சார்ந்த உத்தியோகபூர்வத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள வழிசெய்ய வேண்டும்.
- பொது அதிகார சபைகள் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கான பதில்களை மாத்திரம் வழங்காமல்; பொதுமக்களுக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான தகவல்களை வெளியிடவும் பரப்பவும் வேண்டும். சில சமயங்களில் தங்கள் நிறுவனங்களில் குறித்த தகவலைப் பெற்றுக் கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில், அதனை எங்கு பெற்றுக் கொள்ளலாம் என்பதை வழிப்படுத்துவது கூட ஒரு அரச நிறுவனத்தின் கடமையாகும். முக்கியமாக, தகவல் மறுக்கப் பட்டமைக்கான காரணத்தினை நியாயப்படுத்தும் பொறுப்பு அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குரியது.

- மிக முக்கியமாக, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வேறு எழுத்திலான சட்டங்களின் ஏற்பாடுகளுடன் ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடுகளை ஏற்படுத்துமாயின்; இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. இதுவே இச்சட்டத்தின் பிரதான பலமாகும் (மேலதிக விடயங்களுக்கு பிரிவு 4ஐ பார்க்க). இதன் காரணமாகவே இலங்கையின் தகவல் அறியும் சட்டம் உலக தரப்படுத்தலில் மூன்றாவது இடத்தில் காணப்படுகின்றது. இதன் மூலம் விளங்கிக்கொள்ள வேண்டிய விடயம் யாதெனில், பல எழுதப்பட்ட சட்டங்களைவிட இச் சட்டம் மேலோங்கி நிற்பதாகும். இது பிரஜைகளுக்குத் தகவல் அறிய பரந்த உரிமையினையும் சுதந்திரத்தினையும் வழங்குவ துடன், அடிப்படையில் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் வெளிப் படைத் தன்மையினை வலியுறுத்துகின்றது. இதனை பிரஜைகள் நன்குணர்ந்து செயற்பட வேண்டும்.

**பொது அதிகார சபை என்பது (பிரிவு - 43)**

1. அரசாங்கத்தின் ஒரு அமைச்சு.
2. அரசியல் அமைப்பினால், சட்டத்தினால், மாகாண சபைகளின் நியதிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் குழு அல்லது பதவி. (கம்பனி சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட அமைப்புக்கள் உள்ளடங்காது.)
3. அரசு மற்றும் பகிரங்க கூட்டுத்தாபனங்களின் 25 வீதத்திற்கு மேற்பட்ட பங்குகளைக் கொண்ட கம்பனிகள்.
4. உள்ளூராட்சி சபைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அரசாங்கம், அரசாங்க முகவராண்மை, உள்ளூராட்சி அதிகார சபைகளிடமிருந்து ஒப்பந்தம், பங்காண்மை உடன்படிக்கை அல்லது உரிமமொன்றின் கீழ் பொதுப்பணியினை நிறைவேற்றுகின்ற தனி அமைப்பு அல்லது நிறுவனம் (Organzation).

6. மாகாண சபையினால் தாபிக்கப்பட்ட திணைக்களங்கள், அதிகார சபைகள் அல்லது நிறுவனங்கள்.

7. (a) பொதுமக்களுக்கு சேவை வழங்கும் நோக்குடன் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் திணைக்களத்தின் பொருளளவில் நிதியளிக்கப்படுகின்ற அரச சார்பற்ற நிறுவனங்கள்.

   (b) மாகாண சபையொன்றினால், வெளிநாட்டு அரசாங்கம் ஒன்றினால் அல்லது சர்வதேச நிறுவனம் ஒன்றினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட அதிகார சபை

8. சட்டாகதியாக அங்கீரிக்கபட்ட மற்றும் முழுமையாக அல்லது பகுதியளவில் அரச நிதியில் இயங்குகின்ற உயர்கல்வி நிறுவனங்கள்.

9. சட்டாகதியாக தாபிக்கப்பட்டு அல்லது உரிமையளிக்கப்பட்டு அரசாங்கத்தின் முழுமையான அல்லது பகுதியளவிலான நிதியளிப்புடன் இயங்குகின்ற தொழில்நுட்பக் கல்வி வழங்குகின்ற நிறுவனங்கள் உள்ளடங்கலாக தனியார் கல்வி நிறுவனங்கள்.

10. நீதி நிர்வாகத்திற்காக உருவாக்கப்பட்ட நீதிமன்றங்கள், நியாய சபைகள் மற்றும் நிறுவனங்கள்.

## பொது அதிகார சபையின் ஆவணங்களையும் பதிவேடுகளையும் பேணுதல்

[பிரிவு -7(1) - (2)]

பொது அதிகாரசபைகள் சகல பதிவுகள் மற்றும் ஆவணங்களை உரிய முறையில் பேண வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. அவை இலகுவாகவும் சிரமமின்றி தவல்களைப் பெறுகின்ற வகையில் பதிவுகள் உரியவாறு அட்டவணைப்படுத்தப்பட்டு குறிப்பெண்கள் இட வேண்டும். பதிவுகளை உரியவாறு பேணுதல் தொடர்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைக் குழுவின் பணிப்புரைகளைப் பொது அதிகார சபைகள் இணங்கியொழுகுதல் வேண்டும்.

**ஆவணங்களை பேணிப் பாதுகாக்க வேண்டிய கால அளவு**

[பிரிவு -7 (3) - (5)]

சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியில் இருந்து 10 ஆண்டுகளுக்கு உட்பட்ட தகவல்கள் (10 வருடத்திற்கு மேற்பட்ட தகவல்களையும் நாம் கோர முடியும்).

சட்டம் நடைமுறைக்கு வந்தபின் உள்ள தகவல்கள் பதிவுகள் தொடங்கப்பட்ட திகதியில் இருந்து 12 ஆண்டுகளுக்கு பேணப்பட வேண்டும் (12 வருடத்திற்கு மேற்பட்ட தகவல்களை கோரி நாம் விண்ணப்பிக்க முடியும்)

மேன்முறையீடுகள், நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவுறாதிருக்கு மிடத்து மேற்படி தகவல்கள் அழிக்கப்படுதல் ஆகாது.

நிறுவனங்களில் உள்ள வளங்களுக்கு அமைவாக இலத்திரனியல் வடிவங்களில் எல்லாத் தகவல்களையும் காத்துவர முயற்சித்தல் வேண்டும்.

**பொது அதிகாரசபை அறிக்கை சமர்ப்பிப்பதற்கான கடமை**

**(பிரிவு - 10)**

பொது அதிகார சபைகள் வருடந்தோறும் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்பு ஆணைக்குழுவுக்கு ஆண்டறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும். இவ்வறிக்கை அலுவலகத்திலும், இலத்திரனியல் வடிவிலும் கிடைப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும். அவ்வறிக்கையில் பின்வரும் தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

(a) பெறப்பட்ட கோரிக்கைகள்.

(b) பிரசைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள்.

(c) மறுக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை.

(d) சேகரிக்கப்பட்ட கட்டணங்களின் தொகை.

(e) மேன்முறையீடுகளின் எண்ணிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(f) பதிவேடுகளைப் பேணுதல், முகாமை செய்தல் மற்றும் அழித்தல் தொடர்பான தகவல்கள்.

**பொது அதிகார சபையில் காட்சிப்படுத்த வேண்டிய விடயங்கள் (பிரிவு -26)**

பின்வரும் விபரங்கள் பொது அதிகார சபையின் வளவில் அல்லது வளாகத்தில் மக்கள் பார்க்கக் கூடிய பொது இடங்களில் காட்சிப்படுத்த வேண்டும். முடியுமானால் அவர்களது இணையத் தளங்களிலும் வெளியிட வேண்டும்.

1. ஆணைக்குழுவையும் ஆணைக்குழு உறுப்பினர்களையும் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்.
2. தகவல் அலுவலரைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்.
3. குறித்தளிக்கப்பட்ட அலுவலரை (மேன்முறையீடு கருதி) தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்.
4. தகவல்களைப் பெறுவதற்கான கட்டணப் பட்டியல். இந்த கட்டணத்தினை தகவல் அறியும் ஆணைக்குழுவும் தீர்மானிக்கலாம்.

**வெளிப்படுத்த முடியாத தகவல்கள் (பிரிவு -5)**

1. அரசின், நாட்டின் பாதுகாப்பு (இராஜதந்திர) தொடர்பான தகவல்கள்.
2. கடல் கடந்த நாணயமாற்றுக் கொடுக்கல் வாங்கல்களின் கட்டுப்பாடுகள்.
3. வங்கி அல்லது கடன் தொடர்பான நடைமுறைகள்.
4. வரி விதிப்பு.
5. பொருட்கள் சேவைகளின் விலைகள், வாடகை மற்றும் ஏனைய செலவுகள், சம்பள மற்றும் வேதனங்களின் விகிதம், ஏனைய வருமானங்கள் தொடர்பான ஸ்திரத்தன்மை, கட்டுப்பாடுகள் மற்றும் சீர்படுத்துகைகள் தொடர்பான தகவல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கரை கடந்த நாடுகளுடனான வியாபார உடன்படிக்கைகள்.

7. 2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைச் சொத்து சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படும் வர்த்தக அந்தரங்கங்கள், வியாபார இரகசியங்கள் மற்றும் புலமைச் சொத்துக்கள் (பொது நலன் கருதி பொது அதிகார சபைகள்).

8. சம்பந்தப்பட்ட நபரின் எழுத்து மூலமான அனுமதியின்றி அவரின் மருத்துவ அறிக்கையை வெளிப்படுத்த முடியாது.

9. உயர்தொழில் அதிகாரிகளினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான பொது அதிகார சபைகளுக்கும் உயர் தொழில் அதிகாரிகளுக்கும் இடையிலான தொடர்பாடல்களில் உள்ளடங்குகின்ற தகவல்கள். குறிப்பாக சட்டமா அதிபருக்கும் அல்லது அவரின் சேவைகளுக்கு உதவுகின்ற அதிகாரிகளுக்கும் பொது அதிகார சபைகளுக்கும் இடையிலான தொடர்பாடல்கள் குறித்த தகவல்களும் இதில் உள்ளடங்குகின்றது.

10. ஒரு நம்பக உறவு நிலைத்திருக்கும் காரணத்தால் தகவலானது அந்தரங்கமாக வைத்திருக்கத் தேவைப்படும் இடத்து,

    (i) ஒரு தவறாளியை கைப்பற்றுவதை, அவருக்கு எதிராக குற்ற வழக்குத் தொடுத்தல் அல்லது துப்புத்துலக்குதல் போன்றவற்றுக்குத் தடையாக இருக்கும் தகவல்கள்.

    (ii) சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, தேசிய பாது காப்பிற்கு தடையாக இருக்கும் போது

11. மூன்றாம் நபரினால் வழங்கப்பட்ட அந்தரங்க தகவல்கள் அவர் சம்மதிக்காவிட்டால் பகிரங்க அதிகார சபையினால் வெளியிட முடியாது. [பிரிவு 29(2)(இ)ன் படி]

12. நீதிமன்ற அவமதிப்பு அல்லது நீதித்துறை செயற்பாடுகளுக்கு பாதகமாக இருக்கின்ற தகவல்கள்.

13. பாராளுமன்றத்தின் அல்லது மாகாண சபைகளின் சிறப்புரிமைகளை மீறக்கூடிய தகவல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. தகவலானது பரீட்சைத் திணைக்களத்தால் அல்லது உயர்கல்வி நிறுவனங்களினால் நடத்தப்படவுள்ள பரீட்சையொன்றிற்கு தீங்காக உள்ளவிடத்து.

15. முடிவொன்று எடுக்கப்படாத அமைச்சரவை பத்திரங்கள் அல்லது குறிப்பறிக்கை (Memorandum).

16. தேர்தல் சட்டங்களின்படி இரகசியதன்மை பேணப்பட வேண்டிய தேர்தல் தொடர்பான தகவல்கள்.

ஆயினும், விலக்களிக்கப்பட்ட மேற்படி தகவல்களை வெளியிடுவது பொது நன்மை பயக்குமெனகருதுமிடத்து தகவல்களை வெளியிடலாம்;. கடந்த காலங்களில் மேற்கூறிய கட்டுப்பாடுகளுக்கு அப்பால் சென்று பொது நன்மை என்ற தளத்திலிருந்து பல்வேறு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, பிரஜைகள் எத்தகைய தகவலையும் கோர உரிமையுள்ளவர்கள். அதனை வெளிப்படுத்துவதா? இல்லையா? என்பது விசாரணையின் பின்னர் தீர்மானிக்கப்படும்.

நியாயமான முறையில் மறுக்கப்பட்ட தகவல் தவிர்ந்த ஏனைய தகவல்கள் பதிவேடு அல்லது ஆவணங்களில் உள்ளடக்கியிருப்பின், மறுக்கப்படாத தகவலினைத் தரும்படி கோரலாம். பொது அதிகார சபைகளால் இச்சட்டத்தின் கீழ் பெறக் கூடிய தகவல் தொகுதியை கோருவதனை மறுக்க முடியாது (பிரிவு -6).

**தகவல்கள் என்பது (பிரிவு - 43)**

பதிவேடுகள், ஆவணங்கள், குறிப்புக்கள், மின்னஞ்சல்கள், அபிப்பிராயங்கள், மதியுரைகள், பத்திரிகை வெளியீடுகள், சுற்று நிருபங்கள், கட்டளைகள், சம்பவத்திரட்டுக்கள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள், பத்திரிகைகள், மாதிரிகள், உருவப்படிவம், கடிதத்தொடர்பு, குறிப்பறிக்கை, விரைவுச் சட்டவாக்கம், புத்தகம், திட்டவரைபு, வரைவு, வரைபடம், பட அல்லது வரைபட வேலை, புகைப்படம், திரைப்படம், குறும்படம், ஒலிப்பதிவு, ஒளிநாடா, இயந்திரம் மூலம் வாசிக்கக்கூடிய பதிவுகள், கணினிப்பதிவுகள் மற்றும் வேறு ஆவணப் பொருள், உள்ளடங்கலாக அதனது பௌதிக படிவம் அல்லது பண்பு பொருட்படுத்தாமல் ஏதேனும் படிவத்திலான பொருள் மற்றும் அதன் ஏதேனும் பிரதி என்பவற்றை உள்ளடக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகவலை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்**
**(சட்டத்தின் பிரிவு - 24 இது தொடர்பாக விளக்குகின்றது)**

பிரஜை ஒருவர் தேவையான தகவல் விபரங்களுடன் தகவல் அலுவலருக்குத் தனது கோரிக்கையினைப் பின்வருமாறு முன்வைக்கலாம்.

(a) அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் (விண்ணப்பப் படிவத்தினை கையெழுத்திலும் சமர்ப்பிக்க முடியும்)

(b) இயலுமானவரை எழுத்து மூலமான கோரிக்கை.

(c) எழுத்து மூலம் கோரிக்கையினைக் கொடுக்க முடியாத போது தகவல் அலுவலரிடம் நேரடியாக, வாய்மொழியாக முன் வைக்கலாம். அவர் உங்கள் சார்பாக விண்ணப்பப் படிவத்தினை நிரப்பலாம்.

(d) பிரஜை ஒருவர் பொது அதிகார சபைக்கு அங்கீகரிக்கப்படாத மாதிரியில் கோரிக்கையினை முன்வைக்கின்ற போது, அதனை எந்தவிதக் கட்டணமும்அறவிடாது அங்கீகரிக்கப்பட்ட மாதிரியில் பதிவு செய்வது தகவல் அலுவலரின் கடமையாகும்.

(e) விரும்பிய மொழியில் (தமிழ், சிங்களம் அல்லது ஆங்கிலம்) விண்ணப்பத்தை முன்வைக்கலாம்.

(f) இக்கோரிக்கைகளானவை தபால் மூலமாக, நேரடியாக அல்லது மின்னஞ்சல்,பக்ஸ் போன்ற இலத்திரனியல் வழிமுறையின் ஊடாகவும் முன்வைக்கலாம்.

(g) தகவலைப் பெற்றுக் கொள்வதற்கான அவசியமான தரவுகள் உள்ளடக்கப்பட வேண்டும்.

(h) தகவலானது ஆளொருவரின் உயிர் அல்லது சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்குஅவசியமெனக் கருதுகின்ற போது அதற்கான காரணத்தினைத் தெளிவுபடுத்தவேண்டும்.

(i) விண்ணப்பதாரரைத் தொடர்பு கொள்வதற்குத் தேவையான தகவல்களைத் தவிரஏனைய அந்தரங்க விபரங்களை வெளியிடத் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகவல் அறியும் உரிமையுடன் தொடர்புடைய விண்ணப்பங்கள் எவை என உங்களுக்குத் தெரியுமா? அவை வருமாறு:-**

**இவை பின்னிணைப்பிலும் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சரி பார்ப்பதன் மூலம் இது தொடர்பான மேலதிக விளக்கத்தினைப் பெற முடியும்.**

1. தகவல் பெறுவதற்கான அல்லது கோருவதற்கான விண்ணப்பம்.
2. பிரஜைகளின் தகவலுக்கான கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்கான இரசீது.
3. தகவல் கோரிக்கையினைப் பதிவு செய்யும் படிவம் - இது தகவல் அலுவலரால் பேணப்படும்.
4. தகவலை வழங்குவதற்கான தீர்மானம் தொடர்பான படிவம்.
5. தகவல் கோரிக்கையினை நிராகரிப்பதற்கான படிவம்.
6. தகவல்களை வழங்குவதற்கான கால எல்லையினை நீடிப்பதற்கான படிவம்.
7. மூன்றாம் தரப்பினரின் இரகசியத் தகவல்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்.
8. மூன்றாம் தரப்பினரின் இரகசியத் தகவல்களை வழங்க தகவல் அலுவலர் மறுக்கும் பட்சத்தில் அது தொடர்பான மேன்முறையீட்டினைக் குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு வழங்கும் விண்ணப்பம்.
9. குறித்தளிக்கப்பட்ட அலுவலர் மூன்றாம் நபரின் இரகசியத் தகவல் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினைப் பதிவு செய்யும் படிவம்.
10. குறித்தளிக்கப்பட்ட அதிகாரிக்கு மேன்முறையீடு செய்வதற்கான விண்ணப்பம்- இது சாதாரணமாகக் கோரும் தகவலை மறுக்கும் போது செய்ய முடியும்.
11. கோரிக்கைகளை நிராகரித்தல் தொடர்பான பதிவுகளைக் குறித்தளிக்கப்பட்ட அதிகாரி பதிவு செய்யும் படிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. தகவல் அலுவலரின் விபரங்களைக் காட்சிப்படுத்தும் படிவம்.
13. தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யும் படிவம்.

**தகவல் வழங்குவதற்கான தகவல் அலுவலரின் கடமைகள் (பிரிவு -25)**

1. தகவல் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கை கிடைக்கப் பெற்றவுடன் முடியுமானளவு விரைவில் தகவல் வழங்க முடியுமா அல்லது இயலாதா என்ற தீர்மானத்தினை எடுக்க வேண்டும். அது விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட வேண்டும். ஆகக்கூடியது 14 நாட்களுக்குள் இச்செயற்பாடுகளைச் செய்ய வேண்டும்.
2. தகவல் கோரிக்கையானது, பிரஜை ஒருவரின் உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்துடன் சம்பந்தப்படும் சமயங்களில் கோரிக்கை கிடைக்கப்பெற்று 48 மணித்தியாலங்களுக்குள் தீர்மானம் எடுக்கப்படுவதுடன் அறிவிக்கப்பட வேண்டும்.
3. ஒரு தகவல் அலுவலர் தகவல் கோரிக்கைக்கு ஒரு பதிலளிப்பினை வழங்கி கோரிக்கையாளர் அப்பதிலளிப்பு மீது திருப்தியடைகின்றபோது அது தொடர்பான பதிவுகளைப் பேணி வைத்திருத்தல் வேண்டும்.
4. தீர்மானம் எடுக்கப்பட்டு 14 நாட்களுக்குள் தகவலை பெற்றுக் கொள்ள செய்ய வேண்டும்.
5. தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகமான பதிவுகள், ஆவணங்களைத் தேடவேண்டி இருப்பின் அல்லது அலுவலகத்தில் இருந்து தொலைவில் உள்ள இடங்களில் இருந்து தகவலைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவையிருக்கின்றமை போன்ற காரணங்களுக்காக காலத்தினை 21 நாட்கள் வரை நீடிக்கலாம்.
6. காலம் நீடிக்கப்படுமானால் அதற்கான காரணம் மற்றும் நீடிப்புக் கால அளவினை தகவல் அலுவலர் உரிய நபருக்கு 14 நாட்களுக்குள் அறிவிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கால நீடிப்பு தொடர்பாக விண்ணப்பதாரர் திருப்திப்படாவிட்டால் குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடு செய்ய முடியும்.

## வெற்றிக் கதை - 2

### விதவைப் பெண் விவசாயிகளுக்கான மானியம் தொடர்பாக ஒரு பெண் உரிமைச் செயற்பாட்டாளரின் தகவல் கோரிக்கை

மொரவக்க கிராமத்தில் வசித்துவரும் திருமதி ரீட்டா சொலமன் என்பவர் நீண்ட காலமாக பெண்கள் உரிமைக்காகச் செயற்பட்டு வருபவர். திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள இக்கிராமத்தில் 8000 மக்கள் வசித்து வருகின்றனர். ரீட்டா அவர்கள் சமூகத்தில் உள்ள பிரச்சினைகளை எவ்வாறு வெளிக்கொணர்வது என்பது தொடர்பாகக் கற்று வந்தார். அந்தவகையில், விதவைப் பெண்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மானியமானது தகுதியற்ற பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதையும், இவ்வுதவியைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய பலர் புறக்கணிக்கப்பட்டிருந்ததையும் அறிந்துகொண்டார். இந்த மானியமானது இக்கிராமத்தில் உள்ள சிறு அளவிலான விவசாயத்தில் ஈடுப்பட்டிருந்த 70 பெண்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதில் மா, தென்னங் கன்றுகள் போன்ற நாற்றுகளுக்கான செலவுகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இவ்விடயம் தொடர்பாக ரீட்டா தகவல் அறியும் உரிமை கோரிக்கையினை பிரதேச சபைக்கு விடுத்திருந்தார். அதன் பயனாக மானியம் பெறுகின்ற பயனாளிகள் தொடர்பான விரிவான அறிக்கை உள்ளடங்கிய பதிலை விண்ணப்பித்து 14 நாட்களுக்குள் பெற்றுக்கொண்டார். அவர் தற்போது தகவல் அறியும் உரிமைத் தொடர்பான பயிற்றுவிப்பாளராக அப்பிரதேசத்தில் செயற்படுகின்றார்.

## தகவல் வழங்கப்படும் தன்மை அல்லது வடிவம் (பிரிவு -27)

1. தகவலானது கோரப்பட்ட வடிவத்திலேயே வழங்கப்பட வேண்டும்.

2. தகவல் கோரப்பட்ட வடிவத்தில் வழங்குவது மூலத் தகவலுக்கு குந்தகம் விளைவிக்குமெனக் கருதப்படும் இடத்து, தகவலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியுமானளவு முழுமையாகப் பெற்றுக்கொடுப்பதற்கான மாற்றீடான வடிவத்தில் வழங்குவதற்கு உரிய அலுவலர் ஆவண செய்ய வேண்டும்.

3. தகவலைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதியளிக்கப்பட்ட வேளையில் -

   (a) தேவையான ஆவணங்களை, பதிவேடுகளை பரீட்சித்துப் பார்க்க முடியும்.

   (b) ஆவணங்கள், பதிவேடுகளின் குறிப்புக்களை அல்லது பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகளைச் சான்றுறுதிப் பிரதிகளை எடுக்க முடியும்.

   (c) பொருட்களின் சான்று உறுதிப்படுத்தப்பட்ட மாதிரிகளை எடுக்க முடியும்.

**தகவல் வழங்க மறுக்கப்படுதல் (பிரிவு - 28)**

விண்ணப்பதாரருக்கு தகவல் மறுக்கப்படுகின்ற போது,

1. கோரிக்கை மறுக்கப்பட்டதற்கான காரணம்.
2. மறுப்பிற்கான மேன்முறையீட்டினை எவ்வளவு காலத்தில் செய்ய வேண்டும்.
3. அத்தகைய மேன்முறையீட்டைச் சமர்ப்பிக்க வேண்டிய நபர் யார்?

போன்ற விபரங்களைத் தகவல் அலுவலர் விண்ணப்பத்தாரிக்கு அறிவிக்க வேண்டும்.

ஒரு பொது அதிகார சபையின் தீர்மானங்கள் எந்தவொரு நபரையும் பாதிக்குமானால், அந்த நபர் தீர்மானத்திற்கான காரணத்தைக் கோர முடியும். பொது அதிகார சபையினால் காரணம் எழுத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் (பிரிவு -35).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிக் கதை - 3

### கண்டி- பன்விலை பிரதேசத்தைச் சேர்ந்த பா.சுப்பிரமணியம் தகவ லறியும் சட்டத்தைப் பயன்படுத்தி வீட்டுத் திட்டத்தை மீளப்பெற்றுக் கொண்ட கதை

கண்டி - பன்விலை பிரதேச சபைக்குட்பட்ட பகுதியாக லெபனான் தோட்டம் காணப்படுகின்றது. இத்தோட்டத்தில் 88 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். 2018 டிசம்பர் மாத நடுப்பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக இத்தோட்டத்தில் 33 குடும்பங்களின் லயன் குடியிருப்புகள் சேதமடைந்ததோடு வாழ்வாதாரமும் பாதிப்படைந்தது. இதன் போது இம்மக்கள் தோட்ட நிர்வாகத்தால் தற்காலிகமாக தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டார்கள். இதன் பின்னர் பிரதேச செயலக அதிகாரிகள் பார்வையிட்டதோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளையும் காணிகளையும் பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்துச் சென்றுள்ளனர்.

அதே மாதத்தில், தொடர்ந்து பெய்த அடைமழையால் லெபனான் தோட்டத்தைச் சேர்ந்த மேலும் 19 குடும்பங்கள் பாதிப்படைந்ததோடு அவர்களும் அதே சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தங்க வைக்கப் பட்டார்கள். இதே சமயத்தில் வியங்கலை தோட்டத்தைச் சேர்ந்த 85 குடும்பங்கள் மழையால் பாதிப்படைந்ததோடு இதில் 12 குடும்பங்களும் அதே சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டார்கள். இதன்போது இட நெருக்கடி காரணமாக ஆரம்பத்தில் பாதிக்கப்பட்ட 33 குடும்பங்களும் பாதிப்படைந்த லயன் குடியிருப்புகளை சுயமாக, திருத்திக்கொண்டு மீண்டும் அவ் வீடுகளிலேயே வசிக்கத் திரும்பி விட்டனர். மழையினால் பாதிக்கப்பட்ட இம்மக்களுக்கு புதிய வீடுகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்ட பொழுது இரண்டாவதாக பாதிப்புக் குள்ளான 19 குடும்பங்களுக்கும், அதிகமாக பாதிப்புகளுக்குள்ளான குடும்பங்கள் என்ற அடிப்படையில் முதலாவது கட்டமாக புதிய வீடுகள் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து மீண்டும் இரண்டாவது கட்டமாக 12 புதிய வீடுகள் வழங்க செயற்பாடுகள் மேற்கொண்ட பொழுது, இப்புதிய வீடுகளை லெபனான் தோட்ட 33 குடும்பங்களுக்கு வழங்காது நக்கிள்ஸ் (கம்முதாவை) தோட்ட குடும்பங்களுக்கு வழங்க முயற்சி கள் எடுக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி சமூக அபிவிருத்தி நிருவகத்தினுடைய செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக 2018.09.30 ஆம் திகதி தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக இம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பன்விலையில் பயிற்சி நடாத்தப்பட்டது. இதன்போது விழிப் புணர்வை பெற்றுக்கொண்ட பாதிக்கப்பட்ட மக்களில் சிலர் புதிய வீடுகளையும் காணிகளையும் பெற்றுக்கொடுப்பதாக வாக்குறுதி யளித்துச் சென்ற பிரதேச செயலகத்திடம் இவ்வீடமைப்பு திட்டம் தொடர்பாக தகவலறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்தி சமூக மட்ட அமைப்பினுடைய தலைவர் பா.சுப்பிரமணியம் தலைமையில் தகவல் களைப்பெற தீர்மானம் எடுத்தனர்.

இந்தத் தீர்மானத்தின் படி 2017.10.27 ஆம் திகதி RTI-01 ஆம் இலக்க விண்ணப்பப் படிவம் மூலம் பிரதேச செயலக தகவல் அதிகாரிக்கு பின்வருமாறு தமது கோரிக்கையை சமர்ப்பித்தனர். மதிப்புக்குரிய அனர்த்த முகாமை அதிகாரி அவர்களுக்கு, 2012.12. 17ஆம் திகதி லெபனான் அம்மன் கோவில் லயத்தில் 12 குடும்பங்கள் பாதிக்கப்பட்டது. இந்த 12 குடும்பங்களிற்கு வந்த வீட்டை நக்கிள்ஸ் கமுதாவில் இருக்கும் 12 குடும்பங்களுக்கு கொடுத்தது எப்படி?, இதற்கான பதிலை எழுத்து மூலம் தமிழ் மொழியில் பெற விரும்பு கின்றேன்.

இவ்விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமையை உறுதிப்படுத்தும் RTI-02 ஆம் இலக்க பற்றுச்சீட்டானது 2018.10.29ஆம் திகதி கிடைக்கப் பெற்றது. பின்னர் RTI - 05 ஆம் இலக்க படிவத்தின் மூலம் தகவல் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு புதிய வீடுகளை பெற்றுக் கொண்டவர் களினுடைய பெயர்பட்டியல் பிரதேச செயலகத்திடம் இல்லை என சிங்கள மொழியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், இப்பிரச்சினை யோடு தொடர்புடைய ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப் பட்டிருந்தது.

பிரதேச செயலகத்தின் பதிலில் திருப்தியடையாத மக்கள் RTI-10 ஆம் இலக்க விண்ணப்பப் படிவம் மூலம் மேன்முறையீடு செய்தனர். இதில் 12 குடும்பங்களுக்கான வீடுகள் எவ்வாறு நக்கிள்ஸ் கமுதா வையில் இருக்கும் 12 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன, எந்த காரணத்தினால், எந்த அடிப்படையில் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளை வேறு நபர்களுக்குப் பெற்றுக்கொடுத்தீர்கள்?, தகவல் அதிகாரியின் பதிலின்படி உங்களிடம் தகவல் இல்லை எனில் எவ்வாறு நீங்கள் இந்த தீர்மானத்தை மேற்கொண்டீர்கள்?, நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த தகவல்களை தமிழ் மொழியில் பெற கோரிக்கை செய்த போதிலும் சிங்கள மொழியில் தகவல் வழங்கப்பட்டதற்கான காரணம் என்ன?' போன்ற வினாக்கள் கேட்கப்பட்டன. இதன் பின்னர் பிரதேச அனர்த்த முகாமையாளர் லெபனான் தோட்டத்திற்கு வருகை தந்து பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட்டுள்ளார்.

இதன் பின்னர் தமிழ் மொழியில் RTI 08 ஆம் இலக்க விண்ணப்ப கடிதத்தின் மூலம் பிரதேச செயலகத்தினால் பதில் அனுப்பப்பட்டிருந்ததோடு இதில் 2018.11.28 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பிரதேச செயலகத்திற்கு தகவல் கோரிக்கையை சமர்ப்பித்திருந்த பா.சுப்பிரமணியத்தை சமூகம் தரவும்' என வேண்டுகோள் விடுக்கப் பட்டிருந்தது. இதன்படி தகவல் கோரப்பட்ட சுப்பிரமணியத்திடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதோடு பாதிக்கப்பட்ட லெபனான் தோட்ட 33 குடும்பங்களுக்கு புதிய வீடுகள் வழங்குவதாக வாக்குறுதி யளிக்கப்பட்டு அதற்கான உறுதிக்கடிதம் கிராம சேவகர் ஊடாக லெபனான் தோட்டத்திற்கு அனுப்புவதாகவும் கூறினார்கள். இதற்கமைய லெபனான் தோட்ட மக்கள் தகவலறியும் உரிமைச் சட்டத்தை பயன் படுத்தி தங்களது வீட்டுரிமையை மீளப்பெற்றுக் கொண்டுள்ளதோடு மக்கள் மத்தியில் தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பான நம்பிக் கையும் விழிப்புணர்வும் வலுவடைந்துள்ளது.

## மூன்றாம் தரப்பினரின் இரகசியமான தகவல்களை வெளியிடுதல் தொடர்பாக

## (சட்டம் பிரிவு -29)

மூன்றாம் நபர் ஒருவருடைய இரகசிய தகவல்களை வெளியிடுமாறு பிரஜை ஒருவரிடம் இருந்து கோரிக்கை வருகின்ற போது, தகவல் உத்தியோகத்தர் குறித்த மூன்றாம் நபரின் அனுமதியினைக் கோரி ஒரு வாரத்துக்குள் அறிவிப்பினை விடுக்கவேண்டும். குறித்த மூன்றாம் நபர் அறிவிப்பு கிடைக்கப் பெற்று ஒரு வாரத்திற்குள் தனது சம்மதம் அல்லது மறுப்பு தொடர்பாகப் பதிலளிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் நபரின் பதில்,

1. சம்மதித்தால் தகவலை வெளியிடலாம்.
2. ஒரு வாரத்துக்குள் பதிலளிக்காவிட்டால் தகவலை வெளியிடலாம்
3. சம்மதிக்காவிட்டால் தகவலை வெளியிட முடியாது.
4. எனினும், மூன்றாம் நபர் மறுக்கின்ற போதும் இத்தகவலை வெளியிடுதல் பொதுநலன் சார்ந்தது என்று ஆணைக்குழு கருது மிடத்து தகவலை வெளியிட முடியும்.

இச்சட்டத்திற்கமைவாக, ஆள் ஒருவர் தன்னிடம் உள்ள தகவலை வெளிப்படுத்துவதை அல்லது தனக்கு தேவையான தகவலைப் பெற்றுக் கொள்வதை யாரும் தடுக்க முடியாது (சட்டம் பிரிவு -36).

**கட்டணங்கள்**

1. ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்ற கட்டணத்தினைச் செலுத்தியே தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
2. அறவிடப்படும் கட்டணங்கள் தொடர்பான விபரங்களை பொது அதிகார சபைகள் தங்களது அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
3. ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு இணங்க சில தகவல்களைக் கட்டணமின்றியும் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன.

கட்டணங்கள் தொடர்பாக பிரஜைகள் சரியான தெளிவினை பிரஜைகள் கொண்டிருத்தல் வேண்டும். சில சமயங்களில் கட்டணம் செலுத்த வேண்டும் என்பதற்காகத் தகவல்களைப் பெற விருப்பம் காட்டாமல் இருக்கலாம்.

உண்மையில், எந்த ஒரு அரச நிறுவனமும் தகவலைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பத்தினை வழங்குவதற்கு எந்த கட்டணத்தி னையும் அறவிட முடியாது. எந்த ஒரு அரச நிறுவனமும் பிரஜைகளின் தகவலுக்கான கோரிக்கையினை செயற்படுத்த எந்த ஒரு கட்டணத்தையும் அறவிட முடியாது. கீழ்வரும் கட்டணங்களை மாத்திரமே அரச நிறுவ னங்கள் அறவிட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிழற்பிரதி எடுத்தல் (Photo copy)

A4 மற்றும் சிறிய அளவிலான காகிதத்தில் வழங்கப்படும் தகவல்களுக்கு ரூபா 2 (ஒரு பக்கம்) மற்றும் ரூபா 4 (இரண்டு பக்கங்களும்), லீகல் அளவிலான (Legal size) மற்றும் A4 அளவு வரையான காகிதத்தில் வழங்கப்படும் தகவல்களுக்கு ரூபா 4 (ஒரு பக்கம்) மற்றும் ரூபா 8 (இரண்டு பக்கங்களும்), மேலே தரப்பட்டுள்ள காகிதத்தை விடப் பெரிய அளவிலான காகிதங்களில் வழங்கப்படும் தகவல்களுக்கு உண்மையான கட்டணம் வழங்கப்படும்.

## அச்சுப் படிகள் (Printout)

A4 மற்றும் சிறிய அளவிலான காகிதத்தில் வழங்கப்படும் தகவல்களுக்கு ரூபா 4 (ஒரு பக்கம்) மற்றும் ரூபா 8 (இரண்டு பக்கங்களும்), லீகல் அளவிலான (Legal size) மற்றும் A3 அளவு வரையான காகிதத்தில் வழங்கப்படும் தகவல்களுக்கு ரூபா 5 (ஒரு பக்கம்) மற்றும் ரூபா 10 (இரண்டு பக்கங்களும்), மேலே தரப்பட்டுள்ள காகிதத்தை விடப் பெரிய அளவிலான காகிதங்களில் வழங்கப்படும் தகவல்களுக்கு உண்மையான கட்டணம் வழங்கப்படும்.

கோரிக்கையை விடுக்கும் பிரஜையினால் வழங்கப்படும் Diskette, இறுவட்டு (Compact Disc), USB mass drive அல்லது அவற்றை ஒத்த இலத்திரனியல் சாதனம் ஒன்றில் தகவல்களைப் பிரதியிடுவதற்கு ரூபா 50. பகிரங்க அதிகார சபையினால் வழங்கப்படும் Diskette, இறுவட்டு (Compact Disc), USB mass drive அல்லது அவற்றை ஒத்த இலத்திரனியல் சாதனம் தகவல்களைப் பிரதியிடுவதற்கு உண்மையான விலையுடன் ரூபா 50 அறவிடப்படும். மின்னஞ்சல் ஊடாக வழங்கப்படும் தகவல்களுக்குக் கட்டணம் இல்லை.

ஏதேனும் ஆவணம் அல்லது சாதனத்தை ஆராய்வதற்கு அல்லது நிர்மாணத் தலத்தின் பரிசோதனைக்கு மணித்தியாலம் ஒன்றுக்கு ரூபா. 50 அறவிடப்படும். இதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு மேல் எடுக்குமாயின், முதல் மணித்தியால ஆய்வுக்கு அல்லது பரிசோதனைக்கு கட்டணம் விதிக்கப்படாது. இது அத்தகைய பரிசோதனையை முன்னர் கட்டணமின்றி வழங்கிய பகிரங்க அதிகார சபைகளின் நடைமுறைக்கு பங்கமின்றி இது மேற்கொள்ளப்படுவதுடன் இந்நடைமுறை இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப விதியினால் தடைபெறாது தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

மேலே உள்ள விதி 4இல் உள்ள எதனாலும் தடைப்படாது, ஆறு பக்கங்கள் (A4அளவு) நிழற்பிரதிகள் அல்லது அச்சுப்படிகளில் தயாரிக்கப்பட்ட அல்லது உள்ளடக்கப்பட்ட தகவல்களைப் பகிரங்க அதிகார சபை கட்டணம் இன்றி வழங்குதல் வேண்டும். சாதாரணமாக கட்டணமின்றி கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவல்கள் தொடர்ந்தும் கட்டணமின்றி வழங்கப்படுதல் வேண்டும். ஆணைக்குழுவுக்கு தகவல் மறுக்கப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளை தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்வதற்கு எந்த கட்டணமும் வழங்கத் தேவையில்லை.

குறிப்பு: சில சமயங்களில் இக்கட்டணமுறை வேறுபடலாம். அதேவேளை, அரச நிறுவனங்களில் அல்லது ஏதேனும் அரச நிறுவனத்தின் வங்கி கணக்கிற்கு கட்டணம் செலுத்தினால் அதற்கான இரசீதினைக் கவனமாக வைத்துக்கொள்வது பெரிதும் அவசியமாகும். காரணம், கட்டணம் செலுத்தியதற்கான அத்தாட்சி அது மாத்திரமேயாகும்.

### கட்டணம் செலுத்தும் முறை

- தகவல் அலுவலருக்கு கட்டணத்தை நேரடியாகச் செலுத்த முடியும்.
- பகிரங்க அதிகார சபையின் வங்கி கணக்குக்கு கட்டணத்தினைச் செலுத்தி இரசீதினைக் கொண்டு செல்லலாம்.
- பகிரங்க அதிகார சபையின் கணக்கீட்டு அலுவலருக்குப் பெயரிட்டு தபால் அலுவலகத்தில் கட்டணத்தினைச் செலுத்தி கொடுப்பனவுச் சீட்டை அரசாங்க நிறுவனத்திற்குக் கொண்டு செல்ல முடியும்.
- தகவல் அலுவலர், கொடுப்பனவு செலுத்தப்படும் விதத்தைப் பொருட்படுத்தாது கட்டணம் ஒன்றின் கொடுப்பனவுக்கு பற்றுச் சீட்டு ஒன்றைப் பிரஜைகளுக்கு வழங்குதல் வேண்டும்.

### கட்டணங்கள் தொடர்பான மேன்முறையீடுகள்

பிரஜை ஒருவர் வழங்கிய தகவல் கோரிக்கைக்கு அதிக கட்டணத்தை தகவல் அலுவலர் அறவிட்டால் அது தொடர்பான முறைப்பாட்டினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சம்பவம் நடந்து 14 நாட்களுக்குள் குறித்துரைக்கப்பட்ட அலுவல ருக்கு முறையீடு செய்ய வேண்டும். இது தொடர்பான விடயங்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கென பிரத்தி யேக விண்ணப்பப்படிவம் உண்டு. அதேவேளை, குறித்தளிக்கப்பட்ட அலுவலரின் பதில் திருப்தியளிக்கவில்லையெனின் குறித்த நபர் இரண்டு மாதங்களுக்குள் தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு முறையிட முடியும். சட்டத்தின் 32 ஆம் பிரிவு இது தொடர்பாக விளக்குகின்றது. இத்தகைய முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு எந்தக் கட்டணமும் வழங்க வேண்டியதில்லை.

**வெற்றிக் கதை - 4**

**பிரசித்தி பெற்ற பாடசாலை ஒன்றின் பழைய மாணவர் ஒருவர் தான் கல்விக் கற்ற பாடசாலையின் வெளிப்படைத் தன்மையினை அறிய முற்பட்டமை தொடர்பான கதை**

திரு.பீரிஸ் என்பவர் கொழும்பில் உள்ள பிரபல அரச பாடசாலை ஒன்றின் பழைய மாணவர். இவர் ஏனைய பழைய மாணவர்களைப் போன்று பாடசாலையின் நன்மதிப்பிற்குரியவர், மேலும், தனது பாட சாலையின் இனிமையான பழைய நினைவுகளை தன் மனதில் கொண்டுள்ளார். இவரது பிள்ளைகளும் பேரக்குழந்தைகளும் இதே பாடசாலையிலையே கல்விகற்றனர். இப்பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் நீண்ட காலமாக பொது நிதி தொடர்பான பதிவுகளை வெளிப் படுத்தாமல் இருப்பது தொடர்பாக திரு பீரிஸுக்கு இவர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்கமானது பெருந் தொகையான பொது நிதியினைக் கையாண்டிருந்தது. ஆயினும், அது தொடர்பான எந்த ஒரு கணக்கும் பகிரங்கப்படுத்தவில்லை. ஆகவே, இச்சங்கத்தின் பொது நிதி தொடர்பான பதிவுகளைப் பகிரங்கப் படுத்து வதில் திரு. பீரிஸ் அவர்கள் பெரிதும் ஆர்வம் காட்டினார்.

இவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தினைப் பயன்படுத்தி தான் கல்வி கற்றப் பாடசாலையின் வெளிப்படைத் தன்மையினையும், பொறுப்புக் கூறலையும் அறிவதற்கான தகவல் கோரிக்கையினைப் பதிவுத் தபால் மூலமாக பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கும், பாட சாலை அதிபருக்கும் அனுப்பியிருந்தார். பாடசாலை அபிவிருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் கணக்கு விபரம் தொடர்பான இவரது கோரிக்கைக்கு எந்த பதிலையும் அனுப்பவில்லை. இம்முயற்சினால் எந்த பதிலும் கிடைக்காது என்பதை உணர்ந்த பீரிஸ் அவர்கள், தகவல் அறியும் உரிமைக் கோரிக்கையினைக் கல்வித் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தார். மீண்டும் இவரது கோரிக்கை கிடைத்தற்கான உத்தியோக பூர்வமான பதில் மற்றும் தகவல்கள் கிடைக்கவில்லை.

திரு. பீரிஸ் தொடர்ந்து தனது முயற்சியினைக் கைவிடாது, தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீட்டை செய்தார். அதன் பயனாக ஆணைக்குழு அதிபரின் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு திரு. பீரிஸ் அவர்களுக்கு தொடர்புடைய கணக்குகளை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு கட்டளையைப் பிறப்பித்தது. பீரிஸ் அவர்கள் தான் அனுப்பிய முதலாவது கடிதத்திற்கு ஒரு வருடங்களுக்கு மேலாக பதில் கிடைக்காமை குறித்து எச்சரிக்கையாக இருந்ததுடன், இறுதியில் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவிற்குச் செல்வதெனத் தீர்மானித்ததுடன், அதில் வெற்றியும் கண்டார். இறுதியாக, 2017ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் பாடசாலை அபிவிருத்தி சபையினால் கையாளப்பட்ட நிதி தொடர்பான வகைப்படுத்தப்பட்ட, விரிவான நிதி அறிக்கை உள்ளடங்கலான தகவல்களைப் பெற்றுக்கொண்டார். மலையகம் உட்பட நாட்டின் பல பாடசாலைகளில் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் கணக்குக் காட்டுவதில்லை. இத்தகைய, ஒழுக்கத்துக்கு முரணான செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இச் சட்டத்தினைப் பயன்படுத்த முடியும்.

## தகவல் அலுவலர் மற்றும் குறித்தளிக்கப்பட்ட அலுவலர்

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக நாம் பேசுகின்ற போது மேற்குறிப்பிடப்பட்டுள்ள இரு பதவி நிலைகள் தொடர்பான தெளி வினைக் கொண்டிருத்தல் வேண்டும். அரச பொது நிறுவனங்களில் இச்சட்டத்தின் பிரகாரம் பிரஜைகளுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்கு நியமிக்கப்படுகின்ற அதிகாரிகள் தகவல் அலுவலர் என அழைக்கப்படுகின்றனர். மறுபுறமாக, குறித்தளிக்கப்பட்ட அலுவலர் என்பது குறித்த அரச பொது நிறுவனத்தின் தலைவரைக் குறிக்கின்றது. இங்கு நாம் விளங்கிக்கொள்ள வேண்டிய விடயம் யாதெனில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் அலுவலர் ஏதேனும் தகவலை வழங்க மறுக்கின்றபொழுது அது தொடர்பான மேன்முறையீட்டினை நாம் குறித்தளிக்கப்பட்ட அலுவலரான நிறுவனத் தலைவருக்கு வழங்க முடியும் என்பதாகும். பிரஜை ஒருவர் அரசாங்க நிறுனமொன்றுக்கு செல்லும் போது இவர்கள் தொடர்பான விபரங்களை அறிந்துகொள்ள வேண்டும். அதன் மூலம் அவசியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**தகவல் அலுவலரின் நியமனம்** [சட்டத்தின் பிரிவு 23 (1)]

1. ஒவ்வொரு பொது அதிகார சபையிலும் ஒரு தகவல் அதிகாரி அல்லது தேவைப்படின் ஒன்றுக்கு மேற்பட்ட தகவல் அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்.

2. ஒவ்வொரு பொது அதிகார சபைகளிலும் மேன்முறையீடு களை கையாள்வதற்காக ஒரு அலுவலர் நியமிக்கப்படுவார். அவர் குறித்த ளிக்கப்பட்ட அதிகாரி என்று அழைக்கப்படுவார். அவர் பெரும்பாலும் அந்நிறுவனத்தின் தலைமை அதிகாரியாக இருப்பார். உதாரணமாக, பிரதேச செயலகத்தை எடுத்துக் கொண்டால் பிரதேச செயலாளர் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியாக இருப்பார்.

3. தகவல் அலுவலர் நியமிக்கப்படாத சமயங்களில் குறித்த பொது அதிகார சபையின் தலைவர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் தகவல் அலுவலராகக் கடமையாற்றுவார்.

**தகவல் அலுவலரின் கடமைகள்** [பிரிவு 23(2)இ(3)]

1. தகவல் கோரிக்கைகளை வேண்டுகின்ற பிரஜைகளுக்கு உரிய வாறான தகவலைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமானளவு உதவ வேண்டும்.

2. இந்த சேவைகளை வழங்குவதற்கு, தகவல் அலுவலர் சக அலுவலர்களின் உதவியையும் நாடலாம். சக அலுவலர்களும் தகவல் அலுவலருக்கு உதவுவது அவர்களின் கடமையாகும்.

தகவல் அலுவலர் மற்றும் குறித்தளிக்கப்பட்ட அலுவலரை எவ்வாறு தொடர்பு கொள்வது தொடர்பான விபரங்கள் பொது அதிகார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையின் பகிரங்க இடங்களில் மக்கள் பார்வைக்குக் காட்சிப்படுத்தப்பட வேண்டும். இது சகல அரச நிறுவனங்களும் மேற்கொள்ள வேண்டிய முக்கிய காரியமாகும்.

## வெற்றிக் கதை 5

### மாத்தறையில் உள்ள திரு.மு. நாயக்கார அவர்களின் கதை

திரு. நாணயக்கார அவர்கள் தனது பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் தனது பிள்ளைக்கு தரம் ஒன்றுக்கான அனுமதியினை தேடிக் கொண்டிருந்தார். பாடசாலை அனுமதிக்கான நேர்முகத் தேர்வு செயற்பாடுகள் முடிவடைந்த பின், இவரது பிள்ளையின் பெயர் தெரிவு செய்யப்பட்ட சிறந்த மாணவர்களின் பட்டியலில் காணப்பட்டது. ஆனால், இறுதியாக வெளியிடப் பட்ட பட்டியலில் நீக்கப்பட்டிருந்தது. கல்வி அதிகாரிகளுடன் பெற்றோருக்கு இருந்த நெருங்கிய உறவினைப் பயன்படுத்தி 10க்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகள் சலுகைகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். இவர் பெறுபேறுகளின் பட்டியல், விண்ணப்பங்கள், பெற்றோர்களின் வதிவிட ஆவணங்கள், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரங்களைக் கேட்டு தகவல் அறியும் உரிமைக் கோரிக்கையினை கல்வித் திணைக்களத்திற்கு 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சமர்ப்பித்திருந்தார்.

நாணயக்கார அவர்களுக்கு குறித்த காலப்பகுதிக்குள் பதில் எதும் கிடைக்காமையினால் 2017ஆம் ஆண்டு மே மாதம் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்தார். 2017ஆம் ஆண்டு மே மாதம் ஆணைக்குழு இது தொடர்பான மேற்கொண்ட விசாரணையைத் தொடர்ந்து, பாடசாலை அதிபர் தன்னிடம் இருந்த தொடர்புடைய அனைத்து தகவல்களையும் சமர்ப்பித்தார். பெறுபேற்று பட்டியல் கல்வித் திணைக்களத்தின் புலனாய்வு பிரிவிடம் இருந்தமையால் அவை சமர்ப்பிக்கப்படவில்லை. ஆவணங்களைப் பரிசீலித்ததன் மூலம், நாணயக்கார அவர்களின் பிள்ளையின் பெயர் அநீதியான முறையில் இறுதிப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டமையை அறியக் கூடியதாக இருந்தது. அரசியல் அமைப்பின் 12ஆவது உறுப்புரைக்கு அமைவாக, பிள்ளையின் சமத்துவத்திற்கான உரிமை மீறப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அடிப்படையில் உச்சநீதி மன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவினை நாணயக்கார அவர்கள் செப்டம்பர் மாதம் 2017ஆம் ஆண்டு தாக்கல் செய்தார். இத்தகையப் பிரச்சினைகள் இன்று பிரபல்யமான கிராமிய மற்றும் நகரப் பாடசாலைகளில் பரவலாகவே இடம்பெறுகின்றன. இதனால் ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த திறமை யான மாணவர்கள் தரமான பாடசாலைகளில் கற்பதற்கான கனவினை, வாய்ப்பினை இழக்கின்றார்கள். இதற்கு கல்வித்துறையில் அதிகரித்து வரும் ஊழல் மோசடிகள் முக்கிய காரணமாக அமைந்துள்ளன.

கல்வி வளர்ச்சி உயர் மட்டத்தில் காணப்படும் வட ஐரோப்பிய நாடுகள் (நோர்வே, பின்லாந்து, டென்மார்க், சுவீடன், நெதர்லாந்து மற்றும் ஆசிய நாடுகள், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, சிங்கப்பூர், ஜப்பான்) போன்ற நாடுகளில் கல்வி வளர்ச்சி மிக உயர்ந்த நிலையில் காணப்படுவதுடன், அந்நாடுகளில் ஊழலும் மிகக் குறைந்த நிலையி லேயே காணப்படுகின்றது. ஆயினும், இலங்கையின் நிலை முற்றிலும் மாறானதாகவே காணப்படுகின்றது. இது வியப்புக்குரிய விடயமாகும். கல்வி வளர்ச்சி உயர்வடைந்துள்ள போதும் ஊழல் குறைவடையவில்லை, மாறாக பெரியளவில் அதிகரித்துள்ளது. இதற்குக் கல்வித்துறையில் நிலவும் மோசமான ஊழல் மோசடியும் காரணமாகும்.

**தகவல் மறுப்புகளுக்கு எதிரான மேன்முறையீடு (பிரிவு-31)**

பின்வரும் சந்தர்ப்பங்களில் மேன்முறையீடு செய்யலாம்.

1. தகவல் அலுவலர் ஒரு தகவலறியும் கோரிக்கையை நிராகரித்தால்,
2. சட்டத்தில் விலக்களிக்கப்பட்டுள்ள தகவல்களை வெளியிட முடியாது என்ற காரணத்தினைக்காட்டி தகவல் அலுவலர் மறுக்கின்ற சந்தர்ப்பங்களில்,
3. தகவல் அலுவலர் நேர வரையறையைப் பின்பற்றாத போது,
4. தகவல் அலுவலர் முழுமையற்ற, பிழையான தகவல்களை வெளியிடுகின்ற போது,
5. தகவல் அலுவலர்கள் கூடிய கட்டணத்தை அறவிடுகின்றபோது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தகவல் கோருகின்ற படிவத்திலேயே தகவலை வழங்க மறுக்கின்ற போது,

மேற்கூறிய காரணங்களுக்காக மேன்முறையீடு செய்யவேண்டும் என்று கருதினால் பிரஜையின் தகவலுக்கான பதில் கிடைக்கப்பெற்று 14 நாட்களுக்குள் மேன்முறையீட்டை குறித்தளிக்கப்பட்ட அதிகாரியிடம் செய்யலாம்.

14 நாட்களை எஞ்சியிருப்பினும் கூட, தாமதத்திற்கான காரணம் கோரிக்கையாளரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதென அவரால் நிரூபிக்க முடியுமாயின், உங்களது மேன்முறையீட்டினை குறித்தளிக்கப் பட்ட அலுவலர் பொறுப்பேற்கலாம். மேன்முறையீடு கிடைக்கப்பெற்று 3 வேலை நாட்களுக்குள் மேன்முறையீடு கிடைக்கப் பெற்றதற்கான பற்றுச்சீட்டை குறித்தளிக்கப்பட்ட அதிகாரியால் பிரஜைக்கு வழங்கப்பட வேண்டும். குறித்தளிக்கப்பட்ட அதிகாரி மேன்முறையீட்டுக்கான தீர்மானத்தினை மூன்று வாரங்களுக்குள் உரிய காரணங்களுடன் வழங்க வேண்டும்.

**குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு எதிரான மேன் முறையீடுகள் (பிரிவு -32)**

பின்வரும் காரணங்களுக்கான குறித்தளிக்கப்பட்ட அதிகாரிக்கு எதிராக மேன்முறையீட்டினை தகவல் அறியும் ஆணைக்குழுவிடம் செய்யலாம்.

1. மேன்முறையீடு செய்த நபருக்கு குறித்தளிக்கப்பட்ட அலுவலரின் தீர்மானம் திருப்திகரமாக இருக்காவிட்டால்,

2. குறித்தளிக்கபட்ட அதிகாரி மேன்முறையீடு கிடைக்கப்பெற்று மூன்று வாரங்களுக்குள் தீர்மானம் வழங்காத சந்தர்ப்பத்தில்,

இந்த மேன்முறையீடுகள் குறித்தளிக்கப்பட்ட அதிகாரியினால் தீர்மானம் வழங்கப்பட்டு அல்லது தீர்மானம் உரிய காலத்தில் எடுக்கப்படாத சந்தர்ப்பத்தில் 2 மாத காலப்பகுதியில் ஆணைக்குழுவுக்கு மேன் முறையீட்டினைச் செய்யவேண்டும்.

மேன்முறையீடு செய்வதற்கு கால தாமதம் ஏற்பட்டிருந்தால், தாமதத்திற்கான காரணம் ஏற்றுகொள்ளக் கூடியதாக இருந்தால் அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைக்குழு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆணைக்குழுவானது அதன் தீர்மானங்களை 30 நாட்களுக்குள் வழங்க வேண்டும். ஆணைக் குழு வானது மேன்முறையீடு தொடர்பான தனது தீர்மானத்தினை எழுத்து மூலமாக மேன்முறையீட்டாளர், தகவல் அலுவலர் மற்றும் பொது அதிகார சபைக்கு வழங்க வேண்டும்.

பிரஜை ஒருவரால் மேன் முறையீடு செய்ய முடியாததெனின் அவரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட வேறொருவர் அவரின் சார்பாக மேன்முறையீட்டினைச் செய்யமுடியும். இது தகவல் அலுவலருக்கு அல்லது குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு எதிரான மேன்முறையீடுகளைக் குறிக்கின்றது (பிரிவு -33).

**ஆணைக்குழுவுக்கு எதிரான மேன்முறையீடு (பிரிவு - 34)**

ஆணைக்குழுவின் தீர்மானத்தில் மேன்முறையீட்டாளர், தகவல் அலுவலர் அல்லது பொது அதிகாரசபை திருப்தியடையாத சந்தர்ப் பத்தில், ஆணைக்குழுவுக்கு எதிரான மேன்முறையீட்டினை மேன்முறை யீட்டு நீதி மன்றத்தில் மேற்கொள்ளலாம்.

இம் மேன்முறையீடு தீர்மானம் அறிவிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**தகவல் அலுவலர் மற்றும் குறித்தளிக்கப்பட்ட அலுவலர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகள் (பிரிவு - 38)**

1. ஒரு தகவல் அலுவலர் புரிந்த பின்வரும் குற்றங்களுக்காக, ஆணைக்குழுவானது குறித்த அலுவலர் பணிபுரியும் பொது அதிகார சபையின் ஒழுக்காற்றுக் குழுவுக்கு அறிவிக்க வேண்டும்.

    a. பிரஜை ஒருவரின் தகவலுக்கான கோரிக்கையினை வேண்டு மென்று மறுக்கின்ற போது,

    b. மறுப்புக்கான காரணங்களை வழங்காமல் தகவல் கோரிக்கை யினை மறுக்கின்ற போது,

    c. இச்சட்டத்திற்கு மாறாக அதிகமான கட்டணத்தினைக் கோரு கின்ற போது,

    e. இச்சட்டத்திற்கு முரணாக, வேறு வகையான காரணங்களைக் கூறி தகவலை வழங்கமறுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஒரு குறித்தளிக்கப்பட்ட அலுவலர் செய்த பின்வரும் குற்றங்களுக்காக,ஆணைக்குழுவானது குறித்த அலுவலர் பணிபுரியும் பொது அதிகார சபையின் ஒழுக்காற்றுக் குழுவுக்கு அறிவிக்க வேண்டும்.

    a. வெளியிடுவதற்கு விலக்களிக்கப்பட்ட தகவல்கள் தவிர்ந்த (பிரிவு 5) ஏனைய தகவல்கள் தொடர்பான மேன் முறையீடுகளை வேண்டுமென்றே மறுத்தல்.

    b. தகுந்த காரணம் இன்றி மேன்முறையீடு தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்ளாது கால தாமதம் செய்தல்.

மேற்படி அலுவலர்கள் தொடர்பாக, உரிய ஒழுக்காற்றுக் குழு மேற்கொண்ட நடவடிக்கைகளை ஒரு மாதக் காலத்துக்குள் ஆணைக் குழுவிற்கு அறிவிக்க வேண்டும்.

ஒரு பொது அதிகார சபையில் பணி புரிகின்ற அலுவலர் அல்லது ஊழியர், ஏதேனும் சட்டத்திற்கு அல்லது கட்டுப்பாடுகளுக்கு மாறாக, இச்சட்டத்திற்கு அமைவாகத் தகவல்களை வழங்கியதால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் அல்லது தண்டனைகளுக்கு ஆளாக முடியாது. (பிரிவு -40)

## தண்டனைகள் (பிரிவு -39)

நபரொருவர் கீழ்க் காணும் குற்றங்கள் புரிந்தமைக்காக நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்படுமானால் தண்டனைகளை அனுபவிக்க நேரிடும்.

1. தனது கட்டுப்பாட்டில் உள்ள தகவல்களை வேண்டும் என்று அழித்தல், செல்லுபடியற்றதாக்குதல், மாற்றுதல் அல்லது மொத்தமாக அல்லது பகுதியளவில் ஒழித்தல்.

2. ஆணைக்குழுவின் பணிப்பிற்கிணங்க, ஆணைக்குழுவிற்கு சமுகந்தர தவறுதல் அல்லது மறுத்தல்.

3. ஆணைக்குழு முன் சமுகமளித்தாலும்,

    a. தன் கட்டுப்பாட்டில் உள்ள தகவல்களைச் சமர்ப்பிக்கத் தவறுதல் அல்லது மறுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

b. சத்தியப்பிரமாணத்தின் அல்லது உறுதி உரையின் கீழ் பொய்யான தகவல்களை வேண்டுமென்றே வழங்குதல்.

4. ஆணைக்குழுவின் தீர்மானங்களை நிறைவேற்றத் தவறுதல் அல்லது மறுத்தல்.

5. ஆணைக்குழு, அதன் அலுவலர்கள் அல்லது ஊழியர்கள் தங்களது கடமைகளைப் புரிவதற்கு எதிர்ப்பாக இருத்தல் அல்லது தடுத்தல்.

6. ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் இச்சட்டத்தின் கீழ் வெளியிட முடியாத ஏதேனும் தகவலை வெளிப்படுத்தல்.

நபரொருவர் மேற்குறிப்பிடப்பட்ட காரணங்களில் ஒன்றுக்காக குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டு நீதிமன்றத் தீர்ப்புக்கமைய பின்வரும் தண்டனைகளில் ஒன்றை அனுபவிக்க நேரிடும்.

a. 50,000 ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணம்.

b. இரண்டாண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனை.

c. 50,000 ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணம் மற்றும் இரண்டாண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனை.

பொது அதிகார சபையில் பணி புரிகின்ற அலுவலர் ஒருவர் தகவல் அலுவலரின் வேண்டுகோளுக்கிணங்க அவரது சேவைக்கு உதவுவதற்குத் தகுதியான காரணமின்றி மறுக்கின்றபோது, அவர் குற்றவாளியாகக் கருதப்படுவதுடன் நீதிமன்ற தீர்ப்புக்கமைய 10,000 ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணத்தினைச் செலுத்த நேரிடும். மேற்குறிப்பிட்ட நீதிமன்ற தீர்ப்புக்கு மேலதிகமாக, குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், அவரது நிறுவனத்தின் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு ஆளாக வேண்டும். இச்சட்டத்தின் கீழான குற்ற வழக்கொன்று ஆணைக் குழுவினால் தொடுக்கப்படுதல் வேண்டும்.

பொது அதிகார சபையொன்றின் அலுவலர் அல்லது உத்தியோகத்தர் இச்சட்டத்தின் பிரகாரம் வெளியிடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள தகவல்களை வழங்கினார் என்பதற்காக அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது ஏதேனும் வகையான தண்டனைக்கு உட்படுத்த முடியாது என்பதனை நாம் மனங்கொள்ள வேண்டும். இச்சட்டத்திற் கிணங்க செயற்படும், தகவல் வழங்கும் அரச அதிகாரிகளை மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச பொது நிறுவனங்களை இச்சட்டம் பாதுகாக்கும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**அமைச்சரின் கடமைகள்**

'அமைச்சர் என்பது மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளில் உள்ள அமைச்சர்களைக் குறிக்கின்றது.'

**அறிக்கையை வெளிப்படுத்தல் (பிரிவு -8)**

1. தொடர்புடைய அமைச்சர்கள் பிரஜைகள் தகவல் பெறுவதற்கான உரிமையினை உறுதிப்படுத்துகின்ற வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 1ஆம் திகதிக்கும் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன் ஆணைக் குழுவால் விதிக்கப்பட்ட படிவங்களில் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

2. அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற பொது அதிகார சபைகளின் கடமைகள், பணிகள், தொழிற்பாடுகள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

3. பிரஜைகள் தகவல்களை முறையாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அவ்வறிக்கை விரிவாகவும் தெளிவாகவும் தயாரிக்கப் பட வேண்டும்.

4. அறிக்கைகள் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பிரசுரித்தல் மற்றும் இலத்திரனியல் வடிவில் கிடைப்பதனை உறுதிப்படுத்தல்.

5. ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும் கட்டணத்தினை செலுத்து வதன் மூலம் இவ்வறிக்கையினைப் பரிசீலனை செய்வதற்கும், பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்பினை உறுதிப்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்திட்டங்களின் அல்லது செயற்திட்டங்களை முன்னெடுத்தல் தொடர்பாக அமைச்சரின் கடமைகள் (பிரிவு -9)

கருத்திட்டம் (Project) என்பது:

''வெளிநாட்டு நிதியின் மூலம் முன்னெடுக்கப்படுபவையாயின் ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமான பெறுமதியையும், உள்நாட்டு நிதியளிப்பாக இருப்பின் ரூபா 500,000 பெறுமதிக்கு அதிகமான கருத்திட்டங்களையும் குறிக்கின்றது.''

மேல் குறிப்பிடப்பட்டுள்ளவாறான கருத்திட்டங்கள் தொடங்கு வதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு பொதுமக்களுக்கும் குறிப்பாக, இக் கருத்திட்டத்துடன் சம்பந்தப்படும் (நலன் பெறும் அல்லது பாதிக்கப் படும்) மக்களுக்கு அறிவிப்பதும் அமைச்சரின் கடமை. அவசரக் கருத்திட்டமாயின் ஆரம்பிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு அறிவிக்கப்பட வேண்டும். கருத்திட்டம் தொடர்பாக பிரஜை ஒருவரின் எழுத்து மூலமான வேண்டுகோளுக்கிணங்க குறித்த சமயத்தில் காணப்படுகின்ற முன்னேற்றம், நடைமுறைப்படுத்துகை தொடர்பான தகவலைக் கிடைக்கச் செய்வது அமைச்சரின் கடமை. ஆணைக் குழுவி னால் தீர்மானிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி குறித்த தகவலைப் பெற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும்.

## அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்கு விதிகள் (பிரிவு - 41)


ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து இச்சட்டத்தினை நெறிப் படுத்து வதற்கான ஒழுக்க விதிகளை அமைச்சரினால் ஆக்க முடியும்.

தீர்மானிக்கப்பட்ட ஒழுக்கவிதிகளை வர்த்தமானியில் வெளியிடப் பட்ட பின் நடைமுறைப்படுத்தலாம்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் அனுமதிக்காத ஒழுக்க விதிகளை நடைமுறைப்படுத்த முடியாது.

அவ்வாறு நடைமுறைப்படுத்த மறுக்கப்பட்ட ஒழுக்கவிதிகளை எத்திகதியில் இருந்து அமுல்படுத்த முடியாது என்ற விபரம் வர்த்த மானியில் வெளியிடப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**உருப்படம் 03: தகவல் அறியும் உரிமை சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பொறிமுறை**

இவ்வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள இலக்கங்களுக்கான விளக்கங்கள் பின்வருமாறு:-

1. I. சட்டங்களை இயற்றுதல்

   II. பொதுநிதியினை ஒதுக்குதல்

2. அமைச்சர்களை நியமித்தல்

3. ஆணைக்குழு உறுப்பினர்களை நியமித்தல்

4. ஆணைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு ஜனாதிபதிக்குப் பரிந்துரைத்தல்.

5. I. அறிக்கைகளை சமர்ப்பித்தல் (பாராளுமன்றம், ஜனாதிபதி, பொதுமக்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II. கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்களை முன்கூட்டியே வெளியிடல்.

III. சட்டம் அமுல்படுத்துவதற்கான ஒழுக்கவிதிகளை வகுத்தல்.

6. I. பொது அதிகார சபைகள் தங்களது கடமைகளை சரியாக நிறைவேற்றுகின்றனவா என்பதனை கண்காணித்தல், பொது அதிகார சபைகளுக்கு இச்சட்டம் தொடர்பான பயிற்சிகளை வழங்குதல் மற்றும் உரிய நிறுவன மறுசீரமைப்புக்களை செய்தல்.

II. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக பொது அதிகார சபைகளினால் வழங்கப்படுகின்ற தகவல்களுக்காக அறவிடப்படும் கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கு நியாயமான அடிப்படையில் வழிகாட்டல்.

III. இச்சட்டத்திற்கு அமைவாக தனிநபர்களின் தேவைகள் மற்றும் உரிமைகளை வெளிப்படுத்தல்.

IV. மேன் முறையீடுகளைப் பரிசீலித்தல்.

V. அமைச்சருக்கு உரிய நேரத்தில் அறிக்கை சமர்ப்பித்தல்.

7. பொது அதிகார சபைகள்

I. ஆவணங்களை பேணிப் பாதுகாத்தல்

II. ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்

III. சட்டத்திற்கு அமைவாக காட்சிப்படுத்த வேண்டிய விடயங்களைக் காட்சிப்படுத்தல்.

**ஆணைக்குழு (பிரிவு - 11 - 22)**

ஆணைக்குழு என்பது 'தகவல் அறியும் உரிமைச் சட்ட' ஆணைக் குழுவினையே குறிக்கின்றது. இவ்வாணைக்குழுவானது சுயாதீனமாகச் செயற்படுவதினை இச்சட்டம் வலியுறுத்துகின்றது. இலங்கையில் தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக் குழுக்களில் இது பிரதான இடத்தினைக் கொண்டுள்ளது. 5 உறுப்பினர்கள் ஆணைக்குழுவில் உள்ளடங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் அரசியல் அமைப்பு பேரவையின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்படுவர்.

மூன்று உறுப்பினர்களின் தெரிவானது பின்வரும் துறைசார்ந்தவர்களாக இருக்க வேண்டும். அவர்களுடைய பெயர்கள் அரசியல் அமைப்பு சபைக்குப் பரிந்துரைக்கப்பட்டு தெரிவு செய்யப்படுவர்.

1. இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தில் திறமை வாய்ந்த சட்டத் தரணியொருவர் அல்லது சட்டம்சார் கல்விமான் ஒருவர்.
2. வெளியீட்டாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், ஊடகவியலாளர் அமைப்பில் இருந்து ஒருவர்.
3. சிவில் சமூக அமைப்பில் இருந்து ஒருவர்.

ஏனைய இரண்டு உறுப்பினர்கள் அரசியல் அமைப்பு பேரவையின் பகிரங்க விண்ணப்பச் செயன்முறையின் மூலம் தெரிவுச் செய்யப் படுவர். தெரிவு செய்யப்படும் 5 உறுப்பினர்களில் இருந்து ஒருவரை ஜனாதிபதி ஆணைக் குழுவின் தவிசாளராக நியமிப்பார். ஆணைக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் 5 வருடங்களாகும். ஆணைக்கு உறுப்பி னர்கள் பொது வாழ்க்கையில் சட்டம், ஆட்சி, பொது நிர்வாகம், சமூக சேவை, ஊடகத் துறை, அறிவியல், தொழிநுட்பம் அல்லது முகாமைத்து வத் துறையில் சிறந்த அறிவு, திறமை அனுபவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**ஆணைக்குழுவில் இடம்பெற முடியாதவர்கள் [பிரிவு - 12(2)]**

1. பாராளுமன்ற, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள்.
2. பொதுச் சேவை உத்தியோகத்தர்கள், நீதிச் சேவை உத்தியோகத் தர்கள் அல்லது இலாப நோக்கிலான நிறுவனங்களின் உத்தி யோகத்தர்கள்.
3. அரசியல் கட்சிகளுடன் சம்பந்தப்பட்டவர்கள்.
4. ஏதேனும் வியாபாரத்தினைக் கொண்டு நடத்துபவர்கள் அல்லது உயர் தொழில் புரிபவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணைக்குழுவின் கடமைகள் (பிரிவு -14)

1. பொது அதிகார சபைகள், இச்சட்டத்திற்கமைவாக தங்களது கடமைகளைப் புரிவதனை கண்காணித்தல்.
2. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பொதுவான நடை முறைகள் அல்லது குறித்ததொரு பொது அதிகார சபையின் நடவடிக்கைகள் குறித்த மறுசீரமைப்புக்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.
3. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பொது அதிகார சபைகளினால் வழங்கப்படுகின்ற தகவல்களுக்காக அறவிடப்படும் கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கு நியாயத்தின் அடிப்படையில்; வழிகாட்டி நெறிப்படுத்தல்.
4. கட்டணம் இல்லாது தகவல் அலுவலரினால் தகவல் வழங்கப்படக் கூடிய சந்தர்ப்பங்களைத் தீர்மானித்தல்.
5. கட்டணப் பட்டியலை வழங்குதல்.
6. சட்டத்தினை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்காக உரிய அலுவலர்களுக்குப் பயிற்சிகளை வழங்குதல்.
7. இச்சட்டத்திற்கு அமைவாக தனிநபர்களின் தேவைகள் மற்றும் உரிமைகளை வெளிப்படுத்தல்.
8. இச்சட்டத்திற்கு அமைவாக பொது அதிகார சபைகள் பதிவுகளை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்.

## ஆணைக்குழுவின் அதிகாரங்கள்

**(சட்டத்தின் பிரிவு -15 இது பற்றி விளக்குகின்றது)**

1. விசாரணைக்காக ஆணைக்குழு முன் தோன்றுமாறு நபர்களைப் பணித்தல் மற்றும் விசாரணைகளை மேற்கொள்ளல்.
2. சத்தியத்தின் மீது அல்லது உறுதியுரையின் மீது ஒரு நபரை பரீட் சித்தல் மற்றும் அவரிடம் உள்ள தகவல்களை சமர்ப்பிக்குமாறு கோருதல். அத்தகைய தகவல் இச்சட்டத்தின் பிரகாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்த முடியாததாயின் அதனை இரகசியமாகப் பரீட்சிக்க வேண்டும்.

3. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பொது அதிகார சபையினால் மறுக்கப்படும் தகவல்கள் உட்பட பொது அதிகார சபையில் வைத்திருக்கப்படும் தகவல்களைப் பரிசீலித்தல்.

4. குறித்தவொரு படிவத்தில் தகவலை வழங்குமாறு பொது அதிகார சபைகளைப் பணித்தல்.

5. வெளியிடுவதற்கு விலக்களிக்கப்பட்ட (பிரிவு-5) தகவல்களைத் தேவை கருதி வெளியிடுமாறு பொது அதிகார சபைகளைப் பணித்தல்.

6. ஆணைக்குழுவுக்கு வருகின்ற மேன்முறையீடுகளுக்கு உரிய தீர்மானங்களை மேற்கொள்ளல்.

7. உரிய நேரத்தில் வழங்கப்படாத தகவலுக்கான கட்டணத்தை மீள் செலுத்துமாறு பொது அதிகார சபையினை அல்லது குறித்த தகவல் அலுவலரைப் பணித்தல்.

**ஆணைக்குழுவால் ஏற்படுத்தக்கூடிய விதிகள் (பிரிவு - 42)**

ஆணைக்குழு பின்வரும் எவையேனும் கருமங்கள் தொடர்பாக விதிகளை ஆக்கலாம்.

1. எப்படிவத்தில், எம்முறையில் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்ய வேண்டும்.

2. விசாரணைகளை நடத்துவதற்கான நடைமுறைகள்.

3. தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான கட்டணங்கள்.

4. இச்சட்டத்திற்கமைவாக, பொது அதிகார சபையினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கையின் வடிவம்.

மேற்படி விதிகள் தயாரிக்கப்பட்டு அமைச்சரின் அனுமதியுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னரே நடைமுறைக்கு வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணைக்குழுவுக்கான நிதி (பிரிவு - 16,17)

பாராளுமன்றத்தின் நிதி ஒதுக்கீடு, உள்நாட்டு வெளிநாட்டு நன்கொடைகள், கொடைகள் (Gift) மற்றும் மானியங்கள் மூலம் ஆணைக்குழு நிதியினைப் பெற்றுக்கொள்ளலாம். கிடைக்கப் பெறுகின்ற நன்கொடைகள், கொடைகள் மற்றும் மானியங்கள் கிடைக்கப் பெற்ற மூலம், நோக்கம் என்பனவற்றை ஆணைக்குழு வெளிப்படுத்தக் கடமைப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் நிதி ஆண்டு ஜனவரி - டிசம்பர் ஆகும். அரச பொது நிறுவனங்களின் நடைமுறைகளுக்கு ஏற்ப இவ்வாணைக்குழுவும் வரவு செலவுகள் தொடர்பான உரிய கணக்குகளைப் பேணுவதுடன், உரிய கணக்காய்வுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

## ஆணைக்குழுவின் அறிக்கை (பிரிவு -37)

சகல நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைக் குறைந்தது ஆண்டிற்கு ஒரு முறையாவது தயாரித்து வெளியிட வேண்டும். அறிக்கையின் ஒரு பிரதி பாராளுமன்ற விவாதத்திற்காகச் சமர்ப்பிக்க வேண்டும். இன்னொரு பிரதி ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குப் பின்னர் ஆணைக்குழுவானது அறிக்கையின் பிரதியினை பொது மக்கள் பயன்பாட்டிற்காக அலுவலகத்தில் வைத்திருக்க வேண்டும். முடியுமானளவு அறிக்கையானது இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

இலஞ்ச ஊழல் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் உட்பட்ட ஒரு பட்டியல் படுத்தப்பட்ட நிறுவனமாக ஆணைக்குழுவும் கருதப்படுவதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு கட்டுப்பட்டதாகவும் உள்ளது. இலஞ்சம் மற்றும் ஊழல் என்பவற்றினைக் கட்டுப்படுத்துவதில் இவ்வாணைக் குழுவுக்கு முக்கிய பங்குண்டு என்பதனை நாம் மனங்கொள்ள வேண்டும். இவ்வாணைக்குழு வினைத்திறன் மிக்க வகையில் செயற்படும்போது அது அரச நிறுவனங்களில் இடம்பெறும் பல்வேறு வடிவிலான ஊழல்களைக் கட்டுப்படுத்த உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிக் கதை - 6

### திரு. ரூபசிங்க - தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி சமூகத்தையும் தன்னையும் வலுப்படுத்தல்

திருகோணமலையைச் சேர்ந்த திரு. ரூபசிங்க அவர்கள் தேசிய ஒன்றிணைந்த அபிவிருத்தி மன்றத்தின் வேலைத் திட்டங்களில் ஈடுபடுகின்ற செயற்பாட்டாளராவார். இவ்வமைப்பானது வெளிப்படைத் தன்மை மற்றும் நல்லாட்சியினை வலியுறுத்தி வருவதுடன், இம்மன்றத்தின் சார்பாக திரு. ரூபசிங்க அவர்கள் மத்திய வங்கியால் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுகின்ற கொடைகள் (அரசியல் அமைப்பின் 154ஆம் சரத்தின்படி) மற்றும் ஒதுக்கப்படுகின்ற நிதி என்பன மாகாண சபைகளினால் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதை அறிய விரும்பினார். அதனடிப்படையில், 2013 - 2017 வரையிலான காலப்பகுதியில் அரசாங்க கொடைகளுக்கான செலவீனங்கள் தொடர்பான பதிவுகளைக் கேட்டு திரு. ரூபசிங்க தகவல் அறியும் உரிமைக் கோரிக்கையினை 8 மாகாணங்களின் தலைமைச் செயலாளர் அலுவலகங்களுக்குச் சமர்ப்பித்திருந்தார். இந்த 8 கோரிக்கை தொடர்பான பதில்கள் உரிய நேரத்தில் கிடைக்கப்பெற்றன. 14 நாட்களுக்குள் தொடர்புடைய தகவல்களும் கிடைக்கக் கூடியதாக இருந்தது. குறித்த நிறுவனம் இத்தகவல்களைத் தமது ஆய்வு நோக்கங்களுக்குப் பயன்படுத்தியது. இதேபோன்று நீங்களும் மாகாண சபை, பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை, பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் மற்றும் அமைச்சுக்களின் நிதி, வருமானம், செலவு தொடர்பான தகவல்களை அறிந்துகொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவினைத் தொடர்பு கொள்ளுதல்

அறை இலக்கம் : 203-204

புலொக் : 02

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்,

பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07


தொலைபேசி இல: 011 2691625 / 011 2691007

மின்னஞ்சல் முகவரி rti.commission16@gmail.com

தொலைநகல்: 011 2691625

நீங்கள் தகவலுக்கு விண்ணப்பித்து அது மறுக்கப்பட்டிருப்பின், உங்களின் தகவலுக்கான உரிமை மீறப்பட்டிருப்பின், தகவல் வழங்கல் இழுத்தடிக்கப்படின் மேலுள்ள விலாசத்துக்கு உங்கள் முறைப்பாடுகளை அனுப்ப முடியும். தகவல் ஒன்றினை அரச நிறுவனத்திடம் கோரிய பிரஜை ஒருவருக்கு தகவல் ஆணைக்குழுவிடமிருந்தும் திருப்திகரமான பதில் கிடைக்கவில்லையாயின் இறுதியாக மேன்முறையீட்டு நீதி மன்றத்திற்கு விண்ணப்பம் செய்ய முடியும். இச்சட்டத்தின் முப்பத்து இரண்டாம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவின் முடிவினால் திருப்தியடை யாத பிரஜை யொருவர் எத்திகதியில் அத்தகைய முடிவு அப்பிரஜைக்கு அறிவிக்கப்பட்டதோ அத்திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் மேன் முறையீட்டு நீதிமன்றத்திற்கு அத்தகைய முடிவுக்கெதிராக மேன் முறையீடு செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**உருப்படம் 04 : பிரஜைகள் தகவலுக்கு மேன்முறையீடு செய்தல்**

## இலங்கையின் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் சிறப்பு யாது?

இச்சட்டம் தகவல் அதிகாரிகளைப் பாதுகாக்கும் என்பது ஏற்கனவே கலந்துரையாடப்பட்டுள்ளது. உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட அரச நிறுவனத்தில் பணியாற்றும் அதிகாரிகள் அல்லது அதிகாரி ஒருவர் தகவல் அதிகாரியின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்காவிடின் அல்லது தகவல் வழங்கும் நடைமுறைகளுக்கு இடையூறு ஏற்படுத்தினால் அல்லது அவசியமான தகவல்களை வழங்க மறுத்தால் அத்தகைய சந்தர்ப்பங்களில் இச்சட்டம் தகவல் அலுவலரைப் பாதுகாக்கும். மேலும், தகவல் அலுவலரை நியமிப்பதுடன் மாத்திரம் இச்சட்டத்தின் நோக்கம் நிறைவுபெறாது. அவர்களின் ஆதரவும் அர்ப்பணிப்பும் விருப்பமும் இதன் வெற்றிக்குப் பெரிதும் அவசியமாகும். அரச நிறுவனங்களில் இணையத்தளங்களை உருவாக்கி அல்லது தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தகவல்களை இற்றைப்படுத்த (update) வேண்டும். அதன் மூலம் பிரஜைகள் தகவல்களை இலகுவாகப் பெற முடியும். மிக முக்கியமாக, தகவல்களின் சொந்தக்காரர்கள் பொது மக்களேயாகும். அதனை அரச அதிகாரிகள் நன்கு விளங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட வேண்டும்.

ஆகவே, அதனைப் பாதுகாப்பதும் தேவையான போது வழங்கு வதும் அவர்களின் கடமையாகும், ஆயினும், இலங்கையின் அரச அதிகாரிகள் தகவலுக்கு சொந்தக்காரர்களாக தம்மை நினைக்கின்றார்கள். அவர்கள் மத்தியில் நீண்ட காலமாக இவ்வெண்ணம் காணப்படுகின்றது. அம் மனநிலை மாற்றப்படுவது இச்சட்டத்தின் சிறப்பான அமுலாக்கத் திற்கு அவசியமாகும். நன்கு வளர்ச்சியடைந்த நாடுகளில் தகவல் உரிமையென்பது அவர்களின் கலாசாரத்தின் ஒரு பகுதியாகக் காணப் படுகின்றது. அரசாங்கம் தொடர்பான சகல தகவல்களும் இணையத் தளங்களிலும் வேறு ஊடகங்களிலும் வெளியிடப்படுகின்றன. ஆகையால், பிரஜைகள் எந்தவிதமாக சிரமமுமின்றி இலகுவாக தகவல்களை பெற்றுக் கொள்கின்றார்கள்.

இச்சட்டத்தின் 5ஆம் பிரிவு தகவல் மறுக்கப்படுதல் தொடர்பான விடயங்களைக் குறிப்பிடுகின்றது. ஆயினும், அத்தகைய தகவல்களை 'பொது நலன்'' (public interest) என்ற தத்துவத்தின் அடிப்படையில் வழங்க முடியும் என்பதினை ஏற்கனவே பார்த்தோம். குறிப்பாக, பொது நலன் மேலோங்கி நிற்கும் போது தகவலை வழங்க முடியும். உதாரணமாக, அண்மையில் ஊடகவியலாளர் ஒருவர் மாகாண சபை ஒன்றில் வழங்கப்பட்ட நியமனம் தொடர்பான தகவல்களைக் கோரி னார். இவர் நியமிக்கப்பட்டோரின் தனிப்பட்டத் தகவல்களைக் கோரவில்லை. ஆயினும், இவரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. தகவல் அலுவலரும், குறித்தளிக்கப்பட்ட அலுவலரும் இதனை வரப்பிரசாதம் அல்லது சிறப்புரிமை என்ற அடிப்படையில் நிராகரித்த தாகக் காரணம் கற்பித்தனர். பின்னர் இது தொடர்பான மேன்முறையீடு தகவல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆணைக்குழு இதனை நன்கு பரிசீலித்தப்பின்னர் பொது மக்களின் நன்மைக்காக இத்தகவலை வெளியிட முடியுமென தீர்மானித்தது.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம் யாதெனில், அரச சேவைக்கு அமர்த்தப்படுகின்றவர்களின் சம்பளம் மற்றும் வேதனங்கள் பொது நிதியில் இருந்து வழங்கப்படுகின்றது என்பதாகும். ஆகவே, இது தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்கு பிரஜைகளுக்கு உரிமை உண்டு என ஆணைக்குழு தீர்மானித்தது. அதேபோல், அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்த சுங்கத் தீர்வையற்ற அனுமதிப் பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் எவை? அதற்கான சுங்க வரிச் சலுகை எவ்வளவு? அவ்வாறு கொண்டு வரப்பட்ட வாகனங்கள் கைமாறப் பட்டுள்ளதா? போன்றன தொடர்பில் குடிமகன் ஒருவன் குறித்த நிறுவனத்திற்கு விண்ணப்பத்தை சமர்ப்பித்து தகவல்களைப் பெற்றுக் கொண்டிருந்ததோடு அதன் மூலம் நாட்டுக்கு இல்லாமல் போன வருமானம் தொடர்பிலான செய்தி ஒன்றும் தேசிய பத்திரிகைகளில் பிரசுரமானது.

அதேபோல் அமைச்சர்களின் வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் தொடர்பான தவவல்களை சிறப்புரிமை என்ற தத்துவத்தின் கீழ் பாது காப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆயினும், ஆணைக்குழு அமைச்சர்களின் வெளிநாட்டு பயணம் பொது நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றபோது அது தொடர்பான தகவல்கள் வழங்கப்பட வேண்டும் என தீர்மானித்தது. இத்தகைய சந்தர்ப்பங்களில் பாராளுமன்றம் மற்றும் மாகாண சபை என்பன அத்தகைய தகவல்களை வழங்குதல் நிறுவனச் செயற்பாட்டினை எந்தளவுக்குப் பாதிக்கும் என்பது தொடர்பாக தகவல் கோருவோருக்குத் தெளிவுப்படுத்த வேண் டும். இந்தியாவிலும் இந்நடைமுறை பின்பற்றப்படுகின்றது. இச் சட்டம் சர்வதேச தரப்படுத்தலில் முன்னிலையில் காணப்படுவதற்கு பிறிதொரு காரணம், அரச நிதியினை கையாளும் தனியார், அரச சார்பற்ற நிறுவனங்களையும் இச்சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிவதாகும். வெறுமனே, இலங்கை அரசாங்கத்தின் நிதியினை மாத்திரமன்றி, வெளிநாட்டு அரசாங்கத்தின் நிதியினை கையாளும் நிறுவனங்களையும் கேள்விக்குட்படுத்த முடியும். உதாரணமாக, நோர்வே அரசின் நிதியுதவியினை பெறும் அரச நிறுவனங்களை அந்த நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற் பாடுகள் என்ன என்பது தொடர்பான தகவல்களைக் கோர முடியும். இவ்வேற்பாடுகள் இந்தியாவின் தகவல் அறியும் சட்டத்தில் கூட இல்லை. அங்கு இந்திய அரசின் நிதியினை கையாளும் நிறுவனங்களை மாத்திரமே கேள்விக்குட்படுத்த முடியும். இதன் காரணமாக இலங்கை யின் தகவல் அறியும் சட்டம் ஒரு படி மேலோங்கி நிற்கின்றது.

பிரஜைகள் ஆட்சி முறை செயற்பாடுகளிலும் அபிவிருத்தியிலும் தீர்மானமெடுத்தலிலும் மகிழ்ச்சியுடன் பற்கேற்பதற்கு இச்சட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவும். வேறுப்பட்ட நாடுகளில் மக்கள் எவ்வாறு மகிழ்ச்சியாக வாழுகின்றார்கள் என்பதனை அளவிடுவதற்கு இன்று உலக மகிழ்ச்சிக் குறியீடு காணப்படுகின்றது (World Happiness Index). அமெரிக்காவின் நியூயோர்க் நகரை தளமாகக் கொண்டு இயங்கும் நிலையான அபிவிருத்தி தீர்வுகள் வலையமைப்பு (Sustainable Development Solutions Networks) வெளியிட்ட 2018ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் மொத்தமாக 156 நாடுகளில் மக்கள் எந்தளவுக்கு மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள் என்பதனை ஆய்வு செய்துள்ளது. அதில் முதல் மூன்று இடங்களில் பின்லாந்து, நோர்வே மற்றும் டென்மார்க் என்பன காணப்படுகின்றன. இலங்கை 116ஆவது இடத்தில் காணப்படுகின்றது. இது மிகப்பெரிய பின்னடைவாகும்.

உலக மகிழ்ச்சி சுட்டெண் பின்வரும் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படுகின்றது. அவை வருமாறு:

1. தனிநபர் வருமானம்
2. சமூக ஒத்துழைப்பு மற்றும் ஆதரவு
3. வாழ்க்கை எதிர்பார்ப்பு மற்றும் தரமான சுகாதாரம்
4. சுதந்திரம்
5. ஊழல்
6. நம்பிக்கை மற்றும் பன்முகத்தன்மை

இங்கு நாம் விளங்கிக்கொள்ள வேண்டிய விடயம் யாதெனில், சுதந்திரமாக வாழ்தல், ஊழலை எதிர்த்தல், அரசாங்கத்தின் மீதும், மக்கள் மத்தியிலும் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புதல் என்பவற்றுக்கு தகவல் அறியும் சட்டம் பெரிதும் அவசியமாகும். அந்தவகையில், தனிநபர் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதில் தகவல் அறியும் உரிமைக்கு முக்கிய இடமுண்டு. அதேபோல், உலகப் போட்டித்தன்மை குறியீடுகள் (World Competitiveness Index) தொடர்பான மதிப்பீடும் ஒரு நாட்டின் அரசாங்கத்தினதும் அதன் நிறுவனங்களினதும் தரத்தினை அளவீடு செய்வதுடன், இது உலகில் புகழ்ப்பெற்ற அளவீடாகக் காணப்படுகின்றது. உலக பொருளாதார ஒன்றியத்தினால் (World Economic Forum) மேற்கொள்ளப்படும் இந்த மதிப்பீட்டில் பொது நிறுவனங்களின் தரம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கட்டமைப்பு, சுகாதாரம், ஆரம்பக்கல்வி, புத்தாக்கம், பேரினப் பொருளாதாரம், உயர் கல்வி மற்றும் பயிற்சி போன்ற 12 பிரதான தலைப்புகளின் கீழ் ஒவ்வொரு நாடும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படுகின்றது.

மேற்கூறிய ஒவ்வொரு தலைப்புகளுக்கும் தனித்தனி தரப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அதன்படி 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் 137 நாடுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் மேற்கூறிய 12 விடயங்கள் தொடர்பான ஒட்டுமொத்த புள்ளிகளின் அடிப்படையில் இலங்கை 85ஆவது இடத்தினைப் பெற்றுள்ளது. பொது நிறுவனங்களின் தரம் தொடர்பான தரப்படுத்தலில் 77ஆவது இடத்தினையும், அரசாங்கத்தின் கொள்கையாக்கத்தில் வெளிப் படைத்தன்மை என்ற தரப்படுத்தலில் 109ஆவது இடத்தினையும் வினைத்திறன் மிக்க வகையில் அரசாங்க நிதியினை செலவிடல் தொடர்பான தரப்படுத்தலில் 99ஆவது இடத்தினையும் பெற்றுள்ளது. மேலும், இவ்வறிக்கையில் இலங்கையில் வியாபாரம் செய்வதற்குத் தடையாக இருக்கும் காரணிகளில் வினைத்திறனற்ற அரச பொது நிர்வாகமும் அதிகரித்த ஊழல் மோசடியும் பிரதான இடத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதேபோல், உலக வங்கியினால் வருடாந்தம் ஆட்சி முறை தொடர்பாக மேற்கொள்ளப்படும் தரப்படுத்தல் இன்று ஒரு நாட்டின் ஆட்சி முறையின் பிரச்சினைகளை, தரத்தினை அறிந்துக்கொள்வதற்குப் பெரிதும் துணைபுரிகின்றது. அதில் பின்வரும் ஆறு முக்கிய குறிகாட்டிகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

அவை முறையே,

- பொறுப்புக்கூறுதல்.
- அரசியல் ஸ்திரத்தன்மையும் வன்முறைகள் இன்மையும்.
- அரசாங்கத்தின் வினைத்திறன்.
- அரச நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் தரம்.
- சட்டத்தின் ஆட்சி.
- ஊழலைக் கட்டுப்படுத்தல்.

இத்தரப்படுத்தலில் இலங்கை பெரிதும் பின்னடைந்த நிலையிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது. காரணம் மேற்கூறிய விடயங்களில் முன்னேற்றம் காணப்படாமையாகும். ஆகவே, தகவல் அறியும் சட்டம் ஆட்சி முறையின் தரத்தினை உயர்த்த சிறந்ததொரு ஆயுதமாகும். அதனை சரியாகப் பயன்படுத்தினால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் முன்னேற்றம் காண முடியும் என்பதில் ஐயமில்லை. அதேபோல், ஜேர்மனியை தளமாகக் கொண்டு ஊழலுக்கு எதிராக செயற்படும் டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெசனல் (Transparency International, 2017) நிறுவனம் வெளியிட்டுள்ள ஊழல் தொடர்பான அறிக்கையில் (2017ஆம் ஆண்டு) இலங்கை 91ஆவது இடத்தில் காணப்பட்டது. 2018ஆம் ஆண்டு அறிக்கையில் இலங்கை 89ஆவது இடத்தினைப் பிடித்தது. இதற்கு தகவல் அறியும் உரிமைச் சட்டமும் செல்வாக்கு செலுத்தியுள்ளது எனலாம். இந்த மதிப்பீடு 180 நாடுகளை மையமாகக் கொண்டு இடம்பெற்றுள்ளது. இலங்கையின் நிலை மிகமோசமான ஊழலை காட்டுகின்றது. முதல் ஐந்து இடங்களில் நியூசிலாந்து, டென்மார்க், பின்லாந்து, நோர்வே, சுவிட்சர்லாந்து ஆகியன காணப்படுகின்றன.

### இந்த சட்டத்தின் அமுலாக்கத்தினை ஏனைய சட்டங்கள் கட்டுப் படுத்துமா?

அரசியலமைப்பின் 14ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவலுக்கான உரிமை மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்பவற்றுடன் இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள 105 வேறுப்பட்ட சட்டங்கள் முரண்பட வாய்ப் பிருப்பதாக அல்லது முரண்படுவதாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வொன்றின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கையில் நடைமுறையில் இருக்கின்ற சட்டங்கள் எந்தளவுக்கு தகவல் அறியும் உரிமை சட்டத்துடன் ஒத்து நிற்கின்றது என்பது தொடர்பாக மேற்கொண்ட ஆய்வின் போதே இவ்விடயம் அடையாளம் காணப்பட்டுள்ளது (UNDP, 2107). இது தொடர்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பல்வேறு பங்குதாரர் களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போது பின்வரும் சட்டங்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் அமுலாக்கத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக் களவு பாதிக்கும் என குறிப்பிட்டுள்ளது.

- உத்தியோகபூர்வ இரகசிய சட்டம் (இல. 32, 1955)
- பொது மக்கள் பாதுகாப்பு சட்டம்
- தேசிய ஆவண காப்பகச் சட்டம் (இல. 48, 1973)
- சொத்து மற்றும் உடமைகளை வெளிப்படுத்தும் சட்டம் (இல. 1, 1975)
- பொது ஒப்பந்தங்கள் சட்டம் (இல. 3, 1978)
- இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழு சட்டம் (இல. 35, 2002)
- மத்திய சுற்றாடல் அதிகாரசபை சட்டம் (இல. 47, 1980)
- நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டம் (இல. 9, 2003)

இத்தகைய சட்டங்களைத் திருத்துவதற்கான தேவை காணப்படுகின்றது என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆயினும், ஒவ்வொரு சட்டத்தையும் திருத்துவதென்பது நடைமுறையில் கடினமான காரியமாகும். ஆகவே, எந்த சட்டம் RTI மீது அதிக பாதிப்பினை அல்லது அதன் வெற்றிகரமான செயற்பாட்டிற்குத் தடையாக இருக்கின்றதோ அவற்றை திருத்துவது பெரிதும் அவசியமாகும். அதன் மூலம் இச்சட்டம் இன்னும் பல வழிகளில் பிரஜைகளுக்குப் பயன்தருவதாக அமையும்.

## இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டம்: சர்வதேசத் தரப்படுத்தல்

கனடா நாட்டினை மையமாகக் கொண்டு இயங்கும் சட்டம் மற்றும் ஜனநாயகத்துக்கான நிறுவனத்தின் 2016ஆம் ஆண்டு தகவல்களின்படி இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் உலகத்தரப்படுத்தலில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுள்ளது. மொத்த புள்ளிகளான 150இல் இலங்கை 131 புள்ளிகளைப் பெற்றுள்ளது. பின்வரும் அடிப்படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலேயே புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2**

சர்வதேச தரப்படுத்தலில் இலங்கையின் தகவல் அறியும் சட்டம், 2016

| புள்ளி வழங்கும் பிரிவுகள் | ஆகக்கூடிய புள்ளிகள் | வழங்கப்பட்ட புள்ளிகள் |
|---|---|---|
| தகவலை அணுகுவதற்கான உரிமை | 06 | 05 |
| சட்டத்தின் உள்ளடக்கம் | 30 | 28 |
| தகவல் கோருவதற்கான நடைமுறை | 30 | 26 |
| தகவல்களை மறுத்தல் | 30 | 23 |
| முறைப்பாட்டு நடைமுறைகள் | 30 | 29 |
| தடைகள் மற்றும் ஒப்புதல்கள் | 08 | 04 |
| சட்டத்தினை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் | 16 | 16 |
| **மொத்தம்** | **150** | **131** |

ஆதாரம் : Center for Law and Democracy, Canada, 2016.

**அட்டவணை: 3**

சர்வதேச தரப்படுத்தலில் அதிக புள்ளிகளைப் பெற்ற முதல் 10 நாடுகள் 2018

| நாடுகள் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| ஆப்கானிஸ்தான் | 139 |
| மெக்சிகோ | 136 |
| சேர்பியா | 135 |
| இலங்கை | 131 |
| ஸ்லோவேனியா | 129 |
| அல்பேனியா | 127 |
| இந்தியா | 127 |
| குரோசியா | 126 |
| லைபீரியா | 124 |
| எல் சல்வடோர் | 122 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரம் : Center for Law and Democracy, Canada, 2018.

**அட்டவணை: 4**

மிகக் குறைந்த புள்ளிகளைப் பெற்ற நாடுகள் 2018

| நாடுகள் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| ஒஸ்ட்ரியா | 33 |
| பாலோ | 33 |
| லைசென்ஸ்டீன் | 39 |
| பிலிபெயின்ஸ் | 46 |
| தஜகிஸ்தான் | 49 |
| ஈஸ்திதோர் | 51 |
| பெனின் | 52 |
| ஜேர்மனி | 54 |
| ஜோர்தான் | 56 |
| தாய்வான் | 57 |

ஆதாரம் : Center for Law and Democracy, Canada, 2018.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் – 4

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைச் சிறந்த முறையில் அமுல்படுத்துவதில் அரசாங்கம், பொது நிறுவனங்கள் மற்றும் பிரஜைகளின் வகிபங்கு

## The Role of Government, Public Institutions, and Citizens in Successfully Implementing Right to Information Act

உருப்படம் 5: ஆட்சி செயன்முறை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசாங்கத்தின் பங்கு**

இலங்கை போன்ற ஒரு ஜனநாயக நாட்டில் அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்படும் அமைப்பாகும். அரசாங்கத்தின் அமைப்பு முறை குறித்து மக்கள் எந்தளவுக்குத் தெளிவும், நம்பிக்கையும் கொண்டுள்ளனர் என்பதைப் பொறுத்தே அந்நாட்டில் நல்லதொரு அரசாங்கம் அமைய முடியும். மக்கள் விழிப்புணர்வற்ற பாமர நிலையில் இருக்கின்ற போது அங்கு நல்லதொரு ஆட்சி நிலவுவதற்கான வாய்ப்பு குறைவாகும். ஒரு அரசாங்கம் மக்களுடைய பணத்தின் மூலமாகவே இயங்குகின்றது என்ற உண்மையை மக்கள் மனதில் கொள்வது மிக அவசியமாகும். ஆகவே, மக்களுக்கு அதன் கொள்கைகள் தீர்மானங்கள் தொடர்பாக வெளிப்படைத்தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும் - அதற்கு தகவல் அறிவதற்கான உரிமை பெரிதும் துணை புரிகின்றது.

எனவே, நமது நாட்டில் தகவல் அறியும் சட்டத்தை அர்த்தமுள்ள முறையில் அமுல்படுத்தப்படுவதற்கு அரசாங்கம் பின்வரும் பொறுப்புக் களைக் கொண்டுள்ளது.

- சட்டத்தைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறைகளை வகுத்தல்.
- உதாரணமாக, ஆணைக்குழு, அதன் கட்டமைப்புகளை சக்திப்படுத்தல்.
- ஊழல் அற்ற வெளிப்படைத் தன்மையான நல்லாட்சி நிலவுவதற்கு ஏதுவாக மக்களுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்காக ஆவண செய்தல்.
- மக்கள் சிரமமின்றி தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதிவாய்ந்த உரிய உத்தியோகத்தர்களை நியமித்தல்.
- சட்டத்தைத் தாக்கமுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு போதுமான நிதியினை ஒதுக்குதல்.
- சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது குறித்து கண்காணிப்பு நடவடிக்கைகளை வகுப்பதுடன் மக்களுக்கு பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாட்டினையும் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச பொது நிறுவனங்களின் பொறுப்புக்கள்

அரசாங்கத்தின் சேவைகளை பொதுமக்களுக்குப் பெற்றுக்கொடுத்தல், மக்களிடம் இருந்து சேவைகளுக்கான கட்டணங்கள், வரிகளை அறவிடும் பொழுது நிறுவனங்கள் பொறுப்புடன் வெளிப்படையாக நடந்து கொள்ளுதல் அவசியமாகும். இவை அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டதாகக் காணப்படுகின்ற அதே நேரம் மக்களுக்குத் தேவையான உரிய சேவைகளை வழங்க வேண்டிய பொறுப்பினையும் கொண்டுள்ளன. எனவே, இந்த தகவல் அறியும் சட்டத்தினை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதில் பொது நிறுவனங்கள் பின்வரும் வகிபாகத்தினைக் கொண்டுள்ளன.

- இச்சட்டத்திற்கு அமைவாக ஒரு தனிநபருக்கு அவசியமான அல்லது சமுதாயத்தின் பொது நலன் கருதிய தகவல்களை வினைத்திறனுடன் வழங்க வேண்டிய கடமை பொது நிறுவனங்களுக்கு உண்டு. இத்தகவல்களை -
    1. முடியுமானளவு உரிய நேரத்தில் காலம் தாமதிக்காது வழங்கப்பட வேண்டும்.
    2. தகவலானது வேண்டப்படும் வடிவத்தில் வழங்கப்பட வேண்டும்.
    3. வேண்டப்படும் வடிவத்தில் வழங்க முடியாவிட்டால், தகவல்களை முழுமையாக பெற்றுக்கொள்ளக் கூடிய பொருத்தமான மாற்று வடிவில் வழங்கப்பட வேண்டும்.
    4. தகவலை வழங்க முடியாவிட்டால் அதற்கான உரிய காரணத்துடன் உரிய நேரத்தில் மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.
- மக்கள் தாம் விரும்பிய மொழியில் (தமிழ், சிங்களம் அல்லது ஆங்கிலம்) தொடர்பு கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருக்க வேண்டும்.
- மக்களுக்கு இலகுவாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலான தகவல் தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்தல். உதாரணமாக, தொலைபேசி, மின்னஞ்சல், இணையத்தளம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெக்ஸ், நிழற்பிரதி, அச்சுப்பிரதி போன்ற தொடர்பாடல் வசதிகளைக் கூறலாம்.

- பொதுமக்கள் - பொது நிறுவனங்களிடையே உறவுகளை மேம்படுத்தக் கூடிய வகையிலும் மற்றும் பொது நிறுவனங்களிடம் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையினை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் தங்கள் சேவைகளை வழங்குதல். உதாரணமாக, மக்களை வரவேற்கின்ற தன்மை மற்றும் உரையாடுகின்ற முறைகள் உறவை மேம்படுத்தகூடியதாக இருக்க வேண்டும்.
- மக்களால் விண்ணப்பிக்கப்பட்ட ஒரு தகவலை கோரப்பட்ட நிறுவனத்தால் வழங்கமுடியாத போது அதனை பெற்றுக்கொள்ளக் கூடிய வழிமுறைகளைக் கூறவேண்டிய பொறுப்பு ஒரு பொது நிறுவனத்திற்கு உண்டு.
- தகவல் அறியும் சட்டத்தின் ஏற்பாடுகள், அதன் நடைமுறை, அதன் வரையறைகள், மட்டுப்பாடுகள் குறித்த முழுமையான அறிவினை நிறுவனத் தலைவர், தகவல் அலுவலர், குறித்தளிக்கப்பட்ட அலுவலர் உட்பட நிறுவனத்தின் அலுவலர்கள் பெற்றிருக்க வேண்டும்.
- இச்சட்டத்திற்கு அமைவாக பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டிய அவசியமான விடயங்களை அலுவலகத்தில் மக்கள் பார்க்கக் கூடிய பொது இடங்களில் காட்சிப்படுத்த வேண்டும். உதாரணமாக, தகவல் அலுவலர், குறித்தளிக்கப்பட்ட அலுவலர், ஆணைக்குழுவினைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள், தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான கட்டண விபரங்கள் போன்றவை.
- வெளிப்படைத் தன்மையுடன் தகவல்களை வழங்குவதன் மூலம் ஊழலற்ற நல்லாட்சிக்கு வழிவகுக்கும் பொறுப்பு பொது நிறுவனங்களுக்கு உண்டு.
- ஒரு பொது நிறுவனத்தில் உள்ள அனைத்து அலுவலர்களும் வேண்டப்படுகின்ற நேரங்களில் மக்களுக்கான தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு தகவல் அலுவலருக்கு உதவுகின்ற பொறுப்பினைக் கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மக்கள் அசௌகரியமின்றி தகவலைப் பெற்றுக்கொள்வதினை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல் வேண்டும். உதாரணமாக, தகவல் அலுவலருக்கான உரிய வசதியுடன் கூடிய அறை, மக்களுக்கான இருக்கைகள், காத்திருப்புக் கூடம், மலசல கூடம் போன்ற வசதிகளைக் கூறலாம்.
- ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகளை உரிய நேரத்தில், உரிய வடிவத்தில் வழங்க வேண்டிய பொறுப்பினை பொது நிறுவனங்கள் கொண்டுள்ளன.

**பொது நிறுவனங்கள் பிரஜைகளின் மனக்குறைகளை எவ்வாறு கையாள்வது?**

பொது மக்களின் மனக்குறைகளைக் கேட்பது அரச நிறுவனங்களின் அடிப்படைக் கடமைப் பொறுப்பாகும். இது பொறுப்புள்ள, வெளிப்படைத் தன்மை கொண்ட அரசாங்கத்தைக் கட்டியெழுப்ப அடிப்படையானதாகும். அரச நிறுவனங்கள் பொது மக்களின் மனக்குறைகளைச் சரியான முறையில் கையாள்வதை சிவில் சமூக அமைப்புக்கள் கண்காணிக்க முடியும். இதற்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தினைப் பயன்படுத்தி உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தகவல் அறியும் சட்டத்தினைப் பயன்படுத்தி சிவில் அமைப்புக்கள் பின்வரும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்:-

1. ஒரு குறிப்பிட்ட மாதத்தில் அல்லது ஒரு வருடத்தில் பொது மக்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் அது தொடர்பான பிரதிகள் எல்லாவற்றையும் பெறுதல்.
2. ஒவ்வொரு முறைப்பாடுகள் தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.
3. நிர்வாக ஒழுங்கு விதிகள், செயன்முறைகள் மற்றும் பிரஜைகள் பட்டயத்தின்படி ஒவ்வொரு முறைப்பாடுகளையும் தீர்க்க வேண்டிய கால வரையறை.
4. குறித்த காலத்துக்குள் பிரஜைகளின் முறைபாடுகளுக்குப் பதில் அளிக்காவிடின் அரச அதிகாரிகளுக்கான தண்டனைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்காக ஏற்பட்ட கால தாமதத்திற்கான காரணம்.

6. ஒவ்வொரு முறைப்பாடு தொடர்பாகவும் அரச அதிகாரிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

**பிரஜைகளுக்குள்ள பொறுப்புக்கள்**

- தங்களுக்கு இருக்கின்ற வாக்குரிமையைப் பயன்படுத்தி பொருத்த மான, தகுதியான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வது பிரஜைகளின் பிரதான பொறுப்பாகும். நல்ல மக்கள் பிரதிநிதிகள் இருக்கின்ற போது தான் சிறந்த சட்டங்கள் உருவாகும். அதன் மூலம் நாட்டில் நல்லாட்சி நிலவும்.
- அரசாங்கத்தினால் உருவாக்கிப்படுகின்ற சட்டங்கள் நீதி நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதும் ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும். மற்றும் ஒரு நாட்டில் நல்ல சட்டங்கள் உருவாகுவதற்கு நேர்மையுள்ள, நடுநிலையாகச் செயற்படக் கூடிய, ஊழலற்ற மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும். இவை இரண்டும் ஒன்றை ஒன்று தங்கியுள்ளன என்பது, குறிப்பிடத்தக்கதாகும்.
- ஒரு அரசாங்கத்திற்கு இருக்க வேண்டிய தத்துவங்கள், அதிகாரங்கள், கடமைகள் குறித்த தெளிவு பிரஜைகளுக்கு இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இவ்வாறான தெளிவு மக்களுக்கு இருக்கின்ற போது தான் அரசாங்கமும் தனது பொறுப்பினை உணர்ந்து செயற்படும் நிலை ஏற்படும்.
- தகவல் அறிவது தமது உரிமை என்பதை மக்கள் உணர வேண்டும். மக்கள் அறியாமையில் இருக்கும் வரையில் நாட்டில் நீதியையும் நல்லாட்சியையும் நிலை நாட்டுவது பெரிதும் சவாலாக அமையும். எனவே, ஒவ்வொரு பிரஜையும் இதன் நடைமுறைகள் குறித்து தெளிவினைப் பெற்றிருப்பது இன்றியமையாததாகும்.
- பிரஜைகள் தாம் சார்ந்த சமூகம் எதிர்நோக்குகின்ற பிரச்சி னைகளை எடுத்துரைக்கின்ற பொறுப்பினையும் துணிவினையும் உணர்ந்திருப்பது அவசியமாகும். அத்துடன் தகவலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொள்வது, தகவல்களை பெற்றுக் கொள்வதால் ஏற்படு கின்ற சமூக நலன் குறித்த தெளிவினை ஒவ்வொரு பிரஜையும் பெற்றிருக்க வேண்டும்.

- அற்ப சலுகைகளை எதிர்பார்க்காது பொது நலனை அடிப்படை யாகக் கொண்டு செயற்படுவது ஒவ்வொரு பிரஜையினதும் பொறுப்பாகும். இன்றைய காலச் சூழலில் மலையகத்தில் அரசாங்கத்தின் ஒதுக்கீடுகள் ஒரு சில நபர்களை அல்லது ஒரு குழுமத்துக்கு மாத்திரம் சென்றடைகின்ற யதார்த்த நிலைமைகள் காணப்படுகின்றன. ஒரு சிலரே அரச வளங்களை அனுப விப்பதனைக் காண முடிகின்றது. இதில் இனத்துவக் காரணிகள் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே, இச்சட்டத்தினை நல்லதொரு வாய்ப்பாகப் பயன்படுத்தி அரச வள ஒதுக்கீட்டின் உண்மைத் தன்மையினையும் அதன் வரையறைகளையும் அறிந்து கொள்வது மிக அடிப்படையான ஒன்றாகும். அரச சேவை வழங்கலில் சமத்துவத்தினைக் கொண்டு வருவதற்கு இச்சட்டம் வழிசமைக்கும் என்பதனை நாம் மனங்கொள்ள வேண்டும்.
- தகவல் உத்தியோகத்தர் இலகுவாக தகவல்களைப் பெற்றுத் தருவதற்கு உதவுகின்ற வகையில் விண்ணப்பத்தில் அவசியமான தரவுகளை உள்ளடக்குவது வரவேற்கத்தக்கது.
- பிரஜைகள் அரச உத்தியோகத்தர்களுடன் முரண்பாடுகளை ஏற்படுத்துவதைத் தவிர்த்து சுமுகமான உறவினை மேம்படுத்துவது அவசியமாகும். வேண்டுமென்று பழிவாங்கும் எண்ணங்களைத் தவிர்த்து அவசியமான தகவலைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் சமூகத்தின் பொது நலனைக் கருத்திற் கொண்டு செயற்படுவது இச்சட்டம் முன்னோக்கி செல்வதற்கு வழிவகுக்கும்.
- குறுகிய எண்ணம் கொண்ட கட்சி அரசியலுக்கு முடியுமானளவு துணை போகாதிருப்பது நல்லாட்சிக்கு வழிவகுக்கும்.
- உலகில் உள்ள ஏனைய நாடுகளில் இந்த தகவல் அறியும் சட்டம் எவ்வாறு மக்கள் நலன் சார்பாகச் செயற்படுகின்றது என்பதை அறிந்திருப்பது நமது நாட்டிலும் இச்சட்டம் முன்னோக்கி செல்வதற்கு வழிவகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் உரிய கட்டணங்களைச் செலுத்துவதும் ஒவ்வொரு பிரஜைகளினதும் கடமையாகும். அதனைச் சரியான முறையில் செய்யும் போதே அரசாங்கத்திடமிருந்தும் அதன் நிறுவனங்களிடமிருந்தும் உரிமையுடன் தகவல்களையும் வெளிப்படைத்தன்மையினையும் மற்றும் பொறுப்புக்கூறுதலையும் கோர முடியும்.
- உண்மையான ஜனநாயகக் கட்டமைப்பின் மகத்துவம் மற்றும் அரசாங்கத்தின் கடமைகள் பொறுப்புக்கள் குறித்த தெளிவினை இளம் தலைமுறையினருக்கும் எதிர்கால சமூகத்திற்கும் எடுத்து செல்லவேண்டிய பொறுப்பு தற்கால சந்ததியினரின் கைகளிலேயே உள்ளது. எனவே இந்த ஜனநாயகக் கடமையினை ஒவ்வொரு பிரஜையும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

**வெற்றிக் கதை - 7**

**15 வருடங்களின் பின்னர் குடிநீரைப் பெற்றுக்கொண்ட கதை**

ரத்மலியா கிராமம் புத்தளம் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஒரு கிராமமாகும். இக்கிராமத்தில் சுமார் 800 குடும்பங்கள் வசிக் கின்றன. அவர்களின் பெரும்பாலானோர் யுத்தம் காரணமாக மன்னார், யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்து இக்கிராமத்தில் குடியேறியுள்ளனர். இக்கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் 15 வருடங்களுக்கு முன்னர் நீர்க்குழாய்கள் பொருத்தப் பட்டன. என்றாலும், குறிப்பிட்டபடி இக்கிராமத்திற்கு குறுகிய காலம் மாத்திரமே நீர் விநியோகம் இடம்பெற்றது. அதன் பின்னர் எப்போதாவது தான் இக்குழாய்கள் ஊடாக நீர் வழங்கப்பட்டது. ஆனால், அந்த நீர் பருகவோ அல்லது ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்தவோ தகுதி யற்றதாகக் காணப்பட்டது. இது இக்கிராம மக்கள் எதிர்கொண்ட பிரதான பிரச்சினையாகும். குறிப்பாக, பெண்கள் குடி நீரைப் பெற்றுக்கொள் வதற்காக நீண்ட தூரம் செல்ல வேண்டியிருந்தது. அத்துடன், குடிநீர் பிரச்சினை இக்கிராமத்தின் ஏனைய செயற்பாடுகளையும் பெரியளவில் பாதித்தது. இப்பிரச்சினைக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிராமத்தின் பெண்கள் அமைப்பொன்று பல முயற்சிகளில் ஈடுப் பட்டது. சுமார் ஒரு தசாப்த காலமாகியும் வெற்றியளிக்கவில்லை.

இவ்வாறான நிலையில் 2018ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சிவில் அமைப்பொன்று தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான செயலமர்வினை ரத்மலியா கிராமத்தில் நடத்தியது. இதில் இக்கிரா மத்தின் அனைத்துப் பெண்களும் ஆர்வத்துடன் பங்கேற்றதுடன், நாளாந்தப் பிரச் சினைகளுக்குத் தீர்வுகாண எவ்வாறு இச்சட்டத்தினைப் பயன்படுத்துவது என்பது தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது. அதன் பின்னர் தகவலறியும் சட்டத்தினைப் பயன்படுத்தி குடிநீர் பிரச்சி னைக்குத் தீர்வுகாண முடியும் என இக்கிராம மக்கள் நம்பியதுடன், குடிநீ ர் பிரச்சினைக்காக தகவல் கோரிக்கை ஒன்றினை 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புத்தளம் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிடம் வழங்கியது. இவ்விண்ணப்பத்தில் பின்வரும் தகவல்கள் கோரப்பட்டன.

1. ரத்மலியா குடிநீர் திட்டத்திற்கு எந்த திட்டத்தின் கீழ் நிதி ஒதுக் கப்பட்டது?
2. இக்குடிநீர் திட்டத்திற்கு நீர் பெற்றுக்கொள்ளப்படும் நீர் ஊற்று எது?
3. இக்கருத்திட்டத்தின் கீழ் தொடர்ச்சியாக தடையின்றி நீரைப் பெற்றுக்கொள்ள முடியுமா?
4. இக்கருத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நீர் தரமானதா?
5. இக்கருத்திட்டத்தின் கீழ் போதியளவில் நீரை வழங்க முடியுமா?

இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம் யாதெனில், இவ் விண்ணப்பம் வழங்கப்பட்டு சுமார் இரண்டு வாரங்களில் நீண்ட காலம் நீர் வராதிருந்த குழாய்களில் சுத்தமான நீர் வரத்தொடங்கியமையாகும். இப்போது இக்கிராமத்திற்கு 24 மணித்தியாலமும் தடையின்றி நீர் கிடைப்பதுடன், நீண்டகால பிரச்சினைக்குத் தகவலறியும் உரிமைச் சட்டமே முற்றுப்புள்ளி வைத்துள்ளது என இக்கிராம மக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இச்சம்பவமானது இச்சட்டத்தின் பலத்தினைக் காட்டுகின்றது.

(ஆதாரம்: தகவல் சஞ்சிகை, 13.07.2018. நிதி மற்றும் வெகுஜன அமைச்சின் உத்தியோகபூர்வப் பத்திரிக்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் சக்தி**

இந்தியாவின் செம்பூர் என்னும் கிராமத்தில் நேர்மையாகப் பணியாற்றிய சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரியை ஒரு வருடத்தில் இடமாற்றம் செய்ய எடுத்த தீர்மானத்தை மக்கள் தகவல் அறியும் சட்டத்தின் மூலம் மாற்றியுள்ளனர். குப்பையில்லாத கிராமத்தை உருவாக்கி மக்களின் நன்மதிப்பைப் பெற்ற நேர்மையான, திறமையான அதிகாரியாக திரு. ராம்குமார் செயற்பட்டார். அவரின் இடமாற்றத்தைத் தடுக்க செம்பூர் பிரஜைகள் ஒன்றியம் பின்வரும் தகவல்களைச் சுற்றாடல் திணைக் களத்திடம் கோரியது.

1. அவரை இடமாற்றம் செய்ய பணித்த அதிகாரி.
2. சட்டப்படி தகுந்த காரணங்கள் இன்றி மூன்று வருடங்களுக்குள் ஒரு அதிகாரியை இடமாற்றம் செய்ய முடியாது. அவ்வாறெனின் இந்த அதிகாரியை இடமாற்றம் செய்யக் காரணம்.
3. . இது ஏதாவது சட்டத்தை மீறும் செயலா?
4. இடமாற்றம் தொடர்பான கடிதம் ஏனைய ஆவணங்களின் பிரதிகள் என்பன பெறப்பட்டன.
5. இச்செயன்முறையினை ஆரம்பித்த ஒரு சில வாரங்களிலேயே ராம்குமாரின் இடமாற்றம் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது தகவல் அறியும் உரிமைச் சட்டம் மக்களுக்கு வழங்கியுள்ள வலிமையை காட்டுகின்றது.

**படிப்பினை**

மக்களுக்கு நேர்மையாக இருந்து, சிறந்த சேவைகளை வழங்கும் அரச அதிகாரிகளை அரசியல் மற்றும் வேறு காரணங்களால் திடீரென இடமாற்றம் செய்யும் போது அதனை மக்கள் இச்சட்டத்தின் மூலம் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள முடியும் என்பதையே இந்த உதாரணம் காட்டுகின்றது. மலையகத்திலும் தோட்டங்கள் தோறும் பிரஜைகள் ஒன்றியம் அமைத்து இச்சட்டத்தின் பயனை அனுபவிக்க முடியும். இதன் மூலம் அரச நிறுவனங்களால் காட்டப்படும் பாகுபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை, வள வீண்விரயத்தினை மற்றும் மோசடிகளை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும்.

1990ஆம் ஆண்டு இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் தகவல் அறியும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் இந்தியா முழுவதற்குமான சட்டமாக 2005ஆம் ஆண்டு நிறைவேற்றப் பட்டது. இந்தியாவில் வருடாந்தம் 46 மில்லியன் இந்தியர்கள் தகவல் அறியும் உரிமை (RTI - Right to Information) கோரிக்கைகளை சமர்ப்பிப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. அவை பெரும்பாலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும், பிற்படுத்தப்பட்ட அல்லது சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழும் அல்லது தலித் மக்களே இத்தகைய கோரிக்கைகளை சமர்ப்பிப்பதாகக் கூறப்படுகின்றது. உதாரணமாக, புது டெல்லியில் சேரிப்புறங்களில் வாழ்ந்த ஏழை மக்களுக்கான உலர் உணவு மானியம் வழங்குவதில் நீண்டகாலம் தொடர்ந்த ஊழலை RTI மூலமாக மக்கள் வெளிக்கொண்டு வந்தனர். ஏழை மக்களினதும் சிவில் அமைப்புக்களினதும் நீண்ட கால முயற்சிகள் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வெற்றியளித்தது. இந்த ஊழல் கடை உரிமையாளர்களுக்கும் உணவு விநியோகம் செய்யும் திணைக்களங்களுக்கும் இடையே நீண்ட காலம் இடம்பெற்று வந்துள்ளது. இது தொடர்பான தகவல்களை RTI சட்டத்தின் மூலம் பெற்று இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் வெறுமனே தகவல்களை மாத்திரம் சேகரிக்காது சிவில் அமைப்புகளுடன் இணைந்து பொது மக்களின் குறைகளை கேட்டல், ஊழல் மோசடிகளை ஊடகங்களுக்குக் கொண்டு செல்லுதல் ஆகிய செயற்பாடுகளையும் மேற்கொண்டனர். பொது வில், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அப்பாவி மக்கள் மீது அதிகாரம் படைத்தவர்கள் அச்சுறுத்தல்களை மேற்கொள்வர். காரணம் RTI சட்டம் அதிகாரம் படைத்தவர்களின் ஊழல் செயற்பாடுகளுக்கு தடையாக, அந்தரங்க கொடுக்கல் வாங்கல்களுக்கு அச்சுறுத்தலாக அமைவதாகும். அதிகாரம் இல்லாத, அதிகாரம் படைத்தவர்களுடன் தொடர்புகள், உறவுகள் இல்லாதவர்கள் தொடர்ந்தும் அரச சேவை வழங்களில் பாதிக்கப்படுவதுடன் அவர்கள் தமது அடிப்படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகளை அனுபவிப்பதற்காக, தமது தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஊழலுக்கு மற்றும் அதிகார துஷ்பிரயோகத்திற்கு எதிராக செயற்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் RTI பிரஜைகளின் போராட்டங்களுக்கு பெரிதும் கைக்கொடுக்கின்றது.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம் யாதெனின், இச்சட்டத்தின் மூலம் மோசடிகள் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான தகவல்களை பிரஜைகள் பெற்றதன் பின்னர் அதற்கான பரிகாரம் பெறும் பொறிமுறை ஒன்று அமைக்கப்பட வேண்டும். இல்லாவிடின், வெறுமனே தகவல்களை வழங்குவதில் மாத்திரம் இச்சட்டத்தின் முழுமையான பயனைப் பெற்றுக்கொள்ள முடியாது. தகவலைப் பெற்றதன் பின்னர், அதனை அடிப்படையாகக் கொண்டு அவசியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

### தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊழலை இல்லாதொழிக்குமா?

வெறுமனே வெளிப்படைத் தன்மையினைக் கொண்டு வருவதன் மூலம் ஊழலை ஒழிக்க முடியாது என்பதனை நாம் புரிந்துக்கொள்வது அவசியமாகும். அப்பயணத்தை நோக்கிய முதலாவது படியே இச் சட்டமாகும். அதற்கான ஒரு கருவியாக அல்லது ஆயுதமாக இதனை குறிப்பிட முடியும். அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான எல்லாத் தகவல்களையும் மக்களுக்கு வழங்குவதன் மூலம், அறிவுறுத்துவதன் மூலம், காட்சிப்படுத்துவதன் மூலம் அரசாங்கம் என்ன செய்கின்றது என்பதனை மக்கள் அறிந்துகொள்ளும் வாய்ப்புக்கிட்டுகின்றது. ஆகவே, தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊழலுக்கு தீர்வல்ல, மாறாக, அதனை நோக்கிய நீண்ட பயணத்திற்கான ஒரு ஆயுதம் மாத்திரமே ஆகும். எல்லாவற்றுக்கும் அப்பால், RTI அடித்தள மக்கள் மற்றும் சலுகைகள், சிறப்புரிமைகள் இல்லாத சாதாரண மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். சில இடங்களில் இன்று தகவல் மறுக்கப்படுகின்ற அரச நிறுவனங்களுக்கு பிரஜைகள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்துடன் சென்று அரச அதிகாரிகளின் தீர்மானங்களை சவாலுக்குட்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இதுவே இச்சட்டத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமாகும். இது ஏழை மக்கள் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது.

ஊழலை ஒழிப்பதற்கு இச்சட்டம் துணைபுரிய வேண்டுமாயின், அரச அதிகாரிகளின் எண்ணப்பாங்கு மாற்றப்பட வேண்டும். அரசாங்க இரகசியத்தைப் பேணுதல் என்ற கலாசாரத்தில் நீண்ட காலம் வாழ்ந்து பழகிய அரச அதிகாரிகளுக்கு உடனடியாக தகவல்களை வழங்குவது கடினமான காரியமாக அமையும். மறுபுறமாக, நீண்ட காலமாக அரசாங்கத் தகவல்கள் தொடர்பாக இரகசியத்தைப் பேணிவந்த அரச அதிகாரிகளின் அதிகாரத்தை தகவல் அறியும் உரிமைச் சட்டம் சவாலுக்குட்படுத்தும் போது, வெளிப்படைத் தன்மையினை, பொறுப்புக் கூறலைக் கோரும் போது அது பல எதிர்ப்புக்களை ஏற்படுத்தும். அதனை பல அரச நிறுவனங்களில் நாளாந்தம் காண முடியும். ஆகவே, இந்நடைமுறையினை மாற்றுவதில் பிரஜைகள், சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்குப் பங்குண்டு.

## தகவல் அறியும் உரிமை சட்டம் ஊழலைக் கட்டுப்படுத்த உதவுமா?

பொதுவில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறுதல் மற்றும் ஊழலுக்கான வாய்ப்பினைக் குறைக்கும் என்ற கருத்துக் காணப்படுகின்றது. ஆயினும், இது தொடர்பான அனுபவ ரீதியான ஆதாரங்கள் (Empirical evidence) மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. எவ்வாறாயினும், பல ஆய்வுகள் தகவலுக்கான உரிமை ஊழலைக் கட்டுப்படுத்துவதில் சாதகமான தாக்கத்தினை அல்லது தொடர்பினைக் கொண்டிருப்பதை அடையாளம் கண்டுள்ளன. இச் சட்டமானது பொதுச்சேவை வழங்கலை மேம்படுத்து வதுடன் பிரஜைகள் முழுமையாக பொது வாழ்வில் பங்கேற்பதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது. மோரி என்பாரின் கருத்துப்படி (2013) தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஏனைய உரிமைகளை கோருவதற்கான சக்திவாய்ந்த ஆயுதம் என குறிப்பிடுகின்றார். எவ்வாறாயினும், தகவலை அணுகுதல், பெற்றுக்கொள்வதற்கான உரிமையினை வழங் குதல் எந்தளவுக்கு ஊழலை ஒழிப்பதற்கான நிலையான நடவடிக்கை களை எடுக்க, மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள, பொதுச்சேவை வழங்கலை மேம்படுத்த உதவும் என்பது வேறு பல விடயங்களில் தங்கியுள்ளது என்பதனை மனங்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகள் வேறுபட்ட முடிவுகளைத் தருகின்றன. அந்தவகையில் இஸ்லாம் (2006) தகவல் வழங்குவதில் வெளிப்படைத் தன்மைப் பேணப்படுவதானது ஆட்சிமுறையில் ஏதேனும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றதா என்பது தொடர்பாக மேற்கொண்ட ஆய்வில் RTI சட்டத்தினைக் கொண்டுள்ள நாடுகளில் குறைந்தளவிலான ஊழல் காணப்படுவதாக அடையாளம் கண்டுள்ளார். ஆயினும், இம்முடிவில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. உதாரணமாக, தகவல் அறியும் உரிமைச் சட்டத் தினைக் கொண்டுள்ள இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் போன்ற நாடுகளில் அதிகளவிலான ஊழல் காணப்படுகின்றன. இவ்வாதமானது வட ஐரோப்பிய நாடுகள், மற்றும் சிங்கப்பூர், ஹொங்கொங் ஆகிய நாடுகளுக்குப் பொருந்தும். உலகின் புகழ் பெற்ற ஊழல் தொடர்பான ஆய்வாளர்களில் ஒருவராக கருதப்படும் ரொமேனிய நாட்டின் அரச றிவியல் பேராசிரியரான எலினா முஞ்சு பிப்பிடி (2013) தகவலுக்கான சுதந்திர சட்டமானது குறைந்த ஊழலுடன் தொடர்புப்பட்டிருப்பதுடன், ஊழலைக் கட்டுப்படுத்துவதிலும் சாதகமான தாக்கத்தினைக் கொண் டுள்ளதென வாதிடுகின்றார். சில ஆய்வுகள் ஊழலைக் கட்டுப்படுத்து வதில் RTI சட்டம் அமுல்படுத்தப்படும் காலம் தாக்கம் செலுத்துவதாக அடையாளம் கண்டுள்ளன. மிகப் பழைய RTI சட்டத்தைக் கொண் டுள்ள நாடுகள் குறைந்த ஊழலைக் கொண்டிருப்பதாக குறிப்பிடப் படுகின்றது.

அதேபோல் Cordis மற்றும் Warren (2014) ஆகியோர் அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்டு செய்த ஆய்வில் உறுதியான தகவல் அறியும் சட்டமானது ஊழலுக்கு எதிரான அதிகமான வழக்கு தாக்கல் செய்தல், தண்டனை வழங்குதல், குற்றவாளியாக்கப்படல் என்பவற்றுக்கு உதவு வதாக அடையாளம் கண்டுள்ளனர். சிலர் RTI சட்டம் பொறுப்புக் கூறலுக்கு அவசியமான ஏனைய நிபந்தனைகளான ஊடக சுதந்திரம், நீதியான, நியாயமான தேர்தல் என்பவற்றை உறுதிப் படுத்தும்போது ஊழலைக் கட்டுப்படுத்த உதவுமென வாதிடுகின்றனர். ஆயினும், நாம் விளங்கிக்கொள்ள வேண்டிய முக்கிய விடயம் யாதெனின், ஊழலைக் கட்டுப்படுத்துவதில் வெறுமனே RTI சட்டம் மாத்திரமன்றி ஏனைய காரணிகளும் செல்வாக்கு செலுத்தும் என்பதாகும். இச்சட்டம் வெளிப்படைத் தன்மையினை அரசாங்கத்தின் செயற்பாடுகளில் உறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய உதவுகின்றது. இதன் போது ஊடகங்கள் தொடந்தும் ஊழல் தொடர்பான செய்திகளை வெளியிடுவதுடன், அது பிரஜைகள் மத்தியில் ஊழல் தொடர்பான பரந்த விழிப்புணர்வினையும் புரிதலையும் ஏற்படுத்துகின்றன.

எவ்வாறாயினும், வெற்றிகரமான RTI அமுலாக்கமானது தரமான நிறுவன மற்றும் அரசியல் காரணிகளிலேயே தங்கியுள்ளது என்பது பல புகழ்பெற்ற ஆய்வுகளின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளன. பல அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளில் RTI சட்டம் உருவாக்கப்பட்ட பின்வரும் ஊழல் குறைவடையவில்லை என்பதற்கு மேற்கூறிய காரணிகள் பெரியளவிலான தாக்கத்தினை செலுத்துவதனைக் காணமுடியும். காரணம், இச்சட்டத்தின் வினைத்திறன் மிக்க அமுலாக்கமானது நிறுவன ஏற்பாடுகளிலேயே பெரிதும் தங்கியுள்ளது.

எவ்வாறாயினும், பல நாடுகளில் RTI சட்டம் மற்றும் ஊழல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விடய ஆய்வுகள் (Case studies) சாதகமான முடிவுகளைக் காட்டியுள்ளன. குறிப்பாக, தகவலுக்கான உரிமை பிரஜைகள் இலஞ்சத்தை எதிர்க்க, இலஞ்சம் வழங்காது சேவைகளைப் பெற, ஊழலின் வேறுபட்ட வடிவங்களை அடையாளம் காண, பொது நிதி துஷ்பிரயோகம் செய்யப்படுவதினை தடுக்க, அதிகாரத்தை, அரச வளங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதை தடுக்க, அத்தகைய செயற்பாடுகள் தொடர்பாக அரச நிறுவனங்களை கேள்விக்குட்படுத்த, தரமான சேவைகளைக்கோர, அபிவிருத்தித் திட்டங்களில் காணப்படும் ஊழல்களைத் தடுக்க உதவியுள்ளது. இதற்கு உதாரணமாக இந்தியா, பங்களாதேஷ், ரொமேனியா, இங்கிலாந்து, பிரேசில், மெக்சிக்கோ மற்றும் பல ஐரோப்பிய, மற்றும் ஆசிய நாடுகளைக் குறிப்பிடலாம்.

நிலையான அபிவிருத்தி இலக்குகளில் 16ஆவது இலக்கு நிலையான அபிவிருத்திக்காக சமாதானம் மற்றும் யாவரையும் உள்வாங்கும் சமூகத்தை ஊக்குவித்தல், யாவரும் நீதியினை அணுகுவதற்கான வாய்ப்பினை வழங்குதல், சகல மட்டங்களிலும் யாவரையும் உள்வாங்கும், வினைத்திறன் மிக்க மற்றும் பொறுப்புக்கூறும் நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல் என்பது தொடர்பானதாகும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள யாவரையும் உள்வாங்கும், வினைத்திறன் மிக்க, பொறுப்புக்கூறும் நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதற்கு தகவல் அறியும் உரிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் அவசியமாகும். பொறுப்புக்கூறுதலுக்கும் தகவல் அறியும் உரிமைக்கும் இடையில் நெருங்கிய தொடர்புண்டு என்பதனை நாம் மனங்கொள்ள வேண்டும். அந்த வகையில், இலங்கை நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அவசியமான வகையில் தரமான, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறுதல், சட்டத்தின் ஆட்சியை மதிக்கும், பக்கச்சார்பற்ற அரச நிறுவனங்களைக் கட்டியெழுப்ப வேண்டும். இது நிலையான அபிவிருத்தியை நோக்கிய நீண்ட பயணத்துக்கு அவசியமானதொரு முன் நிபந்தனை ஆகும். இதில் தகவல் அறியும் உரிமைச் சட்டமும் பயன்மிக்க சாதகமான மாற்றத்தினைக் கொண்டுவரும்.

**ஊழலைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

1. மிகவும் இறுக்கமான சட்ட ஏற்பாடு, சட்டங்கள், சட்டப் பொறி முறை காணப்படுதல்.
2. செயலூக்கத்துடன் தகவலை வழங்குதல்.
3. தகவலைக் கோருவதற்கான தெளிவான செயன்முறை மற்றும் தகவலை வழங்க கால எல்லையை வரையறை செய்தல்.
4. வினைத்திறன் மிக்க கண்காணிப்பு நிறுவனங்கள்: RTIயின் அமுலாக்கத்தினைப் பிரத்தியேகமாக கவனிக்க சிறப்பு கண்காணிப்பு நிறுவன ஏற்பாடுகள் அவசியமாகும். இவை சகல வளங்களையும் கொண்டவையாக அமைய வேண்டும்.
5. சிறந்த மேன்முறையீட்டு பொறிமுறை.
6. தகவல் அலுவலர்களுக்கு மற்றும் அரச அதிகாரிகளுக்கு தொடர்ச்சியான பயிற்சி.
7. சீரான பதிவுகள் மற்றும் தகவல் முகாமைத்துவம் இதற்கு இலத்திரனியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும்.
8. இலத்திரனியல் ஆட்சி முறையினை ஊக்குவித்தல் - ஊழல் குறைந்த மட்டத்தில் காணப்படும் பல நாடுகளில் அரசாங்க தகவல்கள் இலத்திரனியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வழங்கப்படுகின்றது. இதன் மூலம் பிரஜைகள் தகவல்களை மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவாக வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு கிட்டியுள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் இலங்கை உட்பட பல நாடுகளில் இலத்திரனியல் ஆட்சி முறையின் சில நடைமுறைகள் காணப்பட்டாலும், அது இன்னும் குழந்தைப் பருவத்திலேயே உள்ளது.

9. பிரஜைகள், ஊடகம், சிவில் சமூக அமைப்புகளுக்கு விழிப் புணர்வுகளை வழங்குதல்.

10. செயற்திறன் மதிப்பீடு - அரச நிறுவனங்கள் எந்தளவுக்கு தகவல் கோரிக்கைகளுக்கு பதில் வழங்குகின்றன, கிடைக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை, பதில் மறுக்கப்பட்ட விண்ணப் ங்கள் போன்ற விடயங்களை கண்காணிக்க, மதிப்பீடு செய்ய ஒவ்வொரு அரச நிறுவன மட்டத்திலும் ஒரு பொறிமுறையினை உருவாக்க வேண்டும். இத்தகைய, புள்ளிவிபரங்களை அரசாங்க நிறுவனங்கள் பேணுவதன் மூலம் இச்சட்டத்தின் தாக்கத்தினை சரியான முறையில் மதிப்பீடு செய்ய முடியும்.

11. உறுதியான சிவில் சமூகம் மற்றும் சுதந்திர ஊடகம்.

12. சுயாதீன நீதித்துறை, பாராளுமன்றக் குழுக்கள், கணக்காய்வுத் திணைக்களம் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு.

13. சிறந்த, அர்ப்பணிப்புள்ள, உறுதியான அரசியல் தலைமைத்துவம் மற்றும் அரசியல் விருப்பம்.

14. நிர்வாக நிறுவனங்களில் அரச அதிகாரிகளின் அர்ப்பணிப்பு, விருப்பம், மற்றும் ஒத்துழைப்பு.

அரசாங்கத்தின் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் திறந்தத் தன்மை காணப்படுவதானது பிரஜைகள் மத்தியில் அரசாங்கம் தொடர்பான நம்பிக்கையினை நேர்மையினைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு சூழ்நிலையினை உருவாக்கும். தகவல் என்பது ஜனநாயகத்திற்கான ஒட்சிசனாகும். இது தகவல் உரிமை தொடர்பான பிரபல்யமான கூற்றொன்றாகும். இந்த ஒட்சிசன் இல்லாமல் போகும் போது மனித உயிர் பிரிந்து விடுவதைப் போன்றே தகவல் எனும் ஒட்சிசன் இல்லா விடின் சமூகத்தில் ஜனநாயகம் மாண்டு விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுங்க வரியற்ற வாகனம்**

அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்குக் கிடைத்த சுங்கத் தீர்வையற்ற அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் எவை? அதற்கான சுங்க வரிச் சலுகை எவ்வளவு? அவ்வாறு கொண்டு வரப்பட்ட வாகனங்கள் கைமாற்றப்பட்டுள்ளதா? போன்றன தொடர்பில் குடிமகன் ஒருவன் குறித்த நிறுவனத்திற்கு விண்ணப்பத்தை சமர்ப்பித்து தகவல்களைப் பெற்றுக் கொண்டிருந்ததோடு அதன் மூலம் நாட்டுக்கு இல்லாமல் போன வருமானம் தொடர்பிலான செய்தி ஒன்றும் தேசிய பத்திரிகைகளில் பிரசுரமானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் – 5

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை வினைத்திறன் மிக்க வகையில் நடைமுறைப்படுத்தல்: சிவில் அமைப்புக்களின் வகிபங்கு

# The Role of Civil Society Organizations in Effectively Implementing Right to Information Act

## அறிமுகம்

தகவலறியும் உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டு ஜனவரி 2018ஆம் ஆண்டு வரையில் RTI ஆணைக்குழுவுக்கு 485 முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன. அவற்றில் அதிகமானவை கல்வி அமைச்சு மற்றும் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுடன் தொடர்புடையவையாகும். தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் அதிகமானவை சாதாரண மக்களால் மேற்கொள்ளப்பட்டவை என்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். இது இலங்கை தகவல் கலாசாரத்தினை நோக்கி செல்வதினைக் காட்டுகின்றது. காரணம், நீண்டகாலமாக தகவல் வழங்குதல் என்பது விலக்களிக்கப்பட்டதாகவும் தகவல் வழங்க மறுத்தல் என்பது நியாயமானதாகவும் கருதப்பட்டு வந்துள்ளது. இந்நிலை RTI மூலம் இன்று படிப்படியாக மாற்றமடைந்து வருகின்றது. தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைக்கு உத்தரவாதம் கிடைக்கும் போது அது ஏனைய அடிப்படை மனித உரிமைகளையும் பாதுகாக்கும் என்பதினை நாம் மனங்கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில், மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த பிரஜை ஒருவர் அக்மன என்ற பிரதேசத்தில் இடம் பெற்ற சட்டத்திற்குப் புறம்பான பாதை நிர்மாணம் தொடர்பான தகவல்களைக் கோரினார். குறிப்பாக, ஏன் சட்டத்துக்கு புறம்பான அந்த பாதை நிர்மாண வேலை அகற்றப் படவில்லை என்ற கேள்வியினை முன்வைத்தார். இது தொடர்பாக பாதை அபிவிருத்தி அதிகார சபை எடுத்த நடவடிக்கை என்ன? என்பன தொடர்பான தகவல்களைக் கோரி வீதி அதிகார சபையிடம் விண்ணப்பத்தை சமர்ப்பித்தார். குறித்த நபரின் விண்ணப்பத்தினைத் தொடர்ந்து பாதை அபிவிருத்தி அதிகார சபை பாதை நிர்மாண வேலையை அகற்றியது. ஆயினும், தகவல் கோரிக்கைக்கான பதிலை வழங்கவில்லை. ஆகவே, அந்நபர் RTI ஆணைக்குழுவுக்கு மேன்முறையீட்டைச் செய்தார். அதில் ஒரு வருடத்திற்கு மேலாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருந்த பாதை நிர்மாணத்தை ஏன் தனது கோரிக்கைக்குப் பின்னர் உடனடியாக அகற்றினர்? இது தொடர்பாக கொழும்பு மற்றும் மாகாண பாதை அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றுக்கிடையில் பகிரப்பட்ட தகவல்கள் என்ன என்பதனைக் கோரினார். இறுதியாக RTI ஆணைக்குழுவின் கட்டளைக்கிணங்க இத்தகவல்கள் வழங்கப்பட்டன. உண்மையில், இதுவரையில் தகவல் ஆணைக்குழு மேற்கொண்ட தலையீடுகள் வெற்றிகரமாகவே முடிவடைந்துள்ளன. அரச நிறுவனங்களும் இதன் கட்டளைகளை ஏற்றுக்கொண்டுள்ளன. இதற்கு ஆணைக்குழு கொண்டுள்ள அதிகாரமும் சுயாதீனத்தன்மையும் முக்கிய காரணமாகும்.

அதேபோல் பாணந்துறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள காணி ஒன்றில் மண் நிரப்புவதற்கான அனுமதியினை பாணந்துறை மாநகர சபை வழங்கியமை தொடர்பான விடயம். இது அப்பகுதியில் வெள்ளப் பெருக்கினை ஏற்படுத்தியதுடன், பொது வாழ்விற்கு இடையூறாக அமைந்தது. ஆகவே, எந்த அடிப்படையில் இக்காணியில் மண் நிரப்புவதற்கான அனுமதியினை மாநகரசபை வழங்கியது என்ற தக வல்களை அப்பிரதேச மக்கள் கோரினர். ஆயினும், தகவல் வழங்கப்பட வில்லை. பின்னர் தகவல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைபாட்டினைத் தொடர்ந்து பாணந்துறை மாநகர சபை சகல தக வல்களையும் வழங்க வேண்டியேற்பட்டது. இவ்வுதாரணங்களின் மூலம் பின்வரும் விடயங்களை விளங்கிக்கொள்ள முடியும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பிரஜைகள் இச்சட்டத்தை தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகப் பயன்படுத்த முடியும்.

2. பொது நலன்களுக்காகப் பயன்படுத்த முடியும்.

3. அரச அதிகாரிகளும் தமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக் காற்று நடவடிக்கைகள், இடமாற்றம், பணி நிறுத்தம், பணி இடை நிறுத்தம் தொடர்பான தகவல்களைப் பெற இச்சட்டத்தைப் பயன்படுத்த முடியும். அத்துடன்,

- அவரை ஏன் பாடசாலைக்கு அனுமதிக்கவில்லை அல்லது ஏன் அனுமதி மறுக்கப்பட்டது?
- ஏன் விவசாய பயிர்களுக்கு நீர் இல்லை?
- யாராவது எமது பிரதேசத்தில் உடைந்துள்ள பாதையை சீரமைப்பார்களா?
- யாருடைய அனுமதியின் கீழ் அவர்கள் மணல் அகழ்கின்றார்கள்?
- மரங்களை வெட்டுவதற்கு யார் அவர்களுக்கு அனுமதி வழங்கியது?
- பொது மக்களின் குடியிருப்புக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய இடத்தில் ஹோட்டல்களைக் கட்டுவதற்கு யார் அனுமதி வழங்கியது?
- மண்சரிவை ஏற்படுத்தக் கூடிய இடத்தில் யார் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடுகின்றனர்? அதன் பின்னனியில் யார் இருக்கின்றனர்?
- உங்கள் பிரதேசத்தில் இடம்பெறும் கார்பெட் பாதை மற்றும் கொங்றீட் பாதை நிர்மாண திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தராதரங்கள் பின்பற்றப்படுகின்றதா?

இது தொடர்பான தகவல்களை RTI மூலம் தெரிந்துக் கொள்வதற்கு உங்களுக்கு உரிமையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவில் சமூக அமைப்புகளின் பொறுப்புக்கள்**

1. தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக விழிப்புணர்வு கல்வித் திட்டங்களை மேற்கொள்ளுதல், இச்சட்டத்தின் மூலம் தகவல்களைப் பெற மக்களை அணிதிரட்டல், குழுக்களை உருவாக்குதல், சக்திப்படுத்தல்.

2. சிவில் அமைப்புகள் பொதுச் சேவை வழங்கும் செயற்பாடுகளில் மறைமுகமாக தாக்கம் செலுத்துவதனால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவன அடிப்படைகளை வழங்குதல், வினைத்திறன் மற்றும் பொறுப்புக் கூறலை அதிகரித்தல்.

3. கிராமிய அல்லது தோட்ட மட்டத்தில் சிவில் அமைப்புகள் அல்லது மக்கள் மைய அமைப்புகள் தகவல் அறியும் உரிமையினைப் பயன்படுத்தி கூட்டுச் செயற்பாடுகள் ஊடாக, சமூக மட்ட குழுக்கள் ஊடாக அடிப்படை தேவைகளான சுகாதாரம், கல்வி மற்றும் ஏனைய சேமநல வசதிகளை மேம்படுத்த முடியும்.

4. சிவில் அமைப்புகள் பிரஜைகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்தவும் அதற்கான பேரம் பேசுதலை மேற்கொள்ளும் வினைத் திறன் மிக்க கருவியாகச் செயற்பட முடியும். மக்களின் பிரச்சினைகளை அறிந்து அவற்றை அரசாங்க நிறுவனங்களிடம் கொண்டு செல்லுதல், அதற்கான தகவல்களைப் பெறுவதன் மூலம் மக்கள் சேவைகளை நிறைவேற்ற முடியும்.

5. சிவில் சமூக அமைப்புகள் தகவல் அறியும் உரிமை சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம், அதன் நிறுவனங்கள், அவற்றின் செயற்பாடுகள், செயற்திறன் என்பவற்றைக் கண்காணிக்க முடியும்.

6. இச்சட்டத்தினைப் பயன்படுத்தி சிவில் அமைப்புக்கள் தற்போதைய சட்டதிட்டங்கள், பொதுச்செலவுகள், வரவு செலவுத் திட்டங்கள், கொள்கை அமுலாக்கம், அரச கொள்கைகளின் சாதனைகள், அதன் குறைபாடுகள், சட்டத்தின் ஆட்சி, நல்லாட்சி, மனித உரிமைகள் தொடர்பான தகவல்களைப் பெற்று அவற்றை சாதாரண மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் பரப்ப முடியும். அதன் மூலம் கிராமிய தோட்டப்புற மக்கள் பயனடைவர்.

7. சிவில் அமைப்புக்கள் இச்சட்டத்தினைப் பயன்படுத்தி சமூக பொறுப்புடைமை அல்லது பொறுப்புக் கூறல் கருவிகளைப் பயன்படுத்தி அரசாங்க நிறுவனங்களின் செயற்திறன்களை மதிப்பிட முடியும். உதாரணமாக, இந்தியா போன்ற நாடுகளில் சமூக பொறுப்புக் கூறல் (Social Accountabiltiy) என்பது பெரிதும் புகழ் பெற்று வருகின்றது. இதனை இலங்கையிலும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் பரீட்சித்து வருகின்றன.

8. இச்சட்டத்தின் மூலம் பிரஜைமைய அமைப்புக்கள், குழுக்கள், சமூக மட்ட அமைப்புக்கள் என்பன அரச நிறுவனங்களில் இருந்து தகவல்களைப் பெற்று அவற்றின் வினைத்திறன், செயற்திறன் தொடர்பாக மதிப்பிட முடியும். ஒவ்வொரு சேவைகளுக்கும் (கல்வி, சுகாதாரம், மின்சாரம், குடிநீர், கழிவகற்றல், தபால் சேவை) மதிப்பெண்களை வழங்க முடியும். இதனை பிரஜைகள் அறிக்கை வழங்கும் அட்டை (Citizen Report Card) அல்லது சமூக புள்ளி வழங்கும் அட்டை (Community Score Card) என அழைப்பர். இவை அரச நிறுவனங்களில் சேவை வழங்கலை மேம்படுத்த, வினைத்திறனை அதிகரிக்க உதவும். இதற்கு இச் சட்டம் பெரிதும் பயனுடையதாக அமையும். இந்நடை முறைகள் இந்தியாவில் மாத்திரமன்றி ஆபிரிக்க நாடுகளிலும் (மலாவி, தன்சானியா, ருவண்டா) பிரபல்யம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய நடைமுறைகளை உலக வங்கி உட்பட பல உள்ளூர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் ஊக்கப்படுத்தி வருகின்றன. பொதுச் சேவையின் தரத்தினை, வினைத்திறனை அதிகரிக்க இது சிறந்ததொரு நடைமுறையாகக் காணப்படுகின்றது. இதற்கு விழிப்புடன் செயற்படக்கூடிய பிரஜைகள் அமைப்பு, சமூக அமைப்புகள் அவசியமாகும்.

9. சிவில் அமைப்புக்கள் தகவல் அறிவதற்கான ஒழுங்கு விதிகள், நடைமுறை தொடர்பாக பொது மக்களுக்கு உதவ முடியும். சில சமயங்களில் சரியான ஒழுங்கு விதிகளைப் பின்பற்றாமையும் தகவல்களை அணுகுவதற்கான வாய்ப்பினைத் தடுத்துவிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. எல்லாவற்றுக்கும் அப்பால் அரசு நிறுவனங்கள் மற்றும் மக்களிடையே சீரான உறவினைப் பலப்படுத்த உதவுதல் வேண்டும்.

மிக முக்கியமாக, சிவில் அமைப்புகள் பிரஜைகளின் அறிந்து கொள்வதற்கான உரிமை' என்ற அணுகுமுறையினை பொது நிறுவனங்கள் பின்பற்றுவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அது அரச நிறுவனங்கள் இயல்பாகவே தகவல்களைத் தாமதமின்றி வெளியிட வழிசெய்யும்.

## சிவில் அமைப்புக்கள் மேற்கொள்ளக்கூடிய சில நடவடிக்கைகள்

நாட்டில் செயற்படுகின்ற சிவில் அமைப்புகள் அரசாங்க திணைக்களங்களிடம் அவசியமான தகவல்களை வேண்டி கோரிக்கைகளை முன்வைக்க முடியும்.

- அரசாங்கத்தின் ஒப்பந்தங்கள், கொடுப்பனவுகள், அபிவிருத்தித் திட்டங்கள், செலவுகள், மதிப்பீடுகள் போன்றவற்றை வேண்டி கோரிக்கைகளை முன்வைக்க முடியும்.
- பாதை அபிவிருத்தி, கால்வாய்கள் நிர்மாணம், வீடமைப்பு, பாலங்கள், கட்டடங்கள் போன்ற வேலைத்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் தொடர்பான தகவல்களைப் பெற கோரிக்கைகளை முன்வைக்க முடியும்.
- நடைபெற்றுக்கொண்டிருக்கும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அல்லது நடந்து முடிந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்பார்வை செய்வதற்கு, பரிசோதிப்பதற்கான கோரிக்கைகளை முன்வைக்க முடியும்.
- அரசாங்க ஆவணங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான வரைபுகள், பதிவுகள், புத்தகங்கள் என்பவற்றைப் பரிசீலனை செய்ய சிவில் அமைப்புக்கள் கோரிக்கைகளை முன்வைக்க முடியும்.
- அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடு, கருத்திட்டங்களைத் தெரிவு செய்தல், அவற்றை நடைமுறைப்படுத்தல் என்பனவற்றைக் கண்காணித்தல். குறிப்பாக, காவல் நாய் வகிபங்கினை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சட்டமானது, அரசாங்க நிறுவனங்களின் சட்டத்திற்குப் புறம்பான செயற்பாடுகளை, அநீதியான தீர்மானங்களை வெளிக்கொண்டுவர துணைபுரியும். இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய விடயம் யாதெனின், இச்சட்டமானது அரசாங்கத்தின் நிதி உதவியில் அல்லது பங்குடைமையில் செயற்படுகின்ற தனியார் நிறுவனங்கள், கூட்டுத் தாபனங்கள், அரச சாரா நிறுவனங்கள் என்பவற்றில் இருந்து தகவல்கள் பெறுவதற்கு வழி செய்கின்றது. மேற்கூறிய நிறுவனங்களுக்கு 25% அரசாங்க நிதி (இதனை நாம் பொது நிதி எனவும் அழைக்கலாம்) வழங்கப்படுமாயின் இச்சட்டத்தின்படி தகவல்களை வழங்க கட்டுப் பட்டுள்ளன என்பதனை நாம் மனங்கொள்ள வேண்டும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை சிறப்பாக நடைமுறைப் படுத்த சிவில் சமூக அமைப்புக்கள் செய்ய வேண்டியவை:-

1. **சிவில் அமைப்புக்கள் அரசாங்க நிறுவனங்களுடன் கூட்டிணைந்து இச்சட்டத்தின் சிறப்பான நடைமுறைப்படுத்தலை மேற்கொள்ள முடியும்:-** சிவில் செயற்பாடுகளில் பங்கேற்றல் மற்றும் பொறுப் புடன் கூடிய அரசாங்கம் என்பன தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினை அதிகரிக்கின்றது. அத்துடன், பின்வரும் உபாயங்களின் மூலம் சிவில் அமைப்புகள் இச் சட்டத்தினை நடைமுறைப்படுத்த உதவ முடியும்.

   a. தேசிய, உள்ளூர் மற்றும் பிராந்திய மட்டத்தில் ஆலோச னைக் கூட்டம், கலந்துரையாடல்களை நடத்தல், தகவல் அறியும் உரிமைக் குழுக்களை உருவாக்குதல்.

   b. இச்சட்டம் தொடர்பாகச் செயற்படும் அரச சார்பற்ற நிறு வனங்களை இணைத்து வலையமைப்புகளை உருவாக்குதல்.

   c. சமூக மட்ட அமைப்புகளுடன் பங்குடைமைகளை உருவாக் குதல்.

2. **பங்கேற்பு அணுகுமுறைகளைச் சக்திப்படுத்தல் :** சிவில் அமைப் புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன அரசாங்கத்துடன் இணைந்து உள்ளூர், தேசிய, பிராந்திய மட்டத்தில் இச்சட்டத்தின் பிரிவுகள், ஏற்பாடுகள் எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன என்பதை கண்காணிக்க மக்கள் மைய அமைப்புகளுக்கு வாய்ப்பேற்படுத்தல்.

அத்துடன் சிவில் அமைப்புகள்

- இச்சட்டம் தொடர்பாக பரந்தளவில் விழிப்புணர்வினை ஏற்படுத்த முடியும்.
- தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் கூட்டங்களில் பங்குபற்றுதல், அது தொடர்பான வழக்கு விசாரணைகளில், கலந்துரையாடல்களில் பங்கேற்றல். இதன் மூலம் இச்சட்டம், அதன் நடைமுறை, அதில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக மேலதிக அறிவினைப் பெற முடியும்.
- இச்சட்டத்தில் மக்களுக்கு சார்பாக இருக்கும் ஏற்பாடுகள் தொடர்பாகவும் அது விடயத்தில் அரசாங்கத்திற்கு இருக்கும் பொறுப்புக்கள் தொடர்பாகவும் மக்களுக்குத் தகவல்களை வழங்க வேண்டும்.
- இச்சட்டத்தின் வினைத்திறன் மிக்க அமுலாக்கத்திற்கு, கண்காணிப்புக்கு, ஊக்கப்படுத்துவதற்கு ஒரு இலகு படுத்துனராக இருத்தல்.
- பிரஜைகளின் தகவல் அறியும் உரிமைக்காக தொடர்ந்து ஆதரவு பிரசாரங்களை மேற்கொள்ளுதல்.
- ஊடகங்களை நேர்மையாக, பக்கச்சார்பின்றி, உண்மையான தகவல்களை வழங்க அழுத்தம் கொடுத்தல்.

3. **ஆற்றல் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்:** தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் சிறப்பான அமுலாக்கத்திற்கு உள்ளூர் அதிகார சபைகளையும், கிராமிய, தோட்ட மட்ட அமைப்புக்களையும், வேறு குழுக்களையும் சக்திப்படுத்த வேண்டும். குறிப்பாக, அவற்றின் ஆற்றலை மேம்படுத்த வேண்டும். இத்தகைய செயற்பாடுகள், பங்கேற்பு அணுகுமுறை, அமுலாக்கம் மற்றும் மதிப்பீடு, கண்காணித்தல், ஆதரவாக பிரசாரம் செய்தல், ஆய்வுகளை மேற்கொள்ளல் போன்ற தலைப்புக்களை மையப் படுத்தியதாக அமைவது சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக ஈடுபாடு தொடர்பாக பயிற்சி வழங்குதல், பெருந்தோட்ட மக்களின் ஆற்றலை விருத்தி செய்தல், இச்சட்டத்தினை எளிமையான மொழி நடையில் மக்கள் மத்தியில் கொண்டு செல்லுதல், தகவல் பரிமாற்றம் பெறுதல், அணுகுதல், அதற்கான வழிமுறைகள் தொடர்பான அறிவூட்டல் என்பன இதில் அடங்கும்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறுதலை உறுதிசெய்வதில் சிவில் அமைப்புகளுக்கு முக்கிய பங்குண்டு. இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான வளங்கள் மற்றும் நிறுவனக் கட்டமைப்புகளை உருவாக்க அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க முடியும். உண்மையில், இச் சட்டத்தின் பயன்களை முழுமையாக அடைவதற்கு இவை பெரிதும் அவசியமாகும். இன்று பல அரச நிறுவனங்களில் தகவல் அலுவலர்கள் இன்மை, அதற்கான வளங்கள் இன்மை பொதுவான பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன. பல அரச நிறுவனங்களின் வளாகத்தில் யார் தகவல் அலுவலர், யார் குறித்துரைக்கப்பட்ட அதிகாரி மற்றும் எவ்வாறு தகவல் உரிமை ஆணைக் குழுவினை தொடர்புகொள்வது என்பது தொடர்பான விபரங்கள் காட்சிப்படுத்தப்படவில்லை. இது இச்சட்டத்தை அப் பட்டமாக மீறும் செயற்பாடாகும். ஆகவே, சிவில் அமைப்புக்கள் சட்ட ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு நிர்வாக மற்றும் அரசியல் நிறுவனங்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அதன் மூலம் நீண்ட காலத்தில் இச்சட்டத்தின் முழுமையான பயனை மக்கள் அடையக் கூடியதாக அமையும்.

சமத்துவம், சம நீதி, சம வாய்ப்பு ஆகிய தத்துவங்களை அரச பொது நிறுவனங்கள் சரியாகப் பின்பற்றினால் இச்சட்டத்தின் பயனை சமூகத்தின் சகல பிரிவினரும் பெற்றுக்கொள்ள வாய்ப்பேற்படும். மலையக மக்கள் சமூக நிலையில், அரச சேவை வழங்கலில், அபிவிருத் தியில் பலவீனமான நிலையில் காணப்படுகின்றனர். ஆகவே, இச் சட்டத்தின் பயன் அம்மக்களைச் சென்றடைய வேண்டும். அதன் மூலம் அரசாங்க சேவை வழங்கலில் காட்டப்படும் பாகுபாடுகளை ஓரளவுக்கு குறைப்பதற்கு, தடுப்பதற்கு முடியும். இச்சட்டம் அரச சேவைகளுக்குப் பயனாளிகளை தெரிவுசெய்யும் விதம் தொடர்பான தகவல்களை அரச அதிகாரிகளிடம் மற்றும் அரச நிறுவனங்களில் பெற்றுக்கொள்ள உதவுகின்றது. ஆயினும், இச்சட்டம் சமத்துவத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் நடைமுறைப் படுத்தப்படும் போதே இதன் பயன் மக்களைச் சென்றடைய முடியும். சமூக செயற்பாடுகளில், ஆட்சி முறையில், சமூக அமைப்புகளில் யாவருக்கும் பங்கேற்கும் வாய்ப்பு கிட்டும்போதே அது சாத்தியமாகும். அதற்கு சிவில் அமைப்புக்கள் மத்தியஸ்தர்களாகச் செயற்பட முடியும்.

சிவில் அமைப்புக்கள் சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள நலிந்து காணப்படும் பிரிவினர்களுக்கு இச்சட்டத்தின் மூலம் பயன் பெறுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். பெண்கள் இச்சட்டம் தொடர்பாக அறிந்து கொள்வதன் மூலம் தங்களது உரிமைகளைக் கோர முடியும், அதற்காக அணி திரள முடியும். பெருந்தோட்டங்களைப் பொறுத்தவரையில் பெண்கள் வெளியுலக தொடர்புகள் குறைந்த நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். அரச சேவை, அரச நிறுவனங்கள், அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக குறைந்தளவான விழிப்புணர்வு மட்டுமே காணப்படுகின்றது. மேலும், அரசாங்க சேவை வழங்கலில் பல்மட்ட பாகுபாடுகளுக்கு உள்ளாகின்றார்கள் என்பது பல ஆய்வுகளின் மூலம் வெளிப்பட்டுள்ளது.

உதாரணமாக, அரசாங்கம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 2500/= பெறுமதியான உணவுப் பொதிகளை வழங்கி வருகின்றது. இதன் பயன் பெருந்தோட்டப் பெண்களின் பலருக்குக் கிடைப்பதில்லை என்பது கள ஆய்வுகளின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதேபோல் சமுர்த்திக் கொடுப்பனவு, முதியோர்களுக்கான கொடுப்பனவு, சிறுவர்களுக்கான கல்வி உதவிகள், காணி, வீட்டுரிமை மற்றும் ஏனைய பொது நல சேவை வழங்கலில் தொடர்ந்தும் பாகுபாடுகள் நிலவுவதனை கள ஆய்வுகளின் மூலம் அறிய முடிந்தது. ஆகவே, எந்த அடிப்படையில் இந்நன்மைகள் வழங்கப்படுகின்றன என்பது குறித்த தகவல்களை இன்று பெருந்தோட்ட மக்கள் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு கிட்டியுள்ளது. இதனைச் சரியாகப் பயன்படுத்த சிவில் அமைப்புகள் இம்மக்களை இலகுபடுத்த முடியும்.

உண்மையில், இச்சட்டம் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள், பிற்பட்ட சமூகங்கள் தமது உரிமைகளை ஓரளவேனும் அனுபவிப்பதற்கு உதவுவதாக அமையும். அதற்கேற்ற வகையில் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த நிறுவன ஏற்பாடுகள் காணப்படுவது அவசியமாகும். அதற்கான அழுத்தங்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும். மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமாக, பெருந்தோட்ட மக்கள் மத்தியில் தகவல் அறியும் உரிமைக் குழுக்களை தோட்ட மட்டத்தில் உருவாக்கி அவற்றுக்கிடையில் பலமான வலையமைப்புக்களை உருவாக்க வேண்டும். அவை இச்சட்டத்தினைச் சீராக நடைமுறைப்படுத்த, அழுத்தம் கொடுக்க, தகவல்களைப் பெற்றுக் கொள்ள உதவும்.

4. **வலையமைப்புக்களை உருவாக்குதல்:** சிவில் அமைப்புக்கள், தனிப்பட்டவர்கள், குழுக்கள் ஆகியன வலையமைப்புக்களை உருவாக்கி இச்சட்டம் தொடர்பான தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளலாம். மேலும், இச்சட்டம் தொடர்பாகக் கற்ற விடயங்களை, அறிந்த விடயங்களைச் சிறு சிறு குழுக்களாக இருந்து கலந்துரையாட முடியும். அதேபோல் தேவையான சந்தர்ப்பங்களில் இச்சட்ட அமுலாக்கத்தில் தலையிட முடியும்.

இத்தகைய வலையமைப்புகளை இந்தியாவில் காணமுடியும். பல குழுக்களை, தனிப்பட்டவர்களை, சிவில் அமைப்புக்களை இணைத்து வேறுபட்ட பெயர்களில் செயற்பட்டு வருவதுடன், இச்சட்டம் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டல், பயிற்சிகள், கலந்துரையாடல்கள், கற்கை வட்ட செயற்பாடுகள் போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றன. சில வலையமைப்புக்கள் இணையத்தளங்கள் ஊடாக செயற்பட்டு வருகின்றன. இவை வலையமைப்பில் உள்ள குழுக்களுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்தி வருவதுடன் இச்சட்டத்தின் பயன்பாடு கள் தொடர்பாகவும் அறிவூட்டி வருகின்றன. ஆகவே, இத்தகைய செயற்பாடுகளை மலையகப் பகுதிகளிலும் மேற்கொள்ள முடியும்.

5. **ஆதரித்துப் பிரசாரம் செய்தல்** (Advocacy) : இச்சட்டம் பொது மக்கள் நலன் என்ற சுலோகத்தின் கீழ் அரசாங்கத்தின் பொது சேவை வழங்கும் செயற்பாடுகளை சிவில் அமைப்புக்கள் கண்காணிப்பதற்கான ஒரு பரந்த வாய்ப்பினை வழங்கியுள்ளது. மிக முக்கியமாக, பல அமைப்புக்கள் சேர்ந்து ஒரு வலையமைப்பாக பிரசாரங்களை மேற்கொள்ளும் போது இச்சட்டத்தினைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்த, பரந்தளவில் தகவல்களைப் பெற வழிசெய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவில் அமைப்புக்கள் விழிப்புணர்வு கல்வியை மாத்திரம் வழங்காது, சமூகத்தில் நலிந்த நிலையில் வாழும் மக்களுக்குக் குரல் கொடுக்க, அவர்களுக்கு இச்சட்டத்தின் கீழ் நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க, அரச அதிகாரிகள், அவர்களின் தீர்மானங்கள், யாவருக்கும் நன்மையளிக்க, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறலை உறுதி செய்ய அவசியமான செயற்பாடுகளை மேற்கொள்ள சமூக செயற்பாட்டாளர்களை உருவாக்க வேண்டும். இத்தகைய நடைமுறைகள் மலையக மக்கள் மாத்திரமன்றி அரச சேவைகளை, மானியங்களை நம்பி வாழும் ஏனையோரும் பெரிதும் பயனடைய வழிசெய்யும்.

### வெற்றிக் கதை - 8

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மீதான பொலிஸாரின் துப்பாக்கிச் சூடு தொடர்பான விடயங்கள் தகவலறியும் சட்டத்தின் கீழ் வெளிக்கொண்டுவந்தமை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறையில் கல்விப்பயின்ற சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த சுந்தராஜா சுலக்ஷன் (24 வயது) மற்றும் அரசறிவியல் துறையில் கற்ற கிளிநொச்சியை சேர்ந்த நடராசா கஜன் (24 வயது) ஆகிய இருவரும் ஒக்டோபர் 2015 இல் குளப்பிடி சந்தியில் நள்ளிரவில் பொலிசாரினால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிசார், இவ்விரு மாணவர்களும் குடி போதையில் மோட்டார் சைக்கிளை செலுத்தியதாகவும், அது விபத்தில் முடிந்து மரணம் சம்பவித்ததாக காரணங்களை கூறி இச்சம்பவத்தை முடிவுக்குக்கொண்டுவர முனைந்தனர்.

இது தொடர்பாக அக்கறைகொண்ட மற்றும் தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக நன்கறிந்திருந்த ஊடகவியலாளரான தரிந்து ஜயவர்தன தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் யாழ்ப்பாண வைத்திய சாலையில் இரு மாணவர்களினதும் மரண பரிசோதனை அறிக்கையினை கோரியிருந்தார். இவ்வறிக்கையில் இரு மாணவர்களின் உடலிலும் மதுபானம் காணப்படுவதற்கான தடயங்கள் இல்லை எனவும், மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் உடலில் துப்பாக்கி குண்டு துளைத்தமையாலும் பின்னால் பயணித்தவர் விழுந்ததினால் ஏற்பட்ட பலத்த காயங்களினால் இறந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மரணங்களின் பின்னாலுள்ள உண்மைத் தகவல் வெளிக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் அரசாங்க தகவல் திணைக்களம் இக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து பொலிஸ் அதிகாரி களும் கைது செய்யப்பட்டதாக அறிவித்தது. மேலும், மக்கள் போராட்டத் தின் காரணமாக இச்சம்பவத்தை விசாரிக்க குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினால் ஒரு விசேட குழு உருவாக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இறுதியில் இவ்விரு மாணவர்களும் சமூக நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றி திரும்புகையில் குளப்பிடி சந்தியில் உள்ள பாதை மறியலில் பொலிசாரினால் மோட்டார் சைக்கிளினை நிறுத்துமாறு இடப்பட்ட கட்டளைக்கு பணியாது பயணித்ததால் ஆத்திரமடைந்த பொலிசாரினால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பது தெரியவந்தது.

**பிரசாரங்களுக்கு கலைகளைப் பயன்படுத்தல்**

**சமூக விழிப்புணர்வுப் பாடல்கள்**

இந்தியாவில் இராஜஸ்தான் மாநிலத்தில் இச்சட்டம் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வுகளை வழங்குவதற்காக பாடல் ஒன்று இயற்றப்பட்டு அதன் மூலம் விழிப்புணர்வு வழங்கப்படுவதுடன், அது வினைத்திறன் மிக்க ஊடகமாவும், சமூகத்தை அணிதிரட்ட உதவு வதாகவும் குறிப்பிடப்படுகின்றது. பாடல்கள் மக்கள் மனங்களில் இலகுவாகச் சென்றடைவதால் இது விழிப்புணர்வுக்கான சிறந்த முறையாகக் குறிப்பிடப்படுகின்றது. படித்தவர்களை மட்டுமின்றி பாமரர்களையும் சென்றடைய இது சிறந்த ஊடகமாகும்.

இம்மாநிலத்தில் செயற்படும் தகவல் அறியும் உரிமை குழுக்கள் கிராமங்கள் தோறும் சென்று பாடல்கள் மூலமாக அரசாங்கத்தின் ஊழல், பிரஜைகளின் உரிமைகள், இச்சட்டத்தின் மூலம் தகவல்களைப் பெறும் முறை, இச்சட்டம் கிராமங்களில் எவ்வாறு நடைமுறைப்படுத்தப் படுகின்றது, அதன் பயன்கள் போன்ற விடயங்களைத் தெளிவுபடுத்தி வருகின்றன. இக்குழுக்கள் உள்ளூரில் பயன்படுத்தப்படும் மொழிகளில் பாடல்களைப் பாடுவதுடன், மக்கள் நாளாந்த வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்றனர். இதனால் இத்தகைய பாடல்கள் பெரிதும் மக்களைக் கவர்வதாகவும் சிந்திக்கத் தூண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதாகவும் அமைந் திருக்கின்றன. இது இறுதியில் மக்கள் மத்தியில் இச்சட்டத்தின் அமுலாக்கம், பயன்கள் தொடர்பாகக் கூட்டு செயற்பாடு களை மேற்கொள்ள வழிசெய்கின்றது.

**வீதி நாடகங்கள்**

பாடல்களுக்கு அப்பால் நாம் கையாளக்கூடிய பிறிதொரு வழிமுறை வீதி நாடகங்களாகும். இதன் மூலம் பாமர மக்களுக்கு இச்சட்டம், இதன் உள்ளடக்கம், அமுலாக்கம், பயன்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்க முடியும். மக்களின் நாளாந்த பிரச்சினைகளுடன் அல்லது சமூக பிரச்சினைகளுடன் (அரச சேவை வழங்கல், அபிவிருத்தி, இயற்கை வளம்) தொடர்புபடுத்தி வீதி நாடகங்களைத் தயாரித்து பொது இடங்களில் நிகழ்த்த முடியும்.

வீதி நாடகங்கள் என்பது மக்கள் மத்தியில் கருத்துப் பிரசாரங் களை ஏற்படுத்துவதற்கு மிக சக்தி வாய்ந்த கலை வடிவமாகும். இலத்தீன் அமெரிக்க நாடுகளில் முன்னோக்கிய சமூக மாற்றத்திற்கான கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதில் வீதி நாட கங்கள் காத்திரமான பங்கு வகித்திருக்கின்றன. பிரேசில் நாட்டைச் சேர்ந்த கலைஞரும், சமூக செயற்பாட்டாளருமான அகஸ்டோ பௌல் என்பவர் 'ஒடுக்கப்பட்டோர் அரங்கு' எனும் கலை வடிவத்தினை அறிமுகப்படுத்தி சமூக மாற்றத்திற்கான கருவியாக இக்கலையை அறிமுகப்படுத்தியுள்ளார். Image Theatre, Forum Theatre, Invisible Theatre, Newspaper Theatre, Legislative Theatre என்ற புதுமையான பல கலை வடிவங்களை இவற்றில் உள்ளடங்குகின்றன. மக்கள் வெறும் பார்வையாளர்களாக மாத்திரம் இல்லாமல் அவர்களையும் பங்கேற்பாளர்களாக ஈர்ப்பதன் மூலம் பல்வேறு மாற்றுக் கருத்துக் களை விதைக்கின்ற ஊடகமாக இக்கலை வடிவங்கள் உலகின் பல நாடுகளிலும் செயற்பட்டு வருகின்றன. இலத்தீன் அமெரிக்க நாடு களில் இந்த அரங்கியல் வடிவம் பல்வேறு மக்கள் சார்பான கொள்கை மாற்றங்கள், புதிய சட்டங்கள் உருவாகுவதற்கு வழிவகுத்துள்ளன. இலங்கையிலும் பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இக்கலை வடிவத்தினை விழிப்புணர்வு கருத்துக்களைப் பரப்பும் ஊடகமாக பயன்படுத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஊடகங்களை வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்தல்

சில ஊடகங்கள் ஊழலுக்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்றன. இவை நேர்மையாக, எந்தவித குறுகிய நோக்கங்களும் இன்றி, பக்கச் சார்பற்ற முறையில் ஊடக தர்மத்தின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றன. அவை அரசாங்கத்தின் குறைகளை, மோசடிகளை வெளிப்படுத்துகின்றன. இதில் அரசாங்க சேவைகளும் அடங்குகின்றன. ஆகவே, சிவில் அமைப்புக்கள் இத்தகைய தகவல்களைத் திரட்டி ஊடகங்களுக்கு வழங்க வேண்டும். மேலும், தகவல் அறியும் சட்டத்தின் கீழ் அரசாங்க அதிகாரிகளின், நிறுவனங்களின் தவறான செயற்பாடுகளை ஆதாரங்களுடன் ஊடகங்களில் வெளிப்படுத்த முடியும். இச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்து வதற்கு அவசியமான அழுத்தங்களை பிரயோகிக்க, இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, இச்சட்டத்தின் அமுலாக்கலை கண்காணிக்க ஊடகங்களின் பங்கு-மிகவும் அவசியமாகும். ஊடகங்களும் சிவில் அமைப்புகளும் பரஸ்பரம் கைகோர்த்து செயற்பட வேண்டும்.

### அரசாங்க செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு சிவில் சமூக ஆற்றலை அபிவிருத்தி செய்தல்

சிவில் அமைப்புக்கள், மக்கள் மைய அல்லது சமூக மட்ட அமைப்புக்கள் தமது ஆற்றலை விருத்தி செய்ய வேண்டும். குறிப்பாக, அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், பொது சேவைகளைக் கண்காணிக்க, கணக்காய்வு செய்ய அவசியமான திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதனை மேற்கொள்ள நன்கு பயிற்றப்பட்ட ஆளுமைகள் அவசியமாகும். அவர்களுக்கு இச்சட்டத்தின், அமுலாக்கம், பயன் பாடுகள் தொடர்பான முழுமையான தெளிவு இருத்தல் வேண்டும்.

இத்தகைய ஆளுமைகளைக் கொண்டு குழுக்களை உருவாக்கி மக்களை அணிதிரட்டி, தொடர்ச்சியாக இச்சட்டம் தொடர்பாக மதிப்பீடு களை செய்து அதன் மூலம் கிடைத்த பாடங்களை, நன்மைகளை, சிறந்த நடை முறைகளை (Best practices) பொது மக்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் அவசியமாகும். இத்தகைய உபாயங்களை சிவில் அமைப்புக்கள் கையாள்வதன் மூலம் இச்சட்டத்தினைச் சரியான முறையில் நடைமுறைப் படுத்த வாய்ப்பேற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தன்சானியா நாட்டு முன்னாள் ஜனாதிபதி ஜூலியஸ் நியராரேவின் கதை**

தன்சானியா காலனித்துவ ஆட்சியில் இருந்து 1962ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பின்பு அந்நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஜூலியஸ் நியராரே அவர்கள் நாட்டின் பொருளாதாரம், அரசியல், கல்வி, பண்பாட்டு அம்சங்களில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திய சிறந்த புத்திஜீவி. இவர் ஒரு ஆசிரியராக இருந்து Tanganyika African National Union என்ற அமைப்பின் மூலம் தன்சானிய நாட்டின் இறைமையையும், ஐக்கியத்தையும் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு செயற்பட்டார்.

கூட்டு குடும்ப முறையினை அடிப்படையாகக் கொண்ட கிராமிய சுதேச பொருளாதாரத்தினைக் ஊக்குவித்தல், கூட்டு பண்ணை முறை போன்றவை மூலமாக சுதேச பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பினார். குறிப்பாக, தனது நாட்டின் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த துடன் ஆபிரிக்க நாடுகளிலேயே உணவு ஏற்றுமதி செய்யும் முன்னிலை நாடாக மாற்றியமைக்கப்பட்டது. மேலும், தேயிலை உற்பத்தியில் சிறு உரிமையாளர்களைக் கொண்ட உற்பத்தி முறையினை அடிப் படையாகக் கொண்டு பாரிய வளர்ச்சி ஏற்பட்டது. 1964ஆம் ஆண்டு 3 டன்களாக இருந்த தேயிலை உற்பத்தி 1975ஆம் ஆண்டு 21000 டன்களாக அதிகரித்தது.

நாட்டின் தன்னிறைவுப் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பும் நோக்குடன் Education for Self -Reliance என்ற கல்வி கொள்கையினை அறிமுகப் படுத்தினார். இது காலனித்துவ ஆட்சியில் அவர்களின் தேவைக்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஏட்டுக் கல்வி முறைக்கு மாற்றான நாட்டின் சுய பொருளாதாரத்தினை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறையாகும். மிக வறிய நாடாகவும், சமூக பொருளாதார நிலையில் பின்தங்கிய நிலையில், வெளிநாட்டு உதவியில் முற்றிலும் தங்கியிருந்த நாடு என்ற நிலையிலிருந்து தன்சானியாவை மீட்டெடுத்த சாதனை நியராரேவை சாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிக் கதை - 9

### பறிபோன விவசாய நிலத்தைப் பெற்றுக்கொண்டமை

தமது பாரம்பரிய விவசாய நிலம் பறிபோகக் கூடிய ஆபத்தை எதிர் நோக்கிய போது அதற்கெதிராக மேற்கொண்ட நீண்ட கால போராட்டத்தில் பிரதான ஆயுதமாக தகவலறியும் உரிமையை பயன்படுத்தியதாக அம்பாறை மாவட்டத்தின் கிராமியத் தலைவர் புஞ்சிராால சோமசிறி குறிப்பிட்டுள்ளார். தமது விவசாய நிலத்தை கடற்படையினரும், விமானப்படையினரும் கைப்பற்றிக்கொண்டதையடுத்து இப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். 2010ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆயுதம் தாங்கிய குழுவினர் இக்கிராமங்களுக்குள் அத்துமீறி பிரவேசித்து கிராமத்திலுள்ள வீடுகளுக்குத் தீ வைத்து அங்கு வசித்தவர்களை வெளியே இழுத்துத் தள்ளினர்.

அவர்கள் இது பற்றி பொலிசில் முறைப்பாடு செய்ததோடு ஆர்ப்பாட்டமும் செய்தனர். பின்னர் பொலிஸ் விசாரணை முடியும் வரை இக்கிராம மக்களை காணிகளுக்கு செல்ல அனுமதிக்க முடியாதென பொலிசார் கூறினர். இவ்வாறு கூறி ஒரு வருடத்திற்குப் பின் விமானப் படையினர் அந்த காணிகளில் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பித்தார்கள். அங்கு சர்வதேச தொடர்பாடல் மத்திய நிலையமொன்றை ஆரம்பிக்கப்போவதாக அவர்கள் கூறினார்கள். நிலைமை இவ்வாறு தொடர பிரதேச விவசாயிகளுக்கு இந்த போராட்டத்தை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்ற குழப்பம் ஏற்பட்டது. அந்த வகையில் இந்த சவால்களை ஒன்றிணைந்து எதிர் கொள்வதற்கு தீர்மானித்தார்கள். கிராமத்து மக்கள் தகவல் அறியும் சட்டத்தினைப் பயன்படுத்தி லகுகலை பிரதேச செயலாளரிடம் குறிப்பிட்ட காணி விமானப் படையினருக்கு கையளிக்கப்பட்டுள்ளதா? என கேள்வி எழுப்பினர். இதற்கு இல்லை, என பதில் கிடைத்தது. பிரதேச செயலாளரிடம் கேட்கப்பட்ட மற்றொரு கேள்வி விமானப் படையினருக்கு தமது பிரதேசத்திலுள்ள காணி கையளிக்கப்பட்டிருக்கின்றதா? என்பதாகும். இதற்கும் இல்லை, என்றே பதிலளிக்கப்பட்டது. மேலும், இரண்டு தகவல் விண்ணப்பங்கள் கரையோர பாதுகாப்புத் திணைக்களத்துக்கும் மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபையிடமும் முன்வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையோர பாதுகாப்புத் திணைக்களம் இந்த காணியை விமானப் படையினர் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளதா? என்பது ஒரு கேள்வியாவதோடு, இந்த நிர்மாண நடவடிக்கைகளுக்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதி கிடைக்கப்பட்டுள்ளதா? என்பது மற்றைய கேள்வியாகும். இவ்விரு கேள்விகளுக்குமான பதில் இல்லை என வழங்கப்பட்டது. இதற்கப்பால் இவர்கள் எதிர்கொண்ட மற்றொரு பிரதான பிரச்சினை காணிக்குரிய உறுதிப்பத்திரம் காணாமல் போயிருந்ததாகும். இதனால் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதில் இவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள நேரிட்டது. இதற்குத் தீர்வு பெற்றுக் கொள்வதற்காக இவர்கள் மீண்டும் தகவல் விண்ணப்பமொன்றை முன்வைத்தார்கள். அந்த விண்ணப்பத்தில் பிரதேச செயலாளர் காரியாலயத்திலுள்ள உறுதிப்பத்திர ஆவணத்தினை பரிசோதிப்பதற்கு தமக்கு அனுமதி வழங்குமாறு கோரியிருந்தனர். இதன் மூலம் தமது உறுதிப் பத்திரத்துக்கான உரித்துரிமையை உறுதி செய்து கொள்வதற்கு முடிவதோடு போலியான உறுதிப்பத்திரம் முன் வைக்கப்பட்டிருந்ததால் அதனை வெளிப்படுத்த முடியுமென்பது விவசாயிகளது எதிர்பார்ப்பாக இருந்தது. இறுதியில் விவசாயிகளின் போராட்டம் வெற்றிபெற்றது.

(ஆதாரம்: தகவல் சஞ்சிகை, 15.08.2018 நிதி மற்றும் வெகுஜன அமைச்சின் உத்தியோகபூர்வப் பத்திரிகை).




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் – 6

# தகவல் அறியும் உரிமைச் சட்டமும் பொதுச்சேவை வழங்கலில் சமூகக் கணக்காய்வும்

# Right to Information Act and Social Auditing in Public Service Delivery

## தகவல் அறியும் உரிமைச் சட்டமும் பொதுச்சேவை வழங்கலில் சமூகக் கணக்காய்வும்

அரசாங்க நிறுவனங்கள், அதன் சேவைகள், செயற்திறன் தொடர்பான சுயாதீன மற்றும் பங்கேற்புடன் கூடிய மதிப்பீடே சமூக கணக்காய்வாகும். இச்செயன்முறையானது பொது நிறுவனங்களின் செயற்பாடுகளை, அவற்றின் தரத்தினை, வினைத்திறனை, ஆழமான மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதுடன் அந்நிறுவனங்களில் இருந்து சமூக வகை கூறுதல், சமூகப் பொறுப்பு என்பனவற்றை வேண்டி நிற்கின்றது. அரச நிறுவனங்கள், ஸ்தாபிக்கப்பட்ட நியமங்கள், ஒழுங்கு விதிகள், செயற்பாட்டு நீதி என்பனவற்றின் அடிப்படையில் செயற்படுகின்றனவா என்பதை மதிப்பிடுவதற்கான வாய்ப்பினை சிவில் சமூக அமைப்புகளுக்கு வழங்கும் ஒரு ஏற்பாடே இதுவாகும்.

## பிரஜைகள் பின்வரும் தகவல்களைப் பெற முடியும்

ஒரு கிலோமீற்றர் வீதிக்கு தார் இடுவதற்காக 33 தார் பீப்பாய்கள் அவசியம். ஒரு கிலோமீற்றர் வீதிக்கு இரண்டாவது தடவை தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுவது 2-8 வாரங்களுக்குள் இடம்பெற வேண்டும். இதற்கு 17 தார் பீப்பாய்கள் வரை அவசியம். அதேபோல், 100 அடி நீளம், 10 அடி அங்குல பருமனிற்கு கொங்றீட் இடுவதற்காக 60 சீமெந்து மூட்டைகள் அவசியமாகும்.

கொங்றீட் கலவையை 45 நிமிடங்களுக்குள் பயன்படுத்தல் வேண்டும். இந்த கலவை பொருந்துவதற்கு 7 நாட்கள் வரை எடுக்கும். இந்த காலத்திற்குள் வீதியைப் பயன்படுத்துவதனை பொது மக்கள் தவிர்க்க வேண்டும். இந்த நிர்மாண செயற்பாடுகள் முழுவதிலும் தொழில்நுட்ப அதிகாரியின் கண்காணிப்பு அவசியமாகும். எதிர்காலத்தில் உங்கள் பிரதேசத்தில் இத்தகைய அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றால் இது தொடர்பான தகவல்களை நீங்கள் பெற முடியும்.

**சமூகக் கணக்காய்வின் நன்மைகள்**

1. வெளிப்படைத்தன்மை, நிர்வாகச் செயற்பாடுகள், தீர்மானங்கள் தொடர்பான முழுமையான தகவல்களை பெற்றுக்கொள்வதனை உறுதி செய்கின்றது.

2. மனித உரிமை தளத்தை வழங்குகின்றது: பாதிக்கப்பட்ட மக்களுக்கு, பாகுபாடுகளுக்கு மற்றும் புறக்கணிப்புக்களுக்கு உள்ளாகும் மக்களுக்கு அரசாங்கத்தின் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் பங்கேற்பதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது.

3. அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கண்காணித்தல்: உள்ளூர் மட்டத்தில் அரசாங்க நிறுவனங்கள் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வேறு செயற்திட்டங்கள் தொடர்பாக பொதுமக்கள் கூட்டாக இணைந்து கண்காணித்தல்.

4. கருத்திட்டங்கள் தொடர்பான செலவுகள், பயன்பாடுகள், நிலைத்தல் தன்மை தொடர்பான அறிக்கைகளைத் தயாரிக்க, அது தொடர்பான தகவல்களைப் பெற இம்முறை வழிசெய்கின்றது.

5. மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் தாம் சார்ந்த மக்களுக்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் அல்லது மேற்கொள்ள தவறிய விடயங்கள் தொடர்பாக உடனடியாக பதில்களை வேண்டி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மிக முக்கியமாக, பொதுமக்களின் மனக்குறைகளுக்கு, கோரிக்கைகளுக்கு அரச நிறுவனங்களில் இருந்து வேகமாக நிவாரணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுகின்றது.

## தகவல் அறியும் உரிமையைப் பயன்படுத்தி பொதுச்சேவை வழங்கலை சமூகக் கணக்காய்வுக்கு உட்படுத்தல்

தகவல் அறியும் உரிமைச் சட்டமானது அரசாங்கத்தின் பொதுக் கொள்கைகளையும், திட்டங்களையும் சமூகக் கணக்காய்விற்கு உட்படுத்துவதற்கு பரந்த வாய்ப்பினை வழங்கும் ஒரே ஒரு சட்டமாகும். போதிய அல்லது அவசியமான தகவல்கள் அரச நிறுவனங்களில் இருந்து கிடைக்காத பட்சத்தில் சமூக கணக்காய்வினை மேற்கொள்வது மற்றும் அரச அதிகாரிகளை பொறுப்புக் கூறச் செய்தல் என்பன இயலாத காரியமாகும். அந்தவகையில், தகவல் அறியும் உரிமை இந்த வாய்ப்பினை பிரஜைகளுக்கு வழங்குவதுடன், ஒவ்வொரு பிரஜைக்கும் தெரிந்து கொள்வதற்கான உரிமையினை, அரசாங்க ஆவணங்களை, தீர்மானங்களை, செயற்பாடுகளை பரிசீலனை செய்ய, கணக்காய்வு செய்ய, மீள்பரிசீலனை செய்ய, மதிப்பிட உதவுகின்றது. அத்துடன், அவை பொதுமக்களின் நலன், நீதி என்பவற்றுடன் ஒத்திருக்கின்றதா என்பதை உறுதி செய்யவும் உதவுகின்றது. ஆகவே, தேவையான தகவல்களையும் உரிமைகளையும் அறிவினையும் பெற்றுக் கொள்வதன் மூலம் பிரஜைகளுக்கு அரசாங்கத்தின் செயற்திறனை மதிப்பிட அதன் கொள்கை உருவாக்க, தீர்மானம் எடுத்தல், அமுலாக்கல் போன்ற விடயங்களில் பங்கேற்க வாய்பேற்படுத்துகின்றது.

உண்மையில், சிவில் சமூக அமைப்புக்கள் அல்லது சமூக மட்ட அமைப்புக்கள் அரசாங்க நிறுவனங்களின் சேவை வழங்கல், அதன் தரம் தொடர்பான சமூகக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கான இலகுபடுத்துனராகச் செயற்பட முடியும். எதிர்காலங்களில் பெருந்தோட்டப் பகுதிகளில் செயற்படுகின்ற சிவில் அமைப்புக்கள் இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். இதன் மூலம் பெருந்தோட்டப் பகுதி மக்கள் மீதான அரச நிறுவனங்களின் பொறுப்புக் கூறலை அதிகரிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறமாக, இத்தகைய நடைமுறைகள் பெருந்தோட்டப் பகுதிகளில் பொதுச்சேவை வழங்கலின் வினைத்திறனை, தரத்தினை அதிகரிக்க உதவும். இத்தகைய, அமைப்புக்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினைப் பயன்படுத்தி எந்த ஒரு அரச நிறுவனத்தினதும் செயற்பாடுகள் தொடர்பாக சமூகக் கணக்காய்வினை மேற்கொள்ள முடியும். சமூகக் கணக்காய்வின் மூலம் நாம் அரசாங்க நிறுவனங்கள் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களின் தரம், ஒப்பந்தக்காரர்களுடன் கைச்சாத்திடப்பட்ட ஆவணங்கள் என்பவற்றைப் பரிசீலனை செய்ய முடியும். இத்தகைய செயற்பாடுகள் நாட்டில் இடம்பெறும் தரம் குன்றிய, மோசடிகள் மிகுந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், அரசாங்க அதிகாரிகளின், அரசியல்வாதிகளின் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தவும் உதவுகின்றது.

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினைப் பயன்படுத்தி சமூகக் கணக்காய்வு செய்வோருக்கான சில அறிவுறுத்தல்கள்

சமூக கணக்காய்வு சகல பங்குதாரர்களையுமே இணைத்துக் கொண்டு பங்கேற்புடன் மேற்கொள்ள வேண்டிய விடயமாகும். அதன் பிரதான கட்டங்களைப் பின்வருமாறு நோக்கலாம். சமூக கணக்காய்வு செய்ய வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்களை (Project) செயற்றிட்டங்களை முதலில் அடையாளம் காண வேண்டும். உதாரணமாக, சமுர்த்திக் கொடுப்பனவு அல்லது வீடமைப்புத் திட்டம் தொடர்பான வேலைத் திட்டங்களாக இருக்கலாம். குறிப்பாக, எந்த அரச திணைக்களம், எந்த அமைச்சு இத்திட்டத்துடன் தொடர்புபட்டுள்ளது என்பதனை அடையாளம் காண வேண்டும். அதன் பின்னர் சமூகக் கணக்காய்வு நோக்கத்தினைச் சரியாக வரையறை செய்ய வேண்டும்.

## முதலாவது கட்டம் : பங்குதாரர்களை அடையாளம் காணும் கலந்துரையாடல்

சமூகக் கணக்காய்வுச் செயன்முறையுடன் தொடர்புடைய அல்லது சம்பந்தப்பட்டுள்ள பங்குதாரர்களை அடையாளம் கண்டு அவர்களுடன் இது தொடர்பாகக் கலந்துரையாட வேண்டும். எவ்வளவு காலத்துக்கு ஒருமுறை கலந்துரையாட வேண்டும் என்பதைத் தீர்மானிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இத்தகைய கலந்துரையாடல்களுக்குப் பங்குதாரர்களை தெரிவு செய்யும் போது மிக தெளிவான முறையில், வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ள வேண்டும்.

**இரண்டாவது கட்டம் : யார் பங்குதாரர்கள்:** அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் (உதாரணம்: பிரதேச செயலகம், கல்வித் திணைக்களம் கிராம சேவகர்கள்) கொள்கை வகுக்கும் அரசியல் பிரதிநிதிகள், அரச நிறுவனங்களின் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், ஒப்பந்தக்காரர்கள், நேரடி மற்றும் மறைமுக பயனாளிகள், ஆலோச கர்கள், நிதி வழங்கும் நிறுவனங்கள், முறைபாடுகளை செய்வோர் அல்லது பாதிக்கப்படுபவர்கள் என பங்குதாரர்களை அடையாளம் காணலாம். உதாரணமாக, பிரதேச செயலகம் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கொங்றீட் பாதை ஒன்று தொடர்பாக சமூகக் கணக்காய்வு செய்யும் போது மேற் குறிப்பிட்ட நபர்கள், நிறுவனங்களைப் பங்குதாரர்களாக இணைத்துக் கொள்ள முடியும்.

பங்குதாரர்களுடனான கலந்துரையாடலானது அவசியமான தகவல்களை, சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காவே மேற் கொள்ளப்படுகின்றது. குறிப்பாக, கலந்துரையாடல்கள் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும், பக்கச்சார்பற்ற முறையில் நடு நிலையாக மேற்கொள்ள வேண்டும். இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம் யாதெனில், அரசியல் நலன்களை அல்லது தூண்டு தலை அடிப்படையாகக் கொண்டு யாரேனும் ஒரு தனி நபரை, கட்சியை, அரச அதிகாரியை, அரசியல் பிரதிநிதிகளைப் பழிவாங்கும் வகையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்துவது, விண்ணப்பங்களைத் தாக்கல் செய்வது மற்றும் கலந்துரையாடல்களை செய்வது தவிர்க்கப்பட வேண்டும். இத்தகைய செயற்பாடுகள் அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை இடையூறுக்கு உட்படுத்தும். அரச நிறுவனங்களுடனான சுமுகமான உறவைப் பாதிக்கும்.

ஆகவே, பொது நலன் என்ற அடிப்படையில் மாத்திரமே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தகவல்களைப் பெற்று சமூக கணக்காய்வினை மேற்கொள்ள வேண்டும். தனிப்பட்ட குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு சமூகக் கணக்காய்வு மேற் கொள்ளப்படுமாயின், அது பொது மக்களையும் சமூகக் கணக்காய்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான எதிர்பார்ப்பினையும் சீர்குலைத்துவிடும். இச்சட்டத்தின் உண்மையான பயனை அனுபவிக்க வேண்டுமாயின் இதனை சரியாகப் பயன்படுத்துவது, இதன் வழிமுறைகளை மதித்து செயற்படுவது அவசியமாகும். எவரையேனும் பழிவாங்கும் எண்ணத்தில், பாதிப்பினை ஏற்படுத்தும் நோக்கில் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்வது அவசியமாகும்.

**மூன்றாவது கட்டம் : சமூகக் குறிகாட்டிகளை உருவாக்குதலும் தகவல் திரட்டுதலும்**

சமூகக் குறிகாட்டிகள்: ஏதேனும் ஒரு அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தைக் கணக்காய்வு செய்வதற்கு முன்னர் அதனை அளவீடு செய்வதற்கு சில சமூகக் குறிகாட்டிகளை உருவாக்க வேண்டும். இதனை குறித்த அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் நோக்கம், செலவிடப்பட்ட நிதி, அதன் திட்டம், நடைமுறைப்படுத்திய நிறுவனம், அதனுடன் தொடர்புடைய பங்குதாரர்கள் மற்றும் சமூகம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்க வேண்டும்.

தகவல் சேகரித்தல்: சமூகக் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது இரண்டு வகையான தகவல்கள் அவசியமாகும். இரண்டாம் தர தகவல்களை அரச ஆவணங்கள், அரசாங்க நிறுவனங்களின் அறிக்கைகள் போன்றவற்றில் பெற்றுக் கொள்ளலாம். முதலாம் நிலைத் தகவல்களை பங்குதாரர்களுடன் கலந்துரையாடுவது, நேர்காணல்கள் மூலமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

முக்கியமாக, சமூகக் கணக்காய்விற்கு இரண்டு நிலைத் தகவல்களும் மிகவும் முக்கியமாகும். சமூகக் கணக்காய்வினை ஒரு குறிப்பிட்ட ஆவணத்தினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ள முடியாது. அதற்கு பல ஆவணங்கள் பல்வேறு இடங்களிலும், மூலங்களில் இருந்தும் தேவைப்படும். (சமூகம், அரச நிறுவனங்கள், அமைச்சு, அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற் சங்கங்கள், தனியார் நிறுவனங்கள், நீதி மன்றங்கள் என்பன சில உதாரணங்களாகும்). இவ்வாறான எல்லாத் தகவல்களையும் ஒன்று திரட்டி, அதன் அடிப்ப டையில் கணக்காய்வினை மேற்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நான்காவது கட்டம் : சமூகக் கணக்காய்வினைத் தயாரித்தலும் உறுதிப்படுத்தலும்**

திரட்டிய தகவல்களை சரியான முறையில் வகைப்படுத்த வேண்டும். காரணம், இந்த தகவல்களே சமூக கணக்காய்வினை மேற்கொள் வதற்கான அடிப்படை வழிகாட்டியாகும். திரட்டிய தகவல்களை ஒன்றுபடுத்தல்: திரட்டிய தகவல்களைச் சமூகக் கணக்காய்வின் போது சமூகத்துக்குப் பரப்புதல், மேலும் தகவல்களைத் தேவைக்கேற்ப வகைப்படுத்த வேண்டும். சில சமயங்களில் அட்டவணைகள், வரை படங்கள் என்ற அடிப்படையிலும் வகைப்படுத்த முடியும். இது கணக்காய்வினைத் தெளிவாக மேற்கொள்ள உதவும்.

கிடைக்கப்பெற்ற தகவல்களை உறுதி செய்யும் போது குறித்த வேலைத் திட்டம் இடம்பெற்ற இடத்திற்குச் சென்று கணக்காய்வினை மேற்கொள்ள வேண்டும். அதேவேளை, குறித்த வேலைத்திட்டம், நிர்வாக தொழில்நுட்ப மற்றும் ஏனைய தகவல்களுடன் ஒத்திருக்கின்றதா என்பதை உறுதி செய்வது அவசியமாகும்.

உதாரணமாக, வீடமைப்புத் திட்டம் தொடர்பாகக் கணக்காய்வினை மேற்கொள்வதாக இருந்தால், அது தொடர்பான தகவல்களைப் பல வழிகளில் (வீடமைப்பு அமைச்சு, வீடமைப்பு அதிகார சபை, ஒப்பந்தக் காரர்கள், பயனாளிகள், சிவில் அமைப்புகள், சமூக தலைவர்கள்) பெற்றுக் கொண்ட பின்னர் குறித்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் அல்லது நடைமுறைப்படுத்தப்பட்ட இடத்திற்குச் சென்று உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக, வீட்டின் அளவு, தரம், அறைகளின் எண்ணிக்கை, பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள், ஒப்பந்தக்காரர்கள், செலவிடப் பட்ட நிதி போன்ற விடயங்களைக் கூறலாம். இக்கட்டத்தில் தொழில் நுட்ப ஆலோசகர் ஒருவரின் உதவியை நாடுவது சிறந்தது. அதன் மூலம் உண்மையான தகவல்களைப் பெற்று அவற்றை உறுதி செய்ய முடியும்.

**ஐந்தாவது கட்டம் : பொது மக்கள் கருத்துக்களைத் தெரிவித்தல்**

கணக்காய்வின் முக்கியமானதொரு கட்டம் இதுவாகும். பொது மக்களை கருத்துக்களை வழங்க, கலந்துரையாடத் தயார்படுத்த வேண்டும். அச்சமின்றி பொதுமக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலை ஏற்படுத்த வேண்டும். அதற்கு பொருத்தமான இடங்களில் கூட்டங்களை நடாத்த வேண்டும்.

இச்செயற்பாடுகளுக்காக சமூக அணிதிரட்டலை மேற்கொள்ள வேண்டும். சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களையும் அணித்திரட்டி, கலந்துரையாடி அவர்களின் ஆதரவினை சமூகக் கணக்காய்விற்கு உறுதிப்படுத்த வேண்டும். இது பங்கேற்புடன் இடம் பெற வேண்டும். சமூகத் தலைவர்கள் இச்செயற்பாட்டினை மேற்கொள்ள முடியும். குறிப்பாக,

1. சமூகத்தில் உள்ள வேறுபட்ட நபர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல்.
2. சமூகத்தில் இயங்கும் ஏனைய குழுக்களுக்கும் சமூக கணக்காய்வு குறித்த செய்திகளைப் பரப்ப வேண்டும்.
3. ஊடகங்களைப் பயன்படுத்தல், விழிப்புணர்வு கூட்டங்களை நடத்தல்.
4. சமூக ஊடகத்தைப் பயன்படுத்தி இளைஞர்களை அணிதிரட்டல்.
5. மக்கள் கலை வடிவங்களைப் பயன்படுத்தி சமூகத்தை தெளிவு படுத்தல் (வீதி நாடகம், பாடல்கள்)
6. சுவரொட்டி, பதாதைகள், ஸ்டிக்கர், துண்டு பிரசுரங்கள் மூலம் மக்களை அணிதிரட்டல்.
7. வீடு வீடாகச் சென்று அறிவித்தல்.

இத்தகைய உபாயங்கள் மூலம் மக்களை அணிதிரட்டி சமூக கணக் காய்வுக் கூட்டங்களுக்குக் கொண்டுவர முடியும்.

சமூக கணக்காய்வுடன் தொடர்புடைய அரச அதிகாரிகள், அரசியல் தலைவர்கள், அதனுடன் தொடர்புடைய ஏனைய நபர்களுக்கு (தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்) முறையான அழைப்பிதழ் ஊடாக மக்கள் கருத்தறியும் கூட்டத்திற்கு அழைத்துவர வேண்டும். அவர்கள் இங்கு பொது மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதன் மூலம் இச் செயன்முறையைக் கண்காணிக்கவும் முடியும். இது உண்மையான பொறுப்புக்கூறலை வெளிப்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் போது சேகரிக்கப்பட்ட தகவல்களை மற்றும் ஆதாரங்களை வெளியிட முடியும். அதன் மூலம் உண்மை நிலையை வெளிக் கொண்டுவர முடியும் (ஊழல், மோசடிகள், அதிகார துஷ்பிரயோகம், பாகுபாடுகள் போன்ற). இந்தக்கட்டமானது முற்றிலும் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் தொடர்பான விடயங்களை பொது மக்களின் முன்னிலையில் வெளிப்படுத்தி, அதன் மூலம் மக்களின் கருத்துக் களை அறிய வாய்ப்பளிக்கும். இது ஒரு முறைசார் கலந்துரையாடல். இங்கு பொதுமக்களுக்கு சமூகக் கணக்காய்வு தொடர்பான சகல விடயங்களும் (கருத்திட்டம், நோக்கம், தகவல்கள், விளைவுகள்) முன்வைக்க வேண்டும்.

**பொதுநல வழக்காடலும் தகவல் அறியும் உரிமைச் சட்டமும்**

பொது நல வழக்காடல் என்பது மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது, நலன்கள் பாதிக்கப்படும் போது அவர்கள் சார் பாக நீதிமன்றத்தை நாடிச்சென்று பொது மக்களின் நலன் (Public interest) என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்வதனைக் குறிக்கின்றது. அரச அதிகாரிகள் தமது கடமை களைச் செய்யத் தவறுதல், பிரஜைகளின் உரிமைகளை மீறுதல் என்ப வற்றுக்காக நீதிமன்றத்தை நாட முடியும். இது நீதியை மீளாய்வு செய்யும் செயன் முறையில், நிர்வகிக்கும் செயன்முறையில் பிரஜைகள் பங்கேற்பதற்கான வாய்ப்பினை வழங்குவதுடன், நீதிச் செயன்முறை ஜனநாயக மயப்படுவதற்கு உதவுகின்றது. தனிப்பட்ட நபர்களுடன் சாராத விடயங்களைப் பொது நல வழக்கு என்ற பெயரில் தாக்கல் செய்ய முடியும். இதனை சில நாடுகளில் சமூக நல வழக்காடல் எனவும் அழைக்கின்றனர்.

இலங்கையில் அரசியலமைப்பின் 126(2)ஆம் பிரிவு அடிப்படை உரிமை மீறலுக்கு உள்ளாகும் நபர் தாம் நேரடியாகவோ அல்லது சட்டத்தரணியின் மூலமாகவோ உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும் எனக் குறிப்பிடுகின்றது. இது பாதிக்கப்பட்டவர் சார்பாக மூன்றாம் தரப்பின் தலையீட்டினை அங்கீகரிக்கின்றது என்பதே இதன் அர்த்தமாகும்.

மிக முக்கியமாக, இவ்வேற்பாடானது பெருந்தோட்ட சமூகத்தில் பின்தங்கிய நிலையில் வாழும் மக்களின் உரிமைகள் மீறப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அது தொடர்பான வழக்குகளைத் தாக்கல் செய்ய உதவுகின்றது. பொருளாதாரத் தடைகள் மற்றும் வறுமை காரணமாக எண்ணற்ற வறிய, பாமர மக்கள் நீதியை நாட முடியாது நாளாந்தம் பல உரிமை மீறல்களுக்கு உள்ளாகின்றனர். இத்தகைய சமூகப் பிரிவினர்களின் உரிமைகளைப் பாதுகாக்க பொதுநல வழக்கு என்ற ஏற்பாடு பெரிதும் உதவும்.

இலங்கையில் 1990களிலிருந்து பொதுநல வழக்காடல் (Public Interest Litigation) நடைமுறையில் பிரயோகிக்கப்பட்டு வருவ துடன், பல அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்த ஏற்பாட்டின்கீழ் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க முன்வந்துள்ளன. உரிமை மீறப்பட்டவர் உயிருடன் இல்லாத பட்சத்தில் அல்லது மூன்றாம் நபர் ஒருவர் அல்லது அமைப்பு வழக்கு தாக்கல் செய்தல் இதன் மூலம் சாத்தியமாகின்றது. உயிருடன் இருப்பவர்களுக்கு உரிமைகளை வழங்குவது, உரிமை மீறலுக்கு உள்ளானவர் உயிருடன் இல்லாவிடின் சட்டத்தைச் செயற்படுத்த தவறுதல் அல்லது அவரின் உரிமை மீறலை விசாரிக்க, நீதியை பெற்றுக் கொடுக்க மறுத்தல் முற்றிலும் தவறானது என்பது 1990களில் இலங்கையின் உச்ச நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டது. இதன் மூலம் உரிமை மீறலுக்கு உள்ளானவர்கள் சார்பாக மூன்றாம் தரப்பு தலையிட வாய்ப்புக் கிட்டியது.

உண்மையில், பொதுநல வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு அவசியமான தகவல்களைத் தகவல் அறியும் சட்டம் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு நிர்வாக அதிகாரியின் செயற்பாட்டினால் அல்லது அவரின் தீர்மானத்தினால் பிரஜை ஒருவர் பாதிக்கப்பட்டால் அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகம் பாதிக்கப்பட்டால் அடிப்படை உரிமை மீறல் வழக்கினை உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். இது தொடர்பான தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

இன்று இலங்கையில் பொது மக்கள் நலன் சார்ந்து செயற்படும் தனியார் கூட்டுத்தாபனங்கள் கூட இத்தகைய வழக்கினைத் தாக்கல் செய்ய முடியும். அதேபோல், தனிப்பட்டவர்களும் இவ்வழக்கினை தமது நலன்கள் கூட்டாக பாதிக்கப்படும் போது தாக்கல் செய்யமுடியும். சில சமயங்களில் அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்களில் அல்லது தீர்மானங்களினால் ஒரு தனிப்பட்ட நபர் பாதிக்கப்படாமல் இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும், அந்நபர் அந்த மக்கள் சார்பாக, அவர்களின் நலன் உரிமைகளுக்காக வழக்கு தொடர முடியும். அதற்கு அவசியமான தகவல்களை தகவல் அறியும் சட்டத்தின் மூலம் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களில் இருந்து பெற முடியும். அரச நிறுவனங்கள் யாவும் சட்டத்தின் ஆட்சி அல்லது சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற தத்துவத்தின்கீழ் செயற்படக் கடமைப்பட்டுள்ளன அது அரச நிறுவனங்களின் அடிப்படைக் கடமையாகும்.

அரச அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் தமது அதிகாரம், வளங்களை மக்களின் நலன்களுக்காக, அவர்கள் மத்தியில் நம்பிக்கையினைக் கட்டியெழுப்பும் வகையில் பயன்படுத்த வேண்டும். அரச அதிகாரிகள் சட்டத்தை, ஒழுங்கு விதிகளை, தீர்மானங்களைக் கையாளும்போது மனிதாபிமான அடிப்படையில் செயற்பட வேண்டும். அதன் இறுதி விளைவுகள் பொது மக்களுக்கு நன்மையளிப்பதாக அமைய வேண்டும். இதுவே அரச நிறுவனங்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் மிக உயர்ந்த பண்பாகக் கருதப்படுகின்றது.

மேற்கூறிய எதிர்பார்ப்புக்களை, தத்துவங்களை அரசு அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் மீறிச் செயற்படும் போது பாதிக்கப்பட்டவர் அல்லது அவர்கள் சார்பாக, அந்த சமூகம் சார்பாக பொதுநல வழக்கினை இன்று இலங்கையில் தாக்கல் செய்ய முடியும். இதனை உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் என்ற அடிப்படையில் தாக்கல் செய்ய முடியும். இங்குள்ள முக்கியமான விடயம் யாதெனில், அரசாங்கத்தின் அல்லது அரச அதிகாரிகளின் கொள்கைத்திட்டங்களை, தீர்மானங்களைப் பிரஜைகள் சவாலுக்கு உட்படுத்துவதற்கான வாய்ப்பினை பொதுநல வழக்காடல் வழங்குகின்றது என்பதாகும்.

இந்தியா போன்ற நாடுகளில் சமூக பொருளாதார ரீதியாகப் பின்னடைந்த நிலையில் வாழும் மக்கள் சார்பாக பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்படுகின்றன. குறிப்பாக, அபிவிருத்தி திட்டங்களினால் ஏற்படும் பாதிப்புக்கள், உரிமை மீறல்கள், சுற்றாடல் பாதிப்பு, கல்வி, சுகாதார வசதிகளை மேம்படுத்தல், காடழிப்பு, இயற்கை வளங்களைச் சூறையாடுதல் போன்ற பல காரணங்களுக்காக பொது நல வழக்கு தாக்கல் செய்யப்படுகின்றன. அரசாங்கத்தின் தீர்மானங்கள் அல்லது அரச அதிகாரிகளின் செயற்பாடுகள் பொது மக்களைப் பாதிக்குமாயின் அது தொடர்பான தகவல்களை தகவல் உரிமை சட்டத்தின் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று வழக்குத் தாக்கல் செய்ய முடியும். இது தொடர்பான பரந்த விழிப்புணர்வுகளைச் சமூக மட்டத்தில் ஏற்படுத்த வேண்டும்.

பொதுநல வழக்குகளின் வெற்றி வெறுமனே நீதிமன்றத்தில் மாத்திரமன்றி, நீதித்துறை தொடர்பான பிரஜைகளின் எண்ணப் பாட்டில், விழிப்புணர்வில் மற்றும் நீதிமன்றத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களிடையே தங்கியுள்ளது. உண் மையில், நீதிமன்ற தீர்மானங்களை அரச நிறுவனங்கள் எந்தளவுக்கு நடைமுறைப் படுத்துகின்றன என்பதைக் கண்காணிக்க இன்று தகவல் அறிவும் உரிமை சட்டம் வாய்ப்பளிக்கின்றது. இச்சட்டத் தினைப் பயன்படுத்தி தகவல்களை அரச நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். கடந்த காலங்களில் பொது நல வழக்கு களுக்கு உச்ச நீதி மன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்களை சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் அமுல் படுத்தத் தவறியுள்ளன. இது தொடர்பான முன்னேற்றத்தினைப் பிரஜைகளுக்கு அறிந்துகொள்ள வாய்ப்பு இருக்கவில்லை. ஆயினும், இன்று அதற்கான வாய்ப்பு தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் கிடைத்துள்ளது.

அரச நிறுவனங்கள் அல்லது அரச அதிகாரிகள் பிரஜைகளின் நலன், பாதுகாப்பினை அல்லது உரிமைகளை மீறும் வகையில் செயற்படும் போது அதற்கான பரிகாரத்தை வழங்க அடுத்த தேர்தல் வரும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. அத்தகைய சந்தர்ப்பங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தகவல்களைத் திரட்டி நீதிமன்றத்தை நாட முடியும். அந்தவகையில், பிரஜைகள் அரச அதிகாரிகளைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் பொறுப்புடன் செயற்படச் செய்வதற்கான ஒரு வாய்ப்பினை இச் சட்டம் வழங்கியுள்ளது. இவற்றுக்கப்பால், நிர்வாக விடயங்களில் பிரஜைகள் பங்கேற்பதற்கான வாய்ப்பினை பொதுநல வழக்கு மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் வழங்கியுள்ளது. உண்மையில், சமூகத்தில் பின்னடைந்த நிலையில், தொடர்ச்சியாக உரிமை மீறல்களுக்கு உள்ளாகும், அரச சேவைகளை முழுமையாக அனுபவிக்க முடியாத நிலையில் வாழும் பின்னடைந்த சமூகப் பிரிவினர் நீதியைப் பெற்றுக் கொள்ள பொதுநல வழக்குகள் மற்றும் தகவல் அறியும் சட்டம் வாய்ப்பினை வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறந்த அரசாங்கப் பங்குடைமை (Open Government Partnership)

தகவலறியும் உரிமையுடன் பெரிதும் தொடர்புடைய பிறிதொரு விடயம் யாதெனில் திறந்த அரசாங்கப் பங்குடைமையாகும். குறிப்பாக, 2011ஆம் ஆண்டில் இருந்து திறந்த அரசாங்கப் பங்குடைமை தொடர்பாக அதிகளவில் பேசப்பட்டு வருகின்றது. நல்லாட்சி, ஜனநாயகம், ஊழலற்ற ஆட்சி, மக்கள் பங்கேற்பு, அரசாங்கத்தின் செயற்பாடுகளில் பரந்தளவிலான வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறுதல் மற்றும் மக்கள் மைய ஆட்சி ஆகிய பரந்த நோக்கங்களைக் கொண்டு திறந்த அரசாங்கப் பங்குடைமை தொடர்பான எண்ணக்கரு கட்டியெழுப்பப்பட் டுள்ளது. இதன் பொருள் யாதெனில் அரசாங்க மறுசீரமைப்பாளர்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் சிவில் சமூகத் தலைவர்களை இணைத்துக் கொண்டு கொள்கைத்திட்டங்களைத் தயாரித்தல், அதன் மூலம் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் யாவரையும் உள்வாங்குதல், அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலையும் வெளிப்படைத் தன்மை யினையும் அதிகரித்தல் என்பதாகும். அரசாங்கமும் சிவில் சமூக அமைப்புகளும் இணைந்து நல்லாட்சிக்கான வேலைத்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பது இங்கு பிரதான எதிர்பார்ப்பாகக் காணப்படுகின்றது. அரசாங்கம் திறந்த தன்மை கொண்டதாகக் காணப்பட வேண்டும், அதில் பிரஜைகள் பங்காளர்களாக இருத்தல் வேண்டும் என்பது இதன் பிறிதொரு எதிர்பார்ப்பாகும்.

உண்மையில், திறந்த அரசாங்கப் பங்குடைமை 2011ஆம் ஆண்டு பிரேசில், இந்தோனேசியா, மெக்சிகோ, நோர்வே, பிலிபைன்ஸ், தென்னாபிரிக்கா, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடு களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்நாடுகள் திறந்த அரசாங்கப் பங்குடைமைக்கான பிரகடனத்தை வெளியிட்டதுடன், ஒவ்வொரு நாடும் அதற்கான செயற்பாட்டுத் திட்டம் (Action plan) ஒன்றினையும் தயாரித்தது. இச்செயற்திட்டத்தினைத் தயாரிப்பதில் அரசாங்கத்துடன் கூட்டிணைந்து சிவில் சமூக அமைப்புகளும் ஈடுபட்டன என்பது முன்னேற்றகரமான விடயமாகும். இதன் மூலம் ஆட்சி முறை செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுதல் அதிகரிக்கின்றன. இதன்போது அரசாங்கம் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு பிரஜைகளுக்குக் கிடைப்பதுடன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் மூலம் ஊழலுக்கெதிராக செயல்படுவதற்கான பரந்த வாய்ப்பும் கிட்டுகின்றது. உண்மையில், திறந்த அரசாங்கப் பங்குடைமையில் இணையும் நாடுகள் நல்லாட்சியை இலக்காகக் கொண்டு இரண்டு ஆண்டு செயற்திட்டம் ஒன்றினைத் தயாரிக்க வேண்டும். அதில் சகல பங்குதாரர்களும் பங்குபற்றுவது பெரிதும் அவசியமாகும். அச்செயன் முறையில் பின்வரும் விழுமியங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. அரசாங்கத்தின் தீர்மானம் அல்லது செயற்திட்டமொன்றினால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட விருக்கும் பொது மக்க ளுக்குத் தீர்மானம் எடுத்தலில் வாய்ப்பு வழங்குதல் மற்றும் அச்செயன் முறையில் அவர்களை உள்வாங்குதல் வேண்டும்.
2. பொது மக்கள் அரசாங்கத்தின் தீர்மானம் எடுத்தல் செயன் முறையில் பங்குப்பற்றும் போது அவர்களின் பங்கேற்பும் பங்களிப்பும் தீர்மானங்களின் மீது செல்வாக்கு செலுத்துவதாக அமைய வேண்டும் - அது அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும்.
3. அரசாங்கத்தின் தீர்மானங்களில் ஆர்வம் உள்ளவர்களை, அதனு டன் தொடர்புடையவர்களை இயன்றளவு இணைத்துக் கொள்ள வேண்டும்.
4. தீர்மானம் எடுத்தலின் போது அல்லது திட்டங்களைத் தீட்டும் போது அர்த்தமுள்ளவகையில் பொது மக்களின் கருத்துகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
5. பொது மக்கள் தீர்மானம் எடுத்தல் செயன்முறையில் பயனுள்ள வகையில் பங்குப்பற்ற அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் தடையின்றி கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். இங்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் முக்கியத்துவத்தினை நாம் உணர வேண்டும்.

இலங்கை 2015ஆம் ஆண்டு திறந்த அரசாங்கப் பங்குடைமையில் இணைந்து கொண்டதுடன், அதற்கான செயற்பாட்டுத் திட்ட மொன்றி னையும் வெளியிட்டுள்ளது. குறிப்பாக, 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆட்சி மாற்றம் மற்றும் நல்லாட்சியின் மீது காட்டப்பட்ட அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பம் என்பன இதனை சாத்தியமாக்கியது. இலங்கையின் திறந்த அரசாங்கப் பங்குடைமைக்கான செயற்பாட்டுத்திட்டத்தில் பிரதானமாக மூன்று விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. அவையாவன:-

1. இலத்திரனியல் அரசாங்க முறையினை ஊக்குவித்தல் - அதன் மூலம் பிரஜைகள் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும். மக்கள் அதிகமாகத் தேடும் மற்றும் கேட்கும் தகவல்களைத் துரிதமாக இனங்கண்டு அவற்றை முற்போக்காக வெளியிடுவதற்கு அரச நிறுவனங்கள், இலத்திரனியல் அரசாங்கத்தினை மற்றும் விஞ் ஞான தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் பிரஜைகள் வீட்டில் இருந்தவாறே தகவல்களைப் பெற முடியும்.

2. ஆட்சி முறை செயற்பாடுகளில் பொது மக்களின் பங்கேற்பினை ஊக்குவித்தல் - அரசாங்கத்தின் உண்மையான பங்காளர்கள் மக்களேயாகும். ஆகவே, மக்கள் ஆட்சி முறை செயற்பாடுகளில் பங்குபற்றும் போது உண்மையான பங்குடைமை ஏற்படும்.

3. வினைத்திறன் மிக்க பொதுச் சேவையினை வழங்கல் - பிரஜைகள் தமது பெறுமதியான வாக்குகளின் மூலம் காலத்துக்கு காலம் புதிய அரசாங்கத்தைத் தெரிவு செய்கின்றார்கள். அத்துடன், நாளாந்தம் பல்வேறு வழிகளில் அரசாங்கத்துக்கு வரி செலுத்துகின்றார்கள். இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது யாதெனில் வினைத்திறன் மிக்க, தரமான, பாகுபாடற்ற பொதுச் சேவையாகும்.

மேற்கூறிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தில் கல்வி, சுகாதார சேவை வழங்கலை மேம் படுத்தல், தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக தகவல்களை வழங்குதல், பெண்களின் அரசியல் பங்கேற்பினை ஊக்குவித்தல், ஊழலுக்கு எதிரான உறுதியான பொறி முறையொன்றினை உருவாக்குதல், ஆட்சி முறையில் பொது மக்களின் பங்கேற்பினை அதிகரித்தல் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை இயற்றி நடைமுறைப்படுத்தல் என்பன உள்ளடக்கப்பட் டுள்ளன. இங்கு மனங்கொள்ள வேண்டிய விடயம் யாதெனில், திறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கப் பங்குடைமையினை நோக்கி செல்வதற்குத் தகவல் அறியும் உரிமை மிகவும் அடிப்படையானதாகும்.

## திறந்த அரசாங்க பங்குடைமை
## இலங்கை அரசாங்கத்தின் தேசிய நடவடிக்கைத் திட்டம்
## 2018- 2020

**உறுதிமொழிகள்**

உறுதிமொழி - 1:
பொது அதிகார சபைகளில் நேர்மையான அதிகாரிகளின் இருப்பின் ஊடாக இலஞ்சம் மற்றும் ஊழலை தடுப்பதற்கான பொது ஈடுபாட்டினை மேம்படுத்தல்.

உறுதிமொழி - 2:
சமர்ப்பித்தல், சரிபார்த்தல் மற்றும் பொது அணுகும் வசதியை எளிதாக்குவதற்கு ஒரு வினைத்திறன் மிக்க சொத்துப் பிரகடன முறைமையை ஸ்தாபித்தல்.

உறுதிமொழி - 3:
நிதி மற்றும் ஊடக அமைச்சானது குடிமக்கள் மத்தியில் தகவல் அறியும் உரிமையின் பயன்பாட்டினை அதிகரிக்கவுள்ளதுடன், 2020 அளவில் தகவல் அறியும் உரிமை நடைமுறைப்படுத்தலுக்குப் பொது அதிகாரிகளின் எதிர்வினையை மேம்படுத்தல்.

உறுதிமொழி - 4:
சுகாதார துறை அபிவிருத்தியில் குடிமக்கள் பங்குபற்றலுக்கான நிலையான பொறியமைப்பு ஒன்றை ஸ்தாபித்தல்.

உறுதிமொழி - 5:
2020 அளவில் போதைப்பொருட்கள், புகையிலை, மது மற்றும் ஏனையவற்றிற்கு 'இல்லை' என்று சொல்வதற்கு பாடசாலை மாணவர்களின் நடத்தையை மாற்றல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிமொழி - 6:
GR-1919, அரசாங்க இணையத்தளங்கள் மற்றும் திறந்த தரவு எண்ணிம தளங்களினை மேம்படுத்துவதன் மூலம் செலவு குறைந்த மற்றும் நம்பகமான அரசாங்க தகவல் சேவைகளை வழங்கல்.

உறுதிமொழி - 7:
விவசாய தீர்மானம் எடுத்தல் ஆதரவு மற்றும் விவசாய வர்த்தக ஆதரவு முறைமையின் ஊடாக விவசாயிகளை வலுப்படுத்தல்.

உறுதிமொழி - 8:
3200 அடையாளங் காணப்பட்ட குறைந்த வருமான குடும்பங்களுக்கான வீடுகளை ஒதுக்கலை தீர்மானிப்பதில் மாற்றுத்திறனுடைய நபர்களின் பங்குபற்றலுக்கான பொறியமைப்பு ஒன்றினை 2020 இறுதியில் நடைமுறைப்படுத்தல்.

உறுதிமொழி - 9:
UNCRPDஉடன் இசைந்ததாகப் பொது மக்களின் பங்குபற்றலுடன் மாற்றுத்திறன் உரிமைகள் சட்டமூலத்தை உருவாக்கி,2020 அளவில் பாராளுமன்றத்தால் இயற்றுதல்.

உறுதிமொழி - 10:
பங்கேற்பு முறையுடன் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளை அனர்த்த முகாமைத்துவத்திற்கு பொறுப்பான அமைச்சு அடையாளங்கண்டு, தயாரித்து, நடைமுறைப்படுத்தி, கண்காணித்தல்.

உறுதிமொழி - 11:
தேசிய சுற்றுச்சூழல் கொள்கையில் காலநிலை மாற்ற சவால்கள் முழுமையான உள்ளீர்க்கப்பட்டு, சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பான அமைச்சினால் பங்கேற்பு முறையில் செயற்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிமொழி - 12:
2020 அளவில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயற்றிட்டங்களில் பெண்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளை ஒழிப்பது தொடர்பான சாசனத்தின் (CEDAW) தெரிவு செய்யப்பட்ட நிறைவு அவதானிப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கு வெளிப்படையான மற்றும் பதிலளிக்கக் கூடிய செயற்பாடு ஒன்றினை ஸ்தாபித்தல்.

உறுதிமொழி - 13:
உள்ளக சேவை விநியோகத்தை மேம்படுத்துவதற்கு குடிமக்கள் பங்குபற்றலுடன் பிரதேச சபைகளில் குழு முறைமையை வலுப்படுத்தல்.

உறுதிமொழி - 14:
பயணிகளின் தேவை மற்றும் பின்னூட்டத்தின் அடிப்படையில் பொது பேருந்து போக்குவரத்தை மேம்படுத்தல்.

**வெற்றிக் கதை- 10**

**2017ஆம் ஆண்டு வடமத்திய மாகாணத்தில் இடம்பெற்ற கலை விழாவில் பாடசாலை மாணவர் ஒருவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக தகவல் அறியும் சட்டத்தின் மூலம் நியாயத்தைப் பெற்றுக்கொண்டமை**

2017ஆம் ஆண்டு வடமத்திய மாகாணத்தில் இடம்பெற்ற கலை விழாவில் பாடசாலை மாணவர் ஒருவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு தகவல் அறியும் சட்டத்தின் மூலம் நியாயம் கிடைத் துள்ளது. இக்கலை விழாவில் பல போட்டிகளுக்கு ஆக்கங்கள் கோரப்பட்டன. அதில் புகைப்பட பிரிவிற்கு அனுராதபுரத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் பங்குபற்றி மூன்றாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டார். இப்போட்டியில் வெற்றிபெற்றவர்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. ஆயினும், அவருக் கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட மாணவர் சார்பில் ஆசிரியர் ஒருவர் தகவலறியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தின் மூலம் விண்ணப்பித்தார். அதில் போட்டி முடிவுகள், போட்டியாளர்கள், ஆக்கங்களைப் பெற்றுக்கொண்ட இறுதித் திகதி, நடுவர் குழு, போட்டி முடிவுகள் தொடர்பான ஒழுங்கு விதிகள் போன்ற சகல தகவல்களும் கோரப்பட்டது. இத்தகவல்கள் அனைத்தும் கலாசார திணைக்களத்தின் தகவல் அலுவலர் மூலம் வழங்கப்பட்டதுடன், அதன் மூலம் இக்கலை விழாவில் இடம்பெற்ற பல மோசடிகள் வெளிக்கொண்டுவரப்பட்டதுடன், பாதிக்கப்பட்ட மாணவனுக்கும் நீதி வழங்கப்பட்டது (ஆதாரம்: தகவல் சஞ்சிகை, 28.07.2018. நிதி மற்றும் வெகுஜன அமைச்சின் உத்தியோகபூர்வ பத்திரிகை).




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் – 7

# பிரஜைகள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்கான சில ஆலோசனைகள்

## Some Suggestion on How Citizens Can Use Right to Information Act

**பொது மக்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கான சில ஆலோசனைகள் :**

தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு அமைவாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய தகவல்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள்.

- பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகளின் மூலமாக அமுல் படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் அல்லது செயற்றிட்டங்கள் தொடர்பான விபரங்கள். உதாரணமாக, கிராம பாதை அபிவிருத்தி, நீர் விநியோகம், கட்டட நிர்மாணம் போன்ற பல்வேறு அபிவிருத் தித் திட்டங்களைக் குறிப்பிடலாம்.
- பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் ஆட்சி மன்றங்களில் உள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கு அரசாங்கத் தினால் ஒதுக்கப்படுகின்ற நிதி தொடர்பான விபரங்கள்.
- மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் மற்றும் இந் நிறுவனங் களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான தகவல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மத்திய அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுகளுக்குத் தேவையான தகவல்களுக்காக விண்ணப்பிக்க முடியும். உதாரணமாக, கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு, மலைநாட்டு புதிய கிராமங்கள் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, தொழில் உறவு அமைச்சு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, தேசிய கலந்துரையாடல், சமூக நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு, வீடமைப்பு அமைச்சு, சிறுகைத்தொழில் அமைச்சு போன்றனவற்றைக் குறிப்பிடலாம். இவை மலையக மக்களுக்குப் பெரிதும் நெருக்கமானவையாகும்.
- மாகாண சபைகளுக்கு உட்பட்ட சில அமைச்சுகள்.
- அரச சேவைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பல்வேறு திணைக் களங்கள். உதாரணமாக, கல்வி, சுகாதாரம் (வைத்திய நிலையம், MOH), தபால், பொலிஸ், தொழில், புகையிரதம், வனஜீவராசிகள், பரீட்சை, ஆட்பதிவு, சுற்றாடல், விவசாயம், நிலஅளவை, மதுவரி, நீர்ப்பாசனம், கலாசாரம் போன்ற திணைக்களங்கள்.
- அரச சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பல்வேறு அதிகார சபைகள். உதாரணமாக: வீடமைப்பு, நுகர்வோர் விவகாரம், சிறுவர் பாதுகாப்பு, பாதை அபிவிருத்தி, சுற்றாடல் பாதுகாப்பு, தொழிற்பயிற்சி, கால்நடைகள் அபிவிருத்தி.
- அரசாங்க சேவைகள் வழங்கப்படுகின்ற பல்வேறு சபைகள் உதாரணமாக: மின்சார சபை, போக்குவரத்து சபை, நீர் வழங்கல் வடிகால் அமைப்பு, சம்பள நிர்ணயம், அரச முதலீட்டு, முதியோர் பாதுகாப்புச் சபை
- அரச சேவைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய கூட்டுத்தாபனங்கள்: அரச மரக் கூட்டுத்தாபனம், பெற்றோலியம், ஒலிபரப்பு கூட்டுத் தாபனம்.
- ஆணைக்குழுக்கள்: தேர்தல், அரச சேவை, இலஞ்ச ஊழல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, மனித உரிமை, நில சீர்திருத்தம், நிதி, தகவல் அறியும் உரிமை போன்ற ஆணைக் குழுக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஏனைய அரச நிறுவனங்கள் - மத்திய வங்கி, தேசிய கட்டடங்கள் ஆய்வு நிறுவனம், தேசிய இளைஞர் சேவை மன்றம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், விவசாய சேவை மத்திய நிலையம்.
- உள்ளூராட்சி சபைகள் - மாநகர சபை, நகர சபை, பிரதேச சபைகள்.
- 25 வீதத்திற்கு மேற்பட்ட அரச நிதியினைக் கொண்ட கம்பனிகள் மற்றும் பங்குடைமைகள்.
- அரசாங்கம், அரசாங்க முகவராண்மை, உள்ளூராட்சி அதிகார சபைகளிடமிருந்து ஒப்பந்தம், பங்கான்மை அல்லது பங்குடைமை உடன்படிக்கை அல்லது உரிமமொன்றின் கீழ் பொதுப்பணியினை நிறைவேற்றுகின்ற தனியார் அமைப்பு அல்லது நிறுவனம். உதாரணமாக,பெருந்தோட்ட மனித வள பொறுப்பு நிதியம், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சமுர்த்தி சங்கங்கள், பெண்கள் அபிவிருத்திச் சங்கம் போன்ற பல்வேறு அமைப்புக்கள்.
- அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து இச்சட்டத்திற்கமைவாக தகவல்களைப் பெற வாய்ப்புக்கள் உண்டு. அது எல்லாச் சந்தர்பங் களிலும் முடியாது. எவ்வாறான சந்தர்ப்பங்களில் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை ஆணைக்குழு தீர்மானிக்கும்.
- உயர் கல்வி நிறுவனங்கள் - பல்கலைக்கழகங்கள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், ஏனைய தனியார் உயர் கல்வி நிறுவனங்கள்.
- தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள்.
- நீதிமன்றங்கள் - நீதவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், தொழில் நியாய சபை.

மேற்கூறிய நிறுவனங்களில் இச்சட்டத்தினைப் பயன்படுத்தி அவசிய மான தகவல்களைப் பெற்றுக்கொள்ள சகல இலங்கை பிரஜைகளுக்கும் உரிமையுண்டு. இந்நிறுவனங்கள் வேறுபட்ட கடமைப் பொறுப்புகளை மேற்கொள்கின்றன. அவற்றை நன்கு அறிந்து தகவலுக்கான கோரிக்கை யினை வழங்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்ற சமூக அடிப்படை அமைப்புக்களான சமுர்த்தி சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், முதியோர் சங்கம், கூட்டுறவு சங்கங்கள், பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம், பாடசாலை அபிவிருத்தி சங்கங்களின் நடவடிக்கைகள், அவற்றுக்கான அரச நிதி ஒதுக்கீடுகள், அவற்றின் கருத்திட்டங்கள், வரவு செலவுகள் போன்ற விபரங்களையும் இச்சட்டத்திற்கு அமைவாக பெற்றுக்கொள்ள முடியும்.
- பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான அவசியமான தகவல்களையும் கூட இச்சட்டத்திற்கு அமைவாக பெற்றுக் கொள்ள முடியும். அவசியமான சமயங்களில் திருத்தப்பட்ட வினாத்தாள்களையும் பார்வையிட முடியும்.
- மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இறக்கின்ற ஒருவரின் மரணம் தொடர்பாக சந்தேகங்கள் இருக்கின்ற போது அவரது மருத்துவ அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு இச்சட்டம் வழிவகுக்கின்றது. மேலும், பாலியல் துன்புறுத்தல்களின் மூல மாகப் பாதிக்கப்படுகின்ற, கொலை செய்யப்படுகின்ற நபர்களின் மருத்துவ அறிக்கைகளை சமூக நலன் கருதி பெற்றுக்கொள்ள முடியும்.

தகவலறியும் உரிமையுடன் தொடர்புடைய முதலாவது வழக்கு 2019ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ஆயினும் இது குறித்த வழக்கு விசாரணை இது வரை ஆரம்பிக்கப்படவில்லை. ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெசனல் நிறுவனம் 2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளை உள்ளடக்கியதாக ஜனாதிபதியினதும் பிரதமரினதும் சொத்து விபரங்களைக் கோரி தகவல் கோரிக்கையினை 2017ஆம் ஆண்டு ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பியது. 1976ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டத்தின்படி பதவியில் இருக்கும் ஜனாதிபதி சொத்துக்களைப் பகிரங்கப்படுத்துவதில் இருந்து விலக்களிக்கப்பட் டுள்ளார் என்ற பதிலை ஜனாதிபதிச் செயலகம் உடனடியாக வழங்கியது. அதன் பின்னர் பிரதமரின் தகவல்களை வழங்குவதில் நீண்டகாலத் தாமதம் ஏற்பட்டது. அதன் காரணமாக ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெச னல் நிறுவனம் தகவலறியும் ஆணைக்குழுவிடம் இது தொடர்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்முறையீட்டைச் செய்தது. ஜனாதிபதி செயலக அதிகாரிகளை வரவழைத்து 2018ஆம் விசாரணை நடாத்திய ஆணைக்குழு பிரதமரின் சொத்து தொடர்பான தகவல்களை வழங்குமாறு கட்டளையிட்டது. அதன் பின்னர் ஜனாதிபதிச் செயலகம் பிரதமரின் கணக்கு விபரங்கள் மற்றும் காணியுரித்து தொடர்பான தகவல்களை வழங்குவதில் நடைமுறைச் சிக்கல்கள் நிலவுவதாக மேன்முறையீட்டு நீதிமன்றத் தில் வழக்குத் தாக்கல் செய்தது. ஆகையால் இதனை முதலாவது வழக்காக கருத முடியும்.

இலங்கைப் பிரஜையொருவர் தான் கோரிய தகவல் வழங்கப்பட வில்லை என்ற காரணத்துக்காக இதுவரையில் நீதிமன்றத்தை நாட வில்லை என்பது குறிப்பிடத்தகதாகும். இதனை ஒரு விமர்சனமாகவே குறிப்பிட முடியும். இச்சட்டத்தின் கீழ் பிரஜைகளுக்கு நீதிமன்றம் செல்ல உரிமை உண்டு. எவ்வாறான சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தை நாட முடியும் என்பது தொடர்பான விடயங்கள் இந்நூலில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. நீதிமன்றத்தை நாடுவதன் மூலம் இச்சட்டத் தின் வலிமையை அதிகரிக்க முடியும். நீதிமன்றத் தீர்ப்புக்கள் பின்னர் சட்டமாக மாறும். ஆட்சிமாற்றம், ஆணைக்குழு உறுப்பினர்களின் மாற்றம் என்பன நீதிமன்றத் தீர்ப்புக்களை மாற்ற முடியும். ஆயினும், இன்று பிரஜைகளின் சகல கோரிக்கைகளுக்குமான தீர்ப்புகளைத் தக வலறியும் ஆணைக்குழு வழங்குவதனால் பிரஜைகள் நீதிமன்றத்தை நாடுவதில்லை. ஜனநாயகத்துக்குப் புறம்பான அரசாங்கமொன்று பதவிக்கு வரும்போது இச்சட்டத்தின் வலிமை கேள்விக்குறியாகிவிடும்.

- தகவல்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அவற்றை ஊடகங் களைப் பயன்படுத்தி பகிரங்கப்படுத்த வேண்டும். (இலத் திரனியல், அச்சு, சமூக ஊடகங்கள்.
- அரச அதிகாரிகள் எவரும் பிரஜைகளை ஏன் இந்த தகவல்களைக் கோருகிறீர்கள் என வினவமுடியாது. அவர்களின் கடமை தகவலுக்கான கோரிக்கைகளை செயற்படுத்துவதாகும். சில சந்தர்ப்பங்களில் தகவல் அதிகாரிகள் அல்லது அரச அதிகாரிகள் பொதுமக்களை தவறான கருத்துக்களைக் கூறி அச்சத்துக்குட் படுத்தலாம். அதன்மூலம் தகவல்பெறும் ஆர்வத்தை இல்லாது செய்ய முடியும். இத்தகைய விடயங்களுக்குப் பொதுமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமடையத் தேவையில்லை. இவை சட்டத்தை மீறும் செயலாகும்.

- முறையான விண்ணப்பப்படிவம் கிடைக்காவிட்டால் தாம் சுயமாக ஒரு விண்ணப்பப்படிவத்தை தயாரித்து சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களில் ஒப்படைக்கலாம் (பின்னிணைப்பில் மாதிரி விண்ணப்பப்படிவம் இணைக்கப்பட்டுள்ளது). தகவல் கோரிக்கையை சமர்ப்பிக்கும் போது முடிந்தளவு ஆதாரங்களை இணைப்பதன் மூலம் தகவல்களை இலகுவில் பெற்றுக் கொள்ள முடியும்.

இச்சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர் வடக்கில் இராணுவத்தால் நடாத்தப்பட்ட ஹோட்டல்கள், விடுதிகள் தொடர்பான தகவல்கள் பெறப்பட்டடுள்ளன. மேலும், பரீட்சைப் பெறுபேறுகள், நேர்முகப் பரீட்சை முடிவுகள், பதவி நீக்கங்கள், சம்பள உயர்வுகள், கொடுப் பனவுகள், இடமாற்றங்கள் போன்ற பல தகவல்கள் அதிகளவில் கோரப்படுகின்றன. இச்சட்டத்தினால் கிடைத்த மிகப்பெரும் வெற்றி யாதெனில், ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் அக்குரேகொட எனும் இடத்தில் அமைக்கப்பட்ட இராணுவ தலைமைக்கட்டிடம் தொடர்பான முழு அறிக்கையும் அமைச்சரவையினால் வெளியிடப்பட்டமையாகும். திருக்குமார் நடேசன் என்பவர் இக்கட்டிட நிர்மாணத்தில் இடம்பெற்ற நிதிமோசடிகளை வெளிக்கொணர்வதற்காக RTI விண்ணப்பத்தை மேற்கொண்டார். இக்கட்டிட நிர்மாணத்தில் ஏற்பட்ட முறைக்கேடுகளை விசாரிப்பதற்காக ஏற்கனவே அமைச்சரவைக் குழுவொன்று 2015ஆம் நியமிக்கப்பட்டிருந்தது. தேசிய பாதுகாப்புக் காரணங்களை முன்னிலைப்படுத்தி பாதுகாப்பு அமைச்சு இவ்வறிக்கையினை வழங்கவில்லை. அமைச்சரவையும் இதில் ஆர்வம் காட்டவில்லை. நீண்ட விசாரணைகளுக்குப் பின்னர் தகவலறியும் ஆணைக்குழு இவ்வறிக்கையை திருக்குமார் நடேசனுக்கு வழங்குமாறு உத்தரவிட்டது. அதன்படி 2019 ஏப்ரல் மாதம் அவ்வறிக்கை வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் இவ்வறிக்கை தேசிய பாதுகாப்பின் நிமித்தம் வழங்கப்பட முடியாதென வலியுறுத்தப்பட்டது. ஆயினும், இந்த அறிக்கையில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எந்த விடயமும் இல்லை எனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமக்களின் நலனுக்காக இத்தகைய தகவல்களை வழங்கமுடியும் எனவும் ஆணைக்குழு குறிப்பிட்டது.

அதேபோல், 2018 அக்டோபர் 12ஆம் திகதி 'மாற்றம்' அமைப்பு தொழில் திணைக்களத்திற்கு மலையகத்தில் இயங்கும் ஆறு தொழிற்சங்கங்கள் தொடர்பான தகவல்களைக் கோரி தகவலறியும் விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தது. அதில் பின்வரும் 7 விடயங்கள் கோரப்பட்டிருந்தன.

1. ஒவ்வொரு தொழிற்சங்கத்தினதும் அங்கத்தினர் எண்ணிக்கை (பால் அடிப்படையில்).
2. ஒரு தொழிலாளியிடம் அறவிடப்படும் மாத சந்தா.
3. ஒவ்வொரு தொழிற்சங்கமும் 2017ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட மொத்த சந்தா தொகை.
4. ஒவ்வொரு தொழிற்சங்கமும் 2018 செப்டம்பர் மாதம் பெற்றுக்கொண்ட மொத்த சந்தா தொகை.
5. ஒவ்வொரு தொழிற்சங்கமும் 2017 டிசம்பர் மாதம் பெற்றுக்கொண்ட மொத்த சந்தா தொகை.
6. 2017இல் தொழிற்சங்கங்கள் செலவழித்த மொத்த தொகையும் செலவு செய்யப்பட்ட விடயங்களும்.
7. தொழிற் சங்கங்களின் கணக்கறிக்கைகள், 2017ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு செலவிடப்பட்ட தொகை (சேமநலன், சுகாதாரம், கல்வி)

பின்வரும் தொழிற்சங்கங்களிடம் இருந்து தகவல்கள் கோரப்பட்டன:-

1. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்
2. இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் (LJEWU)
3. தொழிலாளர் தேசிய சங்கம்
4. மலையக மக்கள் முன்னணி
5. இணைந்த பெருந்தோட்ட தொழிற்சங்க சம்மேளனம்
6. இலங்கை செங்கொடிச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 5 :
தொழிற்சங்கங்களின் சந்தா விபரம்

| | CWC | LJEWU | NUW | JPTUC | UPF | SRFU |
|---|---|---|---|---|---|---|
| **அங்கத்தவர்கள் எண்ணிக்கை (2017)** | 383,007 (2017/2018) | 148,242 | 21,280 | 8 தொழிற் சங்கங்கள் | | |
| **ஆண்** | | 90,701 | 11,770 | | | |
| **பெண்** | | 57,541 | 9,510 | | | |
| **மாதாந்த சந்தாப் பணம்** | தொழிலாளர்கள் ஆயின் நாட் சம்பளத்தின் 1/3 பங்கு<br><br>தொழிலாளர்கள் அல்லாதோர் ரூபா 40 | சம்பளத்தில் 1/3 பங்கு | ரூபா 25 | ரூபா 300 | சம்பளத்தில் 1/3 பங்கு | ரூபா 100 |
| **01. 04. 2016- 31.03.2017 மொத்த சந்தாப் பணம்** | ரூபா 77,751,933 | ரூபா 22,437,558.53 | ரூபா 43,524,328.41 | | | |
| **01.04. 2017- 31.03.2018 மொத்த சந்தாப் பணம்** | | ரூபா 24,702,439.33 | | | | |

ஆதாரம்:- மாற்றம் இணையத்தளம் (12.25.2019இல் பெறப் பட்டது)

குறிப்பு:- மேலுள்ள அட்டவணையில் இடைவெளிகளாக இருப்பவை தகவல்கள் வழங்கப்படாதவையாகும்.

குறிப்பு: இவ்வட்டவணையானது பிரஜைகள் அரச நிறுவனங்களில் எத்தகைய தகவல்களைப் பெற முடியும் என்பதனை எளிமையாகக் காட்டுகின்றது. அரசாங்க நிறுவனம் எனும் போது அதனுள் பல பிரிவுகள் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் வேறுபட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றன. அவற்றைச் சரியாக உணர்ந்து அவசியமான தகவலை சரியான இடத்தில் கோர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த பின்னர் தகவல்கள் பெற்றுக்கொள்ள சுமார் 2 மாதங்கள் எடுத்தன. தொழில் திணைக்களத்தில் தமிழ்ப் பேசும் அதிகாரிகள் இல்லாததால் காலதாமதம் ஏற்படுவதாக தகவல் அதிகாரி குறிப்பிட்டார். கேட்கப்பட்ட தகவல்களில் முதலாம், மூன்றாம் கேள்விகளுக்கு மாத்திரமே தகவல்கள் இரண்டு மாதங்கள் கடந்து வழங்கப்பட்டன. ஏனைய தகவல்கள் தொழிற் திணைக்களத்திடம் இல்லையென பதிலளிக்கப்பட்டது. தொழிற் திணைக்களத்திடம் ஒரேயொரு மொழிபெயர்ப்பாளர் இருப்பதனால் தமிழ்மொழி மூலமான விண்ணப்பங்கள் காலதாமதமானதாகக் குறிப்பிடப்பட்டது. எவ்வாறாயினும் மேற்கண்ட அட்டவணை 5 இலிருந்து தகவல்கள் பெறப்பட்டன.

தமிழ்மொழிப் பிரயோகம் அரச நிறுவனங்களில் சரியாக இடம் பெறாதவிடத்து அது தொடர்பான தகவல்களைக் கோரும் உரிமை எமக்கு உண்டு. அரச நிறுவனங்கள் இரு மொழிக் கொள்கையினைப் பின்பற்ற வேண்டும். அவ்வாறு பின்பற்றத் தவறும் போது இச்சட்டத்தின் உதவியுடன் தமிழ் பேசக்கூடிய அதிகாரிகளின் எண்ணிக்கை, தமிழ் அதிகாரிகளின் எண்ணிக்கை, தமிழ் மொழி அமுலாக்கம் முறையாக இடம்பெறாமைக்கான காரணம், தமிழ் மொழி விண்ணப்பங்கள் கால தாமதமாவதற்குக் காரணம் என்ன, தமிழ்மொழியை சீராக அமுலாக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கை போன்றன தொடர்பான தகவல்களை பெற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை 6 :**

பொது நிறுவனங்களில் இருந்து தகவலைப் பெற்றுக் கொள்வதற்கான சில நடைமுறை உதாரணங்கள்

| இல | நிறுவனம் அல்லது அலுவலர்கள் | வழங்கப்படும் சேவைகள் | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் மக்கள் அணுகக்கூடிய, பெறக் கூடிய தகவல்கள்: சில நடைமுறை உதாரணங்கள் | |
|---|---|---|---|---|
| | | | விடயம் அல்லது பிரச்சினை | தேவைப்படும் தகவல்கள் |
| 01 | பிரதேச செயலகம் | உங்கள் தோட்டத்தில் சன சமூக நிலையம் நிர்மாணிக்கப் பட்டது. | சன சமூக நிலையத்தை ஒரு குறிப்பிட்ட கட்சியினர் மாத்திரம் பயன்படுத்தல். | இந்த சன சமூக நிலையம் அமைக்கப் பட்டதன் நோக்கம், நிதி மூலம், செலவிடப் பட்ட நிதி, கருத்திட்டத்திற் கான ஒப்பந்த விபரம், இதனை நிர்வகிக்கும்/ பராமரிக்கும் முறை. |
| 02 | பிரதேச செயலகம் - சிறுவர் பாதுகாப்பு அபிவிருத்தி உத்தியோ கத்தர் | சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்தல். | ஒரு சிறுமி பாலியல் துஷ்பிரயோகத் தால் பாதிக்கப் பட்டுள்ளார். இது தொடர்பாகக் குறித்த அதிகாரிக்கு அறிவிக்கப்பட் டுள்ளது. | இது தொடர்பாக அவர் மேற் கொண்டுள்ள சட்டரீதியான நடவடிக்கை கள், அதன் தற்போதைய நிலை என்ன? |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 03 | பிரதேச செயலகம் -இளைஞர் சேவை உத்தியோ கத்தர். | தேசிய இளைஞர் சேவை மன்றத் தினுடைய சேவைகள் பிரதேச செயலகங்களில் பணிபுரிகின்ற இளைஞர் சேவை உத்தியோத்தர் மூலமாகவே கிராம மட்டங்களில் நடைமுறைப் படுத்தப்படு கின்றது. | இளைஞர் சேவை உத் தியோகத்தர் மூலமாகச் செய்யப்பட்ட கருத்திட்டங்கள். | நமது பிரதேச செயலகத்திற்கு கருத்திட்டங்க ளுக்காக தேசிய இளைஞர் சேவைக் கழகத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியின் தொகை, கருதிட் டங்க ளுக்காகத் தெரிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்கள், இளைஞர் கழகங்களைத் தெரிவு செய் வதற்கான வரையறைகள். |
| 04 | பிரதேச செயலகத்தின் விளையாட்டு உத்தியோ கத்தர். | கிராம மட்டங் களில் விளையாட் டுக் கழகங்களை உருவாக் குதல் மற்றும் அவற்றைப் பதிவு செய்தல். | விளையாட்டு கழகங்களைப் பதிவு செய்வ தற்காக ஆவணங்களுடன் விண்ணப்பிக்கப் பட்டுள்ளது. பல மாதங்களாகப் பதியப்பட வில்லை. | பதிவு தாமதமாகு வதற்கான காரணங்களைக் கோருதல். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 05 | பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோ கத்தர் | கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகள் அடித்தள மக்களைச் சென்றடைகின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | தோட்டப் பகுதி மக்களுக்கு கலாசார உத்தியோகத்தரின் சேவைகள் கிடைப்பதில்லை -அறநெறி வகுப்புகள் தோட்டங்களில் இடம்பெறுவது குறைவாகும். | கலாசாரத் திணைக்களத் தின் மூலமாக வழங்கப்படு கின்ற சேவைகள் மற்றும் பெருந்தோட்ட மக்களுக் குக் கிடைக் காமைக்கான காரணம் என்ன? |
| 06 | பிரதேச செயலகத் தின் சமூக சேவை உத்தியோ கத்தர் | உதவிக் கொடுப்பனவு களை வழங்குதல், சமூக பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப் படுத்தல், சமூக சேவை அமைப்புக்களைப் பதிவு செய்தல். | விசேட தேவைக்குரிய சிறுவன் வாழும் ஒரு வறிய குடும்பம் ஒன்றுக்கு எந்த உதவிகளும் கிடைப்பதில்லை. | வறிய குடும்பங்க ளுக்கு சமூக சேவை திணைக் களத்தால் பிரதேச செயலகம் மூலமாக வழங்கப் படுகின்ற சேவைகள் எவை? |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 07 | பிரதேச செயலகத்தின் முதியோர் உத்தியோகத்தர் | முதியோர் சபைகளின், முதியோருக்கான தேசிய செயலகத்தின் சேவைகளைப் பிரதேச செயலக முதியோர்உத்தியோகத்தரின் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். அரசாங்கத்தினால் 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் கொடுப்பனவுகளை வழங்குதல். | முதியோர் கொடுப்பனவினைப் பெறுவதற்காக தகுதியான ஒருவர் விண்ணப்பித்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் இன்றும் அவருக்கு கொடுப்பனவு வழங்கப்படவில்லை. | முதியோர் கொடுப்பனவு உரிய நபருக்கு வழங்கப்படாமைக்கான காரணம், அதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் முறை. |
| 08 | பிரதேச செயலகத்தின் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர் | தேசிய சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் சேவைகளைப் பிரதேச மட்டத்தில் வழங்குதல் | ஒருவருடைய வீட்டுக்கு அண்மையில் உள்ள பலா மரம் பெரும் மழை, காற்று காலங்களில் வீட்டின் கூரையைப் பாதிக்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன. மேலும், இம்மரத்தை ஊடறுத்து மின்னிணைப்புக் கம்பி செல்கின்றது. எனவே, இம்மரத்தினை வெட்டுவதற்கு, உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கப் பட்டிருந்தும் பல மாதங்களாக எந்தப் பதிலும் வரவில்லை | மரம் வெட்ட அனுமதி தாமதம் ஆவதற்கான காரணம், இது குறித்து எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கை, குடியிருப்பாளர்களின் பாதுகாப்பிற்கான உத்தரவாதம், தொடர்ந்து விண்ணப்பதாரர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 09 | பிரதேச செயலகத்தின் பெண்கள் அபிவிருத்தி உத்தியோ கத்தர் | பெண்களை வலுவூட்டுவதற் கான செயற்பாடு களைச் செய்தல் | பெருந்தோட்டப் பெண்களுக்கு இந்த உத்தியோகத்தரின் சேவைகள் குறித்த தெளிவு இல்லை அல்லது குறைவு. | பிரதேச செயலகத்தில் பணிபுரிகின்ற பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத் தரிடம் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய சேவைகள் எவை? |
| 10 | பிரதேச செயலகத்தின் கிராமிய அபிவிருத்தி உத்தியோ கத்தர் | கிராம அபிவிருத்தி சங்கங்களைப் பதிவு செய்தல் அவற்றை வழி நடத்தல், கிராமிய மட்ட அபிவிருத் தித் திட்டங்களை மேற்கொள்ளல். | கிராமிய அபிவிருத்தி சங்கங்களுக்கான யாப்பு தமிழ் மொழியில் கிடைக்கவில்லை, சங்கத்தினைப் பதிவு செய்வதில் தாமதம். | இந்த யாப்பின் பிரதியினைத் தமிழ் மொழியில் கோருதல், சங்கத்தின் பதிவு தாமதமா வதற்கான காரணத்தினைக் கேட்டல். |
| 11. | பிரதேச செயலகத்தின் ஆட்பதிவு பிரிவு | அடையாள அட்டைகளை பெற்றுக் கொடுத்தல் | விண்ணப்பித்து மூன்று மாதங்களாகியும் அடையாள அட்டை கிடைக்க வில்லை | தாமதத்திற்கான காரணம் மற்றும் விண்ணப்பத் தில் அல்லது ஆவணங்களில் குறைபாடுகள் இருப்பின் அவை குறித்த தகவல். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | தொழிற் திணைக்களம் | தொழில் உரிமைகளைப் பாதுகாத்தல் | ஒரு தனியார் தோட்டம் ஒன்றில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகம் பல ஆண்டுகளாக ஊ.சே நிதி பங்களிப்புச் செய்யவில்லை. சில வருடங்களாகத் தொழிலாளர்களுக்கு ஊ.சே. நிதி கூற்று கிடைக்கவில்லை. | தொழிலாளர்களின் கணக்கில் உள்ள ஊ.சே நிதி தொகை, தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக தொழிற் திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கைகள், நிலுவைத் தொகையினைப் பெறுவதற்கான வழிமுறை என்பவற்றைக் கோருதல். |
| 13. | சுகாதார திணைக்களம் - மருத்துவ மனை | நோயாளிகளுக்கு மருத்துவம் செய்தல் | மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்ட கர்ப்பிணி தாயின் மரணத்தில் சந்தேகம். | அப்பெண்ணுக்கு வழங்கப்பட்ட சிகிச்சைகள், அவரது மரணத்திற்கான காரணத்தை விளக்கும் விரிவான மருத்துவ அறிக்கையைக் கோருதல். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | MOH – பொது சுகாதார அத்தியட்சர் | பொது சுகாதார சேவைகள், சூழல் பாதுகாப்பு | ஒரு அரசியல் வாதிக்குச் சொந்தமான ஹோட்டலில் இருந்து வெளியேறும் கழிவுகள் ஆற்றில் திறந்து விடப்படுகின்றது. பொது சுகாதார அத்தியட்சருக்கு அறிவிக்கப்பட்டும் எந்த நடவடிக்கை களும் எடுக்கப் படவில்லை | இது தொடர்பாக மேற்கொள்ளப் பட்ட சட்ட நடவடிக்கை, தாமதத்திற்கான காரணம், இந்த கட்டடத்திற்கு எவ்வாறு அனுமதி வழங்கப் பட்டது தொடர்பான தகவல். |
| 15. | கல்வித் திணைக்களம் | பாடசாலைக் கல்வி சேவை | பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு வசூலிக்கப்படும் நிதி தொடர்பாக உரிய ரசீதுகள் வழங்குவதில்லை, முறையாக சங்கம் கூட்டப்பட்டு பெற்றோருக்குக் கணக்குகள் காட் டப்படுவதில்லை. | பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்குச் சேகரிக்கப் பட்ட நிதி, உரிய ஆவணங் களுடனான வரவு செலவு அறிக்கை யினைக் கோருதல். |
| 16. | பரீட்சைத் திணைக்களம் | பரீட்சைகளை முன்னெடுத்தல் | கணித பாடத்தில் தனது பரீட்சைப் பெறுபேறு தொடர்பாக சந்தேகம் | தகவல் உரிமைச் சட்டத்திற்கு அமைவாக வினாத்தாளைப் பார்வையிட முடியும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 17. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | உயர் கல்வி | தனக்கு பல்கலைக் கழக அனுமதி கிடைப்பதற்கு வாய்ப்பு இருந்தும் கிடைக்க வில்லை, என ஒரு மாணவன் கருதி அதற்காக மேன்முறையீடு செய்யத் தீர்மானித்துள்ளான் | தனக்கு பல்கலைக்கழக அனுமதி மறுக்கப் பட்டமைக்கான காரணத்தைக் கோர முடியும் |
| 18. | தபால் திணைக்களம். | தபால் சேவை | பதிவுத் தபால் தாமதித்து கிடைத்தமையால் நேர்முகப் பரீட் சைக்குச் செல்ல முடியாது போனது. | தபால் தாமதித்ததற் கான காரணத்தைக் கோருதல். |
| 19. | வீதி அபிவிருத்தி அதிகார சபை | பிரதான பாதைகளைப் பராமரித்தல். | குறித்த பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படும் பாதை தொடர்பான விபரங்கள் தகவல் அறியும் சட்டத் திற்கு அமைய மக்களுக்கு வெளிப்படுத்தப்பட வில்லை. | பாதை அபிவிருத் திக்கான நிதி ஒதுக்கீடு, செலவிடப் பட்ட நிதி, மதிப்பீட்டு அறிக்கை (Estimate), திட்ட வரைபடம் (Plan) என்பவற்றைக் கோர முடியும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 20. | பொலிஸ் திணைக்களம் | சட்டம் ஒழுங்கு | தோட்ட முகாமையாளர் தொழிலாளர்கள் தோட்ட சொத்துக் களுக்கு சேதம் ஏற்படுத்தியதாக பொய்யான முறைப்பாட்டினை பொலிஸ் நிலையத் தில் செய்துள்ளார். எனவே இது தொடர்பான விசாரணை நடத்தப்பட்டு முறைப்பாடு பதிவு செய்யப்பட் டுள்ளது. | மேலதிக நடவடிக்கை களுக்காக விசாரணை அறிக்கையின் தமிழ் மொழியிலான பிரதியைக் கோர முடியும் |
| 21. | வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணிமனை | வெளிநாட்டு வேலை வாய்ப்பு தொடர்பான சேவைகள் | தனது மனைவி வெளிநாடு சென்று 5 வருடங்களுக்கு மேலாகியும் வீடு திரும்பவில்லை. எந்த ஒரு தொடர்பும் இல்லை | குறித்த நபரின் தற்போதைய நிலை குறித்த தகவல்களைக் கோர முடியும் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 22. | சமுர்த்தி வங்கி | வறுமை ஒழிப்பு திட்டம் | பின்தங்கிய தோட்டம் ஒன்றில் வாழும் மக்க ளுக்கு இதன் சேவை கிடைக்க வில்லை. | குறித்த சமுர்த்தி பிரிவில் முன்னெடுக் கப்படும் வேலைத் திட்டங்கள், நிதி ஒதுக்கீடு, பயனாளி களைத் தெரிவு செய்யும் முறை என்பவற்றைக் கோருதல் |
| 23. | தொழில் நியாயசபை | தொழிலாளர்களின் தொழில் முடிவுறுத்தல் தொடர்பான வழக்குகளை விசாரித்தல் | தொழில் முடிவுறுத்தல் செய்யப்பட்ட ஒரு தொழிலாளி தொடர்பான வழக்கு நடந்து கொண்டுள்ளது | வழக்கு விசாரணை அறிக்கையின் பிரதியைக் கோர முடியும் |
| 24. | பிரதேச செயலகத் தின் பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவு | பிறப்புச் சான்றிதழ்களை வழங்குதல் | தமிழ் மொழியில் பிறப்புச் சான்றிதழைப் பெறுவதற்கான விண்ணப்பம் வழங்கப்படா மையால் கால தாமதம் | கால தாமதத் துக்கு காரணம் என்ன, தமிழ் மொழி பேசக்கூடிய அதிகாரிகள், இரு மொழி அமுலாக்கம் தொடர்பான தகவல்களைக் கோர முடியும் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 25. | பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி பொறுப்பு | தோட்டத் தொழிலாளர்களின் சமூக அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட் டங்களை மேற் கொள்கின்றது | தோட்டம் ஒன்றில் வீடமைப்புத் திட்டத்திற்கான அல்லது குடி நீர் அல்லது மலசலகூட வசதிகளை மேம்படுத்து வதற்கான வேலைத்திட்டத் திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு 6 மாதங்கள் ஆகியும் எந்த முன்னேற்றமும் இல்லை | இக்கருத் திட்டத்தின் தற்போதைய நிலைகுறித்த (முன்னேற்றம், தாமதத்துக்கான காரணம்) தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். |
| 26. | தொழில் திணைக்களம் | தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்தல் | தொழிலாளர்கள் கணக்கு மிகுதிகளை அறிந்துகொள்ள சென்ற போது மறுக்கப்பட்டமை, தமிழ் மொழியில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படாமை. | கணக்கு மிகுதியினை வழங்காமைக் கான காரணம் மற்றும் தமிழ் மொழி விண்ணப்பம் மறுக்கப்பட் டமைக்கான காரணங்களை அறிய முடியும் |
| 27. | பாடசாலை | யாவருக்கும் சமமான தரமான கல்வியை வழங் குதல் | தோட்டப்புற பிள்ளையொன் றினை நகரப் பாடசாலைக்கு அனுமதிக்காமை | எந்தக் காரணங்களின் அடிப்படையில் அனுமதி மறுக்கப்பட்டது என்ற தகவலை அறிதல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 28. | இலங்கை மின்சார சபை | தடையற்ற மின் சாரம் மற்றும் மின் தாக்கத்தில் இருந்து பொது மக்கள் பாது காப்பினை உறுதி செய்தல் | மின் தாக்கம் ஏற்படக்கூடிய இடங்களை சுத்தப்படுத்த, மரங்களை வெட்ட, ஆபத்தான மின் கம்பங்களை மாற்ற பணம் கோருதல். | பணம் கோருவது சட்டப்படி குற்றமாகும் - அதற்கான காரணத்தினை இச்சட்டத்தின் மூலம் கோர முடியும் |

பிரஜைகளுக்கு மிக அண்மையில் இருக்கின்ற கீழ் மட்ட அரச நிறுவனங்களான பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை என்பன பொது மக்களின் நிதியினைப் பயன்படுத்தி பல்வேறு பாதை நிர்மாணத் திட்டங்களை மேற்கொள்கின்றன. இவற்றில் பெரும்பாலும் கொங்றீட் பாதைகளைக் காண முடியும். இவை பல சந்தர்ப்பங்களில் வள மற்றும் நிதி வீண்விரயத்தினை ஏற்படுத்துவதாக அமைகின்றது. மேலும், ஊழல் மோசடிகள் அதிகம் இடம்பெறும் பாதை நிர்மாணங்களில் ஒன்றாக இது காணப்படுகின்றது. சரியான சாத்தியவள ஆய்வுகள் (feasibility study) அல்லது எத்தகைய பாதை அப்பிரதேசத்திற்குப் பொருத்தமானது என்பது தொடர்பான முறையான திட்டங்கள் அல்லது மதிப்பீடுகள் இல்லாமல் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும் போது இத்தகைய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பொதுவில் பிரதேச சபைகள், செயலகம் மற்றும் மாகாண சபைகள், மேலும் மத்திய அமைச்சுக்கள் பின்வரும் பாதை நிர்மாணங்களை கிராமிய தோட்டப் பகுதிகளில் மேற்கொள்கின்றன:

- மணல் வீதி
- சரளைக் கல் வீதி
- தார் இடப்பட்ட வீதி
- கொங்றீட் இடப்பட்ட வீதி
- சீமெந்து தொகுதிகள் இடப்பட்ட வீதி
- கார்பட் இடப்பட்ட வீதி (டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெசனல், 2012).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, எந்த பிரதேசத்துக்கு எத்தகைய வீதி பொருத்தமானது என தீர்மானிப்பதில் பொது மக்களுக்கு பெரியளவிலான பொறுப் புண்டு. பாதை நிர்மாண வேலைகள் இடம்பெறும் போது அல்லது அதற்கு முன்பு இது தொடர்பான தகவல்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்வது பொதுமக்களுக்குள்ள உரிமையும் கடப்பாடுமாகும். இந்த நாட்டில் இடம்பெறும் அபிவிருத் திச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுவது பொது மக்களின் பணமாகும். அப்பணம் அர்த்தமுள்ள வகையில் செலவிடப்படுகின்றதா அல்லது பயன்படுத்தப்படுகின்றதா என்பதனை ஆராய்ந்து பார்ப்பது பிரஜைகளின் பொறுப்பாகும். அதனை ஆராய்வதற்கு தகவலறியும் சட்டத்தினைப் பயன்படுத்த வேண்டும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்கான சில ஆலோசனைகள்:-

- தகவல் அறியும் குழுக்களை அமைத்தல்
- குடியியல் கல்வியை வழங்குதல்.
- பாடசாலை மற்றும் சமூக மட்ட விழிப்புணர்வு (ஆசிரியர்கள், மாணவர்கள், இளைஞர் யுவதிகள், தொழிலாளர்கள் மற்றும் ஏனையோர்).
- போஸ்டர் மற்றும் ஸ்டிக்கர் வேலைத்திட்டம்.
- தபால் அட்டை பிரசாரம் மூலம் அரச நிறுவனம் மற்றும் தொடர்புடைய அமைச்சுக்கு அழுத்தம் கொடுத்தல்.
- அரச அதிகாரிகளுக்கு இச்சட்டம் தொடர்பாக விழிப்புணர்வு வழங்குதல்.
- சமூகக் கணக்காய்வுகளை மேற்கொள்ளுதல்.
- கலைகள் மூலமாக விழிப்புணர்வு வழங்குதல் (வீதி நாடகம் போன்ற).
- வெகுஜன ஊடகங்களைப் பயன்படுத்தி விழிப்புணர்வு மற்றும் ஆதரவு பிரசாரம் (தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, இணையத்தளம் போன்றன).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி தகவல்களைப் பரிமாறுதல், விழிப்புணர்வினை வழங்கல் மற்றும் இச்சட்டத்தின் சீரான அமுலாக்கத்தினை வேண்டி ஆதரவுப் பிரசாரம் செய்தல்.
- சமூக மட்ட அமைப்புக்களைப் பயிற்றுவித்தல் (மரண கமிட்டி, கோவில் கமிட்டி, வாலிபர் சங்கம், கிராமிய அபிவிருத்தி மற்றும் பெண்கள் அபிவிருத்தி சங்கம்).

**குறிப்பு:**

மலையகத்தில் தகவல் கோரிக்கையினை முன்வைப்பதில் மற்றும் பெற்றுக்கொள்வதில், மேன் முறையீடுகளை மேற்கொள்வதில் மொழி ஒரு தடையாக அமையும். இதற்கு தமிழ் மொழி அமுலாக்கம் சரியான முறையில் இடம்பெறாமை, குறைந்தளவிலான தமிழ் அரச அதிகாரிகள் மற்றும் தமிழ் பேசுவோர் காணப்படுதல், தமிழ் மொழி அமுலாக்கத்தில் காணப்படும் விருப்பமின்மை போன்ற பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆகவே, தகவல் கோரிக்கையினைத் தமிழ் மொழியில் வழங்கும் போது நீண்ட கால தாமதம் ஏற்படலாம், அல்லது தமிழ் அதிகாரிகள் இல்லையென்ற காரணத்தினால் தகவல் கோரிக்கை காலம் தாழ்த்தப்படலாம். இப்பிரச்சினைகளைச் சரியான முறையில் கையாள வேண்டும். அவ்வாறன்றில், இச்சட்டத்தின் பயனை சிறுபான்மை மக்களால் முழுமையாக அனுபவிக்க முடியாது. மறுபுறமாக, தகவல் கோரிக்கைக்கான பதில்கள் சிங்கள மொழியில் வழங்கப்படுமாயின் அதனை விளங்கிக்கொள்வது சாதாரண மக்களுக்குக் கடினமாக அமையும். இத்தகைய விடயங்கள் தொடர்பாகச் சிவில் சமூக அமைப்புகள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் –8

# முடிவுரை
# Conclusion

உலகில் 50க்கும் மேற்பட்ட நாடுகளின் அரசியலமைப்பில் அரச நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ள தகவல்களைப் பொதுமக்களுக்கு பெற்றுக்கொள்ளும் உரிமையுண்டு எனவும், மறுபுறமாக, பிரஜைகளுக்கு தகவலை வெளிப்படுத்துவது அரசாங்கத்தின் கடப்பாடு என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும், தகவல் வழங்கும் சட்டங்கள் வெளிப்படைத் தன்மையினை ஏற்படுத்தியுள்ளதா என்பது தொடர்ந்தும் முன்வைக்கப்படும் வினாவாகக் காணப்படுகின்றது. காரணம், பல நாடு களில் இச்சட்டங்கள் பாவனையற்று, உறங்கும் நிலையில், வினைத் திறனற்று, குறைபாடுகள் நிறைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. சில நாடுகளில் தகவல் வழங்குவதில் காணப்படும் விதிவிலக்கினை அரசாங்கங்கள் துஷ்பிரயோகம் செய்கின்றன. சில நாடுகளில் பல்வேறு செயற் திட்டங்களை முன்னெடுத்து வரும் சர்வதேச நிறுவனங்களுக்கு தகவல்களைப் பெற்றுக்கொள்ள உரிமை வழங்கப்படவில்லை. இச் சட்டங்களின் சீரான அமுலாக்கமானது ஒரு அரசாங்கம் இரகசியத்தை பேணுதல் என்ற நிலையில் இருந்து வெளிப்படைத்தன்மை என்ற கலாசாரத்தை நோக்கி செல்லும் இயலுமையைக் கொண்டுள்ளதா என்பதிலேயே தங்கியுள்ளது.

சிம்பாப்பே, சேர்பியா, அல்போனியா, பொஸ்னியா போன்ற நாடுகளில் தகவல் அறியும் சட்டம் காணப்பட்டாலும் அவை பொது மக்களுக்குப் பயன் தருவதாக இல்லை என கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு அந்நாடுகளில் பதவிக்கு வரும் அரசாங்கங்கள் வெளிப்பாட் டுத்தன்மை மற்றும் வெளிப்படுத்தல் என்ற கலாசாரத்தை நோக்கி செல்ல தயாரின்மையே காரணமென குறிப்பிடப்படுகின்றது. பல நாடுகளில் இச்சட்டம் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு இன்மையால் அதற்கான கேள்வி மிகக் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. பனாமா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இச்சட்டம் காணப்பட்டாலும், அதன் பயன்களைப் பெற்றுக்கொள்வது மிகவும் கடினமான செலவு மிகுந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. மேலும், பல நாடுகளில் தேசியப் பாதுகாப்பு இச்சட்டத்தின் சீரான அமுலாக்கத்தினை, பயனை பெரியளவில் கட்டுப்படுத்தியுள்ளது. மெக்சிகோவில் 2002ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டம் கொண்டுவரப்பட்டதன் பின்னர் பல முக்கியமான அரச ஆவணங்கள் மற்றும் தகவல்கள் அழிக்கப்பட் டுள்ளன, அவை அரச நிறுவனங்களில் இருந்து அகற்றப்பட்டுள்ளன (Banisar, 2004).

இலங்கையைப் பொறுத்தவரை தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாகக் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளில் அதிகமானவை நிர்வாகச் சீர்கேடுகள், அரச நிறுவனங்களின் கொள்முதல் செய்வதில் இடம்பெறும் மோசடிகள், விலை மனுக் கோரலில் நிலவும் குறை பாடுகள், பொது நிறுவனங்களில் தொடரும் ஊழல் மோசடிகள், ஒப்பந்தங்களை வழங்குவதில் நிலவும் மோசடிகள், அரச வளங்களை வீண் விரயம் செய்தல், தனிப்பட்ட தேவைகளுக்காகப் பயன்படுத் துதல், துஷ்பிரயோகம் செய்தல், (அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள்), அரச நிதி மோசடி, வினைத்திறனின்மை, பொதுச் சேவை வழங்கலில் இடம்பெறும் மோசடிகள், பக்கச்சார்பு, அபிவிருத் தித் திட்டங்களில் நிலவும் மோசடிகள் தொடர்பானவையாகவே காணப்படுகின்றன. இவை நாட்டின் சகல பிரஜைகளையும் பாதிக்கும் செயற்பாடுகளாகும். ஆகவே, இச்சட்டத்தைப் பயன்படுத்தி இத்தகைய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது அனைத்து பிரஜைகளினதும் பொறுப்பாகும்.

இன்னொரு பகுதி முறைப்பாடுகள் அரச பொது நிறுவனங்களில் இடம்பெறும் பரீட்சைகள், இடமாற்றம், பதவி உயர்வு, ஆட் சேர்ப்பு என்பவற்றில் காணப்படும் வெளிப்படைத் தன்மையின்மை, குறைபாடுகள், பக்கச்சார்பு, அரசியல் தலையீடு, காணிப் பிரச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைகள், சொத்துப் பிரச்சினைகள், பாடசாலை அனுமதி என்பவற்றுடன் தொடர்புடையதாகும். இச்சட்டத்தின் பிரிவு 8 மற்றும் 9 உடன் தொடர் புடைய முறைப்பாடுகளே அதிகம் கிடைக்கப்பெற்றுள்ளன. இவை வரவு செலவுத்திட்டம் (அரசாங்கத்தின், அரச நிறுவனங்களின், மாகாண சபைகளின், அமைச்சுக்களின்) அபிவிருத்தித் திட்டங்களின் பொதுச் சேவைகள், செலவுகள், கொள்வனவு நடைமுறைகள் என்பவற்றுடன் தொடர்புடைய தாகும். அண்மையில் கூட (பெப்ரவரி 2018) வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு ஒரு கட்டளையைப் பிறப்பித்துள்ளது. புலம்பெயர் தொழிலாளர் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கும் சவூதி அரேபியா, கட்டார், குவைத் ஆகிய அரசாங்கங்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையினை அல்லது இரு நாட்டு உடன்படிக்கையினை, அதன் உள்ளடக்கத்தினை பகிரங்கப்படுத்துமாறு ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது. இதன் நோக்கம் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், அவர்கள் தொழிலுக்குச் செல்லும் நாடுகளில் எதிர்கொள்ளும் பிரச்சி னைகளைத் தடுத்தல் ஆகும். இந்த உதாரணம் தகவல் அறியும் சட்டம் பிரஜைகளின் நன்மைகளைப் பாதுகாக்க எந்தளவுக்கு முக்கியமானது என்பதனைக் காட்டுகின்றது.

இச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நாளில் இருந்து பல சாதகமான முன்னேற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்பதனை பொது மக்களிடமிருந்து அரச நிறுவனங்கள் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளைப் பார்க்கும் போது புரிந்துகொள்ள முடிகின்றது. இதன் வெற்றிக்கு அல்லது சாதகமான நகர்வுக்கு சுயாதீனமான தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளமை முக்கிய காரணம் எனக் குறிப்பிடுவதில் தவறில்லை. அதற்கான பௌதிக மற்றும் மனித வளம் அதிகரிக்கப்பட்டு வருவதுடன், அரச நிறுவனங்களின் தகவல்கள் நிராகரிக்கப்பட்ட பல பிரஜைகள் இன்று தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகளைச் செய்து அதன் மூலம் சாதகமான தீர்ப்புகளைப் பெற்றுள்ளனர். இவ்வாணைக்குழுவின் இணையத் தளத்திற்குச் (rti commission.lk) செல்வதன் மூலம் இது தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும், இன்று பல அரச நிறுவனங்கள் இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்த தயாரில்லை என்பதனை இக்கைநூலைத் தயாரிப்பதற்கு அவசியமான களத்தரவுகளைச் சேகரிக்க சென்ற போது அவதானிக்க முடிந்தது. பல அரச நிறுவனங்களில் இன்னும் தகவல் அலுவலர்கள், குறித்துரைக்கப்பட்ட அலுவலர் நியமிக்கப்படவில்லை. அவர்கள் தொடர்பான தகவல்களைப் பொது மக்களின் பார்வைக்குக் காட்சிப் படுத்தவும் இல்லை. இது இச்சட்டத்தின் 26ஆவது பிரிவினை மறுதலிக்கும் செயற்பாடாகும்.

சில அரச நிறுவனங்கள் தகவலை வழங்குவதற்கான கால அவகாசத்தினை நீடித்துக்கொண்டு செல்வதனைக் காண முடி கின்றது. இது இச்சட்டத்தினை வெற்றிகரமாக அமுல்செய்வதில் அவர்களுக்குள்ள நிர்வாக விருப்பமின்மையைக் காட்டி நிற்கின்றது. உண்மையில், இச்சட்டத்தின் வெற்றியானது, இதன் அடிப்படை விழுமியங்களை, தத்துவங்களை எந்தளவுக்கு அரச நிறுவனங்கள் பேணுகின்றன, மதிக்கின்றன என்பது, தகவல்களை எந்தளவுக்குச் சீராக வழங்குகின்றார்கள் என்பதிலேயே தங்கியுள்ளது என்பதனை நாம் மனங்கொள்ள வேண்டும். அது அரச அதிகாரிகளின் சிவில் மற்றும் ஜனநாயகக் கடமையாகும். எவ்வாறாயினும், இரகசியத் தன்மையினை பேணும் கலாசாரம் பொது நிறுவனங்களில் வேரூன்றியிருப்பதானது இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் பிரதான சவாலாகும். மறுபுறமாக, தகவல்களை வழங்கும் போது அது அரச அதிகாரிகளுக்குத் தொந்தரவினை ஏற்படுத்தும் என்ற தவறான எண்ணம் அரச அதிகாரிகள் மத்தியில் நிலவுகின்றது. வெளிப்படைத் தன்மை, பொறுப்புக்கூறுதல் ஆகிய தத்துவங்கள் நீண்ட காலம் கடைபிடிக்கப் படாமையும், அரச அதிகாரிகளுக்குள்ள தற்துணிவு அதிகாரமும் இச் சட்டத்தினைச் சீராகவும் செம்மையாகவும் நடைமுறைப்படுத்து வதனைத் தடுக்கும் காரணிகளாக அமைந்திருப்பதனை கள ஆய்வுகளுக்காகச் சென்ற போது அவதானிக்க முடிந்தது. தகவல்களை வெளிப்படுத்தும் அல்லது தடையின்றி வெளியிடும் கலாசாரம் இந்த நாட்டில் இருக்கவில்லை. மறுபுறமாக, பல அரச நிறுவனங்களில் சரியான முறையில் தகவல்கள் பராமரிக்கப்படவில்லை, அதற்கான பொறி முறையொன்று நடைமுறையில் இல்லை. இது தகவலின் சீரான விநியோகத்தினை பெரிதும் பாதிக்கும் காரணியாக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, எதிர்காலத்தில் புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி, உதாரணமாக, புதிய தகவல் தொழில்நுட்பமுறைகளைக் (online information, digitalization of information) கையாண்டு தகவல்களைப் பராமரிக்க, வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உலகில் online மூலமாக தகவலை வழங்குவதில் நோர்வே பிரதான இடத்தினைப் பெற்றுள்ளது.

மிக முக்கியமாக, அரசாங்கத்தின் நிதி வருவாய்க்குப் பிரதானமாக பங்களிப்புச் செய்வது பிரஜைகளின் வரிப்பணமாகும். அரச அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் அனுபவிக்கும் சம்பளம், ஏனைய சலுகைகள் பிரஜைகளின் வரிப்பணத்திலேயே வழங்கப்படுகின்றன. ஆகவே, அரசாங்கம் பிரஜைகளின் நலன், நாட்டின் நலன் தொடர்பாக எடுக்கும் கொள்கைகள், தீர்மானங்கள், சட்டத்திட்டங்கள், அதன் செயற்பாடுகளைப் பிரஜைகளுடன் பகிர்ந்து கொள்வது அது தொடர் பான விடயங்களை அறிவுறுத்துவது அரசாங்கத்தின் அடிப்படை கடமைப்பொறுப்புகளில் ஒன்றாகும். மறுபுறமாக, இந்த விடயங்கள் தொடர்பாக விழிப்புடன் இருக்க வேண்டியது பிரஜைகளின் கடமையாகும்.

இச்சட்டத்தின் மூலம் அரச அதிகாரிகளுக்கு சட்டக் கடப்பாடுகள் உண்டு. தமது சுய விருப்பின் அடிப்படையில் தகவல்கள் வழங்கு வதனை மறுக்க முடியாது. சட்டத்தின் அடிப்படைகளுக்கு இணங்கிச் செயற்பட வேண்டும். அதனை செய்யத் தவறும் பட்சத்தில் அவரை நீதிமன்றம் வரை கொண்டுசெல்ல முடியும். சில சமயங்களில் தகவல் களை வழங்கினால் தாம் சட்டரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்ற அச்சத்தில் சில அரச அதிகாரிகள் தகவல்களை வழங்குவதில்லை. பொதுச்சேவை வழங்களில் ஊழல் மோசடிகள் நிலவும் சந்தர்ப்பங்களில் இந்நிலைமை தோன்றும். உண்மையில், இச் சட்டத்தினை மதித்து செயற்படும் அரச அதிகாரிகளையும் அரசியல் தலைவர்களையும் இச்சட்டம் பாதுகாக்கும் என்பதனையும் நாம் மனங்கொள்ள வேண்டும். தகவலைப் பிரஜைகள் கோரும்போது அதனை அரச அதிகாரிகள் நிராகரித்தால், மறுதலித்தால் அல்லது ஏற்றுக்கொள்ள மறுத்தால் அது இச்சட்டத்தின்படி குற்றமாகும்.

இச்சட்டத்தினை அமுல்படுத்துவதில் காணப்படும் சவால்களை அடையாளம் காணுதல் இதனை படிப்படியாக அமுல்படுத்துவதற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் துணைபுரியும். இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் அதன் உள்ளடக்கம் என்பன உலகளாவிய ரீதியில் உயர்தரம் கொண்டதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. காரணம், இச் சட்டம் பிரஜைகளுக்கு பல வரப்பிரசாதங்களை வழங்குவதாகும். அத்துடன் இச் சட்டம் நாட்டில் நடைமுறையில் இருக்கின்ற ஏனைய சட்டங்களை விட பல வழிகளில் மேலோங்கி நிற்கின்றது. இதனால் கனடாவில் அமைந்துள்ள சட்டம் மற்றும் ஜனநாயகத்துக்கான நிலையம் இலங்கையில் தகவல் அறியும் சட்டத்திற்கு உலக தரப்படுத்தலில் மூன்றாம் இடத்தினை வழங்கியுள்ளது (மேலதிக விபரங்களுக்கு பார்க்க: rti-rating.org -2016). ஆயினும், நடைமுறையில் உள்ள உத்தியோகபூர்வ இரகசியத்தினைப் பேணும் சட்டம் (1950), ஆவண காப்பகச் சட்டம், நீண்ட காலம் நடைமுறையில் இருந்த (1970-2009), அவ்வப்போது நடைமுறைப் படுத்தப்படுகின்ற அவசரகால ஒழுங்குவிதிகள் மற்றும் தாபனக் கோவைகளின் சில பிரிவுகள் தகவல் வழங்குவதில் மற்றும் பெறுவதில் சில கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. இது போன்று வேறு சட்டங்களும் இருக்கலாம், அவற்றை மீளாய்வு செய்து அவசியமான திருத்தங்களைச் செய்வதன் மூலம் இச்சட்டத்தினை மேலும் வலுப்படுத்த முடியும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்னிணைப்புகள்**

1. தகவல்களைப் பெறுவதற்கும் முறைப்பாடுகளை செய்வதற்குமான மாதிரி விண்ணப்பப் படிவங்கள்

2. மாதிரி வினாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## RTI 01

தகவலுக்கான கோரிக்கையை மேற்கொள்வதற்கு இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்தல் ஒரு கட்டாயமான தேவைப்பாடு அல்ல என்பதையும் கோரப்பட்ட தகவல்களை அடையாளம் காண்பதற்கு அவசியமான தகவல்களுடன் ஏதேனும் எழுத்திலான கடிதம், மின்னஞ்சல் அல்லது வாய்மொழி மூலமான கோரிக்கை போதுமானது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

தகவல்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்

தகவல் அலுவலர்,

01. கோரிக்கையாளரின் பெயர் - ..................................................

02. முகவரி .............................................................................

........................................

03. தொலைபேசி இல. (ஏதேனும் இருப்பின்) - ..........................

04. மின்னஞ்சல் முகவரி (ஏதேனும் இருப்பின்) - ........................

05. கோரப்படும் தகவல்கள் பற்றிய விபரங்கள்

I. குறித்த பகிரங்க அதிகாரசபை .......................................

......................................................................................

II. கோரப்படும் தகவல்கள்

......................................................................................

......................................................................................

......................................................................................

......................................................................................

......................................................................................

III. தகவல் கோரப்படும் குறித்த காலப்பகுதி (பொருத்தமாயின்)

......................................................................................

06. தகவல் கோரப்படும் விதம்

i. சம்பந்தப்பட்ட வேலையை, ஆவணங்களை, பதிவுகளைப் பரிசோதித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. ஆவணங்கள் அல்லது பதிவுகளிலிருந்து குறிப்பெழுதுதல், பிரித்தெடுத்தல் அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்.

iii. பொருட்களின் சான்றுப்படுத்தப்பட்ட மாதிரிகளைப் பெறுதல்.

iv. அத்தகைய தகவல் ஒரு கணினியில் அல்லது ஏதேனும் வேறு சாதனத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பின், தகவலைப் பெறுவது CD/DVD / ஊடக களஞ்சியம் / பதிவு நாடாக்கள் / வீடியோ கெசற்றுகள் / ஏதேனும் வேறு இலத்திரனியல் வடிவம் / அச்சுப் பிரதிகள்.

07. வேண்டுகோளை மேற்கொள்பவர் தகவலைப் பெற விரும்பும் மொழி -

........................................................................................................

........................................................................................................

08. கோரப்படும் தகவல் பிரஜை ஒருவரின் வாழ்க்கை அல்லது சொந்தச் சுதந்திரம் தொடர்பானதா? (ஆம் / இல்லை)

ஆம் எனில், நம்பிக்கைக்கான காரணத்தைத் தருக.

........................................................................................................

........................................................................................................

09. வேறு ஏதேனும் விபரங்கள்-

........................................................................................................

........................................................................................................

10. சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன (ஏதேனும் இருப்பின்)

I. ........................................................................................

II. ........................................................................................

III. ........................................................................................

11. கோரிக்கையாளர் ஓர் இலங்கைப் பிரஜையா? (ஆம்/இல்லை)

திகதி: : ........................................................................................

ஒப்பம் : ........................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## RTI 02

### ஏற்பு

திரு/திருமதி/செல்வி : ..............................................................

பதிவிலக்கம் : ..............................................................

கோரிக்கை கிடைத்த திகதி: ..............................................................

2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமை சட்டத்தின் பிரிவு 24(3)இன் கீழ் தங்களின்; .............................................................. ............................ ஆம் திகதி பின்வரும் தகவலைக் கோரும் தகவல் கோரிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

கோரப்படும் தகவல் : ..............................................................

தங்கள் கோரிக்கை பற்றிய எமது தீர்மானம் 14 நாட்களுக்குள் தங்களுக்குத் தெரிவிக்கப்படும்.
மேலும் தகவல்களுக்கு, வேலை நேரங்களில் பின்வரும் அலுவலருடன் தொடர்புகொள்ளவும். தொடர்புகொள்ளும்போது உங்கள் கோரிக்கை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள பதிவிலக்கத்தைக் குறிப்பிடவும்.

தகவல் அலுவலரின் பெயர் : ..................................................

பதவி : ..................................................

திகதி : ..................................................

அலுவலகம் : ..................................................

தொலைபேசி இலக்கம் : ..................................................

மின்னஞ்சல் : ..................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## RTI 10

**குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கான மேன்முறையீடு**

குறித்தளிக்கப்பட்ட அலுவலர்,

..........................................................................................................

..........................................................................................................

பகிரங்க அதிகார சபை: : ..........................................................................

மேன்முறையீட்டுப் படிவம்

மேன்முறையீட்டாளரின் பெயர்: : ...........................................................

..........................................................................................................

முகவரி: : .......................................................................................

..........................................................................................................

தொலைபேசி இலக்கம் (ஏதேனும் இருப்பின்) : ...............................

..........................................................................................................

மின்னஞ்சல் முகவரி (ஏதேனும் இருப்பின்) : ...............................

..........................................................................................................

தகவல் அலுவலரிடம் கோரிக்கை மேற்கொள்ளப்பட்ட திகதியும் பதிவிலக்கமும்: ...........................................................................

..........................................................................................................

தகவல் அலுவலரிடமிருந்து தங்களுக்கு ஒரு பதில் கிடைத்ததா? ஆம் / இல்லை: ..........................................................................

................ (ஆம் எனில், தங்களிடம் ஒரு பிரதி இருப்பின் அதனை இணைக்கவும்; இன்றேல், பதிலின் விபரங்களை வழங்கவும்)

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்முறையீட்டுக்கான அடிப்படை:

i. தகவலுக்காக கோரிய விண்ணப்பத்தைத் தகவல் அலுவலர் மறுத்தல்

ii. பிரிவு 5இன் கீழ் அத்தகைய தகவல் வழங்குவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது என்னும் அடிப்படையில் தகவல் அலுவலர் தகவலை அணுகுவதற்கு மறுத்தல்.

iii. சட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட கால வரையறைக்கு இணங்கி ஒழுகாமை.

iv. தகவல் அலுவலர் பூர்த்தியற்ற, தவறாக இட்டுச் செல்லும் அல்லது பொய்யான தகவலை வழங்கியுள்ளார்.

v. தகவல் அலுவலர் மேன்மிகையான கட்டணத்தை விதித்துள்ளார்.

vi. தகவல் அலுவலர் தகவலை கோரப்பட்ட வடிவத்தில் வழங்குவதற்கு மறுத்தல்.

vii. கோரிக்கையாளர் தகவலை அணுகுவதைத் தவிர்ப்பதற்காக தகவல் உருக்குலைக்கப்பட்டுள்ளது, அழிவடையச் செய்யப்பட்டுள்ளது அல்லது தவறாக இடப்பட்டுள்ளது என நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை தகவலைக் கோருபவர் கொண்டிருத்தல்.

viii. 14 நாட்கள் முடிவடைந்து மேலதிக காலம் வேண்டுவது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

விபரங்கள்:

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

08. கோரப்பட்ட தகவல் பற்றிய சுருக்கமான விபரம்:

..........................................................................................

..........................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மேன்முறையீடு மேற்கொள்ளப்படாவிடின், தாமத்திற்கான காரணம் பிரிவு. 31(5):

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

10. ஏதேனும் வேறு விபரங்கள்:

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

திகதி : ..............................................

ஒப்பம் : ..............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேன்முறையீட்டு விண்ணப்பப்படிவம்

**தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடு**

தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு,

.......................................................................................................

மேன்முறையீட்டுப் படிவம்

1. மேன்முறையீடு செய்பவரின் பெயர்: ....................................

   .......................................................................................................

2. முகவரி: .......................................................................................

   .......................................................................................................

3. தொலைபேசி இலக்கம் (ஏதேனும் இருப்பின்) : .....................

   .......................................................................................................

4. மின்னஞ்சல் முகவரி (ஏதேனும் இருப்பின்) : .........................

   .......................................................................................................

5. அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் (ஏதேனும் இருப்பின்) : ....................

   ..............................................................................

6. சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகார சபையின் பெயர்: ................

   .......................................................................................................

7. சம்பந்தப்பட்ட தகவல் அலுவலரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் (ஏதேனும் இருப்பின்) :- ..................

   ..............................................................................

8. தகவல் அலுவலரிடம் வேண்டுகோள் விடுத்த திகதியும் பதிவிலக்கமும்:

   .......................................................................................................

   (வேண்டுகோள் பிரதியை இணைக்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தகவல் அலுவலரிடமிருந்து உங்களுக்கு ஒரு பதில் கிடைத்ததா?

ஆம் / இல்லை: ..................................................................................

(ஆம் எனில், பதிலின் பிரதியை இணைக்கவும்)

10. தகவல் அலுவலரிடமிருந்து தீர்மானம் கிடைத்த திகதி: ...........

..................................................................................................

11. எந்த குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு எதிராக மேன்முறையீடு மேற்கொள்ளப்படுகின்றதோ அவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் : ..........................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

.12. குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் மேன்முறையீடு மேற்கொண்ட திகதியும்

மேன்முறையீட்டு இலக்கமும்: ..................................................

..................................................................................................

13. குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடமிருந்து தங்களுக்கு ஒரு பதில் கிடைத்ததா?

ஆம் / இல்லை: ..................................................................................

(ஆம் எனில் தீர்மானத்தின் ஒரு பிரதியை இணைக்கவும்)

14. குறித்தளிக்கப்பட்ட அதிகார சபையிடமிருந்து தீர்மானம் கிடைத்த திகதி:

..................................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. மேன்முறையீட்டுக்கான அடிப்படை :

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

16. மேன்முறையீட்டில் கோரப்பட்ட தகவல் (விபரங்கள், காலப்பகுதி மற்றும்

விடயம்):- ..........................................................................................

17. கோரப்பட்ட தீர்மானம்:- ..........................................................................

.......................................................................................................

18. மேன்முறையீடு குறித்த காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்படாவிடின், தாமதத்திற்கான காரணம்

(பிரிவு 32(2)):- ...............................................................................

19. இதே கருமம் தொடர்பாக ஆணைக்குழுவிடம் முன்னர் ஏதேனும் மேன்முறையீடு கோரப்பட்டதா?

.......................................................................................................

20. வேறு ஏதேனும் தகவல் (தகவலுக்கான கோரிக்கை ஒரு பிரசையின் வாழ்க்கை மற்றும் சொந்தச் சுதந்திரம் தொடர்பானதா என்பது உள்ளடங்கலாக)

.......................................................................................................

.......................................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. இணைக்கப்பட்ட ஆவணங்களின் பட்டியல்:-

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

திகதி: : ..................................................

ஒப்பம் : ..............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாக்கள்

1. தகவல் அறியும் உரிமை என்றால் என்ன?
பகிரங்க அதிகார சபைகளிடம் அல்லது அரச பொது நிறுவனங்களிடமிருந்து தமக்கு வேண்டிய தகவல்களை அறிந்துகொள்ள பொதுமக்களுக்குள்ள உரிமை.

2. தகவலறியும் உரிமை தொடர்பில் உள்ள இலங்கையின் சட்டம் எது?
இலங்கையின் அரசியல் யாப்பின் 19ஆவது சீர்திருத்தத்தில் தகவலறியும் உரிமை (பிரிவு-14A) உள்ளடக்கப்பட்டுள்ள துடன் அதன்படி 2016ஆம் ஆண்டு 12ஆம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டம் உருவாக்கப்பட்டது.

3. தகவல் என்றால் என்ன?
சட்டத்தின்படி தகவல் என்பது, ''பதிவேடுகள், ஆவணங்கள், குறிப்புக்கள், மின் அஞ்சல்கள், அபிப்பிராயங்கள், மதியுரைகள், பத்திரிகை வெளியீடுகள், சுற்றுநிருபங்கள், கட்டளைகள், சம்பவத் திரட்டுகள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள், பத்திரிகைகள், மாதிரிகள், உருப்படிவம், கடிதத்தொடர்பு, குறிப்பறிக்கை, விரைவுச் சட்ட வாக்கம், புத்தகம், திட்டவரைபு, வரைவும் வரைபடம், பட அல்லது வரைபட வேலை, புகைப்படம், திரைப்படம், குறும்படம், ஒலிப்பதிவு, ஒளிநாடா, இயந்திரம் மூலம் வாசிக்கக்கூடிய பதிவுகள், கணினிப் பதிவுகள் மற்றும் வேறு ஆவணப்பொருள், உள்ளடங்கலாக அதனது பௌதிக படிவம் அல்லது பண்பு பொருட்படுத்தாமல் ஏதேனும் படிவத்திலான ஏதேனும் பொருள் மற்றும் அதன் ஏதேனும் பிரதி என்பவற்றை உள்ளடக்குகின்றது''

4. தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு என்றால் என்ன?
தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் கொள்கை தயாரிப்பு, அமுல்படுத்தல் மற்றும் மேன்முறையீடு தொடர்பான விடயங்களைக் கையாளும் 5 சுயாதீன உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவை மற்றும் அதன் உறுப்பினர்களை நியமிப்பவர் யார்?

தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு அரசியலமைப்பு சபையின் சிபாரிசின் பிரகாரம் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறது. சட்டத்தரணிகள் சங்கம், பதிப்பாளர்கள்/ பதிப்பாசிரியர்கள்/ ஊடக நிறுவனங்கள் மற்றும் ஏனைய சிவில் சமூக நிறுவனங்களால் சிபாரிசு செய்யப்படும் பொதுவாழ்வில் புகழ் பெற்றவர்களின் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு அரசியலமைப்பு சபை ஜனாதிபதிக்குத் தமது சிபாரிசுகளை வழங்குகின்றது.

6. தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் யார்? அவரின் அதிகாரங்கள் எவை?

பணிப்பாளர் நாயகம் ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரியாவார். ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக மூத்த சிவில் சேவை அதிகாரியான திரு.பியதிஸ்ஸ ரணசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

7. 'தகவல் உத்தியோகத்தர்' என்பவர் யார்?

பொது மக்கள் அரச பொது நிறுவனங்களில் தமது முதல் தகவல் கோரிக்கையை முன்வைக்க வேண்டிய அலுவலகர் தகவல் உத்தியோகத்தவர் ஆவார். அவர் உங்களது தகவல் கோரிக்கையினைக் கருத்தில் கொண்டு தகவலை வழங்கும் பொறுப்பினைக் கொண்டுள்ளார்.

8. தகவல் உத்தியோகத்தரின் பணிகள் எவை?

தகவலறியும் உரிமை சட்டத்தின் பிரகாரம் தகவல் கோரிக்கையை முன்வைப்பவருக்கு தம்மால் இயன்ற அனைத்து உதவிகளையும் தகவல் உத்தியோகத்தர் வழங்க வேண்டும். இதனுள் தகவல் கோரிக்கை கிடைக்கப் பெற்றமைக்கான அத்தாட்சியை வழங்கும் ரசீது, குறித்த கோரிக்கைக்கு உரிய நேரத்தில் பதிலளித்தல், கோரிக்கைக்கு பதிலளிக்க கால அவகாசம் தேவைப்படுமாயின் அதனை எழுத்து மூலம் மேற்கொள்ளல், தகவல் கோரிக்கைகள் தொடர்பிலான பதிவுகளைப் பராமரித்தல் மற்றும் தகவல் கோரிக்கைகளுக்கு பதிலளிக்க அதிகார சபையினை ஏனைய உறுப்பினர்களின் உதவியை நாடல் ஆகியன உள்ளடங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. 'குறித்தளிக்கப்பட்ட அதிகாரி' என்றால் யார்?
தகவல் கோரிக்கை தொடர்பில் பகிரங்க அதிகாரசபையில் மேன்முறையீடுகளை ஏற்றுக்கொள்ளும் அதிகாரி குறித்தளிக்கப் பட்ட அதிகாரி ஆவார். தகவல் உத்தியோகத்தரிடமிருந்து கிடைக்கும் பதில் திருப்தி அளிக்காவிட்டால் அல்லது பதில் கிடைக்காவிட்டாலோ குறித்தளிக்கப்பட்ட அதிகாரியிடம் மேன் முறையீட்டை மேற்கொள்ளலாம்.

10. குறித்தளிக்கப்பட்ட அதிகாரியின் பணிகள் எவை?
மேன்முறையீட்டாளரின் முறையீடு குறிப்பிட்ட கால எல்லைக்குள் இருக்குமாயின் அதனை ஏற்றுக்கொள்ளல்.

11. அரச பொது நிறுவனம் அல்லது பகிரங்க அதிகாரசபைகள் என்றால் என்ன?
பகிரங்க அதிகாரசபைகள் என்றால் அரசியலமைப்பினால் அல்லது அரசியலமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட அமைப்புக்கள், கூட்டுத் தாபனங்கள் போன்ற அரசாங்கம், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் ஆகியவற்றால் கட்டுப்படுத்தக்கூடிய நிறுவனங்கள் மற்றும் நீதியை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட நீதிமன்றங்கள் மற்றும் இணக்க சபைகள்.

மேலும் ஒப்பந்தங்கள், அனுமதிப் பத்திரங்கள் அல்லது பங்கு டைமை ஊடாக அரச நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் அனுமதிப் பத்திரங்களுடன் அல்லது சட்டத்தினூடாக உருவாக்கப்பட்டு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன நிதியீட்டத் தில் இயங்கும் பொது மக்களுக்கு பணியாற்றும் நிறுவனங்கள்.

12. பகிரங்க அதிகாரசபை தகவல் உத்தியோகத்தர் ஒருவரை நியமித் திருக்காவிட்டால் பொதுமக்கள் என்ன செய்ய வேண்டும்?
தகவல் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பத்தில் சட்டத்தின் 23ஆம் பிரிவின் பிரகாரம் பகிரங்க அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி அல்லது தலைவர் தகவல் உத்தி யோகத்தராக கருதப்படுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பகிரங்க அதிகாரசபையில் குறித்தளிக்கப்பட்ட அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கும் போது பொதுமக்களுக்கு அவரிடம் மேன்முறையீட்டை மேற்கொள்ளாது தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிடம் மேன்முறையீட்டை மேற்கொள்ள முடியுமா?

இல்லை. தகவலறியும் உரிமைச் சட்டத்தில் கடுமையான மேன் முறையீட்டு முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்படி தகவல றியும் உரிமைக்கான ஆணைக்குழு இரண்டாவது மேன் முறையீட்டு அமைப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்தளிக்கப்பட்ட அதிகாரி பகிரங்க அதிகாரசபையில் நியமிக்கப்பட்டிருந்தால் ஆணைக்குழுவிடம் மேன்முறையீட்டை மேற்கொள்ளும் முன் அவரிடம் கட்டாயம் மேன்முறையீட்டை மேற்கொண்டிருக்க வேண்டும். சட்டத்தின்படி குறித்தளிக்கப்பட்ட அதிகாரியின் தீர்மானங்களுக்கு எதிராகச் செயற்படக்கூடிய அதிகாரம் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

14. குறித்தளிக்கப்பட்ட அதிகாரி நியமிக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பத் தில் பொதுமக்கள் என்ன செய்யலாம்?

இலங்கை அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தின்படி அரச நிறுவனங்களைப் பொறுத்தவரை குறித்தளிக்கப்பட்ட அதிகாரி நியமிக்கப்பட்டிருக்காவிட்டால் அந்த நிறுவனத் தலைவர் குறித்தளிக்கப்பட்ட அதிகாரியாகக் கருதப்படுவார்.

அதன்படி மேன்முறையீட்டை மேற்கொண்ட பின்னர் ஆணைக் குழுவை அணுகலாம். பகிரங்க அதிகார சபைகளில் தகவல் உத்தியோகத்தரோ அல்லது குறித்தளிக்கப்பட்ட அதிகாரியோ நியமிக்கப்பட்டிராத சந்தர்ப்பத்தில் குறித்த நிறுவனத் தலைவரிடம் தகவல் கோரிக்கையை விடுத்து பதில் கிடைக்காத பட்சத்தில் நேரடியாக ஆணைக்குழுவை அணுகலாம்.

15. விசேட பிரச்சினைகள் தொடர்பில் தகவல் உத்தியோகத்தர் அல்லது குறித்தளிக்கப்பட்ட அதிகாரி ஆணைக்குழுவின் ஆலோச னையைப் பெற்றுக்கொள்ள முடியுமா?

இல்லை. சட்டத்தின் பிரிவு 5(5) இன்படி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் விலக்களிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைக்குழு ஆலோசனைகளை வழங்க முடியும். இது செயற்பாட்டு ரீதியான விடயமே தவிர தகவலை வழங்குவதா இல்லையா என்பது தொடர்பானது அல்ல.

16. தகவல் அறியும் உரிமைக் கோரிக்கையை யார் மேற்கொள்ளலாம்? இலங்கைப் பிரஜையாக இருக்கும் ஒருவர் மேற்கொள்ள முடியும்.

17. தகவலறியும் உரிமைக் கோரிக்கையை மேற்கொள்ள விண்ணப்பப் படிவங்கள் உள்ளனவா?
ஆம், தகவலறியும் உரிமை விண்ணப்பப்படிவம் 01 பெப்ரவரி 2017 இல் வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியில் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆயினும் இவ்விண்ணப்ப படிவத்தைப் பயன்படுத்த வேண்டுமென்பது கட்டாயமில்லை. தகவல் கோரிக்கைக்கான காரணங்களை உள்ளடக்கிய எழுத்து மூலமான கோரிக்கையைச் சமர்ப்பித்தால் போதுமானது.

18. பகிரங்க அதிகாரசபைக்கான தகவல் கோரிக்கையைச் சட்டத்தின் பிரகாரம் மின்னஞ்சல் மூலமாக சமர்ப்பிக்க முடியுமா?
ஆம், சட்டத்தின் பிரிவு 24(6) மற்றும் ஒழுங்குவிதி 04 சரத்து 04 இன் படி (2017 பெப்ரவரியில் வெளியிடப்பட்ட அரச வர்த்தமானி படி) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

19. தகவல் கோரிக்கையை முன்வைக்கும்போது அதற்கான காரணங் கள் வழங்கப்பட வேண்டுமா?
இல்லை, சட்டத்தின்படி அதற்கான தேவைப்பாடு இல்லை அத்து டன் கோரிக்கைக்கான காரணங்களைக் குறிப்பிடுமாறு யாரும் எவரையும் வற்புறுத்த முடியாது.

20. அவசர கோரிக்கைகள் என்றால் என்ன?
பிரஜை ஒருவரின் வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரம் தொடர் பான கோரிக்கைகளைக் குறிக்கும். அப்படியான கோரிக்கைகள் தொடர்பில் 48 மணி நேரத்திற்குள் பதிலளிக்கப்பட வேண்டும்.

21. தகவலறியும் உரிமைக்கான கோரிக்கையை முன்வைக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரங்க சேவை அதிகாரசபையின் தகவல் உத்தியோகத்தரிடம் தகவல் கோரிக்கையை முன்வைக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் தகவலறியும் உரிமை விண்ணப்பப் படிவம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது (மேலே குறிப்பிடப் பட்டுள்ளவாறு).

22. தகவல் கோரிக்கை தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ள எவ்வளவு நாள் எடுக்கலாம்?

- தகவல் உத்தியோகத்தர் இயன்றளவு துரிதமாகக் கோரிக்கை தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- கோரப்பட்ட தகவலை உடனடியாக வழங்க முடியுமாயின் அவை உடன் வழங்கப்பட வேண்டும்.
- பகிரங்க அதிகாரசபை குறித்த தகவலை வழங்குவதற்கு சம்மதிக்குமாயின் 14 நாட்களுக்குள் கோரிக்கையாளருக்கு அறிவித்து அதற்குரிய கட்டணம் ஏதுமிருப்பின் அதனைச் செலுத்துமாறு தகவல் உத்தியோகத்தர் அறிவிக்க வேண்டும்.

23. தகவல் கோரிக்கை தொடர்பில் பதிலளிக்க எவ்வளவு காலம் எடுக்கலாம்?

தகவல் உத்தியோகத்தரால் கோரப்பட்ட தகவல் வழங்கப்படுமென கோரிக்கையாளருக்கு அறிவித்து உரிய கட்டணம் செலுத்தப்பட்டு 14 நாட்களுக்குள் கோரப்பட்ட தகவல் வழங்கப்பட வேண்டும்.

24. எப்போது தகவல் கோரிக்கைக்குப் பதிலளிக்கும் காலத்தை நீடிக்க முடியும்?

குறித்த தகவல் கோரிக்கை அதிக எண்ணிக்கையான பதிவுகள் அல்லது குறித்த பதிவுகள் பகிரங்க அதிகார சபையில் இருந்து தொலைவில் அமைந்துள்ள நகரில் அல்லது இடங்களில் இருக்கும் போது காலத்தை நீடிக்க முடியும். எனினும், குறித்த கால நீடிப்பு தொடர்பில் கோரிக்கையாளர்கள் திருப்தியடையாவிட்டால் அவர் அது தொடர்பில் குறித்தளிக்கப்பட்ட அதிகாரியிடம் மேன் முறையீட்டை மேற்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. மூன்றாம் தரப்பு தகவல் என்றால் என்ன?

மூன்றாம் தரப்பு தகவல் என்றால் பகிரங்க அதிகார சபை அல்லது தகவல் கோரிக்கையாளர் தவிர்ந்த மூன்றாம் தரப்பினால் பகிரங்க அதிகார சபைக்கு இரகசியமாக நம்பிக்கையின் அடிப்படையில் வழங்கப்படும் தகவல் ஆகும்.

26. தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விலக்களிப்பு பெறக்கூடிய தகவல்கள் எவை?

சட்டத்தின் பிரிவு 5இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மட்டுமே கோரிக்கை விடுக்க முடியாது. பொதுமக்கள் நலன் சாராத தனிப்பட்ட தகவல்களைக் கொண்ட விடயங்கள், தேசிய பாதுகாப்பு மற்றும் நாடுகளுடனான தேசிய தொடர்புகள், நாட்டின் பொருளாதாரம் சார்ந்த விடயங்கள், வர்த்தகத் தொடர்புகள் சார்ந்த இரகசிய விடயங்கள், தனிப்பட்ட மருத்துவத் தரவுகள், தேசிய பாதுகாப்பு மற்றும் குற்றவியல் சார்ந்த வழக்குகளைப் பாதிக்கக் கூடிய தகவல்கள், நீதிமன்றங்களை அவமதிக்கக் கூடிய மற்றும் அவற்றின் சுயாதீன தன்மையைப் பாதிக்கக்கூடிய தகவல்கள், பாராளுமன்ற மற்றும் மாகாண சபைகளின் சிறப்புரிமைகளைப் பாதிக்கக்கூடிய தகவல்கள், பரீட்சைகளின் ஒழுங்கமைப்பைப் பாதிக்கக்கூடிய தகவல்கள், தேர்தல்கள் தொடர்பான இரகசியத் தகவல்கள் மற்றும் அவை சார்ந்த தீர்மானங்கள் எடுக்கப்படாத அமைச்சரவைப் பத்திரங்கள் போன்ற தகவல்கள் தொடர்பில் கோரிக்கை விடுக்க முடியாது.

27. 'பொதுமக்கள் நலன் மேலோங்குதல்' என்றால் என்ன?

சட்டத்தின் பிரிவு 5(4) இன்படி மறுக்கப்படும் தகவலை வெளிப்படுத்துவதால் பொதுமக்கள் நலன் மேலோங்கி காணப்படுமாயின் தகவல்களை வழங்க வேண்டும். சட்டத்தின் பிரிவு 5 இல் விலக்களிக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்கும் இது பொருந்தும். 'பொதுமக்கள் நலன்' எனும் பதம் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவால் வரும் காலங்களில் வரைவிலக்கணப்படுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. மேன்முறையீட்டு நடைமுறை என்றால் என்ன?

தகவல் உத்தியோகத்தரால் வழங்கப்படும் பதில் தொடர்பில் கோரிக்கையாளர் திருப்தியடையாவிட்டால் அப்பதில் கிடைத்த நாளில் இருந்து 14 நாட்களுக்குள் குறித்தளிக்கப்பட்ட அதிகாரியிடம் மேன்முறையீட்டை மேற்கொள்ளலாம். குறித்தளிக்கப்பட்ட அதிகாரியின் பதிலில் திருப்தியடையா விட்டாலோ அல்லது அவர் பதிலளிக்க தவறும் பட்சத்தில் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிடம் இரு மாத காலப்பகுதிக்குள் மேன்முறையீட்டை மேற்கொள்ளலாம்.

29. எவற்றை அடிப்படையாகக் கொண்டு தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிடம் மேன்முறையீட்டை மேற்கொள்ளலாம்?

- குறித்தளிக்கப்பட்ட அதிகாரியின் தீர்மானம் தொடர்பில் திருப்தியடையாதபோது-
- குறித்தளிக்கப்பட்ட அதிகாரியிடம் இருந்து பதில் கிடைக்கப் பெறாத போது-

30. தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிடம் மின்னஞ்சல் மூலமாக மேன்முறையீட்டை மேற்கொள்ள முடியுமா?

இல்லை, 2017 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கட்டணங்கள் மற்றும் மேன்முறையீட்டு நடைமுறை தொடர்பிலான ஒழுங்குவிதி 13(2) இன்படி தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிடம் மேன் முறையீட்டை நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ மட்டுமே மேற்கொள்ளலாம்.

31. மேன்முறையீட்டாளரையோ அல்லது பகிரங்க அதிகாரசபையையோ ஆணைக்குழுவின் முன்னால் சட்டத்தரணியொருவர் பிரதிநிதித்துவப்படுத்த முடியுமா?

ஆம், இதற்கு முன்னனுமதி அவசியமில்லை. ஆயினும் சட்ட ரீதியான பிரதிநிதித்துவம் கட்டாயமன்று.

32. எப்போது விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன?

தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவால் சட்டத்தின் நோக்கங்களை அடையும் நோக்கில் விசாரணைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு மேலும் மேன்முறையீட்டை மேற்கொள்ள முடியுமா?

ஆம், எந்த தரப்பினராவது தகவலறியும் உரிமைக்கான ஆணைக் குழுவின் தீர்மானம் தொடர்பில் திருபதியடையாவிட்டால் ஆணைக்குழுவின் தீர்மானம் அறிவிக்கப்பட்டு ஒரு மாதக் காலப்பகுதிக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன் முறையீட்டை மேற்கொள்ள முடியும்.

34. முனைப்புடனான அல்லது அதிபட்ச வெளிப்படுத்துகை என்றால் என்ன?

அதிபட்ச வெளிப்படுத்துகை என்றால் கோரிக்கை விடுக்கப்படும் முன்னரே தகவல்களை வெளியிடுவதாகும்.

35. இலங்கை சட்டம் எவ்வாறு அதிகப்பட்ச வெளிப்படுத்துகையை ஊக்குவிக்கின்றது?

2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அரச வர்த்தமானியில் வெளிப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதி 20 மற்றும் சட்டத்தின் 8,9 மற்றும் 10 ஆகிய பிரிவுகள் இதனை ஊக்கப்படுத்துகின்றன.

36. அதிகபட்ச வெளிப்படுத்துகை தொடர்பில் பகிரங்க அதிகார சபைகளின் பணிகள் எவை?

நிறுவன கட்டமைப்பு மற்றும் கையாளப்படும் செயற்திட் டங்கள் உள்ளிட்ட தகவல்கள் ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட வழி காட்டல் மற்றும் விண்ணப்பப் படிவங்களின்படி வெளிப் படுத்தப்படல் வேண்டும். சட்டத்தின் பிரிவு 8 மற்றும் 9 இல் குறிப்பிடப் பட்டுள்ளவாறு பகிரங்க அதிகார சபைகள் ஏதாயினும் அமைச்சுக்கள் அல்லது மாகாண அமைச்சுக்களின் கீழே காணப் படுமாயின் அவற்றிற்கு அமைச்சர்களும் கட்டுப்படுதல் வேண்டும். அனைத்து தகவலறியும் உரிமை நடைமுறைப்படுத்தப்படும் விதம் தொடர்பில் வருடாந்தம் அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். பொதுவாக பகிரங்க அதிகாரசபைகள் 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி 20 இன்படி குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை அடிக்கடி வெளியிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. தகவலறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் எப்போது ஆணைக்குழு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்குப் பரிந்துரை செய்யலாம்? சட்டத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களின் அல்லது பகிரங்க அதிகாரசபையின் அலுவலர் ஒருவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைக்குப் பரிந்துரை செய்யும் அதிகாரம் ஆணைக் குழுவிற்கு உள்ளது.

- குறித்த தகவல் உத்தியோகத்தர் வேண்டுமென்றே, தகவல் கோரிக்கையை ஏற்க மறுக்கும் போது-
- கோரிக்கையை ஏற்க மறுத்தமைக்கான காரணங்களை குறிப்பிட மறுக்கும் போது-
- மேலதிக கட்டணங்களை அறவிட்டால்
- கோரிக்கையை செயற்படுத்தத் தவறும் போது-
- குறித்தளிக்கப்பட்ட அதிகாரி வேண்டுமென்றே, சட்டத் தின் பிரிவு 5 தவிர்ந்த ஏனைய பிரிவுகளின் கீழ் தகவல் கோரிக்கைக்கான மேன்முறையீட்டை நிராகரிக்கும் போது-
- உரிய காரணங்களின்றி மேன்முறையீட்டிற்குரிய பதிலை 3 கிழமைக்குள் வழங்கத் தவறும் போது -

38. எவை குற்றங்களாகக் கருதப்படும்? சட்டத்தின் கீழ் கீழ்வரும் குற்றங்களைப் புரிந்த எந்தவொரு நபருக்கெதிராகவும் ஆணைக் குழுவால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

- பிழையான, பூரணமற்ற அல்லது செம்மையற்ற தகவலை வழங்கும்போது -
- தகவல்களை அழித்தல், செல்லுப்படியற்றதாக்கல், மாற்றங்களை மேற்கொள்ளல் அல்லது மறைத்து வைத்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது -
- தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் முன்னால் ஆஜராகத் தவறும் போது -
- தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் முன்னால் ஆஜராகிய போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு ஒத்துழைக்காமை, தகவல்களை வழங்காமை மற்றும் தவறான தகவல்களை வழங்குதல்.
- ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்குக் கட்டுப்படாமை.
- ஆணைக்குழுவின் வேலைகளுக்குத் தடையை ஏற்படுத்துதல்.

39. குறித்த குற்றங்களுக்கு எத்தகைய தண்டனைகள் வழங்கப்படலாம்?
ஆணைக்குழு நீதிவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டால் ரூபா 50,000 இற்கு அதிகமாகாத தண்டப்பணம் விதிக்கப்படலாம். அல்லது இரு ஆண்டுகள் வரையிலான சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் அல்லது தண்டப்பணமும் மற்றும் சிறைத் தண்டனையும் சேர்த்து விதிக்கப்படலாம். உரிய ஒழுக்காற்று அதிகாரசபையினால் குறித்த தரப்பினர் மீது ஒழுக்காற்று நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்படலாம்.

40. தகவல்கள் எத்தகைய வடிவங்களில் வழங்கப்படலாம்?
மேற்பார்வை செய்தல், குறிப்புக்கள் எடுத்தல், அச்சுப்பிரதிகள், அத்தாட்சிப் பிரதிகள், இறுவெட்டுக்கள், ஒலி மற்றும் ஒளி நாடாக்கள், USB Pendrive மற்றும் ஏதேனும் இலத்திரனியல் வடிவத்தில் கோரப்பட்ட தகவல்களை வழங்கலாம்.

41. தகவல் கோரிக்கைகளுக்கு எவ்வாறு கட்டண அறவீடுகளை மேற்கொள்ள முடியும்?
தகவல் கோரிக்கையைச் சமர்ப்பிக்கும்போது கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. தகவல் கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் வழங்கும் பட்சத்திலேயே கட்டணம் செலுத்த வேண்டும். அறவிடப்படும் கட்டணங்கள் தொடர்பான விபரங்கள் 2017 பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியின் கட்டணங்கள் மற்றும் மேன்முறையீட்டு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக :

- முதல் 4 பக்கங்களின் போட்டோ பிரதிகள் அல்லது அச்சு பிரதிகள் இலவசமாக வழங்கப்பட வேண்டும்.
- வெற்றிகரமான மேன்முறையீட்டின் நிமித்தம் வழங்கப் படும் தகவல்கள் இலவசமாக வழங்கப்பட வேண்டும்.
- மின்னஞ்சல் மூலம் வழங்கப்படும் தகவல்கள் இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

42. தகவல் அறியும் உரிமையினை ஐ.நாவின் அனைத்துலக மனித உரிமை பிரகடனத்தின் எத்தனையாவது உறுப்புரை உறுதிப் படுத்துகின்றது?
உறுப்புரை - 16

43. தகவல் கோரிக்கையானது, பிரஜை ஒருவரின் உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்துடன் சம்பந்தப்படும் சமயங்களில் கோரிக்கை கிடைக்கப் பெற்று எத்தனை நாட்களுக்குள் பதிலளிக்க வேண்டும்?
48 மணித்தியாலங்கள் (2 நாட்கள்)

44. "பொது நிறுவனங்கள் தகவல் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கை கிடைக்கப் பெற்றவுடன் தகவல் வழங்க முடியுமா அல்லது இல்லையா என்ற தீர்மானத்தினை எடுக்கவேண்டும். அதனை உடனடியாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்க வேண்டும்." இச்செயற்பாட்டினைச் செய்வதற்கான ஆகக் கூடிய கால எல்லை எவ்வளவு?
14 நாட்கள்

45. குறித்தளிக்கப்பட்ட அதிகாரிக்கு எதிரான மேன்முறையீட்டினை எங்கு செய்யவேண்டும்?
தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு

46. ஆணைக்குழுவுக்கு எதிரான மேன்முறையீடுகள் செய்யமுடியுமா? ஆம் எனின் எங்கு செய்ய வேண்டும்?
ஆம், மேன்முறையீட்டு நீதிமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் அதிகாரம் உள்ளவர் யார்?
ஜனாதிபதி

48. ஆணைக்குழுவின் பதவிக் காலம் எவ்வளவு?
5 ஆண்டுகள்

49. ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் எத்தனை பேர்?
5 பேர்

50. இச்சட்டத்திற்கு அமைவாக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் கருத்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் சம்பந்தப்பட்ட மக்களுக்கு, கருத்திட்டம் தொடங்குவதற்கு எவ்வளவு காலத்திற்கு முன் அறிவிக்கப்பட வேண்டும்.?

சாதாரணக் கருத்திட்டமாயின் 3 மாதங்களுக்கு முன்பு அவசரக் கருத்திட்டமாயின் 1 கிழமைக்கு முன்பு.

51. இச்சட்டத்திற்கு அமைவாக சில கம்பனிகளிடம் இருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறித்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கான வரையறை என்ன?

அரசு மற்றும் பகிரங்க கூட்டுத்தாபனங்களின் 25 வீதத்திற்கு மேற்பட்ட பங்குகளைக் கொண்ட கம்பனிகள் மற்றும் நிறுவனங்களிடம் தகவல்களைப் பெற முடியும்.

**சரியான விடையின் கீழ் கோடிடுக**

1. தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு அமைவாகப் பெறக்கூடிய தகவல் பின்வருவனவற்றில் எது?
   a) தேர்தல் சட்டங்களின்படி இரகசியத் தன்மை பேணப்பட வேண்டிய தேர்தல் தொடர்பான தகவல்கள்.
   b) அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் கருத்திட்டங்கள் தொடர்பான விபரங்கள்.
   c) பொருட்கள் சேவைகளின் விலைகள், வாடகை மற்றும் ஏனைய செலவுகள், சம்பளம் மற்றும் வேதனங்களின் விகிதம், ஏனைய வருமானங்கள் தொடர்பான ஸ்திரத்தன்மை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாடுகள் மற்றும் சீர்ப்படுத்துகைகள் தொடர்பான தகவல்கள்.

d) பாராளுமன்றத்தின் அல்லது மாகாண சபைகளின் சிறப் புரிமைகளை மீறக்கூடிய தகவல்கள்.

2. தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக இச்சட்டத்தில் வரையறுக்கப்பட்ட பொது அதிகார சபைகளுக்குள் உள்ளடங்காதது எது ?

a) மாகாண சபையினால் தாபிக்கப்பட்ட திணைக்களங்கள், அதிகார சபைகள் அல்லது நிறுவனங்கள்

b) உள்ளூராட்சி சபைகள்

c) கோவில் பரிபாலன சபை

d) அரச மற்றும் பகிரங்க கூட்டுத்தாபனங்களின் 25 வீதத்திற்கு மேற்பட்ட பங்குகளைக் கொண்ட கம்பனிகள்

3. தகவலை பேணிப் பாதுகாக்க வேண்டிய கால அளவு குறித்து சட்டத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களில் ஒன்று

a) சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியில் இருந்து 20 ஆண்டு களுக்குட்பட்ட தகவல்கள்

b) சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியில் இருந்து 10 ஆண்டு களுக்குட்பட்ட தகவல்கள்

c) சட்டம் நடைமுறைக்கு வந்தபின் குறித்த திகதியில் இருந்து 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தகவல்கள்

d) அனைத்தும் சரி

4. பொது அதிகார சபைகள் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கையில் உள்ளடங்க வேண்டியவை:-

a) பெறப்பட்ட கோரிக்கைகள்

b) பிரஜைகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள்

c) மறுக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை

d) அனைத்தும் சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இச்சட்டத்திற்கு அமைவாக பொது நிறுவனங்களில் காட்சிப்படுத்த அவசியம் அல்லாதது.

   a) உயர் தொழில் அதிகாரிகளினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான பொது அதிகார சபைகளுக்கும் உயர் தொழில் அதிகாரிகளுக்கும் இடையிலான தொடர்பாடல்களில் உள்ளடங்குகின்ற தகவல்கள்.

   b) ஆணைக்குழுவை, ஆணைக்குழு உறுப்பினர்களையும் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்

   c) தகவல் அலுவலரைத் தொடர்புக் கொள்வதற்கான விபரங்கள்

   d) தகவலைப் பெறுவதற்கான கட்டணப் பட்டியல்

6. தகவல் விண்ணப்பத்தினைப் பிரஜைகள் சமர்ப்பிக்கக் கூடிய வழிமுறைகளில் ஒன்று

   a) கட்டாயமாக அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் எழுத்து மூலமாக சமர்ப்பிக்க வேண்டும்

   b) அந்தரங்க விடயங்களையும் குறிப்பிட வேண்டும்.

   c) விண்ணப்பத்தை பொது அதிகாரசபையில் நேரடியாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

   d) விரும்பிய மொழியில் (தமிழ், சிங்களம் அல்லது ஆங்கிலம்) விண்ணப்பத்தை முன்வைக்கலாம்.

7. மூன்றாம் தரப்பினரின் இரகசியமான தகவல்களை வெளியிடுதல் தொடர்பாகச் சட்டத்திற்கு முரணான விடயம்.

   a) சம்மதித்தால் தகவலை வெளியிடலாம்

   b) சம்மதிக்காவிட்டால் தகவலை வெளியிட முடியாது

   c) மூன்றாம் நபர் மறுக்கின்ற போதும் தகவல் அலுவலருக்குத் தகவலை வெளியிடும் உரிமை உண்டு.

   d) ஒருவாரத்துக்குள் முன்றாம் நபரிடம் இருந்து பதில் கிடைக்காவிட்டால் தகவலை வெளியிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. தகவல் மறுப்புகளுக்கு எதிரான மேன்முறையீடு செய்யக்கூடிய சந்தர்ப்பங்களில் ஒன்று

a) கோரிய வடிவத்தில் தகவலை வழங்கும் போது -

b) தகவல் அலுவலர்கள் கூடிய கட்டணத்தை அறவிடுகின்ற போது -

c) விண்ணப்பங்களை எழுத்து மூலம் முன்வைக்காத போது

d) தகவல் அலுவலர் தகவலறியும் கோரிக்கையொன்றை நிறை வேற்றும் போது -

9. இச்சட்டத்திற்கு அமைவாக நபரொருவர் குற்றவாளியாக நிரூபிக் கப்பட்டு நீதிமன்றத் தீர்ப்புக்கமைய அனுபவிக்க வேண்டிய தண்டனைகளில் ஒன்று.

a) 50000 ரூபாவுக்கு மேற்பட்ட தண்டப்பணம்

b) 10000 ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணம்

c) இரண்டாண்டுகளுக்கு மேற்பட்ட சிறைத் தண்டனை

d) 50000 ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணம் மற்றும் இரண்டாண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனை

10. தகவல் அறியும் சட்டத்தின் விதிமுறையினை மீறுகின்ற செயல்

a) முன்னெடுக்கப்படும் கருத்திட்டங்கள் தொடங்குவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு பொதுமக்களுக்கும் குறிப்பாக இக்கருத்திட்டத்துடன் சம்பந்தப்படும் (நலன் பெறும் அல்லது பாதிக்கப்படும்) மக்களுக்கு அறிவிப்பதும் அமைச்சரின் கடமை.

b) கரைகடந்த நாடுகளுடனான வியாபார உடன்படிக்கைகள் தொடர்பான தகவல்களை வெளியிடுதல்.

c) ஆணைகுழுவின் தீர்மானத்தில் மேன்முறையீட்டாளர், தகவல் அலுவலர் அல்லது பொது அதிகாரசபை திருப்தியடையாத சந்தர்ப்பத்தில், ஆணைக்குழுவுக்கு எதிரான மேன் முறை யீட்டினை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 14 நாட்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

d) சில தகவல்களை கட்டணமின்றியும் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி (✓) எனவும் பிழையாயின் பிழை (x) எனவும் அடையாளமிடுக.**

1. தகவல் அறியும் உரிமை குறித்து இலங்கை அரசின் அரசியல் அமைப்பின் 14ஆவது உறுப்புரை உறுதிப்படுத்துகின்றது. ( )
2. ஆணைக்குழு தனது அறிக்கையினைக் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது பாராளுமன்ற விவாதத்திற்காக சமர்ப்பிக்க வேண்டும். ( )
3. வெளியிடுவதற்கு விலக்களிக்கப்பட்ட (பிரிவு 5) தகவல்களை ஆணைக்குழுவால் எச்சந்தாப்பத்திலும் வெளியிடக் கூடாது. ( )
4. மறுக்கப்படும் தகவல்கள் தொடர்பான மேன்முறையீட்டினை 14 நாட்களுக்குள் தகவல் அலுவலருக்குச் சமர்ப்பிக்கலாம். ( )
5. ஆணைக்குழுவுக்கான ஒழுங்குவிதிகளை வகுத்தல் மற்றும் அதனை வர்த்தமானியில் வெளியிடும் பொறுப்பு அமைச்சருக்கு உண்டு. ( )
6. பிரஜை ஒருவர் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட வேறொருவர் மேன்முறையீட்டினை செய்ய முடியும். ( )
7. ஆணைக்குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும். ( )
8. நிறுவனத் தலைவர் தகவல் அலுவலராகச் செயற்பட முடியும். ( )
9. இச்சட்டத்திற்கு அமைவாக தேவையான ஆவணங்களை, பதிவேடுகளைப் பரீட்சித்துப் பார்க்க முடியாது. ( )
10. தகவல் கோரிக்கையானது, பிரஜை ஒருவரின் உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்துடன் சம்பந்தப்படும் சமயங்களில் கோரிக்கை கிடைக்கப் பெற்று 4 நாட்களுக்குள் தீர்மானம் எடுக்கப்படுவதுடன் அது அறிவிக்கப்பட வேண்டும். ( )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


Ansari, M.M. (2008). *Right to Information and its Relationship to Good Governance and Development.* Central Information Commission New Delhi. http://cic.gov.in/CIC-Events/IC-MA-LectureAtUNESCO-4122008.pdf.

Banisar, D. (2004). *The global survey: freedom of information and access to government record laws around the world.* Washington: Freedominfo.org.

Bauhr, M.; Grimes, M. and Harring, N. (2010). *Seeing the State: The Implications of Transparency for Societal Accountability*, QoG Working Paper Series 15, Gothenburg: The Quality of Government Institute.

Besley, T. and Ghatak, M. (2003). Incentives, Choice, and Accountability in the Provision of Public Services. *Oxford Review of Economic Policy*, 19(2):235-49.

Cordis, A.S. & Warren, P.L. (2014). *Sunshine as disinfectant: the effect of state freedom of information act laws on public corruption.* Social Science Research Network. Available at: http://papers.ssrn.com/sol3/papers.cfm?abstract_id=1922859&download=yes.

Deininger, K. and Mpuga, P. (2005). Does Greater Accountability Improve the Quality of Public service Delivery? Evidence from Uganda, *World Development*, 33:1 pp.171-90.

Dokeniya, A. (2013). *Implementing right to information: lessons from experience.* The World Bank and PREM. Washington. Available at: Download pdf. http://r4d.dfid.gov. uk/pdf/outputs/ids/Protifolon_5.pdf.

Escalera, M., Lin, S & Register, C. (2010). Freedom of information acts and public sector corruption. *Public Choice*, 145, (3-4): 435-460.

Government of Sri Lanka. (1972). *The Second Republican Constitution of Sri Lanka.* Department of Government Press.

Government of Sri Lanka. (2016). *The Right to Information Act No. 12 of 2016.* Department of Government Press.

Institute of Informatics and Development, (2012). Challenges of Right to Information in South Asia. *Policy Brief Issue* 5. Available at: https://www.eldis.org/document/A61136.

Islam, R. (2006). Does more transparency go along with better governance? *Economics and Politics*, 18 (2): 121–167.

Lindstedt, C. and Naurin, D. (2010). Transparency against corruption. *International Political Science Review*, 31 (4): 301–322.


Lindstedt, C. and Naurin, D. (2010). Transparency against corruption. *International Political Science Review*, 31 (4): 301–322.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Martini, M. (2014). *Right to information laws: impact and implementation.* Berlin: Transparency International.

Mori, J. (2013). *Access to information laws and the transparent university in global corruption report education.* Berlin: Transparency International.

Mungiu-Pippidi, A., (2013). *FOIA as an anti-corruption tool.* Hertie School of Governance. http://www.againstcorruption.eu/wp-content/uploads/2013/04/WP-34-FOIA-as-an-anti-corruption-tool1.pdf.

One year on, Right to Information Act an encouraging success. Available at http://www.ft.lk/opinion/One-year-on--Right-to-Information-Act-an-encouraging-success/14-648963.Acessed on 07.07.2018.

Ramesh, R., (2018). *Citizenship rights, public service delivery and the quality of government: the case of the Plantation Community in Sri Lanka.* Unpublished PhD Thesis, University of Bergen, Norway and Tribhuwan University, Nepal.

Sri Lanka Press Institute. (2016). *Citizens' guide book for Right to Information Act.* Colombo: Sri Lanka Press Institute.

Sri Lanka's 'Culture of Secrecy'- the greatest challenge to the RTI's success. Available at http://www.frontpage.lk/page/Sri-Lanka-s-culture-of-secrecy-the-greatestch-allenge-to-the-RTI-s-success-/18966. Accessed on 07.07.2018.

Surie, M. (2011). *Right to Information in India: an effective tool to tackle corruption.* http://asiafoundation.org/in-asia/2011/09/28/right-to-information-in-india-anef-fective-tool-to-tackle-corruption.

The Right to Information Act. (2005). *A Guide for Civil Society organizations.* Andra Pradesh, India: Center for Good Governance. Retrieved from http://foip.saha.org.za/uploads/images/a%20guide%20to%20civil%20society. pdf. Accessed on 02.07.2018.

Transparency International. (2014). *Fighting Corruption in South Asia: building accountability.* Berlin: Germany.

Transparency International. (2006). *Using the right to information as an anti-corruption tool.* http://oas.org/dil/access_to_information_human_Policy_Recommenda-tions_Transparency_International_Right_to_Information_as_an_Anti-Cor-ruption_Tool.pdf.

Transparency International. (2018). *Corruption Perception Index.* Retrieved from https://www.transparency.org/news/feature/corruption_perceptions_index_2017.

UNESCO. (2011). *Freedom of information: right to know.* Available at: https://unesdoc.unesco.org/ark:/48223/pf0000193653. Accessed on 10.10.2020.

UNDP. (2017). *Operationalizing Right to Information Act in Sri Lanka. comparative experience and good practices.* Colombo: UNDP Sri Lanka.

UNDP (2017). *Review of legislation for consistency with the RTI legal regime.* Colombo: UNDP.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNDP. (2006). *A guide to measuring the impact of right to information programmes: practical guidancenote.* https://www.undp.org/content/undp/en/home/librarypage/democratic-governance/oslo_governance_centre/governance_assessments/a-guide-to-measuring-the-impact-of-right-to-information-programmes-.html

World Economic Forum. (2018). Global Competitiveness Report. Retrieved from. http://www3.weforum.org/docs/GCR2017-2018/05 Full Report The Global Competitiveness Report2017%E2%80%932018.pdf.

World Governance Indicators. Retrieved from http://info.worldbank.org/governance/wgi/index.aspx#home.

World Happiness Report. (2018). Retrieved from http://worldhappiness.report/ed/2018/.www.rti.gov.lk ; www.rticommission.lk & www.srilankapressinstitute.lk.

டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெசனல். (2012). பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் நிர்மாணப் பணிகளைக் கண்காணிப்பதற்கான வழிகாட்டிகள். கொழும்பு: டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெசனல்.

டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெசனல். (2013). பிரஜைகள் கைந்நூல்: பிரதேச செயலகமொன்றில் சேவைகளை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டும் பிரஜைகள் கைநூல். கொழும்பு: டிரான்ஸ்பேரன்சி இன்டர் நெசனல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டம்: வழிகாட்டி நூல்

**கலாநிதி இரா. ரமேஷ்**

தகவல் அறியும் உரிமை என்பது உயிர்த்துடிப்புள்ள ஜனநாயக நாடுகளில் பிரஜைகளுக்கு இருக்கவேண்டிய அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. அரசாங்கத்திற்கு வரிப்பணம் செலுத்துபவர்கள் என்ற வகையில் பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் அரசாங்கத்தின் சேவைகள், சட்டதிட்டங்கள், கொள்கைகள் மற்றும் அதன் நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக அறிந்துகொள்வதற்கு உரிமையுண்டு. உலகில் பல நாடுகளில் தகவல் அறியும் உரிமையானது ஊழலுக்கு எதிராக குரல் கொடுப்பதற்கும், ஆட்சி செயன்முறையில் பிரஜைகள் பங்கேற்பதற்கும், பொதுச்சேவைகளை நியாயமாக, பக்கச்சார்பின்றி வழங்கப்படுவதனைக் கண்காணிப்பதற்கும் ஒரு சிறந்த கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. மேலும், பங்கேற்பு ஜனநாயக கட்டமைப்பில் பொது நிறுவனங்களின் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மையினை உறுதி செய்யவும் பிரஜைகள் ஊழலுக்கெதிராக செயற்படுவதற்கும் பயனுள்ள சட்டமாக இது காணப்படுகின்றது. 1996ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் அரச உத்தியோகத்தர்களுக்கான சர்வதேச நடத்தைக் கோவை ஒன்று வெளியிடப்பட்டது. அதில் அரச பதவிகள், அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் என்பன பொதுமக்களின் மேம்பாடு, நல்வாழ்விற்காக பிரயோகிக்கப்பட வேண்டும் எனவும், வினைத்திறன் மிக்க வகையில் வளப்பயன்பாட்டை மேற்கொண்டு பாரபட்சமற்ற அரசாங்க சேவை வழங்கலை உறுதி செய்ய வேண்டும் எனவும், அரசாங்கத்தின்மீது மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டுமாயின் அதன் சேவைகள் நீதியான, துஷ்பிரயோகமற்ற வகையில் நடுநிலையானதாக அமைய வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பின்புலத்திலேயே இலங்கையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2016ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. 1990களின் இறுதிப்பகுதியில் இருந்து ஜனநாயக ஆட்சியினை விரும்பும் பல்வேறு தரப்பினர் மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சியின் சாதகமான விளைவே இச்சட்ட நிறைவேற்றமாகும். இந்நூல் இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



**இரா.ரமேஷ்:** பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றி வரும் இவர், தனது இளமாணிப்பட்டதைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப் பட்டத்தினை அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான நோர்வே அரசாங்கத்தின் முகவர் நிறுவனம் (Norad) மற்றும் ஐரோப்பிய கமிஷன் என்பவற்றின் புலமைப்பரிசிலைப் பெற்று பேர்கன் மற்றும் திரிபுவான் பல்கலைக்கழகங்களிலும் நிறைவுசெய்துள்ளார். இவர் நிறுவன நம்பிக்கை, ஊழல், அரசாங்கத்தின் தரம், பொதுச்சேவை வழங்கல் மற்றும் பெருந்தோட்டச் சமூகம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார். ஆய்வுக் கட்டுரைகளை சர்வதேச ஆய்விதழ்களிலும், தொகுப்பு நூல்களிலும் வெளியிட்டுள்ளார்.

குமரன் புத்தக இல்லம்

விடயம்: சட்டம் / அரசியல் / பொது

ISBN 978-955-659-715-8

விலை ரூபா 650.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org